Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the
Director of Stationery and Printing,
Chennai-600 002.

வெளியீடு : 10-8-2012 Issued : 10-8-2012

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**வியாழக்கிழமை, மார்ச் 29, 2012—தொகுதி 20—எண் 3**

**Thursday the 29th March 2012—Volume 20—No. 3**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

## 29–3–2012

## உள்ளடக்கம்


| | | பக்கங்கள் |
|---|---|---|
| **1.** | **வினாக்கள்—விடைகள்—** | |
| | உடுக்குறியிட்ட வினாக்கள் | 235-276 |
| **2.** | **விதி 110–ன்கீழ் அறிக்கை—** | |
| | புதிய மின் உற்பத்தித் திட்டங்கள் குறித்த முதலமைச்சரின் அறிக்கை | 276-281 |
| **3.** | **புதிய மின் உற்பத்தித் திட்டங்கள்—முதலமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி—** | 282-288 |
| | முனைவர் செ.கு. தமிழரசன் | 282 |
| | திரு. உ. தனியரசு | 282-284 |
| | *திரு. பி.வி. கதிரவன் | 284-285 |
| | டாக்டர் க. கிருஷ்ணசாமி | 285-286 |
| | முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா | 286-287 |
| | திரு. எம். ஆறுமுகம் | 287 |
| **4.** | **தகவல் கோரல்—** | |
| | உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு | 288 |
| **5.** | **முன்பண மானியக் கோரிக்கைகள், 2012–2013, அளித்தல்—** | 288-293 |
| | மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் | 289 |
| **6.** | **இறுதித் துணை நிதிநிலை அறிக்கை, 2011–2012, அளித்தல்—** | 293-300 |
| | மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் | 294-296 |

பக்கங்கள்

**7. அறிவிப்புகள்—**

(அ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2011–2012, முன்மொழிதல் (ஆ.செ.) — 301

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2012 (ஆ.இ.) — 307

(இ) முன்பண மானியக் கோரிக்கைகள், 2012-2013, முன்மொழிதல் (ஆ.செ.) — 307-313

(ஈ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2012 (ஆ.இ.) — 314

**8. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2011-2012, வாக்கெடுப்பு—** — 301-306

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் — 301

**9. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—**

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2012 — 307-308

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் — 308

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2012 — 314-315

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் — 315-319

**10. முன்பண மானியக் கோரிக்கைகள், 2012–2013, வாக்கெடுப்பு—** — 308-313

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் — 315

**11. அரசினர் தீர்மானம்—**

விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல் — 315





பக்கங்கள்

**12. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—**

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2012 — 316-319

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் — 316-317

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2012 — 318-319

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் — 318-319

**13. காவல் பாதுகாப்பில் மரணங்கள், திருக்கோவிலூர் காவல் நிலையத்தில் பெண்கள்மீது பாலியல் பலாத்காரம், நன்னீர் மற்றும் நஞ்சை நிலப் பாதுகாப்புச் சட்டம் கொண்டு வருதல்—முதலமைச்சரின் விளக்கம்** — 320-323

**14. வரவு–செலவுத் திட்டம், 2012–2013, பொது விவாதம்**—தொடர்ச்சி — 323-449

*திரு. க. பாண்டியராஜன் — 323-325, 334-346

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா — 320-324 340-344 367-368 370-372

*மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி — 324,327-332, 362, 363 379-380,390

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் — 325

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம் — 326

திரு. ச. இராமச்சந்திரன் — 326-328 330-331 333, 343

*மாண்புமிகு திருமதி பா. வளர்மதி — 333,425-426

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் — 337-338 342, 446-447

பக்கங்கள்

**14. வரவு–செலவுத் திட்டம், 2012–2013, பொது விவாதம்—**
தொடர்ச்சி

*மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன் 388-339,346 364-365 369-376
*திரு. ஆர்.என். கிட்டுசாமி 345-357
*திரு. பி. பழனியப்பன் 345, 425
மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம் 346, 365-366 439
திரு. டி. செங்குட்டுவன் 357-364 366-373 375-379
*மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி 378,380,412
*திரு. பா. கணேசன் 381-388
திரு. ம. கலை அரசு 388-396,398
மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய் 392-394
*திரு. அ. சவுந்தரராசன் 393,443-444
மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி 395,439,445
*மாண்புமிகு திரு. செ. தாமோதரன் 396-397
திரு. ஏ. லாசர் 398-406
*திருமதி ச. முத்துசெல்வி 406-411
திரு. கு. லிங்கமுத்து 411-416
திரு. இரா. தமிழ்ச்செல்வன் 417-423
திரு. ர.ம. பாபு முருகவேல் 423-428
மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால் 427, 428
*திரு. மு.வீ. கருப்பையா 429-437



பக்கங்கள்

**14. வரவு–செலவுத் திட்டம், 2012–2013, பொது விவாதம்—**
தொடர்ச்சி

*திரு. ஜே.ஜி. பிரின்ஸ் 438-448
*மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி 441-443
*மாண்புமிகு திரு. கே.ஏ ஜெயபால் 441, 447, 449

**15. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 450

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2043 – பங்குனி 16

## 2012 மார்ச் 29, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. டி. ஜெயக்குமார்** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"இன்சொலால் ஈத்தளிக்க வல்லார்க்குத் தன்சொலால்
தான்கண் டனைத்திவ் வுலகு."

எளிய மக்களிடம் இனிமையாகப் பேசி, தேவையானதைக் கொடுத்து உதவி செய்யும் ஆட்சியாளருக்குப் புகழ் தானாக வந்து சேரும். அவர் விருப்பம்போல குடிமக்களும் அமைவார்கள்.

## 1. வினாக்கள்– விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்- விடைகள். வினா வரிசை எண் 11, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**11—**

### துணை மின் நிலையம்

***3960—முனைவர் கோவி. செழியன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவிடைமருதூர் தொகுதி, பந்தநல்லூரில் 110/11 கிலோ வோல்ட் திறனுடைய துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2012 மார்ச் 29

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவிடைமருதூர் தொகுதி, பந்தநல்லூரில் 110/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

**முனைவர் கோவி. செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் சட்டமன்றத் தொகுதி, நூறு சதவிகிதம் விவசாயத் தொழிலை நம்பி இருக்கக்கூடிய தொகுதி. அதிலும் குறிப்பாக, திருப்பனந்தாள் ஒன்றியம், பந்தநல்லூரைச் சுற்றி 20- க்கு மேற்பட்ட ஊராட்சிகளில் 2,133 ஹெக்டேர் நிலத்தில் விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. 40 ஆயிரத்திற்கு மேற்பட்ட விவசாயத் தொழிலாளர்கள் அதனை நம்பி இருக்கிறார்கள். பந்தநல்லூர் பகுதிக்குப் பக்கத்தில் இருக்கக்கூடிய திருப்பனந்தாள் மற்றும் மணல்மேடு துணை மின் நிலையங்களிலிருந்து மின்சாரம் அளிக்கப்படுகிறது. குறைவான மின் அழுத்தத்தின் காரணமாக மின்சாரம் சீரமைப்பு சரி இல்லாததால், மின் மோட்டார்கள் எல்லாம் பழுதடைந்து, விவசாயிகள் வேதனைப்படும் நிலையில் இருக்கிறது. எனவே, விவசாயிகளுடைய குறையைப் போக்கக்கூடிய வகையில் பந்தநல்லூர் பகுதியில் துணை மின் நிலையம் அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைப் பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பந்தநல்லூரில் 110/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைப்பதற்கு அரசால் திட்டமிடப்பட்டுள்ளது என்பதைப் பதிலாகத் தெரிவித்தேன். இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையினுடைய இடத்தைத் தேர்வு செய்து, கையகப்படுத்தி, அந்த இடத்திலே துணை மின் நிலையம் அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. அந்தப்



2012 மார்ச் 29]

பணிகள் விரைவுபடுத்தப்பட்டு முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

**முனைவர் கோவி. செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைந்து முடிக்கப்படும் என்ற அறிவிப்பிற்கிணங்க எப்பொழுது முடிக்கப்படும், எவ்வளவு நிதி ஒதுக்கீட்டில் முடிக்கப்படும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலைய ஆட்சித் துறைக்குச் சொந்தமான இடத்தைக் கையகப்படுத்துகின்ற பணி நடைபெற்று வருகிறது. அந்த நிலத்தைக் கையகப்படுத்துகின்ற பணிகள் முடிவடைந்ததற்குப் பின்பு அதற்கு வேண்டிய மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, அதற்கு அடுத்தபடியாக, அடுத்தடுத்து காலதாமதமின்றி பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழைகளின் இதயங்களில் நிரந்தரமாக வாழ்ந்துகொண்டிருக்கின்ற மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், 55 ஊராட்சிகளையும், ஒரு பேரூராட்சியையும் உள்ளடக்கிய பகுதியாக இருக்கின்றது. இந்தப் பகுதியிலே சூராணத்தைத் தலைமையிடமாகக் கொண்டும், சாலைகிராமத்தைத் தலைமையிடமாகக் கொண்டும் 2 துணை மின் நிலையங்களை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

[2012 மார்ச் 29

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. குணசேகரன் அவர்களுடைய கோரிக்கையைப் பற்றி அரசு ஆய்வு செய்து, அந்தப் பகுதியிலே இருக்கின்ற மின் பளுவிற்கு ஏற்ப பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.

**திரு. சு. ரவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அரக்கோணம் தொகுதிக்குட்பட்ட தணிகைப்போளூர் கிராமத்தில் துணை மின் நிலையம் அமைப்பதற்கு 6 மாதத்திற்கு முன்பு 2 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு, துணை மின் நிலையம் அமைக்கும் பணி துவங்கப்படாமல் உள்ளது. வளர்புரம் நெசவாளர்கள், அதைச் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள விவசாயிகளின் நலன் கருதி துணை மின் நிலையம் அமைக்கும் பணியை விரைவாகத் துவங்கிட மாண்புமிகு அமைச்சர் முன்வருவாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை மின் நிலையம் அமைப்பதிலே பல இடங்களிலே காலதாமதமாவதற்குக் காரணம், உரிய இடங்களைத் தேர்வு செய்வதிலே சில பிரச்சினைகள் ஏற்படுகின்றன. ஆகவே, எந்தெந்த இடங்களிலே துணை மின் நிலையம் அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதோ அந்த இடங்களைக் கையப்படுத்துவதற்கு உதவிட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். அந்த வகையிலே, நிலம் கையகப்படுத்துகின்ற பணிகளில் இருக்கின்ற தடைகள் நீக்கப்பட்டு, விரைவிலே அந்தப் பணிகளை முடிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. நாகராஜன் அவர்கள்.



2012 மார்ச் 29]

**திரு. கே.பி. நாகராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதியதாக உருவாக்கப்பட்டுள்ள மயிலம் சட்டப் பேரவைத் தொகுதியிலே, மயிலம் ஒன்றியத்தைச் சார்ந்த ரெட்டணைக் கிராமத்திலே துணை மின் நிலையம் அமைப்பதற்கு அனைத்து ஆவணங்களும் தயார் செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்திலே இருக்கின்றன. அதை இதுவரை நடைமுறைப்படுத்தாமல் இருக்கிறார்கள். எனவே, உடனடியாக ஆவன செய்யுமாறு பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் குறிப்பிட்டுச் சொன்னேன். பல இடங்களில் இடம் கையகப்படுத்துவதில் ஏற்படுகின்ற பிரச்சினையிலேதான் காலதாமதமாகிறது. ஆகவே, மயிலம் பகுதியிலே நிலம் கையகப்படுத்துவதில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாகத்தான் அங்கேயும் காலதாமதமாகிறது. மாவட்ட ஆட்சித் தலைவரிடம் தொடர்பு கொண்டு நிலம் கையகப்படுத்துகின்ற பணிகளை விரைவுபடுத்துவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன் அவர்கள்.

**திரு. சி. மைக்கேல் ராயப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராதாபுரம், நாங்குநேரி தாலுகா பகுதிகளில் வாழும் இளைஞர்களின் நலன் கருதி, நாங்குநேரியின் அருகில் ஆரம்பிக்கப்பட்டுள்ள உயர் தொழில்நுட்பப் பூங்காவில் தொழில் தொடங்க வருகை தரும் தொழில்முனைவோர்களை ஊக்கப்படுத்தும்விதமாக, அத்தியாவசிய தேவைகளில் ஒன்றான மின்சாரத்தை சீராக வழங்கிட ஏதுவாக, இப்பகுதியில் 230 கிலோ வோல்ட் திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா? ஏனெனில், ஏற்கெனவே அந்தப் பகுதியில் மின்சார வாரியத்திற்கு இடத்தை வழங்கியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல, இடம் கையகப்படுத்துகின்ற பணி முடிவடைந்திருந்தால் . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லி முடித்துவிடட்டும். Please sit down.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** துணை மின் நிலையம் அமைப்பதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும். அப்படி நிலம் கையகப்படுத்துகின்ற பணியிலே ஏதும் இடையூறு இருக்கிறதா என்பதை ஆய்வு செய்து, அப்படி இருந்தால் அந்த இடையூறுகளையும் களைந்து விரைவுபடுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.

**திரு. என். முருகுமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணை இமை காப்பது போல, நாளும் தமிழ் மண்ணைக் காக்கின்ற மாசற்ற மக்கள் தலைவி புரட்சித் தலைவி அம்மாவின் புனித பொற்பாதங்களை வணங்கி, கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதி, பாளையங்கோட்டையில் 110/11 கிலோ வோல்ட் திறனுடைய துணை மின் நிலையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் இடத்தில் துணை மின் நிலையம் அமைப்பதற்கு முன்பாக முதலிலே பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அங்கே இருக்கின்ற மின் இணைப்புகள், மின் பளுவினுடைய தேவை, அடுத்த ஓரிரு ஆண்டுகளில் தேவைப்படுகின்ற மின் இணைப்புகள் இன்னும் எவ்வளவு அதிகரிக்கும் என்பதையெல்லாம் கணக்கிட்டு, நிச்சயமாக தேவை ஏற்படுகின்ற அத்துணை இடங்களிலும் புதியதாகத் துணை மின் நிலையம் அமைத்திட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களும் உத்தரவிட்டிருக்கிறார்கள். ஆகவே, கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதி, பாளையங்கோட்டை பகுதியில் புதிய துணை மின் நிலையம் அமைப்பது குறித்து, மின் தேவையை ஆய்வு செய்து, தேவைப்பட்டால் நிதிநிலைக்கேற்ப, அந்தப் பகுதியிலே துணை மின் நிலையம் அமைப்பது குறித்து அம்மாவினுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 12, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. வெங்கடாஜலம், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**12—**

### குடிநீர்

***6980—திரு. கோ. வெங்கடாஜலம்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மேற்கு தொகுதி, ஓமலூர் ஒன்றியம், முத்துநாயக்கன்பட்டி, செம்மண்கூடல், கோட்டகவுண்டம்பட்டி ஆகிய ஊராட்சிகளுக்கு காவிரி குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலம் மேற்கு தொகுதி, ஓமலூர் ஒன்றியம், முத்துநாயக்கன்பட்டி ஊராட்சிக்கு சேலம்- ஆத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலமாகவும், செம்மண்கூடல் மற்றும் கோட்டகவுண்டம்பட்டி ஊராட்சிகளுக்கு காடையாம்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலமாகவும் போதுமான அளவு காவிரிக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

[2012 மார்ச் 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. வெங்கடாஜலம் அவர்கள்.

முற்பகல் 10-10

**திரு. கோ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் மணிமகுடமாய் விளங்கும் ஜனநாயகத்தின் காவலராய், தர்மத்தின் தலைவியாய், தென்னாட்டின் உரிமைக் குரலாய், உலகத் தமிழர்களின் பாதுகாவலராய், அஞ்சாமையின் புகலிடமாய், அநீதியை அழிக்க அவதரித்த எங்கள் அன்னையாய், முடியாது என்ற வார்த்தையை அகராதியிலிருந்து அப்புறப்படுத்திய அற்புதத் தலைவியாய், சதியை முறியடித்து, தீய சக்திகளின் கதையை முடித்து, சங்கரன்கோவில் வெற்றியின் சிங்கநிகர் தலைவியாய் விளங்கும் நான் வணங்கும் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பாதம் பணிந்து வணங்குகிறேன். ஓமலூர் ஒன்றியம், முத்துநாயக்கன்பட்டி, செம்மண்கூடல், கோட்டகவுண்டம்பட்டி ஆகிய பகுதிகளில் குடிநீர்க் குழாய்கள் பதிக்கப்பட்டு முப்பது ஆண்டுகளுக்கும் மேலாகிறது. அவை முற்றிலும் பழுதடைந்த நிலையில் உள்ளன. அங்கே புதியதாக குழாய்களைப் பதித்து, காவிரிக் குடிநீர் வழங்கப்படுமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓமலூர் ஒன்றியத்திற்குட்பட்ட கிட்டத்தட்ட 8,000 மக்கள் தொகை கொண்ட முத்துநாயக்கன்பட்டி கிராமத்திற்கு சேலம்-ஆத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் வாயிலாக ஒரு நாளைக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் தண்ணீர் வழங்கக்கூடிய அளவில் நிறைவாக அந்த 29 ஊரகக் குடியிருப்புகளுக்கும் வழங்கப்பட்டு வருகிறது. அதேபோல, கிட்டத்தட்ட 3,328 மக்கள் தொகை கொண்ட செம்மண்கூடல் பகுதிக்கும் காடையாம்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் வாயிலாகக் குடிதண்ணீர் வழங்கப்படுகிறது. அதோடுமட்டுமல்லாமல், தனி மின் விசை மூலமாகவும் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. அதேபோல கோட்டகவுண்டம்பட்டிக்கும் காடையாம்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் வாயிலாகத் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2012 மார்ச் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. வெங்கடாஜலம் அவர்கள்.

**திரு. கோ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழுதடைந்துள்ள பைப் லைனை மாற்றி புதியதாக குழாய் அமைத்து குடிநீர் வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு கிராமங்களில் நீண்ட காலத்திற்கு முன்பாக பதிக்கப்பட்டிருக்கின்ற அதுபோன்ற பைப்புகளைமாற்ற வேண்டும் என்பதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவு பிறப்பித்து இருக்கிறார்கள். 25, 30 ஆண்டுக் காலமாக நிலத்தடியில் இருக்கின்ற பைப்புகள் பழுதடைந்திருக்கின்றன. அதையெல்லாம் மாற்ற வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்து இருக்கின்றார்கள். ஆனால், இந்த மூன்று ஊராட்சிகளுக்கும் தற்சமயத்தில்தான் குழாய்கள் பதிக்கப்பட்டு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் தொகுதியில் குடிநீர் தரம் பாதிக்கப்பட்ட 73 கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் இதுவரை 34 கிராமங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு இருக்கிறது. சோழன்மாளிகை, அண்ணலக்ரஹாரம், கொருக்கை,

எனது சொந்த ஊரான சாக்கோட்டை உள்ளிட்ட 39 கிராமங்களுக்கும் மீதமுள்ள பணிகளை விரைவுபடுத்தி, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள 93 ஆயிரம் குடியிருப்புகளுக்குத் தேவையான பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில் 8,000 ஊரகக் குடியிருப்புகளுக்குத்தான் 40 லிட்டர் தண்ணீர் கொடுக்க முடியாத ஒரு நிலைமை இருக்கிறது. மேலும் இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் மேலும் தண்ணீரை அதிகப்படுத்தி அவர்களுக்குத் தேவையான தண்ணீர் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு அவர்கள்.

**திருமதி க. அழகுவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களின் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்குகிறேன். எங்களது கள்ளக்குறிச்சி தொகுதியிலே ரிஷிவந்தியம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அங்கே மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில், 2004- 2005 ஆம் ஆண்டில் அந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்காகவே ஒரு separate feeder line அமைத்து அங்கே தங்குதடையின்றி குடிநீர் கிடைக்கும் வசதியை ஏற்படுத்திக் கொடுத்தார்கள். ஆனால், கடந்தகால ஆட்சியாளர்கள் அந்த separate feeder line- லிருந்து ஒரு தனியார் கரும்பு ஆலைக்கு லைன் இழுத்துக் கொடுத்திருக்கிறார்கள். அங்கே மின் தடை காரணமாக குடிநீர் வழங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதேபோல், அங்கே insulator-கள் எல்லாம் பழுதடைந்திருப்பதாகச் சொல்கிறார்கள். இதையெல்லாம் சரி செய்து,



separate feeder line-ஐ அந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்குப் பயன்படுத்தும் விதமாக, நமது மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக தமிழகத்தில் இருக்கின்ற கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் எந்தெந்தப் பகுதிகளுக்கு குடிநீர் செல்கிறதோ அந்தப் பகுதிகளில் இருக்கின்ற தொழிற்சாலைகள் மற்றும் கல்லூரிகள் போன்ற தனியார் நிறுவனங்களுக்கும் குடி தண்ணீர் தேவை என்று விண்ணப்பிக்கின்றபொழுது அவற்றுக்கும் தண்ணீர் ஒதுக்கப்படுகின்றது. அதன் அடிப்படையில்தான்அந்தக் கூட்டுறவு சர்க்கரை ஆலையும் குடி தண்ணீருக்காக விண்ணப்பித்து இருப்பார்கள். அதற்காக தண்ணீர் ஒதுக்கி இருப்பார்கள். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அந்தப் பகுதிக்கும் ஒரு நபருக்கு 40 லிட்டர் தண்ணீர் என்றில்லாமல் குறைவாகக் கிடைக்கின்றபட்சத்தில், அந்தப் பகுதி மக்களுக்கு 40 லிட்டர் தண்ணீர் கிடைக்கக்கூடிய வகையிலே நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. நல்லதம்பி அவர்கள்.

**திரு. கு. நல்லதம்பி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது எழும்பூர் தொகுதிக்குட்பட்ட புளியந்தோப்பு மற்றும் புரசைவாக்கம் ஆகிய இடங்களில் தொடர்ந்து வாரத்திற்கு இரு முறை குடிநீரில் கழிவுநீர் கலந்து வருகிறது. என்னுடைய தொகுதி மக்களுக்கு சுத்தமான குடிநீர் கிடைக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

[2012 மார்ச் 29

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட இது போன்ற சில இடங்களில் கழிவுநீர் கலப்பதை அறிந்தவுடனேயே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சென்னை மாநகராட்சியின் வளர்ச்சிக்காக கடந்த நிதியாண்டில் மிகப் பெரிய நிதியாக 500 கோடி ரூபாயும், இந்த நிதியாண்டில் 500 கோடி ரூபாயும் வழங்கியிருக்கிறார்கள். இதுபோன்று கழிவுநீர் கலக்கின்ற 332 இடங்கள் ஆய்வு செய்யப்பட்டு, கண்டுபிடிக்கப்பட்டு, உடனடியாக அந்த இடங்களை சரிசெய்து அடைத்து, சுத்தமான தண்ணீர் செல்வதற்கும், கழிவுநீர் தனியாக செல்வதற்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. செல்வம் அவர்கள்.

**திரு. எஸ்.கே. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் அனைத்து குடியிருப்புப் பகுதிகளுக்கும் கூட்டுக் குடிநீர் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்கப்பட்டுள்ளதா என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், 5,555 ஊரகக் குடியிருப்புகள் இருக்கின்றன. இதிலே 4,930 ஊரகக் குடியிருப்புகளுக்கு நிறைவான தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள 625 குடியிருப்புகளில், 369 குடியிருப்புகளுக்கு 40 லிட்டர் தண்ணீர் கிடைக்கக்கூடிய நடவடிக்கை எடுக்கப்பட்டு, அது முடிவுக்கு வருகின்ற தருவாயில் இருக்கின்றது. மீதியுள்ள 256 குடியிருப்புகளில், 145 குடியிருப்புகள் நரசிங்கபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் இணைக்கப்பட்டிருக்கின்றன. ஒட்டுமொத்த சேலம் மாவட்டத்தில் மீதமுள்ள 111 குடியிருப்புகளுக்குத்தான் குறைவான தண்ணீர் இப்போது கிடைக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதையும் கண்டறிந்து நிறைவான தண்ணீர் கொடுக்க



2012 மார்ச் 29]

வேண்டும் என்பதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவு பிறப்பித்திருக்கின்றார்கள். அது இந்த நிதியாண்டில் எடுக்கப்பட்டு, அனைவருக்கும் நிறைவான தண்ணீர் கொடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் தொகுதியில், திருப்புல்லாணி ஒன்றியம், சேதுக்கரை ஊராட்சிக்குட்பட்ட மேல புதுக்குடி, கீழபுதுக்குடி கிராமங்களுக்கு 10 நாட்களுக்கு ஒரு முறைதான் குடிநீர் வரக்கூடிய சூழல் இருக்கின்றது. அதன் காரணமாக அந்தக் குடிநீரை சேமித்து வைக்கக்கூடிய ஒரு நிலையும், இதன் விளைவாக சில மாதங்களுக்கு முன்பு அங்கு டெங்கு காய்ச்சல் போன்ற காய்ச்சல்கள் பரவக்கூடிய ஒரு நிலையும் ஏற்பட்டது. இதையெல்லாம் தவிர்ப்பதற்காக, தினசரி மேலபுதுக்குடி, கீழபுதுக்குடி உள்ளிட்ட இந்தக் கிராமங்களுக்குக் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் வாயிலாக அந்தப் பகுதிகளுக்குத் தண்ணீர் கிடைக்கின்றபட்சத்தில், நிச்சயமாக, விரைவாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுதலை ஏற்று, தண்ணீர் கிடைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் வாயிலாக குடிநீர் கிடைக்கவில்லையென்று சொன்னால், எந்தெந்தப் பகுதிகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்கும் என்பதை ஆய்வு செய்து, அதற்கான நடவடிக்கை எடுத்து, உடனடியாக தண்ணீர் அளிப்பதற்குரிய ஆய்வை மேற்கொண்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல், விராலிமலை உள்ளிட்ட பத்து ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள அனைத்து கிராமங்களுக்கும் காவிரிக் குடிதண்ணீர் வழங்கப்படும் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பை கடந்த நிதியாண்டிலே அட்சய பாத்திரம்போல் அம்மா அவர்கள் வெளியிட்டார்கள். அதற்கு நன்றி தெரிவித்துக்கொள்வதோடு, மாவட்ட மக்கள் எதிர்பார்க்கின்ற மேற்படி திட்டத்தை விரைந்து நிறைவேற்றிட அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு கருத்தை வெளியிட்டால், அந்தக் கருத்து, குறித்த காலத்தில், குறிப்பிட்ட நேரத்தில், குறித்தவர்களுக்குச் சென்றடையக்கூடிய கருத்தைத்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வெளியிடுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதன் அடிப்படையிலேதான் கடந்த நிதியாண்டில் மாண்புமிகு உறுப்பினருடைய பகுதிக்கு புதியதாக கூட்டுக் குடிநீர்த் திட்டம் கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அவ்வாறு அறிவிக்கப்பட்டதை உடனடியாக நிறைவேற்றுகின்ற முகத்தான், விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து இந்த நிதியாண்டிலேயே பணிக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.





**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாமிரபரணி ஆற்றிலிருந்து குழித்துறை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் தண்ணீர் எடுத்து பல்வேறு கிராமங்களுக்குக் கொடுக்கப்படுவது நிலுவையிலிருக்கிறது. ஆனால், கடலோரக் கிராமங்களில் தண்ணீர் கிடைப்பதில்லை. இது நல்ல திட்டம்தான். அரசு நல்ல பணியைச் செய்கிறது. ஆனால், குழாய்கள் எல்லாம் உடைந்து காணப்படுவதால் சரியாகத் தண்ணீர் சென்று சேருவதில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு நடவடிக்கை எடுப்பார்களா? தண்ணீர் பெறுவதற்கு வழி செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு நல்ல வினாவை எழுப்பியுள்ளார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதைக் கருத்தில் கொண்டுதான், கடலோரப் பகுதிகளின் நிலத்தடி நீர் உப்பு கலந்த நீராக, உவர் நீராக இருக்கின்ற காரணத்தினால் கடலோரப் பகுதிகளில் வாழ்கின்ற அனைத்து மக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட, உப்பு கலக்காத தண்ணீர் கிடைக்க வேண்டுமென்ற ஒரு நல்ல செயல் திட்டத்தை உருவாக்கி, எந்தெந்தப் பகுதிகளில் குடிநீர்த் திட்டத்தின் வாயிலாக குடிநீர் வழங்கப்படுகிறதோ, அது கடைக்கோடியில் இருந்தாலும்கூட, அதற்கு முறையாக தண்ணீர் செல்வதற்குரிய ஆய்வைச் செய்து, மின் மோட்டார்களைப் பொருத்தி, tail end—ல்கூட தண்ணீர் நிறைவாகக் கிடைப்பதற்குரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாப்பா சுந்தரம் அவர்கள்.

**திரு. அ. பாப்பா சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை பகுதியிலுள்ள குளித்தலை ஒன்றியம்,

[2012 மார்ச் 29

தோகைமலை ஒன்றியம், கிருஷ்ணாபுரம் ஒன்றியம் ஆகிய பகுதிகளில் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் காலத்தில்தான் காவிரிக் கூட்டுக் குடிநீர் வழங்கப்பட்டது. அது வழங்கப்பட்டு 20 ஆண்டுகளாகியும் பிரதான ஊர்களில்தான் தண்ணீர் கிடைத்திருக்கிறதே தவிர, அங்கிருக்கின்ற குக்கிராமங்களுக்கு இன்னும் தண்ணீர் கிடைக்கப்பெறவில்லை. அத்தோடு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, 20 ஆண்டுக் காலமானதால் சில பைப்லைன்கள் பழுதடைந்திருக்கின்ற காரணத்தால், பழுது நீக்கும் பணி அந்தக் குக்கிராமங்களுக்கும் விரிவுபடுத்தப்படுமா என்று மாண்புமிகு அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியாளர்கள் பல்வேறு நிலைகளில் செயல்படுத்திய திட்டங்கள் அனைத்தையுமே பெரிய நகரங்களுக்கும், பெரிய கிராமங்களுக்கும் ஏற்ற வகையில் தீட்டிய காரணத்தினால்தான், இதுபோன்ற குக்கிராமங்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை ஆட்சியாளர்களால் செய்து கொடுக்க முடியவில்லை. அதன் அடிப்படையில்தான் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக பொறுப்பேற்றபொழுது, குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டம் என்ற ஒரு திட்டத்தை உருவாக்கி 'தாய்' என்று அதற்குப் பெயரிடப்பட்டு, இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் சொன்ன குக்கிராமங்களுக்கும் அடிப்படை வசதிகளை மேற்கொள்கின்ற வகையிலே, பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்குவதற்கு உரிய வாய்ப்பு இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்து, அது நிறைவேற்றப்படும் என்பதையும் பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சுந்தர்ராஜன் அவர்கள்.

**திரு. ஆர். சுந்தர்ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகருக்கு கடந்த கோடை காலத்திலே, வைகை அணையிலே குடிநீர் வற்றுகின்ற காலமாக இருந்த நேரத்திலே, மாநகருக்கு எப்படி குடிநீர் வழங்கப் போகின்றீர்கள்? இரண்டாவதாக, மாநகரத்திலே இன்றைக்கு குடிநீருடன் சாக்கடை நீர் கலந்து வந்துகொண்டிருக்கிறது. நான் ஏற்கெனவே சட்டமன்றத்தில் தங்களிடம் மனுவாகக் கொடுத்திருக்கின்றேன். அங்கே அனுப்பனாடி கால்வாய், சிந்தாமணி கால்வாய் போன்றவையெல்லாம் சாக்கடையாக இருப்பதைச் சுத்தப்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கின்றேன். (குறுக்கீடு)



2012 மார்ச் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்விக்கு வாருங்கள்.

**திரு. ஆர். சுந்தர்ராஜன்:** பலமுறை சொல்லியும் இதுவரையில் நடவடிக்கை எடுக்கவில்லை. சென்ற பட்ஜெட்டிலேயும் நான் அதுகுறித்துப் பேசியிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசியதை விடுங்கள். இப்பொழுது கேள்விக்கு வாருங்கள்.

**திரு. ஆர். சுந்தர்ராஜன்:** வருகின்ற கோடைக் காலத்திலே மதுரை மாநகருக்கு எந்த அளவுக்கு நீங்கள் தண்ணீர் கொடுக்கப் போகின்றார்கள் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு தேவையான பதிலைச் சொல்ல வேண்டிய சூழ்நிலையில் நான் இருக்கிறேன். கடந்த ஆட்சியில் மதுரை மாநகராட்சியையே ஒரு ** மாற்றிவிட்ட காரணத்தினால் (குறுக்கீடுகள்) அது குடிநீரானாலும் சரி. (குறுக்கீடுகள்) எனக்கு வேறு வழி கிடையாது. (குறுக்கீடுகள்) இல்லை. அதனால்தான் வேறு வழியில்லையென்று குறிப்பிட்டுச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) வேறு வழி கிடையாது. (குறுக்கீடுகள்) இல்லை, வேறு வழி இல்லை. (குறுக்கீடுகள்) நான் அதனால்தான் அப்படிக் குறிப்பிட்டுச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) சரி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2012 மார்ச் 29

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ** என்று குறிப்பிட்ட அந்தச் சொல் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு திட்டங்கள், அது குடிதண்ணீர் வழங்குகின்ற திட்டமானாலும் சரி, திடக்கழிவை வெளியேற்றுகின்ற திட்டமானாலும் சரி, திட்டங்கள் அறிவிக்கப்பட்டதேயல்லாமல் எந்தத் திட்டமும் நிறைவேற்றப்படாமல், நிதி எங்கு சென்றது என்றே தெரியாமல் போய்விட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) வேறு வழி இல்லை. நான் சொல்லித்தானே ஆக வேண்டும்? (குறுக்கீடுகள்). இதைச் சொல்லித்தானே ஆகவேண்டும்? (குறுக்கீடுகள்) இதை நான் சொல்லித்தானே ஆகவேண்டும்? (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தயவுசெய்து அமருமாறு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)* Please sit down. *இப்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சுந்தர்ராஜன் அவர்கள் ஒரு பிரச்சினையை மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வரும்போது அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கிறார்கள். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *நான் சொல்லித்தானே ஆகவேண்டும்? (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அமைச்சர் ஏற்கெனவே சொன்ன அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்கியாகிவிட்டது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கடந்த காலங்களிலே திட்டங்களைச் செயல்படுத்துவதில் தொய்வு ஏற்பட்டதைச் சொல்லாமல் எப்படி இருக்க முடியும் என்பதை நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) கடந்த காலங்களில் திட்டங்கள் செயலாக்கத்தில் ஒரு தொய்வு, பணிகள் நடக்காமை, சரியாகச் செய்யாமை ஆகியவற்றை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. (குறுக்கிடுகள்)*

---

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*



2012 மார்ச் 29]

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி**: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தவறான கருத்து எதையும் சொல்லவில்லை. ஏற்கெனவே ஒரு வார்த்தை சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று சொன்னீர்கள். நான் ஏற்றுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) அந்த நிதியாதாரம் எங்கு சென்றது என்பது தெரியாத சூழ்நிலையிலே உங்கள் செயல்பாடுகள் இருந்தன. (குறுக்கீடுகள்) அப்படியென்றால் இவர்கள்தான் எடுத்தார்களா? இவர்கள்தான் கொள்ளையடித்தார்களா? (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: *கடந்த அரசினுடைய செயல்பாடுகள் எந்த அளவுக்கு இருந்தன என்பதைத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். (குறுக்கீடுகள்)* Please sit down. *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்**: Hon. Speaker Sir, point of clarification. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: Please sit down. *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்**: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே அவையில் நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்தபோது இதுபோன்ற குற்றச்சாட்டுகளை அப்போதிருந்த அமைச்சர்கள் பேசியிருப்பதை நீங்கள் அறிவீர்கள். (குறுக்கீடுகள்) இல்லை, நாங்கள் கேட்டிருக்கிறோம். அவை அவைக் குறிப்பில் பதிவாகியுள்ளன. (குறுக்கீடுகள்) அவைக் குறிப்பில் இருக்கின்றன. (குறுக்கீடுகள்) நீங்கள் அவைக் குறிப்பைப் பார்த்தால் தெரியும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அவைக் குறிப்பில் இருக்கின்றன. இதுபோன்ற குற்றச்சாட்டுகள் அவைக் குறிப்பிலே இருக்கின்றன. இப்போது மாண்புமிகு அமைச்சர் நிதி எங்கே சென்றது என்றுதான் கேட்டார். அது உங்களிடத்திலே சென்றதா என்பதுதான் என்னுடைய கேள்வி. (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: *உட்காருங்கள். நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) ஒரு குற்றச்சாட்டு, அவைக்கு மாறான சொற்றொடர் என்று சொன்னால் அவற்றை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகின்றோம். ஆனால், ஓர்*

[2012 மார்ச் 29

ஆட்சியினுடைய செயல்பாடுகளில், நிதி எந்த அளவுக்கு முறையாக அல்லது முறைதவறி கையாளப்பட்டது என்பது குறித்து கருத்து சொல்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு உரிமையுண்டு. அதை விமர்சனம் செய்யக்கூடாது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் அந்தக் கேள்வியைக் கேட்கிறார். அப்பொழுது இந்தத் திட்டம் எதனால் செயல்படுத்தப்படவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமல்லவா? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தி.மு.க. கொறடா, அவை மரபுக்கு மாறான சொற்றொடர் என்றால் சொல்லுங்கள், நீக்கிவிடுகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வி, அந்த நிதி எங்கு சென்றது என்றுதான் கேட்கிறேன். இதற்கு ஏன் இவர்கள் எழும்பிக் குறுக்கிட வேண்டும். அப்படியென்றால் இவர்கள்தான் கொள்ளையடித்தார்களா? நான் இவர்களையா சொன்னேன்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த நிதி எங்கே சென்றது என்பதுதான் மாண்புமிகு அமைச்சருடைய கேள்வி. அதற்கு ஏன் தி.மு.க. உறுப்பினர்களுக்குக் கோபம் வருகிறது?

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அவர்களைச் சொல்லவில்லையே? அந்த நிதி எங்கு சென்றது என்றுதான் நான் கேட்கிறேன். (குறுக்கீடுகள்) இவர்கள் எடுத்தார்கள் என்று நான் சொல்லவில்லையே? (குறுக்கீடுகள்) இவர்கள் சத்தம் போட்டால் இவர்கள் கொள்ளையடித்திருக்கிறார்கள் என்றுதான் அர்த்தம். (குறுக்கீடுகள்) இவர்கள் அடித்துக்கொண்டு போய்விட்டார்கள் என்றுதான் அர்த்தம். வேறு வழியில்லையே? (குறுக்கீடுகள்) இவர்கள் இதற்காக குரல் கொடுத்தால் அதற்கு உடன்பட்டவர்கள் ஆகிறார்கள். குரல் கொடுக்காமல் அமர்ந்தால் (குறுக்கீடுகள்) யாரோ செய்திருக்கலாம். கான்ட்ராக்ட் எடுத்தவர் கொள்ளையடித்திருக்கலாம். யாரோ செய்திருக்கலாம்.



2012 மார்ச் 29]

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கூறியது குற்றச்சாட்டு அல்ல. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. சக்கரபாணி, please sit down. நான் சொல்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) அந்த நிதி எங்கே சென்றது என்றுதான் கேட்கின்றார். அதுதான் கேள்வி. (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உங்களைக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) அதனால் தயவுசெய்து அமருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதுபோல, நீங்கள் எழுந்தால்தான் அது உங்களைக் குறிப்பிடுவதாக அமையும். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர், குடிநீரில் கழிவுநீர் கலந்துவிட்டது. தண்ணீர் கொடுக்கவில்லை, என்ன செய்யப் போகிறீர்கள் என்று அரசாங்கத்தை விமர்சனம் செய்வதுபோல பேசுகிறார் இல்லையா? அதற்குப் பதில் சொல்ல வேண்டியது அரசினுடைய கடமையா, இல்லையா? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். வினா வரிசை எண் 13, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள். மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. ராமச்சந்திரன், இருக்கையைவிட்டு நீங்கள் இங்கே வருவது முறையல்ல. உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். இருக்கையில் அமருங்கள். இருக்கையைவிட்டு யாரும் வரக்கூடாது. (குறுக்கீடுகள்) இருக்கைக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) அனுமதி இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், குடிநீரில் கழிவுநீர் கலக்கிறது என்று சொன்னார். குடிதண்ணீர் எப்போது கொடுப்பீர்கள் என்று விமர்சனம் செய்கின்ற வகையிலே

[2012 மார்ச் 29

அரசாங்கத்தைக் கேட்கிறார். அதற்குப் பதில் சொல்வது அரசினுடைய கடமை. (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி சீர்கெட்டு இருக்கின்ற மதுரை மாநகராட்சியைச் செம்மைப்படுத்துவதற்காக இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சிறப்பு நிதியாக 250 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். அந்த மாநகராட்சி எல்லா வகையிலேயும் பாழ்பட்டு இருக்கிறது. அந்த பாழ்பட்ட மாநகராட்சியை (குறுக்கீடுகள்) மேம்படுத்த வேண்டுமென்பதற்காகத்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 250 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சபை மரபுக்கு மாறான வார்த்தையைத்தான் நீக்க முடியும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** அந்த நிதியில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விடுத்த வேண்டுகோள் முழுவதுமாக நிறைவேற்றப்பட்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர் கொடுக்கப்படும். கழிவுநீர் முழுமையாக அகற்றப்படும். அங்கே இருக்கின்ற திடக் கழிவு விரைவாக அகற்றப்பட்டு நல்ல மதுரை மாநகராட்சியாக, (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) பாண்டியர்கள் ஆண்ட ஆட்சியைப்போல, அந்தக் காலத்தில் இருந்த மதுரையைப்போல, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே மாற்றப்படும். மிகவும் செழிப்பாக இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 13, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) அனுமதி இல்லை. (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மதுரை மாநகராட்சியில் குடிநீர் வழங்கும் திட்டத்தைப் பற்றி இங்கே சில விளக்கங்களைச் சொல்லும்போது, அங்கே பொதுமக்களினுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு, அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு வழங்கப்பட்ட குடிநீர் திட்ட நிதி எங்கே காணாமல் போய்விட்டது என்ற கருத்தைச் சொன்னார்கள். அதற்குப் பின்னாலே அவர் சொல்ல



2012 மார்ச் 29]

வந்த கருத்தையும் நீங்கள் கேட்க வேண்டும். கேள்வி நேரத்தின்போது பதில் சொல்லும்போது யாரையும் குறிப்பிட்டு அந்தக் குற்றச்சாட்டைச் சொல்லவில்லை. அவர் மாநகராட்சிகளுக்குப் பொறுப்பான அமைச்சராக இன்றைக்கு இருக்கின்றார். கடந்த காலங்களில் தமிழ்நாட்டில் இருக்கின்ற அனைத்து மாநகராட்சிகளிலும், உள்ளாட்சிகளிலும் இருக்கின்ற சில முறைகேடுகள் அவருடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு இருக்கும். அதைத்தான் அவர் குறிப்பிட்டுச் சொல்கின்றார். மக்களுக்கு எந்த நோக்கத்திற்காக, அதாவது குடிநீர்த் திட்டங்களுக்கு வழங்கப்பட்ட நிதியில், அந்தத் திட்டத்தினுடைய முழுப் பயனும் மக்களுக்குச் சென்றடைவதில், சில முறைகேடுகள் நடைபெற்றதாக அவருக்குத் தகவல் வந்திருக்கின்றது. அதைத்தான் சொல்ல வந்தார். (குறுக்கீடுகள்) சொல்வதைக் கேளுங்கள். அன்றைக்குக்கூடச் சொன்னார்கள். சாக்கடைக் கழிவுநீர், குடிநீருடன் கலந்ததைச் சொன்னார்கள். அது ஒரு குற்றச்சாட்டுதான்.

இப்போது கேள்வி எழுப்பிய மாமன்ற உறுப்பினர்கள் யாருமே அந்த மாநகராட்சியில் உறுப்பினராகவோ அல்லது அந்தத் துறையின் பதவியேற்ற அமைச்சராகவோ இல்லை. உங்களுக்கு அந்த விவரங்கள் தெரிவதற்கு வாய்ப்பு இல்லை என்றே நான் கருதுகின்றேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு அனைத்து விவரங்களும் தெரியும். நீங்கள் தனியாக அவரைச் சந்தித்துக் கேட்டால் அல்லது சட்டமன்றத்தில் வைக்க வேண்டுமென்று கேட்டால் உங்களுக்கு உரிய ஆதாரங்களை அவர் தருவார். ஆகவே, தனிப்பட்ட முறையில் யார்மீதும் குற்றச்சாட்டுச் சொல்லவில்லை. அந்த மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஒதுக்கப்பட்ட நிதி எங்கேயோ சென்றுவிட்டது என்ற பொருள்வடிவில்தான் சொன்னார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

முற்பகல் 10-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் தெளிவாகச் சொல்லிவிட்டார். Please sit down. இது விவாத நேரம் இல்லை. Please sit down. கேள்வி நேரத்தில் விவாதம் கூடாது. அவர் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. விடுங்கள். (குறுக்கீடு) நிதி எங்கே போனது என்றுதான் கேட்டார்கள். அதற்கு ஏன் உங்களுக்குக் கோபம் வருகிறது?

[2012 மார்ச் 29

வினா வரிசை எண் 13, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**13—**

**கட்டட வசதி**

*__3172—திரு. ஆ. நாராயணன்:__

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி ஒன்றியம், கடையன்குளம் பாலர் பள்ளிக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெற்றி என்கிற வீர வரலாற்றின் வெற்றித் தாய், எங்களின் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய கேள்விக்கான பதிலைத் தெரிவிக்கின்றேன். (குறுக்கீடுகள்)

**விடை—**

(அ) மற்றும் (ஆ) ஆம். நாங்குநேரி சட்டமன்றத் தொகுதி, நாங்குநேரி ஒன்றியம், கடையன்குளம் பாலர் பள்ளிக்கு அங்கன்வாடி மையக் கட்டடம் கட்ட காலிமனை நன்கொடையாகப் பெறப்பட்டுள்ளது. அங்கன்வாடி மையத்திற்குப் பல்வேறு நிதி ஆதாரங்களின்மூலம் கட்டடம் கட்ட மாவட்ட நிருவாகம் உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தங்கள் மூலமாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.



2012 மார்ச் 29]

**திரு. ஆ. நாராயணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரியில் அமைந்துள்ள பெருந்தலைவர் மண்டபம் மற்றும் சென்னையிலே உள்ள பெருந்தலைவர் இல்லம் ஆகிய இரண்டையும் புதுப்பிக்கும் பணிகள் இந்த ஆண்டில் மேற்கொள்ளப்படும் என்று அறிவித்த புரட்சித் தலைவி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எங்களது சமத்துவ மக்கள் கட்சியினுடைய தலைவர் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, நன்றி கூறி விடைபெறுகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பார்த்தசாரதி அவர்கள்.

**திரு. ப. பார்த்தசாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய 128-வது வட்டத்தில், குலசேகரப்பட்டணத்திலே உள்ள பால்வாடி கட்டடம் மிகவும் பழுதடைந்துள்ளது. அதனைப் புதுப்பித்துத் தருமாறு தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மனிதநேயத்தோடு அங்கன்வாடிக் கட்டடங்களைப் பழுதுபார்ப்பதற்கு 47 கோடியே 61 இலட்ச ரூபாயை ஒதுக்கீடு செய்து, அதனடிப்படையிலே பெரிய அங்கன்வாடி மையம், சிறிய அங்கன்வாடி மையம் என்று பிரித்து, 17,778 மையங்களைப் பழுதுபார்ப்பதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்திருக்கிற அங்கன்வாடி மையமும் பழுதுபார்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 14, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே.டி. ராஜா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

[2012 *மார்ச்* 29

**14—**

**உர விலை**

***3514—திரு. ஏ.கே.டி. ராஜா:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிர்ணயிக்கப்பட்ட விலையைவிட கூடுதல் விலைக்கு விற்பனை செய்யும் உர விற்பனையாளர்களின் உரிமத்தை இரத்து செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கூடுதல் விலை விற்கும் விற்பனையாளர்களின் உரிமத்தை இரத்து செய்திட அலுவலர்களுக்கு உரிய அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மாவட்டந்தோறும் ஆய்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டு, திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு உரத்தினைக் கூடுதல் விலைக்கு விற்பவர்களின் உரிமம் இரத்து செய்யப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே.டி. ராஜா அவர்கள்.

**திரு. ஏ.கே.டி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திருப்பரங்குன்றம் தொகுதி, விவசாயம் அதிகம் செய்யப்படுகிற பகுதிகளைக் கொண்டது. அந்தப் பகுதிகளில் தனியார் உரக் கடைகளில் உரங்களை அதிக விலைக்கு விற்பதாக என்னிடம் விவசாயிகள் புகார் கொடுத்துள்ளார்கள். இங்கே மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் தனியார் உரக் கடைகளில் இவ்வாறு செய்து கொண்டு இருக்கிறார்கள். அந்த உரக் கடைகளில் விலை அறிவிப்புப் பலகை வைக்கப்பட வேண்டும். யூரியா என்ன ரேட், டி.ஏ.பி. என்ன ரேட், காம்ப்ளக்ஸ் என்ன ரேட் என்ற அறிவிப்புப் பலகை வைக்கப்பட வேண்டும். எல்லா உரக் கடைகளிலும் ஒரு சிறிய போர்டு மட்டும் வைத்து, அதிகாரிகள் பார்க்கும்போது மட்டும், அதில் அவர்கள் உரத்தின் விலைகளை 'சாக் பீஸ்' வைத்து எழுதிக்கொள்கிறார்கள். எனவே, பெரிய அளவில் விலை அறிவிப்புப் பலகை வைப்பதற்கு வேளாண்மைத் துறை ஆய்வு செய்து, நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.



2012 *மார்ச்* 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நிர்ணயித்துள்ள விலையைவிடக் கூடுதல் விலைக்கு விற்கும் உர விற்பனையாளர்கள்மீது நடவடிக்கை மேற்கொள்ள சிறப்புக் கண்காணிப்புக் குழு அமைத்து, கூடுதல் விலைக்கு விற்கும் உர விற்பனையாளர்கள்மீது உரக் கட்டுப்பாடு சட்டம், 1985-ன்கீழ் நடவடிக்கை மேற்கொள்ள அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, மாவட்ட வேளாண்மை இயக்குநர்கள், அந்தந்த மாவட்ட வேளாண்மை உதவி இயக்குநர்கள் (தரக் கட்டுப்பாடு) தலைமையிலே கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டு, அந்தந்த மாவட்டங்களில் ஒன்றியவாரியாக, திடீர் ஆய்வு செய்து கூடுதல் விலை விற்கும் உர உரிமையாளர்கள்மீது உரக் கட்டுப்பாடு சட்டம், 1985-ன்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவர்களின் உர உரிமை இரத்து செய்யப்பட்டு வருகிறது. மேலும், வேளாண்மை உதவி இயக்குநர் (தரக் கட்டுப்பாடு) நாளொன்றுக்கு மூன்று உர விற்பனை நிலையங்களை திடீர் ஆய்வு செய்து நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், அதிக விலைக்கு விற்பனை செய்யும் உர விற்பனையாளர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டும், அதனை அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வாயிலாக பத்திரிகை செய்தியாகவும் வெளியிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் 2011-2012 ஆம் ஆண்டில் உரக் கட்டுப்பாடு சட்டம், 1985-ன்படி உரக் கடைகளில் 17,167 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இதிலே உரக் கட்டுப்பாட்டு சட்டத்திற்குப் புறம்பாக நடந்த 1,275 கடைகள் கண்டறியப்பட்டு, 1,211 உர விற்பனை நிலையங்களின் உரிமங்கள் தற்காலிகமாக இரத்து செய்யப்பட்டிருப்பதோடு, 264 உர விற்பனை நிலையங்களின் உரிமங்கள் நிரந்தரமாகவும் இரத்து செய்யப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-40*

மதுரையைப் பொறுத்தவரையில், மொத்தம் 143 உரக் கடைகள் ஆய்வு செய்யப்பட்டன. இதில் 19 கடைகளில் விதிமீறல் இருந்தது. அதிலே 13 கடைகளினுடைய உரிமம் தற்காலிகமாக இரத்து செய்யப்பட்டது. 6 கடைகளின் உரிமங்கள் நிரந்தரமாக இரத்து செய்யப்பட்டிருக்கின்றன. இவ்வாறு அந்தப் பகுதியிலே

[2012 மார்ச் 29

*19 கடைகள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 15, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

**15—**

**மான்கள் பாதுகாப்பு**

***6249—திரு. கே. தங்கவேல்:**

*மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருப்பூர் மாவட்டம், கோதபாளையம் பகுதியிலுள்ள மான்களைப் பாதுகாக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*ஆனைமலை புலிகள் காப்பக மண்டலக் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வரும் திருப்பூர் வனக் கோட்டப் பகுதியில் அமைந்துள்ள அவினாசி வட்டம், புதுப்பாளையம், கோதபாளையம் ஆகிய பகுதிகளில் வசிக்கும் மான்களைப் பாதுகாக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.*

**திரு. கே. தங்கவேல்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே விவசாயிகள் பல புகார்கள் கொடுத்திருக்கிறார்கள். நாய் கடிப்பதால் பல்வேறு மான்கள் இறந்திருக்கின்றன. 300-க்கும் மேற்பட்ட மான்கள் அந்தப்பகுதியில் PWD-க்குச் சொந்தமான புதுப்பாளையம் குளத்தைச் சுற்றியும், கோதபாளையம் பகுதிகளுக்கும் சென்று, அந்தப் பகுதிகளினுடைய விவசாயத்தைப் பெரிய அளவுக்குப் பாதிப்படையச் செய்கின்றன. எனவே, விவசாயத்தைப் பாதுகாக்கிற அடிப்படையில், அந்த மான்களை வனப் பகுதிகளுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மனு கொடுத்தபோது, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், அது இயலாத காரியம் என்பதுபோல் சொல்லியிருக்கிறார்கள். மான்களையும், விவசாயத்தையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.*



2012 மார்ச் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டம், அவினாசி வட்டம், புதுப்பாளையம் குளத்தைச் சுற்றியுள்ள, கோதபாளையம், புதுப்பாளையம், வளையப்பாளையம், சந்தன்பட்டி ஏரிப்பாளையம் போன்ற கிராமப் பகுதிகளில் 100-க்கும் மேற்பட்ட மான்கள் வாழ்ந்து வருகின்றன. இக்கிராமத்தை ஒட்டி காப்புக் காடு ஏதுமில்லை. இவ்விடத்திற்கு அருகாமையில் உள்ள காப்புக் காடு ஏறக்குறைய 40 கிலோ மீட்டர் தூரத்திலுள்ளது. இம்மான்கள் 10 ஆண்டுகளுக்கு முன்பு நொய்யல் ஆற்றில் ஏற்பட்ட வெள்ளத்தால் அடித்து வரப்பட்டு, புதுப்பாளையம் குளப் பகுதியில் தங்கி இனப்பெருக்கம் செய்து, தற்போது எண்ணிக்கையில் அதிகரித்துள்ளன.*

*திருப்பூர் மாவட்டம், அவினாசி வட்டத்தில் சுமார் 32 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள புதுப்பாளையம் குளப் பகுதியில் இம்மான்கள் தங்குகின்றன. இக்குளப் பகுதியில் கருவேலம் மற்றும் வேலிக்காத்தான் மரங்களின் இடையே இவை தங்குகின்றன. இப்பகுதி திருப்பூர் மாவட்ட வன அலுவலகக் கட்டுப்பாட்டில், திருப்பூர் வனச் சரக எல்லைக்குட்பட்டுள்ளது. சரக எல்லையின் மேற்பார்வையில் இம்மான்களைப் பாதுகாக்க இரண்டு காவலர்கள் நியமிக்கப்பட்டு, மான்கள் நடமாடும் பகுதியில் தொடர்ந்து கண்காணிப்புப் பணியை மேற்கொண்டு வருகிறார்கள். மேலும், இம்மான்களுக்கு வறட்சிக் காலங்களில் குடிதண்ணீர் ஆதாரத்தை மேம்படுத்தும்பொருட்டு, புதுப்பாளையம் குளத்தின் ஒரு பகுதியில் திட்டம் சாரா பணிகளின்கீழ் 3 சிறிய நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டு அவற்றில் தண்ணீர் நிரப்பப்பட்டு வருகின்றன. மான்கள் இந்தக் குளத்தைச் சுற்றியுள்ள விளைநிலங்களில் பயிரிடப்படும் கத்தரி, தக்காளி போன்ற காய்கறிப் பயிர்களையும், சோளம் போன்ற தீவனப் பயிர்களையும் மேய்வதால், விவசாயப் பயிர்கள் பாதிப்புக்கு உள்ளாகின்றன. இதன்காரணமாக பொதுமக்கள் மான்களை அருகிலுள்ள காப்புக் காட்டுக்கு இடம் மாற்றம் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையினை*

முன்வைத்துள்ளார்கள். பயிர்ச் சேதத்திற்கு நிவாரணத் தொகை கோரி விண்ணப்பம் இதுவரை எதுவும் பெறப்படவில்லை. அவ்வாறு விண்ணப்பம் கிடைக்கப்படின் விதிமுறைகளின்படி நிவாரணத் தொகை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மான்களை அவ்விடத்திலிருந்து மாற்றுவதற்கு மயக்க ஊசி செலுத்தி அப்புறப்படுத்தலாம். மான்கள் மிகவும் மிரட்சியான விலங்கு என்பதால், இவ்வகையான நடைமுறையில் உயிர்ச்சேதம் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, தற்காலிக சங்கிலி வேலி அமைத்து, மான்கள் அனைத்தையும் குறிப்பிட்ட பகுதிக்குள் கொண்டுவந்து, அவற்றிற்குத் தேவையான தீவனப் பொருட்களை அங்கே வைத்து, இப்படி தொடர்ந்து பழக்கப்படுத்தி, தக்க தருணத்தில் அங்கே பெரிய கூண்டுகளை வைத்து, மான்கள் அனைத்தையும் அந்த கூண்டுக்குள் அடைத்து, அதன்பிறகு காப்புக் காட்டுக்குள் விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைக் கூறிக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கமாகச் சொல்லிவிட்டார்கள். இதற்குமேல் துணைக் கேள்வி உண்டா?

**திரு. கே. தங்கவேல்:** மொத்தம் எவ்வளவு மான்கள் இருக்கின்றன? அந்த மான்களால் விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது. விவசாயிகள் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் பல புகார்கள் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், விவசாயிகள் எந்தப் புகாருமே கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். அந்தப் பகுதியில் விவசாயம் பாதிக்கப்பட்டு பலபேர் விவசாயத்தையே விட்டுவிட்டார்கள். மான்களை வேறு எங்காவது கொண்டு சென்று விட வேண்டும். இல்லையென்றால் விவசாயிகள் விவசாயம் செய்ய முடியாது.

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், அடுத்து நீங்கள் கவரி மான்கள் எத்தனை என்று கேட்பீர்கள்! (சிரிப்பு) மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் எரும் இதுவரை வனத் துறைக்கு விண்ணப்பிக்கவில்லை. கடந்த சட்டமன்றக் கூட்டத்



தொடரில்கூட மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விலங்குகளால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு 15,000 ரூபாய் என்று இருந்த நிவாரணத் தொகையை 25,000 ரூபாயாக உயர்த்தி அறிவித்துள்ளார்கள். விவசாயிகளுடைய கோரிக்கை வனத் துறைக்கு அனுப்பப்பட்டால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 16, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**16—**

## சுற்றுலாத் தலம்

***4350- திரு. மு.வீ. கருப்பையா:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழவந்தான் தொகுதியிலுள்ள சாத்தியாறு அணை, குட்லாடம்பட்டி மற்றும் சிறுமலை அருவி ஆகிய பகுதிகளைச் சுற்றுலாத் தலங்களாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு, சுற்றுலாவுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை அங்கு மேற்கொள்வது குறித்து தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையின்பேரில் பெறப்படும் கருத்துரு, அந்தப் பகுதியைப் பொறுத்தவரையிலும், இதுவரை மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெறப்படவில்லை. அப்படி பெறக்கூடிய சூழ்நிலையில், அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் வருகை புரிவதாக மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் உரிய கருத்துருவுடன் அரசுக்குப் பரிந்துரை செய்தால், சாத்தியாறு அணை, சிறுமலை அருவி மற்றும் குட்லாடம்பட்டி ஆகிய

பகுதிகளில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு கவனமாகப் பரிசீலனை செய்து, அங்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பதற்கு ஆவன செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.*

**திரு. மு.வீ. கருப்பையா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தலைவர்கள் போற்றக்கூடிய உன்னதமான தலைவியாக, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வாழும் இத்தருணத்தில் சுற்றுலாத் தலங்களை ஒருமைப்படுத்தக்கூடிய வல்லமையையும், சுற்றுலாத் தலங்களை மேம்படுத்துவதற்கான வல்லமையையும் கொண்ட இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய சிந்தனையில் உதித்த ஒரு திட்டம் இது. மதுரை புறநகர் மாவட்டத்திலுள்ள, குட்லாடம்பட்டி மற்றும் சிறுமலை அருவி ஆகியவை அருமையான நீரோட்டமுள்ள பகுதிகளாகும். அதை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் பார்வையிட்டு சுற்றுலாத் தலமாக ஆக்குவதற்கான ஒரு கருத்துருவை அனுப்பியுள்ளதாகத் தகவல் சொன்னார்கள். அது அரசிடம் உள்ளதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல, கருத்துரு ஏதாவது மாவட்ட ஆட்சியரிடமிருந்து இந்தக் குறுகிய காலத்தில் வரப்பெற்றிருந்தால், மாவட்ட ஆட்சியாளரையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களையும் நேரடியாக அழைத்துச் சென்று அதனை ஆய்வு செய்து, சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வரக்கூடிய பகுதிக்குரிய கட்டமைப்பு வசதிகள் மற்றும் அடிப்படை வசதிகளைக் கண்டிப்பாக செய்வதற்கு ஆவன செய்யப்படும் என்பதை இந்த நேரத்திலே தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.*





**திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது உசிலம்பட்டி தொகுதியில், சேடப்பட்டி ஒன்றியத்தில் அய்யனார்கோயில் அணை இருந்து வருகிறது. அதை சுற்றுலாத் துறையின்மூலம் மேம்படுத்துவதற்கு அரசிடம் கருத்துரு ஏதாவது இருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில், அங்கே சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வரக்கூடிய அளவுக்கு மாவட்ட ஆட்சியரிடமிருந்து துறை சார்பாகவே, நேரடியாகக் கருத்துரு பெற்று, சுற்றுலாப் பயணிகள் அந்தப் பகுதிகளைப் பார்த்துச் இன்புற்றுச் செல்லக்கூடிய முறையில் தேவையான அடிப்படை வசதிகள், குடிநீர் வசதிகள் மற்ற வசதிகள், செய்து கொடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யும் என்பதை இந்த நேரத்திலே தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 17, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**17—**

## பேருந்து வசதி

***3650—திரு. அ. அஸ்லம் பாஷா:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) ஆம்பூர் தொகுதி, ஆம்பூர் நகரிலிருந்து பெங்களூருவுக்கு நேரடிப் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம்பூர் தொகுதி, ஆம்பூர் நகரிலிருந்து பெங்களூருவுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவு பெற்று பேருந்துகள் இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

முற்பகல் 10-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்பூர் நகரம் மிகப் பெரிய தொழிற்சாலைகள் மற்றும் வியாபாரிகள் நிறைந்த நகரம். வியாபார ரீதியாக சென்னைக்கு வருவதற்குப் பேருந்து வசதிகள் நிறைய உள்ளன. அதேநேரத்தில், பெங்களூருவுக்குச் செல்வதற்கு காலை 10- 00 மணிக்குப் பிறகுதான் பேருந்து வசதிகள் உள்ளன. அதிகாலை நேரங்களிலே அது விரைவுப் பேருந்தாக இருந்தாலும் பரவாயில்லை, சொகுசுப் பேருந்தாக இருந்தாலும் பரவாயில்லை, அதிகாலை நேரங்களில் பெங்களூரு செல்வதற்குப் போக்குவரத்து வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்பூரிலிருந்து பெங்களூருவுக்கு அதிகாலையில் செல்ல அரசு விரைவுப் பேருந்து வசதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 18, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**18—**

**ஊதியம்**

***168—திரு. எம். ஆறுமுகம்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





பஞ்சாலைகளில் பணிபுரியும் பயிற்சித் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பஞ்சாலைத் தொழிலில் ஈடுபட்டுள்ள வேலை பழகுநர்களுக்கு அரசாணை 2D எண் 61, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 7-11-2008-ன்படி குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதன்படி பஞ்சாலைத் தொழிலில் ஈடுபட்டுள்ள வேலை பழகுநர்களுக்கு 1-4-2011 முதல் அடிப்படை ஊதியமாக தினம் ரூ.110-ம், அகவிலைப் படியாக ரூ.74.06-ம் சேர்த்து ஆக மொத்தம் தினம் ரூ.184.06 பெறுகிறார்கள் என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுமட்டுமல்லாமல், மேற்குறிப்பிட்ட தொழிலாளர்களுக்கு 1-4-2012 முதல் அடிப்படை ஊதியமாக தினம் ரூ.110-ம், அகவிலைப்படியாக தினம் ரூ.85.79 ஆக மொத்தம் ரூ.195.79 பெற இருக்கிறார்கள் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறைந்தபட்சக் கூலிச் சட்டத்தின் அடிப்படையில் மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் நிர்ணயம் செய்யப்பட்ட ஊதியம். இப்போது பஞ்சாலைகளில் பணிபுரியும் பயிற்சித் தொழிலாளர்களுக்கு அடிப்படைச் சம்பளம் ரூ.200 என்ற அடிப்படையிலும், பஞ்சப்படி ஒவ்வொரு மாதமும் உயரும் விலைவாசிப் புள்ளிகளுக்கேற்ப மாற்றி அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதாவது அரசிடம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்தகால ஆட்சியிலே தொழிலாளர்களை நசுக்க வேண்டுமென்ற அடிப்படையிலே அவர்களுக்கு ஐந்து

ஆண்டுகளுக்கு ஒரு முறை குறைந்தபட்சக் கூலி நிர்ணயம் செய்கின்ற முறையை வைத்திருந்தார்கள். ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி, தொழிலாளர்களுடைய அரசாக இயங்கிக் கொண்டிருக்கிற காரணத்தினால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசில் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்வதை நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு ஊதிய அமலாக்கம் என்ற முறை தொழிற்சாலைகள் ஆய்வுத் துறையால் அமல்படுத்தப்பட்டு வருகிறது. அரசு நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச ஊதியத்தை அமல்படுத்தாத தொழிற்சாலைகளின்மீது 82 கேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு, ஒரு கோடியே, 38 இலட்சத்து 47 ஆயிரத்து 441 ரூபாயை, 5,880 பஞ்சாலைத் தொழில் பழகுநர்கள் பயனடையும்வகையில், பெற்று, வழங்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பல்வேறு பெயர்களில் வேலைப் பழகுநர்களைப் பணியமர்த்தி அரசு நிர்ணயித்த குறைந்தபட்ச ஊதியத்தை வழங்காத பஞ்சாலைத் தொழிற்சாலைகளில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அரசாணையை அமல்படுத்தாத பஞ்சாலைகள்மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, என்றும் தொழிலாளர்களின் நலனைப் பாதுகாக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயிற்சித் தொழிலாளர்களுக்கு என்று அறிவிக்கப்பட்டு இருக்கக்கூடிய இந்த குறைந்தபட்சக் கூலி என்பது, ஆலைகளில் பயிற்சித் தொழிலாளர்கள் என்ற பெயரில் வைத்துக்கொள்ளாமல் கேம்பஸ் கூலி, மாங்கல்ய திட்டம், கான்ட்ராக்ட் லேபர் என்ற பெயரில் சட்ட விரோதமாக வேலை வாங்கி, பயிற்சித் தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய சம்பளத்தை வழங்காமல், சட்டத்தை மீறி பஞ்சாலை நிர்வாகங்கள் செயல்படுகின்றன. எனவே, நிரந்தரத் தொழிலாளர்கள் நீங்கலாக மற்ற அனைத்து தொழிலாளர்களையும் பயிற்சித் தொழிலாளர்களாக





வைத்துக்கொள்ள சட்டப்படி அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி அம்மா அவர்களுடைய கடந்த ஆட்சிக் காலத்திலே வெளியிடப்பட்ட அரசாணை எண் 274, நாள் 8-9-2004-ன்படி நான்காண்டுகளுக்கு ஒரு முறை ஊதியம் மறுநிர்ணயம் செய்யப்படும் என்று கொண்டுவரப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு 7- 11-2008- ல் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டது. எனவே, அவர்களுக்கு அடுத்த குறைந்தபட்ச ஊதியம் அடுத்த நான்காவது ஆண்டு முடிந்து 7-11-2012-ல் செய்யப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். பஞ்சாலைகளில் உள்ள தொழிற்பழகுநர்களின் பயிற்சிக் காலமான மூன்று வருடம் என்பதை ஆறு மாதமாகக் குறைத்து நிலையாணைகள் சட்டத்திற்குத் திருத்தம் கொண்டு வருவதற்கான சட்டமுன்வடிவு சடடப்பேரவையில் நிறைவேற்றப்பட்டு, ஜனாதிபதியினுடைய கையெழுத்திற்காக வைக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். இராஜி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**19—**

## தரம் உயர்த்துதல்

***7085—திரு. வி.எஸ். இராஜி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்யூர் தொகுதி, பவுஞ்சூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2012 மார்ச் 29

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், சைதாப்பேட்டை சுகாதார மாவட்டம், லத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் பவுஞ்சூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணைப்படி, மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரமுயர்த்தப்பட்டு அரசாணை வழங்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். இராஜி அவர்கள்.

**திரு. வி.எஸ். இராஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிரிக்கும் ஏழை முகம் காண வேண்டும், அவர் சிந்தும் கண்ணீர் நிலை மாற வேண்டும்" என்ற வாக்கிற்கிணங்க இன்றையதினம் பெண் உரிமையைப் போற்றிப் பாதுகாக்கும் பாரதி கண்ட புதுமைப் பெண்ணாய் சரித்திரம் படைத்துக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காப்பிய நாயகி மணிமேகலை, தன் கையிலிருந்த அள்ள, அள்ளக் குறையாத 'அமுதசுரபி' என்ற அட்சயப் பாத்திரத்தின்மூலம் ஏழையெளிய மக்களின் பசிப் பிணியைப் போக்கினார் என்ற காப்பியத்தை நாங்கள் படித்திருக்கின்றோம். ஆனால், இன்று ஏழையெளிய மக்களின் உடற்பிணியைப் போக்குகின்ற வகையிலே, மாண்புமிகு முதலமைச்சரின் விரிவாக்கப்பட்ட புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்மூலம் நவீன யுகத்தின் மணிமேகலையாய் திகழ்ந்துக்கொண்டிருக்கின்ற, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை இந்த நல்ல நேரத்திலே வணங்குகிறேன்.

இந்தச் சேயின் கோரிக்கையைக் கனிவுடன் பரிசீலித்து எனது செய்யூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பவுஞ்சூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரமுயர்த்தித் தந்து, இந்தத் தொகுதிக்கு நல்ல பணி செய்துகொண்டிருக்கின்ற அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதி மக்களின் சார்பாகவும் என் சார்பாகவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.



2012 மார்ச் 29]

**20—**

## திருக்குடமுழுக்கு

***5744—திரு. நயினார் நாகேந்திரன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி தொகுதி, கீழக்கல்லூர் புறவேலிநாதர்-அழகாம்பிகை, கைலாசநாதர்-சிவகாமிஅம்பாள் திருக்கோயில்களைப் புனரமைத்து திருக்குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டு மக்களின் இன்னல்களையெல்லாம் போக்கி, ஏழையெளிய மக்களின் முன்னேற்றத்திற்காக அயராது பாடுபட்டு வரும் எங்கள் அன்னையே, தமிழகச் சட்டமன்ற வரலாற்றில் புது வரலாறு படைத்து, இந்தியத் திருநாடே வியந்து பார்க்கின்ற அளவிற்கு சங்கரன்கோவில் இடைத் தேர்தலில் எதிர்த்தவர்களையெல்லாம் டெபாசிட் இழக்கச் செய்து, சரித்திரச் சாதனை வெற்றி பெற்று, (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க்கின்றவர்களுக்கும், எதிரிகளுக்கும் சிம்ம சொப்பனமாக விளங்கும் எங்கள் இதய தெய்வம் தமிழகத்தினுடைய நிரந்தர முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.

திருப்பூர் நகரத்திலே சாதாரணக் குடும்பத்தில் பிறந்த என்னை கிளைக் கழகச் செயலாளராகவும், தங்களின் திருநாமத்தைத் தாங்கி நிற்கின்ற மாவட்ட அம்மா பேரவையின் இணைச் செயலாளராகவும், அண்ணா பனியன் தொழிற்சங்கத்தின் செயலாளராகவும், திருப்பூர் நகரக் கழகத்தின் செயலாளராகவும், நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதியில் கழக வேட்பாளராகப் போட்டியிடும் நல் வாய்ப்பினையும் வழங்கி, எளிய தொண்டனாகிய எனக்கு வாக்குகளைச் சேகரித்து, வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியையும் தேடித் தந்து, இந்த மாபெரும் சபையிலே எனக்கு முகவரியும் கொடுத்து, மாவட்ட கழகச் செயலாளராகவும் நியமித்து தங்களது சீரிய தலைமையின்கீழ் பணியாற்றிட என்னை இந்து சமய மற்றும் அறநிலையத் துறையின் அமைச்சராக்கி,

[2012 மார்ச் 29

(மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாமன்றத்தில் பேசுவதற்கு ஒரு நல்ல வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்த, எங்கள் குடும்பத்தின் குலதெய்வம், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் கோடானுகோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் அனுமதியோடு திருத்திய விடையை இம்மாமன்றத்தில் சமர்பிக்கின்றேன்.

திருநெல்வேலி மாவட்டம் மற்றும் வட்டம், கோடககல்லூர் (கீழக்கல்லூர்) அருள்மிகு புறவேலிநாதர்-அருள்தரும் அழகாம்பிகை திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் நிருவாகம் தக்காரால் கவனிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலின் ஆண்டு வருமானம் ரூ.7,000/- ஆகும். இந்தத் திருக்கோயிலின் திருப்பணிகளைச் செய்திட உத்தேசமாக ரூ.10.00 இலட்சம் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு நிதி ஆதாரம் திருக்கோயிலில் இல்லை. எனவே, உபயதாரர்களை அணுகி இப்பணிகளைச் செய்திட திருக்கோயில் நிருவாகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. உபயதாரர்கள் கிடைக்கப்பெற்றவுடன் உபயம்/பொதுமக்கள் நன்கொடை மற்றும் துறை நிதியுதவியுடன் நிதி ஆதாரத்தின் அடிப்படையில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் திருப்பணிகளைச் செய்திட திட்டமிடப்பட்டுள்ளது.

முற்பகல் 11-00

திருநெல்வேலி மாவட்டம் மற்றும் வட்டம், கீழக்கல்லூர் அருள்மிகு கைலாசநாதர்-உடனுறை சிவகாமி அம்மாள் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இந்தத் திருக்கோயில் நவ கைலாயங்களில் செவ்வாய் ஸ்தலமாகும். இத்திருக்கோயில் நிருவாகம் செயல் அலுவலரால் கவனிக்கப்பட்டு வருகிறது. இந்தத் திருக்கோயிலினுடைய ஆண்டு வருமானம் ரூபாய் 16,414 ஆகும். இத்திருக்கோயிலுக்குச் சொந்தமாக நிலங்கள் ஏதும் இல்லை; உண்டியல்மூலம் வருமானம் வரப்பெறுகிறது. இத்திருக்கோயிலில் ஒருகால பூஜை நடைபெற்று வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்- விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.



2012 மார்ச் 29]

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்:** இத்திருக்கோயிலின் குடமுழுக்கு 17-3-2006 அன்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் நடைபெற்றது. 12 ஆண்டுகள் முடிந்த பின்பு, ஆகம விதிகளின்படி, 2018 ஆம் ஆண்டில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் மீண்டும் நடைபெறும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள் இந்தக் கேள்வியைப் போட்டிருக்கிறார்கள். தனது தொகுதியில் உள்ள இந்தத் திருக்கோயிலுக்குக் குடமுழுக்கு நடத்தப்படுமா என்று கேட்டிருக்கிறார். அதற்கு மாண்புமிகு அமைச்சர் பதிலளிக்கும்போது, "இதற்கு 10 இலட்சம் ரூபாய் தேவைப்படும்; அந்த அளவிற்கு நிதி இந்தத் திருக்கோயில் வசம் இல்லை. எனவே, 10 இலட்சம் ரூபாய் வழங்கக்கூடிய உபயதாரர்களைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள்; ஏற்பாடானவுடன் குடமுழுக்கு விழா நடைபெறும்" என்று தெரிவித்திருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள் ஒரு முன்னாள் அமைச்சர். ஆகவே, அவர் மனது வைத்தால், நொடிப்பொழுதில் இந்த 10 இலட்சம் ரூபாய் வழங்கக்கூடிய உபயதாரர்களை அவர் ஏற்பாடு செய்ய முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) அதைச் செய்வாரா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள்.

**திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி தொகுதி, கீழக்கல்லூர் புறவேலிநாதர்-அழகாம்பிகை, கைலாசநாதர்-சிவகாமி அம்பாள் திருக்கோயில்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவின்படியே, நிச்சயமாக எல்லா நிதியையும் திரட்டி, அதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுப்பேன் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[2012 மார்ச் 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

**[குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. விதி 110–ன்கீழ் அறிக்கை

### புதிய மின் உற்பத்தித் திட்டங்கள் குறித்த முதலமைச்சரின் அறிக்கை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றைப் பேரவைக்கு அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** 2012-2013 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கைமீது நேற்று நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய உறுப்பினர்கள் மின் பற்றாக்குறையை நீக்குவதற்காக புதிய மின் திட்டங்கள் எதுவும் இந்த நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்படவில்லை என்றும், ஏற்கெனவே சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்ட திட்டங்களின் நிலை பற்றியும் தங்கள் கருத்துகளை இந்த மாமன்றத்திலே எடுத்துரைத்தார்கள். புதிய மின் திட்டங்களை அறிவிப்பது மட்டுமின்றி, அவற்றைக் காலத்தே செயல்படுத்தி அவற்றின் பயன் பொது மக்களுக்குக் கிடைக்கச் செய்யும் வகையில் நடவடிக்கைகளை முன்னின்று எனது அரசு எப்போதும் எடுத்து வருகிறது என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

2001-லிருந்து 2006 ஆம் ஆண்டு வரை எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் மின்வெட்டு நிலையே இல்லாமல் தமிழ்நாடு மின் மிகை மாநிலமாக இருந்தது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை தமிழக மக்கள் நன்கு அறிவார்கள். 2001-லிருந்து 2006 ஆம் ஆண்டு வரையில் 2,518 மெகா வாட் அளவுக்குக் கூடுதல் மின் நிறுவுதிறன் ஏற்படுத்தப்பட்டது. எனவேதான், அப்போது மின் பிரச்சினை ஏதும் இருந்ததில்லை. ஆனால், முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியின் ஐந்தாண்டுக் காலத்தில் கூடுதலாக நிறுவப்பட்ட மின் நிறுவுதிறன் வெறும் 206 மெகா



2012 மார்ச் 29] [செல்வி ஜெ ஜெயலலிதா]

வாட் மட்டுமே. அதன் காரணமாகத்தான் தமிழகம் இன்றைக்கும் மின் பற்றாக்குறையைச் சந்தித்து வருகிறது.

2011-2012 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 800 மெகா வாட் உடன்குடி விரிவுத் திட்டம், 1,600 மெகா வாட் உப்பூர் அனல் மின் திட்டம், தற்போதுள்ள எண்ணூர் அனல் மின் நிலையத்திற்குப் பதிலாக 600 மெகா வாட் திறன் கொண்ட புதிய திட்டம், 800 மெகா வாட் தூத்துக்குடி நான்காம் நிலைத் திட்டம் என 3,800 மெகா வாட் அளவுக்குப் புதிய மின் திட்டங்களை அறிவித்திருந்தோம்.

முற்பகல் 11-05

660 மெகா வாட் திறன் கொண்ட எண்ணூர் அனல் மின் விரிவாக்கத் திட்டம் என்னும் ஒரு புதிய திட்டத்தைச் செயல்படுத்த எனது தலைமையிலான அரசு தற்போது முடிவு செய்துள்ளது என்பதை இந்தப் பேரவைக்குத் தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அனல் மின் திட்டம் Super Critical தொழில்நுட்பத்துடன் கூடியதாக இருக்கும். இந்தத் திட்டத்தின்மூலம், குறைந்த அளவு நிலக்கரியில் அதிக அளவு மின் உற்பத்தியைப் பெற இயலும். குறைந்த நிலக்கரியைப் பயன்படுத்துவதன் காரணமாக, சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படும். சுமார் 3,960 கோடி ரூபாய் மதிப்பீட்டில் துவக்கப்படும் இந்த அனல் மின் திட்டம், 2015 ஆம் ஆண்டு இறுதிக்குள் தனது உற்பத்தியைத் தொடங்கும்.

இதுவரை தமிழ்நாட்டில், புனல், அனல், அணு, எரிவாயு சுழலி ஆகியவைமூலம் மின்சாரம் தயாரிக்கப்படும் மின் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. புனல் மின் நிலையம்மூலம் இதற்கு மேல் புதிய மின் உற்பத்தி நிலையங்கள் அமைப்பது கடினம். அதைப் போன்று, அனல் மின் நிலையத்திற்கு மத்திய அரசால் போதுமான அளவு நிலக்கரி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். தற்போது நடைமுறையில் உள்ள அனல் மின் நிலையங்களுக்கே நிலக்கரி ஒதுக்கீட்டை மத்திய அரசு சரிவர செய்யவில்லை. எனவே, மாற்று எரிபொருள்மூலம் மின் உற்பத்தி செய்யப்பட வேண்டியது தற்போது காலத்தின் கட்டாயம் ஆகும். மின் உற்பத்திக்கு Liquefied Natural Gas, அதாவது திரவ இயற்கை எரிவாயு

ஒரு மாற்று எரிபொருளாக அமையும், மேலும், LNG—ஐ எரிபொருளாகக் கொண்ட மின் நிலையத்தை மிகக் குறைந்த கால அளவில் உருவாக்க இயலும். ஆனால், அதற்கு LNG Terminal, அதாவது எல்.என்.ஜி. முனையம் தேவை. எல்.என்.ஜி. முனையம் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் இந்தியன் ஆயில் நிறுவனத்துடன் எனது முன்னிலையில் 22-3-2012 அன்று ஏற்படுத்தப்பட்டது. எனவே, அந்த முனையம் அமைக்கப்பட்டவுடன் கிடைக்கப்பெறும் திரவ இயற்கை எரிவாயுவைப் பயன்படுத்தி, 500 மெகா வாட் திறன் கொண்ட மின் உற்பத்தி நிலையத்தை அமைக்க எனது தலைமையிலான அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதேபோன்று, கோயம்புத்தூர், சேலம், தருமபுரி வழியாக கொச்சி முதல் பெங்களூருவுக்கு திரவ இயற்கை எரிவாயு எடுத்துச் செல்லும் குழாய் அமைக்கும் பணிகளை GAIL நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. இதனைப் பயன்படுத்தி, 500 மெகா வாட் திறன் கொண்ட மின் உற்பத்தி நிலையங்களை அமைக்க எனது தலைமையிலான அரசு ஆராயும்.

2011-2012 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட மின் திட்டங்களின் நிலைமை பற்றியும் இந்த மாமன்றத்திலே விவாதிக்கப்பட்டது. எனவே, அது பற்றியும் இங்கே எடுத்துக் கூறுவது எனது கடமை எனக் கருதுகிறேன்.

800 மெகா வாட் திறன் கொண்ட உடன்குடி விரிவாக்க அனல் மின் திட்டம் துவங்கப்படுவதற்கான முதல் நடவடிக்கையாக, சாத்தியக்கூறு திட்ட அறிக்கை தற்போது தயாரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம், 2015-2016 ஆம் நிதியாண்டில் செயல்பாட்டிற்கு வரும்.

1,600 மெகா வாட் திறன் கொண்ட உப்பூர் அனல் மின் திட்டத்திற்கான முன்சாத்தியக்கூறு அறிக்கை மற்றும் திட்ட வரைபடம் ஆகியவை இறுதி செய்யப்பட்டுவிட்டன. கடலோரப் பகுதி ஒழுங்குமுறை, அதாவது, Coastal Regulation Zone விதிகளின் அடிப்படையில் திட்ட எல்லைகளை வரையறுக்க 28-1-2012 அன்று அண்ணா பல்கலைக்கழகத்திடம் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டிற்கான அறிக்கை தயாரிப்பதற்கான ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது. இதற்கான





பணி ஆணைகள் விரைவில் வழங்கப்படும். மேலும், விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான ஆலோசகர் நியமிப்பதற்கான ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டு, மதிப்பாய்வில் உள்ளது. மத்திய சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டின் ஆய்வுக்கான குறிப்பு விதிமுறைகள், அதாவது Terms of Reference ஒப்புதலுக்காக மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தில் நிலுவையில் உள்ளது. இந்தத் திட்டம் 2015 ஆம் ஆண்டு இறுதிக்குள் செயல்பாட்டிற்கு வரும்.

40 ஆண்டு பழமை வாய்ந்த எண்ணூர் அனல் மின் நிலையத்திற்குப் பதிலாக 600 மெகா வாட் திறன் கொண்ட புதிய அனல் மின் நிலையத்தை நிறுவ உத்தேசிக்கப்பட்டிருந்தது. எனினும், Super Critical தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தினால் குறைந்த அளவு நிலக்கரியில் அதிக அளவு மின் உற்பத்தியைப் பெற முடியும் என்றும், இதன்மூலம் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படும் என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது. எனவே, 600 மெகா வாட் திறன் கொண்ட இந்த அனல் மின் நிலையத்தை Super Critical தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி 660 மெகா வாட் திறன் கொண்ட அனல் மின் நிலையமாக மாற்ற முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டத்திற்கான முன்சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்த அனல் மின் திட்டமும் 2015 ஆம் ஆண்டு இறுதிக்குள் செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

முற்பகல் 11-10

800 மெகா வாட் தூத்துக்குடி நான்காம் நிலை அனல் மின் திட்டத்தைப் பொறுத்தவரை, கடலோரப் பகுதி ஒழுங்குமுறை ஆணைய விதிகளின்படி அனல் மின் திட்ட எல்லைகளை வரையறுப்பதற்கான பணி அண்ணா பல்கலைக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு, அதற்கான அறிக்கையும் பெறப்பட்டுவிட்டது. மேலும், சாத்தியக்கூறு அறிக்கை மற்றும் திட்ட விவர அறிக்கையினைத் தயாரிப்பதற்கான ஆலோசகர் நியமிக்கப்பட்டுவிட்டார். இந்த அனல் மின் திட்டம் 2015 ஆம் ஆண்டு இறுதிக்குள் செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

வட சென்னை அருகில் வல்லூரில் 1,000 மெகா வாட் திறன் கொண்ட அனல் மின் நிலையத்தை தேசிய மின் கழகத்துடன் இணைந்து நிறுவ 12-7-2002 அன்று எனது முன்னிலையில்

புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. அதற்கான ஆரம்ப கட்டப் பணிகளும் எனது அரசால் துவங்கப்பட்டன. பின்னர் வந்த மைனாரிட்டி தி.மு.க. அரசு இதனை விரைந்து செயல்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்காத காரணத்தால், இன்னமும் வல்லூர் அனல் மின் திட்டம் செயல்பாட்டிற்கு வரவில்லை. எனது அரசு பொறுப்பேற்றபோது மந்தகதியில் நடைபெற்று வந்த பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன. இதன் காரணமாக, இந்த ஆண்டு ஜூன் மாதம், முதல் அலகு உற்பத்தியைத் துவங்கும். (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டாம் அலகு இந்த ஆண்டு நவம்பர் மாதமும், மூன்றாம் அலகு அடுத்த ஆண்டு ஜூன் மாதமும் செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

அதேபோன்று, தூத்துக்குடியில் 1,000 மெகா வாட் திறன் கொண்ட அனல் மின் நிலையத்தை நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தோடு கூட்டு முயற்சியில் நிறுவ 19-6-2003 அன்று எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்தத் திட்டத்திற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளும் முந்தைய எனது அரசாலேயே மேற்கொள்ளப்பட்டுவிட்டன. இந்த அனல் மின் திட்டத்தின் பணிகளை முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு சரியாக கண்காணிக்கத் தவறியதால், இத்திட்டம் செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்படுவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முதல் அலகு 2013 ஆம் ஆண்டு ஜூன் மாதமும், இரண்டாம் அலகு 2013 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதமும் செயல்பாட்டிற்கு வரும். (மேசையைத் தட்டும் ஒலி) எனது அரசால் ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தப்படி தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டிய மின்சாரத்தின் அளவு 750 மெகா வாட் ஆகும். ஆனால், இத்திட்டம் பற்றி முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு, மத்திய அரசிடம் சரியாக எடுத்துக் கூறாத காரணத்தால், இது ஒரு மத்திய அரசின் திட்டம் எனக் கருதப்பட்டு, Gadgil Formula அடிப்படையில் 387 மெகா வாட் எனக் குறைக்கப்பட்டுவிட்டது.

இவையன்றி, ஒவ்வொன்றும் 600 மெகா வாட் திறன் கொண்ட வடசென்னை நிலை-2 மின் நிலையம், இந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் ஒரு யூனிட்டும், டிசம்பர் மாதத்தில் மற்றொரு யூனிட்டும் மின் உற்பத்தியைத் தொடங்கும். 600 மெகா வாட் திறன் கொண்ட மேட்டூர் மூன்றாம் நிலை அனல் மின் நிலையம் இந்த ஆண்டு ஜூன் மாதத்தில் செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டு, அதன் முழுத் திறனும் செப்டம்பர் மாதத்திற்குள் கிடைக்கப் பெறும்.





கூடங்குளம் அணுமின் நிலையம் தனது உற்பத்தியை இன்னும் இரண்டு மாதங்களில் துவக்கிவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நான் தற்போது விவரித்துள்ளவாறு எனது தலைமையிலான அரசு பல்வேறு புதிய மின் திட்டங்களைத் தொடங்கியுள்ளதுடன், தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் மின் திட்டப் பணிகளையும் முடுக்கிவிட்டுள்ளது. எனவே, வரும் ஜூன் மாதம் முதல் மின்வெட்டு படிப்படியாகக் குறைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எனது தலைமையிலான அ.இ.அ.தி.மு.க. அரசு, 2011 ஆம் ஆண்டு மே மாதம்தான் பொறுப்பேற்றது. அதன் பின்னர், இந்த அரசின் கொள்கைகள், திட்டங்கள் மற்றும் அறிவிப்புகள் ஆகியவை ஆளுநர் உரையிலும், நிதிநிலை அறிக்கையிலும், கொள்கை விளக்கக் குறிப்பிலும் தெரிவிக்கப்பட்டிருந்தன. கடந்த ஆண்டு பட்ஜெட் கூட்டத் தொடர் செப்டம்பர் மாதம் 14 ஆம் தேதிதான் நிறைவடைந்தது என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவர். எனவே, கடந்த பட்ஜெட் கூட்டத் தொடர் முடிவடைந்ததற்கும், நடப்பு ஆண்டு நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டதற்கும் உள்ள இடைவெளி ஆறு மாத காலம்தான். சாதாரணமாக, ஒவ்வொரு நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படுவதற்கும் இடையே ஓராண்டு இடைவெளி இருக்கும். எனவே, கடந்த நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட திட்டங்கள் அனைத்தும் முழுமையாக நிறைவேற்றப்பட்டு விட்டதா என்று எழுப்பப்படும் கேள்விகள் நியாயமானவை அல்ல என்பதை நியாய உணர்வு உள்ளவர்கள் அறிவார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

## 3. புதிய மின் உற்பத்தித் திட்டங்கள்—முதலமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

முற்பகல் 11-15

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரப் பற்றாக்குறையில் சிக்கித் தவிக்கிற தமிழகத்தை மீட்டெடுக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய தலைமையின்கீழ் இன்றைக்கு பல்லாயிரக்கணக்கான ரூபாய் மதிப்பீட்டிலே புதிய மின் உற்பத்தித் திட்டங்களை அறிவித்து தமிழகத்திற்குப் புதிய ஒளி விளக்காக இன்றைக்கு அவர்கள் அறிவிப்புகளை வெளியிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எப்போதெல்லாம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு தமிழகத்திலே மலர்கிறதோ, அப்போதெல்லாம் தமிழகத்திலே மின் உற்பத்தித் திறன் அதிகரித்து, தமிழகம் மின் உற்பத்தியிலே உபரி மாநிலமாக வரும். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பின் பற்றாக்குறையிலே அது தவிக்கும். இன்றைக்கு தமிழர்களின் குல விளக்காகப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எவராலும் அழித்துவிட முடியாத அணையா விளக்காக, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்திலே மின்சார உற்பத்தி அமையும் என்கிற வகையிலே எண்ணூர் விரிவாக்கத்திற்குப் புதிய விஞ்ஞான யுக்தியோடு ஏறக்குறைய 4,000 கோடி ரூபாய்க்கு மேலே அதற்குத் திட்டமிட்டிருக்கிறார்கள் என்கிறபோது, தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்கிற அஸ்திவாரத்தை இன்றைக்கு தொடங்கியிருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்களின் இந்தச் சீரிய நடவடிக்கையைத் தமிழக மக்களின் சார்பிலே, அடித்தளத்து கிராமப்புற மக்களின் சார்பிலே பாராட்டி, வரவேற்று, நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

**திரு. உ. தனியரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக்குப் பிறகு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா





அவர்கள் 3-வது முறையாகப் பொறுப்பேற்று, மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கின்ற ஆட்சியை, மக்களின் குறைகளை உடனுக்குடன் விரைந்து நிவர்த்திக்கின்ற ஆட்சியை (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு திறந்த நிர்வாகத்தை விரைந்து நடத்தி வருகின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மக்களினுடைய அவசர அவசியத் தேவையாக இருக்கிற மின்சாரத் தேவையை ஈடு செய்வதற்காக எண்ணற்ற திட்டங்களை இன்று அறிவித்திருக்கிறார்கள்.

ஏற்கெனவே மின் உற்பத்தித் திட்டங்களுக்காக அதனுடைய உற்பத்தியை அதிகப்படுத்துவதற்காக சென்ற நிதியாண்டிலும், இந்த நிதியாண்டிலும் அவர்கள் நிதியை ஒதுக்கி அதற்கான வேலைத் திட்டங்கள், பணிகள் நடைபெற்று வருவதாக அறிவித்த பிறகும், நேற்று மாமன்ற உறுப்பினர்கள் புதிய மின் உற்பத்தித் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்படவில்லை என்று வருத்தத்தைச் சுட்டிக்காட்டியவுடன் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உடனடியாக உணர்ந்துகொண்டு, இன்று மிக விரிவான அறிக்கையை 110-வது விதியின்கீழ் ஒட்டுமொத்த 7 கோடி தமிழர்களும் மனம் மகிழ்கின்ற வகையிலே (மேசையைத் தட்டும் ஒலி) விரிவான திட்டத்தைப்பற்றி அழுத்தமாக, விரிவாக அவர்கள் பதிவு செய்திருப்பதை 7 கோடி தமிழர்களும் மகிழ்ந்து வரவேற்பார்கள். நான் பல கூட்டங்களிலே சொன்னேன்; மாமன்றத்திலேயும் சொல்லியிருக்கிறேன். ஒரு பொருளை விலை கொடுத்து, அது உலகத்தில் எங்காவது கிடைக்கின்ற ஒரு பொருளாக இருந்து அதை வாங்கி வர வேண்டும், வாங்கி வந்துதான் இந்த மக்களினுடைய தேவைகளை நிறைவு செய்ய வேண்டிய அவசியம் இருந்தால், அது எந்த விலையாக இருந்தாலும், உலகத்தின் எந்த மூலையில் இருந்தும் உடனடியாகப் பெற்று வந்து தமிழ் மக்களினுடைய குறைகளைத் தீர்த்திருப்பார், நிவர்த்திச் செய்திருப்பார் நம் மாண்புமிகு முதலமைச்சர். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி விலை கொடுத்து வாங்க முடியாத பொருள், அப்படி விலை கொடுத்து வாங்கினாலும் அதைக் கொண்டு வந்து சேர்க்க மின் வழித் தடங்கள் போதுமானதாக இல்லை என்பது நம் அனைவருக்கும் தெரியும். இந்த நிலையிலே தமிழ்நாடு அரசு, வேறு எந்த வகையான

வெளிநாட்டுச் சக்திகளோ அல்லது நம்முடைய மத்திய அரசினுடைய உதவியே இல்லாமல் தற்சார்போடு, தன்னுடைய வருவாயை வைத்துக்கொண்டு இப்போது இந்த Super Critical தொழில்நுட்பத் திட்டத்தில் 1,000 மெகா வாட், அதேபோன்று, திரவ எரிவாயு மின் திட்டம், ஏற்கெனவே செயல்பட்டு வருகின்ற எண்ணூர், மேட்டூர், உடன்குடி, தூத்துக்குடி, கூடங்குளம் உள்ளிட்ட திட்ட நிலைகள் விரைவாகத் தொடங்கப்பட்டு, வருகின்ற ஜூன் மாதத்திலேயிருந்து படிப்படியாக மின்வெட்டு குறையும் என்றும், எப்படி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய முந்தைய 2001-2006 ஆட்சிக் காலத்திலே தமிழ்நாடு, மின்சார உற்பத்தியிலே மிகை மாநிலமாக இருந்ததோ (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று இந்தப் பொற்கால ஆட்சியிலே 2011-2016-ல் ஆட்சிப் பொறுப்பு நிறைவுபெறுகிற நிலையிலே, தமிழ்நாடு, மிகை மின் உற்பத்தி மாநிலமாக விளங்குவதற்கானத் திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு தமிழ்நாடு கொங்கு இளைஞர்கள் பேரவை சார்பாக நன்றி தெரிவித்து அமைகிறேன். வணக்கம்.

முற்பகல் 11-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

*__திரு. பி.வி. கதிரவன்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கைமீது இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் பேசும்போது, தமிழகத்தில் மின்சாரப் பற்றாக்குறை அதிகமாக இருக்கிறது என்று பேசி வந்ததைக் கருத்தில்கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொலைநோக்குப் பார்வையோடு அதற்கு நீண்டதொரு திட்டத்தை நிறைவேற்றுகின்ற வகையிலே மின்சார உற்பத்திக்காக தமிழகத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் அனைத்துத் திட்டங்களையும் விளக்கிக் கூறியிருக்கிறார்கள். அந்தத் திட்டங்களின்மூலம் வருகின்ற ஜூன் 2012-லிருந்து படிப்படியாக மின்வெட்டு குறைக்கப்படும் என்றும், ஜூன் 2012-க்கு பின்னால் தமிழகம் மின்சார உற்பத்தியில் முழு வளர்ச்சி அடையும் என்பதையும் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார்கள்.



கூடங்குளம் அணு மின் நிலையம் திறக்கப்பட வேண்டும் என்று மத்திய அரசு எவ்வளவோ முயற்சி எடுத்தும்கூட அது நடைபெறாமல் இருந்த நிலையை போக்கி, அந்தப் பகுதி மக்களின் அச்சத்தைப் போக்கும் வகையில் அதற்கென ரூ.500 கோடி ஒதுக்கீடு செய்து, கூடங்குளம் அணு மின் நிலையம் இன்னும் இரண்டு மாத காலத்தில் தன் உற்பத்தியைத் தொடங்கும் என்ற நிலையை உருவாக்கியது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்றால் அதை யாரும் மறுக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த தி.மு.க. ஆட்சியில் மின்சாரத் துறை அமைச்சராக இருந்த மரியாதைக்குரிய திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் சொன்னார்கள்; "வருகின்ற தேர்தலில் மின்சாரத் துறையினால்தான் நாம் தோல்வி அடைவோம்" என்பதை அவரே அறிக்கை மூலமாக தெரிவித்தார்கள். மாறாக, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தொலைநோக்குப் பார்வையோடு, தமிழகத்தை முன்னுக்குக் கொண்டுவரவேண்டும் என்ற சிந்தனையோடு நல்ல நல்ல திட்டங்களைக் கொண்டுவருவதில், அதிலும் குறிப்பாக மின்சாரத் துறையில் முழு வளர்ச்சியைப் பெறவேண்டும் என்பதற்காகச் சிறந்த திட்டங்களை அடுக்கடுக்காகச் சொல்லி வந்திருக்கிறார்கள். அந்தத் திட்டங்களை நிறைவேற்றித் தரவிருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சி உறுதுணையாக இருக்கும் என்று கூறி மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு வாழ்த்துகளைச் சொல்லி எனது உரையை நிறைவு செய்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2012-2013 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் புதிய மின் திட்டங்கள் எதுவும் இல்லையென்ற கேள்விக்கு பதில் அளிக்கும் வகையில் எண்ணற்ற புதிய திட்டங்கள் மட்டுமல்ல, 2001 ஆம் ஆண்டு தான் பதவியில் இருந்தபோது துவங்கப்பட்டு செயல்படுத்தப்படாமல் கிடப்பில் போடப்பட்ட மின் திட்டங்களைச் சீரமைப்பதற்கும், அதேபோல் Super Critical தொழில்நுட்பம் என்ற வகையிலே குறைந்த நிலக்கரி பயன்பாட்டில் அதிக மின் உற்பத்தி செய்யும் வகையிலும் மற்றும் பல்வேறு

திட்டங்கள் வாயிலாக தமிழக மக்களுடைய ஒட்டுமொத்தத் தேவையையும் நிறைவு செய்யக்கூடிய வகையில் காலத்தே செயல்படக்கூடிய திட்டங்களை முன்வைத்து இருக்கக்கூடிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை புதிய தமிழகம் கட்சி மனதாரப் பாராட்டுகிறது. நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கக்கூடிய மின் நெருக்கடியைப் போக்குவதற்கு இந்த அரசு என்ன செய்யப் போகின்றது என்ற கேள்வி தமிழக மக்களுடைய உள்ளங்களிலே பரவலாக எழுந்துள்ள சூழலில், தீர்க்கமாக நல்ல எதிர்கால சிந்தனையுடன், படிப்படியாக தமிழகத்திலே மின் பற்றாக்குறை இல்லாத ஒரு சூழலை உருவாக்குவதற்கு என்ன செய்யப் போகின்றேன் என்பதை விரிவாக விவரித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

குறிப்பாக, தனிப்பட்ட முறையிலே நான் பிறந்த ஊரான தூத்துக்குடி மாவட்டம் உடன்குடியிலே, கிடப்பிலே போடப்பட்டிருக்கக்கூடிய 800 மெகா வாட் அனல் மின்சார நிலையத்தைத் துவங்குவதற்கு இந்த அரசு உருப்படியான திட்டம் வகுத்திருப்பதையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன். அதேபோல, Liquefied Natural Gas மூலமாக மாசு ஏற்படுத்தாமல் மின் உற்பத்தி செய்வதற்கான ஆய்வு மேற்கொள்ளப்படும் என்ற அறிவிப்பு பாராட்டத்தக்கது.

முற்பகல் 11-25

அதுபோல, Super Critical Technology மூலமாக நிலக்கரியைக் குறைவாகப் பயன்படுத்தி மாசு ஏற்படாத வகையிலே மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு இந்த அரசு எடுத்திருக்கக்கூடிய நடவடிக்கைகளையும் பாராட்டுகின்றேன்.

கூடங்குளம் அணு உலை எதிர்ப்பாளர்கள்மீது போடப்பட்டிருக்கக்கூடிய வழக்குகளையெல்லாம் வாபஸ் பெற்று



அவர்களை விடுதலை செய்வதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணையுடன் உத்தரவிட வேண்டுமென்று கேட்டு விடைபெறுகின்றேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற விதி 110-ன்கீழ் தமிழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், தமிழகத்திலே இருந்துகொண்டிருக்கக்கூடிய கடுமையான மின் வெட்டினைப் போக்குவதற்கான முறையில், ஒரு நீண்ட நெடிய திட்டத்தினை இன்றையதினம் தமிழக சட்டமன்றத்தில் பல்வேறு தொழில்நுட்பங்களுடன்கூடிய திட்டங்களை உள்ளடக்கி, எதிர்காலத்தில் தமிழகத்தில் மின் பற்றாக்குறை ஏற்படாத வண்ணம் உபரி மாநிலமாக செயல்பட வேண்டுமென்ற அடிப்படையிலே அறிவித்திருப்பதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே நான் மனதாரப் பாராட்டுகின்றேன்.

அதேநேரத்தில், காடம்பாறை நீரேற்று மின் திட்டத்தினை மரியாதைக்குரிய முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் சிறப்பான முறையிலே கொண்டுவந்தார்கள். அந்தக் காடம்பாறை மின் திட்டம் இன்னும் கூடுதலான மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான திட்டமாக இருந்துகொண்டிருக்கிறது. அதையும் கவனத்திலே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

கூடங்குளம் அணு மின் நிலையத்தைப் பொறுத்தமட்டிலும் அதை எதிர்த்து வந்தவர்களெல்லாம் இப்போது வாபஸ் பெற்றுக்கொண்டு, அரசோடு சுமுகமான முறையிலே பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முன்வந்திருக்கிறார்கள். சிறையிலே அடைக்கப்பட்டிருப்பவர்கள் ஜாமீனிலே வெளியே வந்திருக்கின்றார்கள். அவர்கள்மீது போடப்பட்டிருக்கக்கூடிய அனைத்து வழக்குகளையும் வாபஸ் பெறவேண்டும். தமிழகத்திலே இந்த மின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டதற்கு நன்றி தெரிவித்து அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றி சொல்லும்போது விவாதத்தில் பேசுவதுபோல் பேசக்கூடாது.

இருளில் கிடந்த தமிழகத்தை மீட்டெடுக்க அயராது பாடுபட்டுவரும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மின் உற்பத்தியைப் பெருக்க துரித நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். சுற்றுச்சூழல் பாதுகாப்புடன் மிகக் குறைந்த செலவில் நவீன தொழில்நுட்பத்துடன் கூடுதல் மின் உற்பத்தியைச் செய்திட Super Critical தொழில்நுட்பத்துடன்கூடிய எண்ணூர் அனல் மின் விரிவாக்கத் திட்டம், திரவ இயற்கை எரிவாயுவைப் பயன்படுத்தி மின் உற்பத்தி, உடன்குடி விரிவாக்க அனல் மின் திட்டம் போன்ற திட்டங்களை அறிவித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு அவை உறுப்பினர்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) வருங்காலத்தில் தமிழ்நாடு, மின் உற்பத்தியில் மிகை மாநிலமாக, மற்ற மாநிலங்களுக்கு மின்சாரம் வழங்கும் மாநிலமாகத் திகழும் என்பதில் மாறுபட்ட கருத்து நிச்சயமாக இருக்க முடியாது. அவை உறுப்பினர்கள் அனைவரின் சார்பில் அம்மா அவர்களுக்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

## 4. தகவல் கோரல்

### உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) செல்வி கே. பாலபாரதி, நீங்கள் காலையில்தான் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். அதைத் துறைக்கு அனுப்பியிருக்கிறேன். பதில் வரட்டும். தயவு செய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் காலையில்தான் கொடுத்தீர்கள். (குறுக்கீடுகள்) காலையில்தான் என்னுடைய அறைக்கு வந்து கொடுத்தீர்கள். துறைக்கு அனுப்பியிருக்கிறேன். பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்கிறேன்.

## 5. முன்பண மானியக் கோரிக்கைகள், 2012–2013, அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2012-2013 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2012-2013 ஆம் ஆண்டு உடனடிச் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவைமுன் வைக்கின்றேன்.

**2012–2013 ஆம் ஆண்டு உடனடிச் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள்**

| | கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 1 | மாநிலச் சட்டமன்றம் | 15,78,85 | - | 40,00 |
| 2 | ஆளுநர் மற்றும் அமைச்சரவை | 11,39,41 | - | - |
| 3 | நீதி நிருவாகம் | 246,78,72 | - | - |
| 4 | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 460,59,79 | 54,08,72 | 1 |
| 5 | வேளாண்மைத் துறை | 1,430,38,49 | 31,48,06 | 60,12,00 |
| 6 | கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 285,61,33 | 40,00,04 | 1 |
| 7 | மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 1,07,76,20 | 59,12,74 | - |
| 8 | பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 29,70,22 | - | 4,05,81 |
| 9 | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 241,18,87 | 16,23,10 | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| 10 | வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 114,18,10 | - | 1 |
| 11 | முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 69,73,37 | - | - |
| 12 | கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 181,59,81 | 95,26,04 | 7,17,54 |
| 13 | உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 1,998,09,14 | 16,28,02 | 1 |
| 14 | எரிசக்தித் துறை | 785,38,22 | 600,00,00 | 2 |
| 15 | சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) | 2,86,69 | 80,00,00 | 6,05,04 |
| 16 | நிதித் துறை | 228,77,02 | 400,00,00 | 25,60,10 |
| 17 | கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) | 226,83,78 | 1 | 61,99,22 |
| 18 | கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) | 55,46,74 | - | - |
| 19 | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 2,165,50,12 | 61,84,90 | 6,00 |
| 20 | உயர் கல்வித் துறை | 962,48,57 | 10,70,54 | 1 |
| 21 | நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை | 637,13,23 | 1,623,54,06 | 1 |
| 22 | காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 1,421,66,34 | 74,00,00 | 8,00,01 |
| 23 | தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 75,64,58 | 3,38,05 | - |
| 24 | சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 63,30,43 | 1 | - |
| 25 | இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 62,94,08 | 31,90,80 | - |
| 26 | வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | 237,39,64 | 354,83,43 | 68,00,02 |
| 27 | தொழில் துறை | 463,37,84 | 3,96,88 | 200,00,02 |
| 28 | செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | 19,11,68 | - | - |
| 29 | சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) | 41,54,12 | 12,77,07 | 1 |
| 30 | எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | 30,68,78 | 44,03 | - |
| 31 | தகவல் தொழில்நுட்பவியல் துறை | 10,07,48 | 1 | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| 32 | தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | 245,10,04 | 5,99,44 | 1 |
| 33 | சட்டத் துறை | 7,06,18 | - | 1 |
| 34 | நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | 2,279,52,98 | 1,406,42,47 | 83,95,16 |
| 35 | பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | 22,16,69 | 1 | 1 |
| 36 | திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | 35,00,08 | 40,14,70 | 1 |
| 37 | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 30,11,58 | - | - |
| 38 | பொதுத் துறை | 100,49,76 | 10,00,01 | 16,00,00 |
| 39 | கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) | 84,93,12 | 325,30,44 | 9,00 |
| 40 | பாசனம் (பொதுப் பணித் துறை) | 600,67,70 | 848,81,61 | - |
| 41 | வருவாய்த் துறை | 2,125,60,94 | 80,43,88 | 1 |
| 42 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | 3,242,24,68 | 1,437,26,94 | 6,00 |
| 43 | பள்ளிக் கல்வித் துறை | 5,700,41,73 | 120,68,92 | 2,16 |
| 44 | குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை | 95,76,88 | 1 | 1 |
| 45 | சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 1,476,98,80 | 1 | 1 |





| | | | | |
|---|---|---|---|---|
| 46 | தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | 12,27,38 | - | 1 |
| 47 | இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | 32,93,94 | 1 | - |
| 48 | போக்குவரத்துத் துறை | 165,16,85 | 60,00,02 | 60,06,00 |
| 49 | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 41,39,36 | 1 | 1 |
| 50 | ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | 5,502,18,89 | - | - |
| 51 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 175,67,34 | - | - |
| 52 | மாற்றுத் திறனாளிகள் நலத் துறை | 82,44,71 | - | 1 |
| 53 | சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை | 800,70,92 | 600,00,00 | 1 |
| 54 | வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) | 112,05,51 | 82,67,40 | - |
| | **பெருமொத்தம்** | **35,653,97,70** | **8,587,62,39** | **601,64,30** |

## 6. இறுதித் துணை நிதிநிலை அறிக்கை, 2011–2012, அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2011- 2012 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்கள் குறித்த இறுதித் துணை நிதிநிலை அறிக்கை, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011- 2012 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தின்முன் வைக்கின்றேன். துணை மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவானதொரு அறிக்கை @ இம்மாமன்றத்தில் வைக்கப்பெற்றுள்ளது. இந்தத் துணை மதிப்பீடுகள் மொத்தம் ரூபாய் 5983.70 கோடி அளவிலான நிதியை ஒதுக்குவதற்கு வகை செய்கின்றன. இதில் ரூபாய் 4351.90 கோடி வருவாய்க் கணக்கிலும், எஞ்சிய தொகையான ரூபாய் 1631.80 கோடி மூலதனம் மற்றும் கடன் கணக்கிலும் அடங்கும்.

முற்பகல் 11-30

2011-2012 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகள் சட்டமன்றப் பேரவையில் 2012 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 31 ஆம் நாளன்று தாக்கல் செய்யப்பட்ட பின்னர், 'புதுப் பணிகள்' மற்றும் 'புதுத் துணைப் பணிகள்' குறித்து ஒப்பளிப்பு செய்யப்பட்ட இனங்களுக்குச் சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலைப் பெறுவதும், இத்திட்டங்களுக்காக எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து விடுவிக்கப்பட்ட தொகையினை அந்நிதிக்கு ஈடுசெய்வதும்தான் இந்தத் துணை மானியக் கோரிக்கையின் முக்கிய நோக்கங்களாகும். தமிழக மக்களின் நலனைக் கருத்தில்கொண்டே இத்தகைய சில புதிய செலவுப் பொறுப்புகள் மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசால் மேற்கொள்ளப்பட்டன.

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பதவி ஏற்றவுடன், பொது விநியோகமுறைமூலம் புரட்சிகர திட்டமான விலையில்லா அரிசி வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தியது. இவற்றுடன், குறைந்த விலையில் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில் மற்றும் செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு ஆகியவற்றையும் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு வழங்குகிறது. இதன்விளைவாக, உணவு மானியம் ரூபாய் 4,900 கோடியாக உயர்ந்துள்ளது. கூடுதல் தொகையான ரூபாய் 400 கோடி 'மானியக் கோரிக்கை எண் 13-உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)' என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

---

@ 202 முதல் 206 வரையிலான பக்கங்களில் அச்சிடப்பட்டுள்ளன.



நமது விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்களது அரசு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு ரூபாய் 1,000 கோடி கடனாக வழங்க ஒப்பளிப்பு செய்துள்ளது. இதற்காக, ரூபாய் 1,000 கோடி கூடுதலாகத் தேவைப்படுகிறது. இத்தொகை 'மானியக் கோரிக்கை எண் 13-உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)' என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

நெல் கொள்முதல் செய்யும் சமயம் விவசாயிகளுக்கு உற்பத்திக்கான ஊக்கத்தொகை வழங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களது அரசு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு ரூபாய் 100 கோடி கூடுதலாக ஒப்பளிப்பு செய்துள்ளது. 'மானியக் கோரிக்கை எண் 5-வேளாண்மைத் துறை' என்பதன்கீழ் இத்துணை மதிப்பீடுகளில் அடையாள நிதியொதுக்கம் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் மீதத்திலிருந்து மறுநிதியொதுக்கத்தின்மூலம் ஈடுசெய்யப்படும்.

நமது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின்கீழ் வழங்கப்படும் உதவித் தொகையினை ரூபாய் 500/- லிருந்து ரூபாய் 1,000/- ஆக உயர்த்தியுள்ளார்கள். இதற்காக, கூடுதலாக ரூபாய் 546.49 கோடி தேவைப்படுகிறது. 'மானியக் கோரிக்கை எண் 41-வருவாய்த் துறை' என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் ரூபாய் 363.80 கோடி சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் மறுநிதியொதுக்கத்தின்மூலம் ஈடுசெய்யப்படும்.

நமது மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆதி திராவிட மாணவர்களுக்கு மெட்ரிக் படிப்புக்கு மேல் உள்ள படிப்புக்கு வழங்கப்படும் படிப்பு உதவித் தொகை திட்டத்தை, அங்கீகரிக்கப்பட்ட சுயநிதிக் கல்லூரிகளில் அரசு ஒதுக்கும் இடங்களில் இலவச மற்றும் கட்டணம் செலுத்திப் படிக்கும் மாணவர்களுக்கும் நீட்டித்து வழங்கியுள்ளார்கள். இதற்காக, கூடுதலாக ரூபாய் 111.45 கோடி தேவைப்படுகிறது. இத்தொகை 'மானியக் கோரிக்கை எண் 4-ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை' என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்தைச் செயல்படுத்த, கூடுதலாக ரூபாய் 130 கோடி தேவைப்படுகிறது. மேலும், தேசிய ஊரகக் குடிநீர் திட்டத்தைச் செயல்படுத்த ரூபாய் 95.58 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. பல்வேறு கூட்டுக் குடிநீர் வழங்கும் திட்டங்களைப் பராமரிப்பதற்கு, மாண்புமிகு அம்மா அவர்களது அரசு ரூபாய் 77.36 கோடி ஒப்பளிப்பு செய்துள்ளது. இவ்வினங்கள் 'மானியக் கோரிக்கை எண் 34- நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை' என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011-2012 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுகிறேன். வணக்கம்.

*(200 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

**2011–2012 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்**

| | கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 1 | மாநிலச் சட்டமன்றம் | 1,33,72 | .. | 74,99 |
| 2 | ஆளுநர் மற்றும் அமைச்சரவை | 2,98,76 | .. | .. |
| 3 | நீதி நிருவாகம் | 21,31,73 | .. | .. |
| 4 | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 291,16,97 | 95,89 | 7,50 |
| 5 | வேளாண்மைத் துறை | 1,06 | 10 | 1 |
| 6 | கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 53,59,77 | 32,31,40 | 42,29 |
| 7 | மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 8 | 1 | .. |
| 8 | பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 3 | .. | 2,51,15 |
| 9 | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 65,28,59 | .. | 15,00 |
| 10 | வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 35,00,06 | .. | .. |
| 11 | முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 11,64,51 | .. | .. |
| 12 | கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 4 | 117,37,15 | 6,56,22 |
| 13 | உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 419,22,92 | 9,49,98 | 999,99,99 |
| 15 | சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) | 6 | 1 | 75,02,39 |
| 16 | நிதித் துறை | 12 | .. | 4,59,34 |
| 17 | கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) | 95,23,13 | .. | 24,36,00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 18 | கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) | 4,99,76 | .. | .. |
| 19 | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 598,96,28 | 3 | 30,00 |
| 20 | உயர் கல்வித் துறை | 187,61,09 | 20,20,80 | .. |
| 21 | நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை | 17 | 17 | .. |
| 22 | காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 591,54,64 | 40,49,60 | .. |
| 23 | தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 5 | 56,58 | .. |
| 24 | சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 7,76,94 | .. | .. |
| 25 | இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 3,84,40 | .. | .. |
| 26 | வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | 5 | 1 | 32,01,34 |
| 27 | தொழில் துறை | 3 | .. | 1 |



| | | | | |
|---|---|---|---|---|
| 28 | செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | 8,89,43 | .. | .. |
| 29 | சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) | 3 | 3,41,81 | 3,97,60 |
| 30 | எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | 26,75 | .. | .. |
| 31 | தகவல் தொழில்நுட்பவியல் துறை | 10,61,04 | .. | .. |
| 32 | தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | 16 | 10,54,26 | 37,49 |
| 33 | சட்டத் துறை | 2,91,01 | .. | .. |
| 34 | நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | 23 | 37,78,60 | 7 |
| 35 | பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | 90,30 | .. | 7,49 |
| 36 | திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | 3,76,54 | 3,83,86 | 4,49 |
| 37 | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 5,89,17 | .. | .. |
| 38 | பொதுத் துறை | 30,81,91 | 1 | 7,49 |
| 39 | கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) | 11 | 18 | 50,49 |
| 40 | பாசனம் (பொதுப் பணித் துறை) | 9,46,21 | 22 | .. |
| 41 | வருவாய்த் துறை | 367,28,41 | 9,40,37 | 23,89 |

| | | | | |
|---|---|---|---|---|
| 42 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | 87,85,12 | 118,60,66 | .. |
| 43 | பள்ளிக் கல்வித் துறை | 375,46,66 | 3 | 14,99 |
| 44 | குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை. | 11,93 | 65,58 | .. |
| 45 | சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 312,43,41 | 18,07 | .. |
| 46 | தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | 7 | .. | .. |
| 47 | இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | 5,13,23 | 76,31 | .. |
| 48 | போக்குவரத்துத் துறை | 3,40,94 | 30,25,98 | 10,48 |
| 49 | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 8 | .. | .. |
| 50 | ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | 26 | .. | .. |
| 51 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 681,26,94 | .. | .. |
| 52 | மாற்றுத் திறனாளிகள் நலத் துறை | 23,00,34 | .. | 12,87 |
| 53 | சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை | .. | .. | 13,09 |
| 54 | வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) | 26,03,05 | 34,17,36 | .. |
| | **பெருமொத்தம்** | **4,347,08,29** | **471,05,03** | **1,152,56,61** |



*முற்பகல் 11-35*

## 7. அறிவிப்புகள்

### (அ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2011–2012, முன்மொழிதல் (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2011-2012 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Clause (2) of Article 205, read with Clause (3) of Article 203 of the Constitution of India, I, Dr. K. Rosaiah, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving, in the Tamil Nadu Legislative Assembly, of the demands for further grants for the Financial Year 2011-2012."

## 8. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2011–2012, வாக்கெடுப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2011-2012 ஆம் ஆண்டின் கூடுதல் செலவினங்கள் குறித்த மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2011-2012 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 29-3-2012 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள இறுதித் துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், 2011-2012 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

## நிறைவேற்றப்பட்ட 2011-2012 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

| கோரிக்கை | | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 1 | மாநிலச் சட்டமன்றம் | 1,33,72 | .. | 74,99 |
| 2 | ஆளுநர் மற்றும் அமைச்சரவை | 2,98,76 | .. | .. |
| 3 | நீதி நிருவாகம் | 21,31,73 | .. | .. |
| 4 | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 291,16,97 | 95,89 | 7,50 |
| 5 | வேளாண்மைத் துறை | 1,06 | 10 | 1 |
| 6 | கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 53,59,77 | 32,31,40 | 42,29 |



| | | | | |
|---|---|---|---|---|
| 7 | மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 8 | 1 | .. |
| 8 | பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 3 | .. | 2,51,15 |
| 9 | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 65,28,59 | .. | 15,00 |
| 10 | வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 35,00,06 | .. | .. |
| 11 | முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 11,64,51 | .. | .. |
| 12 | கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 4 | 117,37,15 | 6,56,22 |
| 13 | உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 419,22,92 | 9,49,98 | 999,99,99 |
| 14 | சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) | 6 | 1 | 75,02,39 |
| 15 | நிதித் துறை | 12 | .. | 4,59,34 |
| 16 | கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) | 95,23,13 | .. | 24,36,00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 17 | கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) | 4,99,76 | .. | .. |
| 18 | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 598,96,28 | 3 | 30,00 |
| 19 | உயர் கல்வித் துறை | 187,61,09 | 20,20,80 | .. |
| 20 | நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை | 17 | 17 | .. |
| 21 | காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 591,54,64 | 40,49,60 | .. |
| 22 | தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 5 | 56,58 | .. |
| 23 | சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 7,76,94 | .. | .. |
| 24 | இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 3,84,40 | .. | .. |
| 25 | வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | 5 | 1 | 32,01,34 |
| 26 | தொழில் துறை | 3 | .. | 1 |



| | | | | |
|---|---|---|---|---|
| 27 | செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) . | 8,89,43 | .. | - |
| 28 | சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) | 3 | 3,41,81 | 3,97,60 |
| 29 | எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | 26,75 | .. | .. |
| 30 | தகவல் தொழில்நுட்பவியல் துறை | 10,61,04 | .. | .. |
| 31 | தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | 16 | 10,54,26 | 37,49 |
| 32 | சட்டத் துறை | 2,91,01 | .. | .. |
| 33 | நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | 23 | 37,78,60 | 1 |
| 34 | பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | 90,30 | .. | 7,49 |
| 35 | திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | 3,76,54 | 3,83,86 | 4,49 |
| 36 | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 5,89,17 | .. | .. |
| 37 | பொதுத் துறை | 30,81,91 | 1 | 7,49 |
| 38 | கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) | 11 | 18 | 50,49 |
| 39 | பாசனம் (பொதுப் பணித் துறை) | 9,46,21 | 22 | .. |
| 40 | வருவாய்த் துறை | 367,28,41 | 9,40,37 | 23,89 |

| | | | | |
|---|---|---|---|---|
| 41 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | 87,85,12 | 118,60,66 | .. |
| 42 | பள்ளிக் கல்வித் துறை | 375,46,66 | 3 | 14,99 |
| 43 | குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை | 11,93 | 65,58 | - |
| 44 | சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 312,43,41 | 18,07 | .. |
| 45 | தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | 7 | .. | .. |
| 46 | இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | 5,13,23 | 76,31 | .. |
| 47 | போக்குவரத்துத் துறை | 3,40,94 | 30,25,98 | 10,48 |
| 48 | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 8 | .. | .. |
| 49 | ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | 26 | .. | .. |
| 50 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 681,26,94 | .. | .. |
| 51 | மாற்றுத் திறனாளிகள் நலத் துறை | 23,00,34 | .. | 12,87 |
| 52 | சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை | .. | .. | 13,09 |
| 53 | வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) | 26,03,05 | 34,17,36 | .. |
| | **பெருமொத்தம்** | **4,347,08,29** | **471,05,03** | **1,152,56,61** |



## 7. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2012 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 9. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2012

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 7. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (இ) முன்பண மானியக் கோரிக்கைகள், 2012-2013, முன்மொழிதல் (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2012-2013 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Clause (2) of Article 206, read with Clause (3) of Article 203 of the Constitution of India, I, Dr. K. Rosaiah, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving, in the Tamil Nadu Legislative Assembly, of the demands for grants in advance, during the Financial Year 2012-2013."

## 10. முன்பண மானியக் கோரிக்கைகள், 2012-2013, வாக்கெடுப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2012-2013 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012-2013 ஆம் ஆண்டிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் அடங்கிய 29-3-2012 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், 2012-2013 ஆம் ஆண்டிற்கான உடனடி செலவிற்காக அரசுக்கு முன்பணமாக வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



[பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

### நிறைவேற்றப்பட்ட 2012-2013 ஆம் ஆண்டு உடனடிச் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள்

| | கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 1 | மாநிலச் சட்டமன்றம் | 15,78,85 | - | 40,00 |
| 2 | ஆளுநர் மற்றும் அமைச்சரவை | 11,39,41 | - | - |
| 3 | நீதி நிருவாகம் | 246,78,72 | - | - |
| 4 | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 460,59,79 | 54,08,72 | 1 |
| 5 | வேளாண்மைத் துறை | 1,430,38,49 | 31,48,06 | 60,12,00 |
| 6 | கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 285,61,33 | 40,00,04 | 1 |
| 7 | மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 107,76,20 | 59,12,74 | - |
| 8 | பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 29,70,22 | - | 4,05,81 |

| | | | | |
|---|---|---|---|---|
| 9 | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 241,18,87 | 16,23,10 | 1 |
| 10 | வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 114,18,10 | - | 1 |
| 11 | முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 69,73,37 | - | - |
| 12 | கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 181,59,81 | 95,26,04 | 7,17,54 |
| 13 | உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 1,998,09,14 | 16,28,02 | 1 |
| 14 | எரிசக்தித் துறை | 785,38,22 | 600,00,00 | 2 |
| 15 | சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) | 2,86,69 | 80,00,00 | 6,05,04 |
| 16 | நிதித் துறை | 228,77,02 | 400,00,00 | 25,60,10 |
| 17 | கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) | 226,83,78 | 1 | 61,99,22 |
| 18 | கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) | 55,46,74 | - | - |
| 19 | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 2,165,50,12 | 61,84,90 | 6,00 |



| | | | | |
|---|---|---|---|---|
| 20 | உயர் கல்வித் துறை | 962,48,57 | 10,70,54 | 1 |
| 21 | நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை | 637,13,23 | 1,623,54,06 | 1 |
| 22 | காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 1,421,66,34 | 74,00,00 | 8,00,01 |
| 23 | தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 75,64,58 | 3,38,05 | - |
| 24 | சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 63,30,43 | 1 | - |
| 25 | இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள் நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 62,94,08 | 31,90,80 | - |
| 26 | வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | 237,39,64 | 354,83,43 | 68,00,02 |
| 27 | தொழில் துறை | 463,37,84 | 3,96,88 | 200,00,02 |
| 28 | செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | 19,11,68 | - | - |
| 29 | சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) | 41,54,12 | 12,77,07 | 1 |
| 30 | எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | 30,68,78 | 44,03 | - |

[2012 மார்ச் 29

| | | | | |
|---|---|---|---|---|
| 31 | தகவல் தொழில்நுட்பவியல் துறை | 10,07,48 | 1 | 1 |
| 32 | தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | 245,10,04 | 5,99,44 | 1 |
| 33 | சட்டத் துறை | 7,06,18 | - | 1 |
| 34 | நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | 2,279,52,98 | 1,406,42,47 | 83,95,16 |
| 35 | பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | 22,16,69 | 1 | 1 |
| 36 | திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | 35,00,08 | 40,14,70 | 1 |
| 37 | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை) | 30,11,58 | - | - |
| 38 | பொதுத் துறை | 100,49,76 | 10,00,01 | 16,00,00 |
| 39 | கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) | 84,93,12 | 325,30,44 | 9,00 |
| 40 | பாசனம் (பொதுப் பணித் துறை) | 600,67,70 | 848,81,61 | - |
| 41 | வருவாய்த் துறை | 2,125,60,94 | 80,43,88 | 1 |
| 42 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | 3,242,24,68 | 1,437,26,94 | 6,00 |
| 43 | பள்ளிக் கல்வித் துறை | 5,700,41,73 | 120,68,92 | 2,16 |
| 44 | குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை | 95,76,88 | 1 | 1 |



2012 மார்ச் 29]

| | | | | |
|---|---|---|---|---|
| 45 | சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 1,476,98,80 | 1 | 1 |
| 46 | தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | 12,27,38 | - | 1 |
| 47 | இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | 32,93,94 | 1 | - |
| 48 | போக்குவரத்துத் துறை | 165,16,85 | 60,00,02 | 60,06,00 |
| 49 | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 41,39,36 | 1 | 1 |
| 50 | ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | 5,502,18,89 | - | - |
| 51 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 175,67,34 | - | - |
| 52 | மாற்றுத் திறனாளிகள் நலத் துறை | 82,44,71 | - | 1 |
| 53 | சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை | 800,70,92 | 600,00,00 | 1 |
| 54 | வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) | 112,05,51 | 82,67,40 | - |
| | **பெருமொத்தம்** | **35,653,97,70** | **8,587,62,39** | **601,64,30** |

## 7. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஈ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2012 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

## 9. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2012

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*





**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

## 11. அரசினர் தீர்மானம்

### விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவை விதிகள் 30, 130, 132 ஆகியவற்றைத் தளர்த்துதல். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, பேரவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்ட 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2012) மற்றும் 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2012) ஆகியவற்றை இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"*

*என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

[2012 மார்ச் 29

*முற்பகல் 11-40*

## 12. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2012

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2012), மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/ 2012)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@29-3-2012 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



2012 மார்ச் 29] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/ 2012) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

## (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2012

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2012), மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*“2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2012)* [@] *ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.”*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

*சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.*

*பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.*

*பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

---

[@] 29-3-2012 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.





ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

*பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*“2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2012) நிறைவேற்றப்பெற வேண்டும்”*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

## 13. காவல் பாதுகாப்பில் மரணங்கள், திருக்கோவிலூர் காவல் நிலையத்தில் பெண்கள்மீது பாலியல் பலாத்காரம், நன்னீர் மற்றும் நஞ்சை நிலப் பாதுகாப்புச் சட்டம் கொண்டு வருதல்—முதலமைச்சரின் விளக்கம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள் நேற்று, அதாவது 28-3-2012 அன்று, இந்த மாமன்றத்திலே உரையாற்றும்போது, கடந்த 9 மாத கால ஆட்சியில் 11 லாக்-அப் மரணங்கள் நடைபெற்றிருக்கின்றன என்று கூறியிருந்தார்.*

*அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 2011 ஆம் ஆண்டு மே மாதம் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, காவல் பாதுகாப்பில் ஏற்பட்ட மரண நிகழ்வுகள், அவர் குறிப்பிட்டது போல் 11 அல்ல என்பதையும், நான்கு மரண நிகழ்வுகள் ஏற்பட்டுள்ளன என்ற சரியான தகவலையும் இந்த மாமன்றத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன்.*

*இந்த நான்கு மரண நிகழ்வுகளுக்கும் காவல் துறையினர் காரணமா என்பது குறித்து குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 176-ன்கீழ், சம்பந்தப்பட்ட குற்றவியல் நீதிமன்ற நடுவர்களால், அதாவது,* Judicial Magistrate-*களால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. இதில், ஒரு விசாரணையில் காவல் துறைமீது எந்தவித குற்றமும் இல்லை என குற்றவியல் நீதிமன்ற நடுவர் அறிக்கை அளித்துள்ளார். எஞ்சிய மூன்று அறிக்கைகள் இன்னமும் பெறப்படவில்லை. விசாரணை அடிப்படையில், காவலர்கள்மீது குற்றம் இருப்பின், அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*விசாரணை நியாயமாகவும், நேர்மையாகவும் இருக்க வேண்டும் என்பதால்தான், இந்தக் குற்றச்சாட்டுகளை* Judicial Magistrate *விசாரணைக்கு எங்கள் அரசு உட்படுத்தியிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*



*மேலும், மாண்புமிகு உறுப்பினர் திரு. அண்ணாதுரை அவர்கள் உரையாற்றும்போது, விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் காவல் நிலையத்தில் மலை ஜாதிப் பெண்கள்மீது நடைபெற்றதாகச் சொல்லப்படும் பாலியல் பலாத்காரம் பற்றியும் குறிப்பிட்டு, காவலர்களுடைய அத்துமீறிய செயலைக் கட்டுப்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.*

*விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட சில திருட்டு வழக்குகள் தொடர்பாக, திருக்கோவிலூர் காவல் ஆய்வாளர் 22-11-2011 அன்று இரவு டி. மண்டபம் கிராமத்தில் உள்ள இருளர் குடியிருப்பில் சந்தேக நபர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கும்போது அந்தக் கிராமத்தைச் சேர்ந்த 4 இருளர் பெண்களை காவல் துறையினர் பாலியல் பலாத்காரம் செய்ததாக 4 நாட்களுக்குப் பிறகு காவல் துறையில் ஒரு புகார் பெறப்பட்டது.*

*முற்பகல் 11-45*

*குற்றவியல் நடைமுறை சட்டப் பிரிவு 176, உட்பிரிவு (1)-ன்படி, இந்தப் புகார் பதிவு செய்யப்பட்டு, திருக்கோவிலூர் நீதித் துறை நடுவர் விசாரணைக்காக அனுப்பி வைக்கப்பட்டது. இந்தப் பெண்கள் 29-11-2011 அன்று குற்றவியல் நீதிபதி அவர்களால் மருத்துவ பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டனர். பரிசோதனை செய்த மருத்துவர், பாலியல் பலாத்காரம் செய்ததற்கான அறிகுறிகள் எதுவும் இல்லை என்று அறிக்கை அளித்துள்ளார். குற்றவியல் நீதிபதியின் விசாரணை இன்னமும் முடிவடையவில்லை. இது தொடர்பாக உயர் நீதிமன்றத்தில், பொது நல வழக்கு ஒன்று தொடரப்பட்டு, வழக்கு நிலுவையில் உள்ளது. உயர் நீதிமன்றம் தேவை என்று கருதினால், இந்த வழக்கை குற்றப் புலனாய்வுத் துறை,* C.B.C.I.D-*க்கு மாற்றம் செய்வதாக அரசு சார்பில் உயர் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. உயர் நீதிமன்றம் இந்த வழக்கு விசாரணையை 2-4-2012-க்கு ஒத்திவைத்துள்ளது.*

*முதற்கட்ட விசாரணையில், இருளர் இனத்தைச் சேர்ந்த சில பெண்களை காவல் துறையினர் இரவு நேரத்தில் வாகனத்தில் வைத்திருந்ததாகத் தெரிய வந்ததால், சம்மந்தப்பட்ட ஆய்வாளர், சிறப்பு உதவி ஆய்வாளர், தலைமைக் காவலர் மற்றும் 2 காவலர்கள் என 5 பேர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.*

இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டதாகச் சொல்லப்படும் *4* பெண்களுக்கும் தலா *5* இலட்சம் ரூபாய் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த விளவங்கோடு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள், நிதிநிலை அறிக்கைமீதான விவாதத்தில் நேற்று, அதாவது *28-3-2012* அன்று, கலந்துகொண்டு பேசியபோது, கடந்த *10* ஆண்டுகளில் தமிழகத்தில் நெல் சாகுபடி செய்யும் பரப்பளவு சுமார் *2* இலட்சம் ஹெக்டேர் குறைந்துள்ளது என்றும், ஆறேகால் கோடியிலிருந்து ஏழேகால் கோடியாக சுமார் ஒரு கோடி அளவிற்கு மக்கள் தொகை உயர்ந்துள்ளது என்றும், சாகுபடி நிலங்களைக் காப்பாற்ற நன்னீர் நிலம் மற்றும் நஞ்சை நிலம் பாதுகாப்புச் சட்டத்தை அதாவது "Conservation of Wet Land and Paddy Field Act" கொண்டுவர வேண்டும் என்றும் கூறியிருந்தார்.

வேளாண் வளர்ச்சிக்கு எனது தலைமையிலான அரசு மிகுந்த முன்னுரிமை அளித்து வருகிறது. *2005-2006*-ல் நெல் சாகுபடி பரப்பளவு *20.50* இலட்சம் ஹெக்டேராக இருந்தது. இது முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் குறைந்தது. *2010-2011* ஆம் ஆண்டு நெல் சாகுபடி பரப்பளவு *19.05* இலட்சம் ஹெக்டேர் என்ற அளவில்தான் இருந்தது. நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, *2011-2012* ஆம் ஆண்டில் இது மீண்டும் *20.74* இலட்சம் ஹெக்டேர் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற உயர் அளவை எட்டியுள்ளது. அதேபோன்றுதான், *2012-2013* ஆம் ஆண்டில், உணவு தானிய உற்பத்தி மிக உயரிய அளவான *105* இலட்சம் மெட்ரிக் டன் என்ற அளவில் இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

விவசாயத்தில் இரண்டாம் பசுமைப் புரட்சியை ஏற்படுத்தி, அதன்மூலம் விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்கவும், உணவு தானிய உற்பத்தியை அதிகரிக்கவும், எனது தலைமையிலான அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. விவசாயிகளுக்குத் தரமான விதைகள் தங்குதடையின்றிக் கிடைப்பதை உறுதி செய்தல், தேவையான உரங்கள் உரிய காலத்தில் கிடைக்கச் செய்தல், நுண்ணீர்ப் பாசனத் திட்டங்களுக்கு, சிறு, குறு விவசாயிகளுக்கு *100* விழுக்காடு மானியமும், மற்ற விவசாயிகளுக்கு *75* விழுக்காடு



மானியமும் வழங்குதல், தேவையான பயிர்க் கடன்கள் காலத்தே கிடைக்கச் செய்தல், முறையான கடன் செலுத்தும் விவசாயிகளுக்கு வட்டியே இல்லாமல் பயிர்க் கடன் வழங்குதல், விவசாயம் இயந்திரமயமாக்கப்படுவதை ஊக்குவித்தல், விவசாய இயந்திரங்கள் குறைந்த கட்டணத்தில் வாடகைக்குக் கிடைப்பதை உறுதி செய்தல், விவசாய விளைபொருட்களுக்கு உரிய நியாயமான விலை கிடைப்பதை உறுதி செய்தல் எனப் பல்வேறு நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது. இந்த நடவடிக்கைகளின் காரணமாகத்தான் *2010-2011* ஆம் ஆண்டு *9.05* இலட்சம் ஹெக்டேர் என்று இருந்த நெல் சாகுபடி பரப்பு, *2011-2012* ஆம் ஆண்டில் *20.74* இலட்சம் ஹெக்டேர் என்ற அளவுக்கு உயர்ந்துள்ளது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி குறிப்பிட்டது போன்று சாகுபடி நிலங்களைக் காப்பாற்ற நன்னீர் நிலம் மற்றும் நஞ்சை நிலப் பாதுகாப்புச் சட்டம் (Conservation of Wet Land and Paddy Field Act) என்ற ஒரு சட்டம் தற்போது தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11-50*

## 14. வரவு–செலவுத் திட்டம், 2012–2013, பொது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2012-2013* ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

***திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நம்பிக்கை என்னும் தகுதி, புரட்சித் தலைவர்மீது கொண்ட ஆழ்ந்த பக்தி என்னும் தகுதி, கடைநிலைத் தொண்டனையும் கண்ணின் மணி போலக் காத்து நின்று ஒரு உன்னத இயக்கத்தினை உருவாக்கி, வளர்த்தெடுத்த தகுதி என எண்ணற்ற தகுதிகளைத் தன்னகத்தே கொண்டு நிற்கும் எங்கள் தன்மானத் தலைவர் கேப்டன் அவர்களை வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நிதிநிலை அறிக்கையின்மீது என் உரையைத் தொடங்குகின்றேன்.

[திரு. க. பாண்டியராஜன்] [2012 மார்ச் 29

இந்த நிதிநிலை அறிக்கையைத் தொடங்குகின்றபொழுது (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடைக்கோடித் தொண்டர்களையே பளார், பளார் என்று அறைகின்ற காட்சிகள் தொலைக்காட்சியிலும், பத்திரிகைகளிலும் வந்திருக்கின்றனவே! (மேசையைத் தட்டும் ஒலி) இதுதான் கடைக்கோடித் தொண்டனைக் கண்ணைப்போல் காக்கின்ற இலட்சணமா? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள். (குறுக்கீடுகள்) உங்கள் உறுப்பினர் பேசுகின்றார். அவர் பேசட்டும். (குறுக்கீடுகள்) தொண்டரை அடித்தது உண்மையா, இல்லையா? (குறுக்கீடுகள்) அதுதான் நான் கேட்கின்ற கேள்வி. உங்கள் தலைவர் அடித்ததை உலகமே பார்த்தது, அதைத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். (குறுக்கீடுகள்) It is a fact. இது டி.வி.யிலேயே காண்பிக்கப்பட்டது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதாரத்தைக் கேட்கிறார்கள். இந்த அவையிலேயே, ஒரு கண்ணியம் மிக்க அவையிலேயே நாக்கைத் துருத்திக் கொண்டு அடிப்பதற்கு எழுந்த காட்சியை நாடு முழுவதும், உலகம் முழுவதும் பார்த்தார்களே! (குறுக்கீடுகள்) அது ஆதாரம் இல்லையா? அது ஆதாரமாகத் தெரியவில்லையா? (குறுக்கீடுகள்) பொது வாழ்க்கையில் இருக்கின்ற ஒரு தலைவர் யாரை அடித்தாலும், பொது இடத்தில் அடிப்பது ஒரு நாகரிகக் குறைவான செயலில்லையா? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. சந்திரகுமார், please sit down. உங்கள் கட்சி உறுப்பினர் பேசுகிறார். அவர் பேசும்பொழுது கருத்தைச் சொல்லட்டும். (குறுக்கீடு) உங்கள் கட்சி உறுப்பினர்தானே பேசுகிறார்? அவர் பேசட்டும். (குறுக்கீடுகள்)



2012 மார்ச் 29] [பேரவைத் தலைவர்]

உங்கள் கட்சி உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்தானே பேசுகிறார், பேசட்டும். (குறுக்கீடுகள்) அடித்தது உண்மையா, இல்லையா? சொல்லுங்கள். உலகமே பார்த்தது. நானும் பார்த்தேன். (குறுக்கீடுகள்)

**திரு. க. பாண்டியராஜன்:** ** (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் சொன்ன அந்தக் கருத்து அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) அது சம்பவம். இரண்டு விஷயங்கள். ஒன்று. (குறுக்கீடுகள்) மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) அதாவது fact- ஐச் சொல்வதுவேறு; நான் சொல்ல வந்தது என்னவென்றால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னது fact. அதை எல்லோரும் பார்த்தோம். நானும்தான் பார்த்தேன். அதைத்தான் சொன்னார்கள். நடக்காத விஷயத்தை இங்கே வந்து சொல்லக்கூடாது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

*முற்பகல் 11-55*

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் ஒப்பற்ற தலைவியாக, எதிர்கால இந்தியாவை ஆளக்கூடிய ஆற்றல் படைத்த, (மேசையைத் தட்டும் ஒலி) முதலமைச்சராக இருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இடத்திலே நாங்கள் ஆசி பெறுவது தவறே அல்ல. இவர்கள் சொல்வது வேறு, நீங்கள் சொல்வது வேறு. நாங்கள் ஆசி பெறுகிறோம். அதிலே தவறே கிடையாது. நாங்கள் மனதார எங்கள் தலைவரிடத்திலே ஆசி பெறுவது வேறு, தொண்டனை அடிப்பது வேறு. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:** சரி, இந்த நிதி நிருவாகத்தில் பாரதம் உலகத்திற்குத் தந்த . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பாண்டியராஜன், உட்காருங்கள். மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர்மீது பற்று கொண்டவர் மாண்புமிகு உறுப்பினர் விஜயகாந்த் என்று சொல்கிறார். புரட்சித் தலைவரை அவர் சந்தித்திருக்கிறாரா? அப்படி ஒரு புகைப்படம் இருக்கிறதா? (மேசையைத் தட்டும் ஒலி) அவர் திருமணம் யார் தலைமையில் நடந்தது? புரட்சித் தலைவர் பெயரைச் சொல்வதற்கு உங்களுக்கு யோக்கியதை இருக்கிறதா? (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இனிமேல் புரட்சித் தலைவர் பெயரை அவர்கள் சொல்வதற்குத் தகுதியும் அருகதையும் இல்லை. கருப்பு எம்.ஜி.ஆர்-ஆம். ஒரே எம்.ஜி.ஆர். தான் தமிழ்நாட்டில். வேறு எந்த எம்.ஜி.ஆர் ம் இல்லை என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் கட்சி உறுப்பினர்தானே பேசிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) அமைச்சர்கள் பேசுவதை யாரும் தடைசெய்யக்கூடாது. உங்கள் கட்சி உறுப்பினர்தானே பேசிக்கொண்டிருக்கிறார்? உங்கள் கட்சி உறுப்பினர் பேசாமல் வேறு யாராவது பேசினால் உங்களுக்கு வாய்ப்புத் தரலாம். (குறுக்கீடுகள்) உங்கள் கட்சி உறுப்பினர்தானே பேசிக்கொண்டிருக்கிறார்? மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், உங்களுடைய கட்சியின் மாண்புமிகு உறுப்பினர்களை தயவுசெய்து அமைதிப்படுத்துங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, பேசுவது உங்கள் கட்சி உறுப்பினர்தான். உங்கள் கட்சி உறுப்பினர்தான் அவர். அவர் பேசட்டும். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கட்டுப்பாடு இல்லாமல் இப்படி எல்லோரும் எழுந்து நின்றால் சரியாக இருக்காது. (குறுக்கீடுகள்)

**திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் அவர்கள் ஒரு பொது நிறுவனம். கோயில் என்கிறபோது யார் வேண்டுமானாலும் செல்லலாம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) அதேபோல் புரட்சித் தலைவர் பெயரை யார் வேண்டுமானாலும் சொல்லலாம்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரிடத்திலே இந்தக் கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினரைப்போல, அப்பொழுது ஒன்று, இப்பொழுது ஒன்று என்று தலைவரை மாற்றுகின்ற இயக்கத்தைச் சேர்ந்த தொண்டர்கள் அல்ல அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த தொண்டர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரே தலைவர், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.தான். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்-ஆல் அடையாளம் காட்டப்பட்ட ஒரே தலைவர் எங்கள் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த இரண்டு தலைவர்களையும் சொந்தம் கொண்டாடுவதற்கு உலக அளவில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டனுக்குத்தான் உரிமையுண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) இது அரசியல் ரீதியான நடவடிக்கை. கர்மவீரர் காமராஜரை நாங்கள் தலைவராக ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனென்று சொன்னால் அவர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர். நாங்கள் தலைவராக ஏற்றுக்கொள்ள வேண்டிய தலைவர் பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., புரட்சித் தலைவி அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட இயக்கத்தினுடைய பரிணாம வளர்ச்சியாக அமர்ந்துகொண்டிருக்கின்றவர் எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த இயக்கத்தின்மூலம் அடையாளம் காட்டப்பட்ட ஓர் உறுப்பினர், இன்று யாரையோ ஒருவரைத் தலைவராக ஏற்றுக்கொண்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்-ஐ, தங்களுடைய தலைவர் என்று சொல்வது மிகவும் கண்டிக்கத்தக்கது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ச. இராமச்சந்திரன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர், மாண்புமிகு அமைச்சர் பேசிய பிறகு நீங்கள் பேசுங்கள். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதர்சனமான உண்மையைச் சொல்லுகின்றபொழுது வேகமாகப் பேசலாம். ஆனால், நாங்கள் உணர்ச்சிவசப்படவில்லை. (குறுக்கீடுகள்) உண்மையை மறைக்கின்ற வகையிலே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கடும் வார்த்தைகளைப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். தயவு செய்து அப்படிக் கடும் வார்த்தைகளைப் பயன்படுத்துகின்ற உறுப்பினர்கள்மீது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின் மரபுக்கு மாறாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, கடுமையான வார்த்தைகள் ஏதும் நீங்கள் பிரயோகிப்பீர்களேயானால் நிச்சயமாக நடவடிக்கை எடுப்பேன். நான் இதை எச்சரிக்கையாக விடுக்கக் கடமைப்பட்டுள்ளேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

*நண்பகல் 12-00*

**திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணல் காந்தியார் அவர்கள், அதேபோல தந்தை பெரியார் அவர்கள், அறிஞர் அண்ணா அவர்கள், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் எல்லாம் (குறுக்கீடுகள்) இருங்கள், இருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், மாண்புமிகு அமைச்சர் பேசி முடித்துவிடட்டும்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவான தலைவர் என்று அண்ணல் காந்தியை ஏற்றுக்கொள்ளலாம், தந்தை பெரியாரை ஏற்றுக்கொள்ளலாம். அவர்கள் அரசியல் ரீதியாக மக்களிடத்திலே வாக்குகளைச் சேகரிக்க வரவில்லை. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் மக்களுக்கு சட்ட





ரீதியாக, மக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டுமென்று ஒரு இயக்கத்தை ஆரம்பித்து, அந்த இயக்கத்தின் வாயிலாக தொண்டர்களை உருவாக்கி, அவருடைய கொள்கையை ஏற்றுக்கொண்ட தொண்டர்களை அரவணைத்து, அவர்கள் வாயிலாக மக்களிடத்திலே சென்றவர்கள். இவர்களுக்கென்று ஒரு தனி பண்பாடு இருக்கிறது, தனித் தன்மை இருக்கிறது. காந்தியை எல்லோரும் பின்பற்றலாம். அவர் அரசியல் ரீதியாக வாக்குகளை சேகரிக்க வரவில்லையே? அவருக்கு என்று ஒரு கட்சியை ஆரம்பித்து எனக்கு வாக்களியுங்கள் என்று கேட்கவில்லையே? நாடு சுதந்திரம் அடைய வேண்டுமென்று போராடினார். நாட்டு மக்கள் ஏற்றுக் கொண்டார்கள். எங்கெல்லாம் அடிமை நாடுகள் இருந்ததோ அங்கெல்லாம் அடிமையாக இருந்த அடிமைகள் அவரைத் தலைவராக ஏற்றுக் கொண்டார்கள். அவர் வழிகாட்டி. ஆனால், ஒரு இயக்கத்தை உருவாக்கி, அந்த இயக்கத்திற்கு இத்தனை கொள்கைகள் இருக்கின்றன என்று கொள்கைகளைச் சொல்லி, அந்தக் கொள்கைகளின் வாயிலாக மக்களைச் சந்திக்கின்ற தலைவர்களை எப்படி இன்னொரு கொள்கையைக் கொண்டவர்கள் சொந்தம் கொண்டாட முடியும்? பொதுவுடைமைக் கட்சியைச் சேர்ந்த தலைவர்களை நாங்கள் தலைவராக ஏற்றுக்கொள்ள முடியுமா? எப்படி ஏற்றுக்கொள்ளமுடியும்? லெனினை ஏற்றுக்கொள்ள முடியுமா? காரல் மார்க்சை ஏற்றுக்கொள்ள முடியுமா?

கொள்கைகளைப் பற்றிப் பேசலாம், விமர்சனம் செய்யலாம். எங்களுக்கு என்று ஒரு தலைவர் இருக்கிறார் என்று சொன்னால் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். எங்களையெல்லாம் உருவாக்கிய பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள். நாங்கள் ஜவஹர்லால் நேருவைத் தலைவராக ஏற்றுக்கொள்ள முடியுமா? சோனியா காந்தியைத் தலைவராக ஏற்றுக்கொள்ள முடியுமா? ஏற்றுக்கொள்ள முடியாது.

ஒரு தலைவர் வருகின்றபோது உரிய நேரத்தில், உரிய மரியாதையை, மதிப்பை நாங்களும் கொடுப்போம். எங்களுக்கென்று ஒரு கொள்கை இருக்கிறது. எங்களுக்கென்று ஒரு தனித் தன்மை இருக்கிறது. எங்களுக்கென்று ஒரு தனித் தலைவர் இருக்கிறார். அந்தத் தலைவர் வருகின்றபோது உலகத் தலைவர்கள் எந்த இடத்தில் இருக்கிறார்களோ அந்த இடத்தில்

வைத்து அழகுபார்க்கின்ற தொண்டர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள். எனவே, மூத்த உறுப்பினர் பண்ருட்டியார் அவர்களுக்கு இப்போது தலைவர், எதிர்க்கட்சித் தலைவர் விஜயகாந்த். அவரை வைத்து அழகுபார்த்துக் கொள்ளட்டும். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை உரிமை கொண்டாடுவதற்கு எந்தச் சூழலிலும் அவருக்கு உரிமையில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஏன் என்று சொன்னால், இந்த இயக்கத்தை காட்டிக் கொடுத்துவிட்டுச் சென்றவர் பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள். தயவு செய்து புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்- ஐத் தன்னுடைய தலைவராக ஏற்றுக்கொள்ளக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பதில் சொல்லட்டும். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவாதத்தில் ஒளியை ஏற்றுவதற்குப் பதிலாக சூட்டை ஏற்றுகின்றார். அதனால் நான் சொல்ல விரும்புவது, மக்களால் மதிக்கப் பெற்ற தலைவர்கள் யாராயினும், மக்கள் நல்லெண்ணத்தைப் பெற்ற தலைவர்கள் யாராயினும், சாதனையாளர்கள் யாராயினும் அவர்களைப் பூஜிப்பதோ, அவர்களை வரவேற்பதோ, அவர்களை ஏற்றுக்கொள்வதோ எல்லோருக்கும் பொதுவான ஒன்று. அதனால்தான் அவர்களை கோயிலைப் போன்றவர் என்று சொன்னேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இன்றையதினம் இருக்கக்கூடிய ஆளும் கட்சிக்கு அவர் உரிமை படைத்தவர் என்று சொன்னால் அதில் எங்களுக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை. அவருடைய இயக்கத்திற்காகப் பேச இன்று அவர்களுக்கு முழு உரிமை இருக்கிறது. அவர்கள் ஆட்சியிலே அமர்த்தியிருக்கின்றார்கள். அதனால்தான் நாங்களும் அவர்களுக்கு எங்களாலான உதவியை, ஏதோ அணிலும் மண் சுமந்தது என்பதைப்போல, எங்களாலான உதவியை புரட்சித் தலைவர் ஆட்சி அமையட்டும் என்கின்ற நோக்கத்தோடுதான் நாங்கள் அவர்களை ஆதரித்தோம். அறிஞர் அண்ணா என்று சொன்னால், அறிஞர் அண்ணாவை எல்லோரும்தான் கொண்டாடுகிறார்கள்.





பொதுவாக ஏற்றுக்கொள்கின்றார்கள். அறிஞர் அண்ணா அவர்களை அண்ணா தி.மு.க-வும் சொல்கிறது, தி.மு.க-வும் சொல்கிறது. (குறுக்கீடுகள்) இருங்கள். இருங்கள் நான் முடித்துவிடுகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் பேசி முடித்துவிடட்டும். (குறுக்கீடு) பிறகு உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வரலாற்று உண்மையை இந்த அவையிலே வேறு விதமாகப் பதிவு செய்யக்கூடாது என்பதற்காக இந்தக் கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன். அண்ணாவை எல்லோரும் ஏற்றுக்கொள்வது இல்லை. இங்கு இருக்கின்ற காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஏற்றுக்கொள்கிறார்களா? (குறுக்கீடு) தலைமையாக ஏற்றுக்கொள்கிறீர்களா? நான் கேட்பது அரசியல் ரீதியான கொள்கை. (குறுக்கீடு) பொதுவுடைமை இயக்கத்தைச் சேர்ந்த தோழர்கள் கூட்டணி வைக்கிறார்கள். கூட்டணி வைத்து என்ன சொல்கிறார்கள்? எங்கள் இயக்கத் தோழர்கள் என்று அதைத்தான் சொல்கிறீர்கள். எங்கள் தலைமையை ஏற்றுக்கொள்வது இல்லையே! கூட்டணி முடிந்தவுடன் வெளியே போய்விடுகிறீர்கள். உங்களுக்கு என்று ஒரு கொள்கை இருக்கிறது. உங்களுக்கென்று ஒரு தலைமை இருக்கிறது. அந்தத் தலைமையைத்தான் நீங்கள் உயர்வாகப் பேசுகின்றீர்கள். நீங்கள் எந்தக் கொள்கையை மனதில் வைத்திருக்கிறீர்களோ, உங்கள் கட்சி எந்தக் கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கிறதோ அந்தக் கொள்கையின் அடிப்படையில்தான் உங்களுடைய நடவடிக்கை இருக்கிறது.

பிற்பகல் 12-05

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கென்று ஒரு கொள்கை இருக்கிறது. அந்தக் கொள்கையோடு ஆட்சி செய்து கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறாரே, பொதுவாக ஏற்றுக்கொள்கிறோம் என்று சொல்கிறாரே— நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுடைய தந்தையை

ஏற்றுக்கொள்வாரா? (குறுக்கீடு) ஏற்றுக்கொள்வாரா? ஏற்றுக்கொள்ள முடியாது. அப்படி இருக்கின்ற நேரத்தில் சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு தலைவரை, தன் தலைவராக ஏற்றுக்கொள்வது என்பது— தயவு செய்து, மன்னிக்க வேண்டுகிறேன்— அது பச்சோந்தித்தனமான செயல்பாடு. (குறுக்கீடுகள்) அதை ஏற்றுக்கொள்ள முடியாது. அவர்களுக்கென்று ஒரு கொள்கை இருக்கிறது. அந்தக் கொள்கையின்வழி இருக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றை மாற்றி எழுதக்கூடாது, இந்த அவையில் பதிய வைக்கக்கூடாது. திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும்தான் அறிஞர் அண்ணா சொந்தமானவர் (மேசையைத் தட்டும் ஒலி) நல்லவர், வல்லவர் என்று பிறர் அவரை வாழ்த்தலாம். ஆனால் தலைமைப் பொறுப்பில் ஏற்றுக்கொள்ளமுடியாது. அறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளிலே, பேரறிஞர் அண்ணாவின் சிலைக்கு யார் போய் மாலை அணிவிக்கிறார்கள்? புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பிறந்த நாளிலே யார் மாலை அணிவிக்கிறார்கள்? சில சந்தர்ப்பங்களில், கூட்டணியிலே இருக்கின்றபோது, வாக்குகளைச் சேகரிக்கும்போது சிலர் மலர் வளையங்களை எடுத்துக்கொண்டு செல்வார்கள். உரிமை கொண்டாடியவர்கள், கொண்டாடத் தகுதியானவர்கள், என்னுடைய அன்னை அவர்கள் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மறைந்த பின்பு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒன்றரை கோடித் தொண்டர்கள் எப்படி வாழ்வது என்று அறியாத நேரத்தில் அவர்கள் மலர் வளையத்தை எடுத்துக்கொண்டு சென்றார்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய நினைவிடத்திலே வைத்தார்கள். அங்கு சூளுரைத்தார்கள். “நான் இருக்கிறேன்” என்று சொன்னார்கள். அன்று வைத்த சூளுரை இன்று வரை எங்களைக் கண்ணின் மணிபோல் காத்து, காத்து இவ்வளவு பெரிய வாய்ப்பையெல்லாம் உருவாக்கி, இந்தச் சமூகத்திற்குத் தொண்டு செய்வதற்கு நல்ல வாய்ப்பினை உருவாக்கிக் கொடுத்து எங்களை நல்வழிப்படுத்திச் சென்று கொண்டிருக்கிறார்கள். எனவே, நாங்கள் எங்கள் அன்னையைத் தலைவராக ஏற்றுக்கொண்டிருக்கிறோம். தயவு செய்து அதற்கு நீங்கள் உரிமை கொண்டாடாதீர்கள். உங்களுக்கு அந்தத் தகுதியும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள். (குறுக்கீடு) விவாதம் திசை திரும்பிப் போகிறது. திரு. ஆறுமுகம், please sit down. No, not today please. அதோடு முடிந்துவிட்டது. தயவுசெய்து உட்காருங்கள். தயவுசெய்து இரண்டு தோழர்களும் உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.





**திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தவறான எண்ணம் இந்த மன்றத்தின்மூலம் நாட்டு மக்களிடையே பரவக் கூடாது. நான் சொல்ல விரும்புவது, வாழ்ந்து மறைந்த தலைவர்கள், வரலாறு ஆகிவிடுகிறார்கள். அதை நாம் மறுக்கமுடியாது.

வாழ்ந்து மறைந்த தலைவர்கள் வரலாறு ஆகிவிடுகிறார்கள். அவர்களை ஒரு விவாதப் பொருளாக ஆக்குவது சரியாக ஆகாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, அது முடிந்தது, விடுங்கள்.

**திரு. ச. இராமச்சந்திரன்:** நான் ஏற்கெனவே சொன்னேன். அவர்களுக்கு உரிமை இருக்கிறது. அதில் எங்களுக்கு ஒன்றும் ஆட்சேபனையில்லை. ஆனால் நான் சொன்ன மாதிரி கோயிலில் எல்லோரும்தான் கும்பிடுகிறோம். நாங்கள் அறிஞர் அண்ணா பிறந்த நாளைக் கொண்டாடவில்லையா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:** நிதி நிருவாகத்தில் நம் பாரதம் உலகத்திற்கு தந்த பெரும் கொடையான அறிஞர் பல்கிவாலா... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

**திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் பேச விரும்பவில்லை. அவர்கள் எழுந்திருக்கவேயில்லை.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்களுக்கு நான் மைக் கொடுக்கவில்லை. எனவே, அவர் பேசுவது அவைக் குறிப்பிலே

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இருக்காது. அதுபோன்ற சொற்றொடர்களை உபயோகப்படுத்துவது மிகவும் கண்டனத்திற்குரியது. (குறுக்கீடுகள்) நான் உங்களுக்கு மைக் கொடுக்கவில்லை. நீங்கள் சொன்னது அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள். (குறுக்கீடு) Please sit down. மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் குறிப்பிட்டது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

பிற்பகல் 12-10

**திரு. க. பாண்டியராஜன்:** நிதி நிருவாகத்தில் நம் பாரதம் உலகிற்குத் தந்த பெரும் கொடையான அறிஞர் நைனி பல்கிவாலா அவர்கள் ஒரு நல்ல பட்ஜெட்டுக்கு உரை என்று சொன்னவற்றை நினைவுகூர விரும்புகிறேன். The touch-stone of a great budget rests on four anchors- 1. Vision, 2. Reality acceptance, 3. Cohesion of targets 4. Courage of execution. நல்ல பட்ஜெட்டுக்கு நான்கு கட்டளைக் கற்கள். ஒன்று, தொலைநோக்கு. இரண்டு, இன்றைய உண்மையை ஒத்துக்கொண்டு உரக்கச் சொல்லுதல். மூன்று, செயல் திட்டங்களுக்கிடையே ஒத்திசைவு. நான்கு, நிகழ்காலத்திற்காக எதிர்காலத்தை அடைமானம் வைக்காமல் இருத்தல். இந்த நான்கு கட்டளைக் கற்களின் வழி நின்று நம்முடைய நிதிநிலை அறிக்கையைச் சற்று ஆழ பகுப்பாய்வு செய்ய விரும்புகிறேன்.

13-வது நிதிக் குழு மற்றும் தமிழ்நாடு நிதிநிலை பொறுப்புடைமைச் சட்டம் ஆகியவற்றால் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு ஏற்பவும், 2023 தொலைநோக்குப் பார்வையின் அடிப்படையிலும் இந்த நிதிநிலை அறிக்கை உருவாக்கப்பட்டுள்ளதாக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்.

இதுவரை தமிழக வரலாற்றில் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து நிதிநிலை அறிக்கைகளிலும், அதிக நிதிப் பற்றாக்குறையாக ரூபாய் 19,832 கோடி இந்த பட்ஜெட்டில் காட்டப்பட்டுள்ளது. இதனைச் சமாளிக்க இந்த வருடம் அரசு வெளியில் இருந்து வாங்க இருக்கும் கடன் ரூபாய் 18,387 கோடி. இதைச் சேர்த்தால் வருட இறுதியில் தமிழக அரசின் கடன் சுமை மாண்புமிகு நிதியமைச்சர் சொல்வதுபோல் ரூபாய் 1,35,060 கோடிகளாக இருக்கும். தமிழகத்தில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் தலைக்கு ரூபாய் 18,500 கடனுடன்தான் பிறக்க இருக்கிறது. இந்த மாநில அரசு இந்த வருடம் நிதிநிலை பொறுப்புடைமைச் சட்டத்தின்கீழ் வாங்க அனுமதிக்கப்பட்ட கடன் ரூபாய் 20,716 கோடி என்று மாண்புமிகு நிதியமைச்சர் குறிப்பிட்டுள்ளார். சட்டம் அரசாங்கத்தை ரூபாய் 20,000 கோடிக்குமேல் கடன் எடுக்கச் சொல்லவில்லை. நிதிநிலை பொறுப்புடைமைச் சட்டம் சொல்வதெல்லாம் மாநிலத்தின் மொத்த உற்பத்தியில் ஒரு வருடத்தில் 3 சதவிகிதத்திற்குமேல் கடன் எடுக்கக்கூடாது என்பதுதான். இதற்கு அடிப்படையாக அமைவது மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி. சென்ற பட்ஜெட்டில், கடைசி பக்கத்தில், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தமிழகத்தில் இந்த வருடம் மாநில மொத்த உற்பத்தி ரூபாய் 5,81,635 கோடியை அடையும். 12.14 சதவிகித வளர்ச்சி அடையும் என்று கணித்து இருந்தார். ஆனால், இந்த பட்ஜெட் உரையின் 7-வது பக்கத்தில், சென்ற ஆண்டின் வளர்ச்சி 9.39 சதவிகிதம் மட்டுமே இருக்குமென்று முன் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதனடிப்படையில் பார்த்தால் 2011-2012 ஆம் ஆண்டின் இறுதியில் நமது மாநில மொத்த உற்பத்தி சுமார் ரூபாய் 5,67,270 கோடி மட்டும்தான். தமிழகத்தின் இந்த வருட பொருளாதார வளர்ச்சி எதிர்பார்த்ததைவிட சுமார் ரூபாய் 14,000 கோடி குறைந்ததற்கு என்ன காரணம் என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் விளக்குவார்கள் என்று எதிர்பார்க்கிறோம். மின்வெட்டா, கொள்கைக் குளறுபாடுகளா, நிதி மேலாண்மைச் சீர்கேடுகளா என்பதை அவர்கள் விளக்க வேண்டும். இதையெல்லாம் சொல்லிவிட்டு வரும் வருடத்தில் தமிழகத்தின் பொருளாதாரம் ரூபாய் 6,90,542 கோடியை அடையும் என்று திட்ட மதிப்பீட்டில் சொல்லப்பட்டு இருக்கிறது. அதாவது நமது பொருளாதாரம் சுமார் 22 சதவிகிதம் வளர்ச்சி பெறும் என்று இதற்கு அர்த்தம். இரண்டு இலக்கு என்று மட்டும் சொல்லிவிட்டு அந்த வளர்ச்சி விகிதத்தைச் சொல்லாமல், கடைசிப் பக்கத்தில் இந்தப் பொருளாதார வளர்ச்சியைக் குறிப்பிட்டிருக்கிறார் மாண்புமிகு நிதியமைச்சர். கடந்த பத்து வருடங்களாக, ஒவ்வொரு வருடமும் சராசரியாக 8 முதல் 9 சதவிகிதம் வரை வளர்ந்து வரும் நமது மாநில மொத்த உற்பத்தி எந்த மாயத்தில் இந்த அளவுக்கு வளர்ச்சி பெறும் என்பது எங்களுக்குப் புரியவில்லை. அதிகக் கடன் பெறுவதற்கு ஒரு வசதியாக உற்பத்தி எண்கள் அதிகமாகக் கணிக்கப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

[திரு. க. பாண்டியராஜன்] [2012 மார்ச் 29

இந்த அரசாங்கத்தின் நிதி நிருவாகத்தின் மற்றொரு பரிமாணத்தையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சென்ற வருட நிதிநிலை அறிக்கையில் தமிழக அரசின் கடனுக்குச் செலுத்த வேண்டிய வட்டி, ரூபாய் 7,966 கோடியாக இருக்குமென்று சொல்லப்பட்டது. ஆனால், இந்த வருட நிதிநிலை அறிக்கையின் கடைசிப் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளது, நாம் நிஜமாகக் கட்டிய வட்டி ரூபாய் 9,233 கோடியாகும். 15 சதவிகிதம் அதிகமாக வட்டி கட்டியிருக்கிறோம். இது நாம் சென்ற வருடம் பெற்ற மொத்தக் கடனில் 8.46 சதவிகிதமாகும். நம்மைவிட மிகச் சிறிய மாநிலங்கள்கூட இதைவிடக் குறைந்த தொகையில் கடன் பெற்றிருக்கின்றன. இந்த அளவுக்கு அதிக வட்டி நாம் செலுத்துவதற்கு முக்கிய காரணங்கள் இரண்டு. ஒன்று, நம் கடன் சுமையான ரூபாய் 1,18,000 கோடியில் குறைந்த வட்டிக் கடன் தரக்கூடிய நிறுவனங்களாகிய உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி ஆகிய பன்முனை நிதியங்கள் Multi-lateral Agency-களுடைய பங்கு மிகவும் குறைவு. இரண்டாவது காரணம், அரசு நினைத்தபடி உள்நாட்டு கடன் பத்திரங்களில் குறைந்த வட்டிக்கு கடன் பெற இயலவில்லை. இந்த அரசின் நிதி நிருவாகம்மீதும், அரசு நிறுவனங்களின் நிதி ஸ்திரத்தன்மைமீதும் முதலீட்டாளர்களுக்கு இன்னும் முழு நம்பிக்கை வராததே இதற்கு அடிப்படைக் காரணம்.

எனக்குக் கிடைத்த தகவல்படி, சென்ற வருடம் மின் உற்பத்தி செய்து தந்த நிறுவனம் ஒன்று, TANGEDCO நிறுவனத்திடமிருந்து பெற வேண்டிய ரூபாய் 200 கோடி நிலுவைத் தொகைக்காக உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து, அரசின் மின் நிலையங்களை ஏலம் விட்டு, தனக்குத் தரவேண்டிய தொகையைச் செலுத்த வேண்டுமென்று கேட்டது. அந்த வழக்கை உயர் நீதிமன்றமும் ஏற்றுக்கொண்ட அவல நிலை ஏற்பட்டது. இந்த வழக்கு குறித்து கேள்விப்பட்டபோது என் மனதில் என்ன தோன்றியது என்றால், நிருவாக இயலில் உலகை ஆண்ட சக்ரவர்த்தியான கோவைத் தமிழர் சி.கே. பிரகலாதன் "fear never begets productivity" என்றார்.

பிற்பகல் 12-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.



2012 மார்ச் 29]

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியார் வசமிருந்து மின் வசதியைப் பெற்று, கட்ட வேண்டிய பாக்கித் தொகைக்காக அவர்கள் உயர் நீதிமன்றத்திற்குச் சென்றார்கள் என்று சொன்னார். எந்த வருடத்தில் மின்சாரம் வாங்கப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:** மின்சாரம் விநியோகம் செய்யப்பட்டது 2010-லிருந்து 2012 வரை. இந்த வழக்குப் பதிவு செய்யப்பட்டது திரு. ரகு என்பவரால். (குறுக்கீடு) ஜூலை 2011-ல் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. திரு. ரகு என்பவர் TANGEDCO நிறுவனத்தின்மீது வழக்குப் பதிவு செய்திருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த மாதம், எந்த வருடம் என்று சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது இந்த வழக்குப் பதிவு செய்யப்பட்டது ஜூன் மாதம். இது வந்தது பத்திரிகையில். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** வழக்குப் பதிவு செய்யப்பட்டது இந்த மாதத்தில் என்று சொல்கிறீர்கள். மின்சாரம் எந்த மாதத்தில் எந்த வருடத்தில் தனியாரிடமிருந்து அரசு வாங்கியது என்பதைச் சொல்ல வேண்டும்.

**திரு. க. பாண்டியராஜன்:** முன்னால் வாங்கியதுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் எந்த மாதத்தில், எந்தத் தேதியில், எந்த வருடத்தில் தனியாரிடமிருந்து மின்சாரம் வாங்கப்பட்டது என்று கேட்கிறார்கள். (குறுக்கீடு) நீங்கள் ஆதாரம் இல்லாமல் பேசக்கூடாது. அவர் கேட்ட கேள்விக்கு கருத்து கூறுவார்கள். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்குக்குச் சென்ற தேதியைக் குறிப்பிடுகிறார். ஆனால், அந்த மின் பாக்கி எப்பொழுது ஏற்பட்டது என்பதை உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்ட வேண்டும். கடந்த ஆட்சியில் ஏற்பட்ட பாக்கிக்காக இப்பொழுது நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். அதுதான் உண்மை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:** அதை ஒத்துக்கொள்கிறோம். அவர் சொல்வது சரிதான். (குறுக்கீடு) ஒத்துக்கொள்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் மின்சாரம் வாங்கி, அதற்காக உயர் நீதிமன்றத்திற்குச் சென்றார்கள் என்று சொன்ன வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதை அவர் ஏற்றுக்கொண்டார். முந்தைய ஆட்சியில் மின்சாரம் வாங்கியது என்று மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதை அவர் ஏற்றுக்கொண்டார். (குறுக்கீடு) இல்லை, அவரே ஏற்றுக்கொண்டார். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** இந்த அளவுக்கு மின்சார வாரியத்திற்கு நிதி நெருக்கடியை ஏற்படுத்தியதும் கடந்த ஆட்சிதான்; இப்படிப்பட்ட சூழ்நிலைகளை உருவாக்கியதும் கடந்த ஆட்சிதான்; அந்த நிதி நெருக்கடியிலே இப்பொழுதும் தத்தளித்துக் கொண்டிருக்கின்ற நிலையை உருவாக்கி, இந்த இக்கட்டான நிலையை உருவாக்கிய ஆட்சிதான் அது. மின்சார வாரியத்தினுடைய நிதி நெருக்கடியிலிருந்து மின்சார வாரியத்தை மீட்டெடுக்கின்ற முயற்சியிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இப்பொழுது ஈடுபட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு, நிதி நிலைமை சீரடைந்தவுடன், எந்த ஆட்சி என்றில்லை, சென்ற ஆட்சியிலே வைத்துவிட்டுச் சென்ற பாக்கியையும் சேர்த்துக் கொடுப்பதற்கு அம்மா அவர்களுடைய அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள். உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:** இந்த நிதி நிருவாகக் குறைபாடுகளுக்கு அடித்தளம் வகுப்பது எதுவென்றால், அரசாங்கம் தருகிற எந்தவொரு நிதி சார்ந்த இலக்காக இருந்தாலும், அதில் தென்படும் ஆழமின்மையும், அக்கறையின்மையுமேதான். உதாரணத்திற்கு சமீபத்தில் அறிவிக்கப்பட்ட இந்த பட்ஜெட்டுக்கு அடிப்படையாக இருக்கிற 2023 தொலைநோக்குத் திட்டத்தையே எடுத்துக்கொள்வோம். அடுத்த 10 வருடங்களில் தமிழகத்தின் தனி நபர் வருமானம் ரூ.4,50,000 ஆக உயரும் என்று அறிவித்தது வரவேற்கத்தகுந்தது. ஆனால், இன்றைய தேதியில் தனி நபர் வருமானம் ரூ.73,278 என்று Vision 2023 அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. அடுத்த 10 வருடங்களில் ஜனத்தொகையின் வளர்ச்சி 15 சதவிகிதம் இருக்கும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. தமிழகத்தின் மொத்த உற்பத்தி வளர்ச்சி விகிதம் ஒவ்வொரு வருடமும் 24 சதவிகிதத்திற்கும் மேல் இருந்தால்தான் 2023 ஆம் ஆண்டு தனி நபர் வருமானம் நான்கரை இலட்சத்தைத் தாண்ட முடியும். அறிக்கையில் சொல்லப்பட்டபடி 11 சதவிகிதம் வளர்ச்சி இருந்தால், தனி நபர் வருமானம் இரண்டு இலட்சத்தைத்தான் அடைய முடியும். அதேபோல, வளர்ச்சிக் குறியீடுகளை எடுத்துக்கொண்டால் விவசாயத் துறை 5 சதவிகிதம், சந்தோஷம்; உற்பத்தித் துறை 14 சதவிகிதம், ரொம்ப சந்தோஷம்; ஆனால் சேவைத் துறையில் ஏற்கெனவே தமிழ்நாடு 12 முதல் 15 சதவிகிதம் வரை வளர்ந்துகொண்டு இருக்கும்பொழுது அடுத்த

*11 வருடங்களில் வளர்ச்சி விகிதம் 11 சதவிகிதமாகக் குறைப்பது சாத்தியமற்ற ஒன்று. உற்பத்தித் துறை 8 சதவிகிதம் வளரும்போது 12 சதவிகிதம் வளரக்கூடிய சேவைத் துறை, உற்பத்தித் துறை 14 சதவிகிதம் வளரும்போது குறைந்தபட்சம் 16 சதவிகித வளர்ச்சியை எட்டும். இந்தமாதிரி ஒத்திசைவு இல்லாத குறியீடுகள், குறிக்கோள்கள் இருப்பதால்தான் நம்மால் பல திட்டங்களை நிறைவேற்ற முடியவில்லை. இந்த மேம்போக்குத்தன்மை, நிதி நிருவாகத்தின் அனைத்துத் தளங்களிலும் பரவி இருப்பதால்தான் அரசால் அறிவிக்கப்பட்ட பல திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படாமல் தேங்கி நிற்கின்றன. உதாரணத்திற்கு சென்ற நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட 3,500 மெகா வாட் மின் உற்பத்தி நிலையங்கள், 50 மெகா வாட் சூரிய சக்தி பூங்கா, 9 இலட்சம் மடிக் கணினிகள், மரபுசாரா எரிசக்திக் கொள்கை, அனைவருக்கும் 'ஆதார்' அட்டை, மதுரை-தூத்துக்குடி தொழிற்பாதை, ஏழு புது தொழிற்கொத்துக்கள், நானோ தொழில்நுட்பக் கொள்கை, இன்னும் எத்தனையோ முயற்சிகள், எந்த முன்னேற்றமும் இன்றி தேங்கிநிற்கின்றன.*

*பிற்பகல் 12-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்திலே ஓர் அரசு, ஓர் நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்த பிறகு, அதில் செய்யப்பட்டுள்ள அறிவிப்புகளை, அறிவிக்கப்பட்டுள்ள திட்டங்களைச் செயல்படுத்த ஓராண்டுக் காலம் அவகாசம் விடவேண்டும், அந்தத் திட்டங்களைத் தொடங்குவதற்குக்கூட. இப்போதுதான் சற்று முன்பு விதி 110-ன்கீழ் ஓர் அறிக்கையை நான் இங்கே வாசித்தபோது, கடந்த பட்ஜெட் தாக்கல் செய்த பிறகு, அடுத்த பட்ஜெட் இப்போது தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. அதற்கும், இதற்கும் இடைவெளி ஆறு மாதங்கள்தான் என்பதைக் குறிப்பிட்டேன். ஆகவே, கடந்த முறை பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட திட்டங்களைத் தொடங்குவதற்கும், செயல்படுத்துவதற்கும் எப்படியும் ஓராண்டுக் காலம் அவகாசம் ஒரு அரசுக்குக் கொடுக்கவேண்டும் என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.*





*மேலும், மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த சில கருத்துகளுக்கு, இந்த ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கையிலே அதற்கான பதில் இருப்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 87 ஆம் பக்கத்தில் நிதிப் பற்றாக்குறை 19,832.13 கோடி ரூபாய் அளவில் இருக்கும் என்றாலும், இது மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் 2.87 சதவீதம் என்ற அளவிலேயே இருக்கும். பதின்மூன்றாவது நிதிக்-குழு நிர்ணயித்த நிதிக் குறியீடுகளுக்கு உட்பட்டே நமது வரவு-செலவுத் திட்ட நிதிநிலைக் குறியீடுகள் உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதில் வரையறுக்கப்பட்டபடி, மாநில அரசு வருவாய் உபரி தொடர்வதுடன், நிதிப் பற்றாக்குறை மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 3 சதவீத அளவிற்கும் குறைவாகவே இருக்கும்.*

*மேலும், 2012-2013 ஆம் ஆண்டின் இறுதியில் மாநிலத்தின் மொத்த கடன் 1,35,060.47 கோடி ரூபாயாக இருக்கும். எனினும், இது பதின்மூன்றாவது நிதிக் குழு அனுமதித்துள்ள அளவான, மாநில உற்பத்தி மதிப்பில் கடனின் விகிதாச்சார அளவு 24.8 சதவீதம் என்பதைவிடக் குறைவாக, 19.6 சதவீத அளவிலேயே இருக்கும்.*

*2011-2012 ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீட்டில் நிகரக் கடன் பெற கணிக்கப்பட்ட அளவு 16,105.86 கோடி ரூபாய் என்று இருந்தாலும், 12,873.81 கோடி ரூபாய் அளவுக்கு மட்டுமே கடன் பெற்றுள்ளோம். அதேபோல், வரும் ஆண்டில் மத்திய அரசு நமது மாநிலத்திற்கு 20,716 கோடி ரூபாயைக் கடன் பெற்றுக்கொள்ள அனுமதித்திருந்தபோதிலும், பெறப்படும் கடன் அளவை 18,387.47 கோடி ரூபாய் அளவிலேயே கட்டுப்படுத்த இந்த அரசு முடிவு செய்துள்ளது. ஆகவே, நிதி நிருவாகத்தை மிகவும் திறமையாக இந்த அரசு கையாண்டு வருகிறது என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன், இரண்டு நிமிடங்களில் உரையை முடித்துவிடுங்கள்.*

**திரு. க. பாண்டியராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை பொறுப்புடைமை சட்டத்திலே அனுமதிக்கப்படும் தொகை ஒரு பக்கம் இருக்கிறது.*

[திரு. க. பாண்டியராஜன்] [2012 மார்ச் 29

இவ்வளவு allow பண்ணியிருக்கிறது என்று சொல்கிறீர்கள், ஒத்துக்கொள்கிறோம். ஆனால், அதில் அடிப்படை GSDP. அந்த GSDP-யின் வளர்ச்சி விகிதம், இன்றைக்கு நாம் எஸ்டிமேட் பண்ணும் 22 சதவிகிதம் என்பது அடைய இயலாத ஒன்று.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மாநில அரசை விமர்சிக்கிறார், குறை கூறுகிறார். சரி, அவரது உரிமை. ஆனால், இந்தக் குறியீடுகளை நிர்ணயித்தது Thirteenth Finance Commission. அவர்கள் வெளியிட்டு இருக்கின்ற குறியீடுகளையே தவறு என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறாரா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற பொருளாதாரக் குறியீடு 2023-ல் 10 ஆண்டுகளுக்குப் பின்னால் வருகின்ற அந்தக் குறியீடுகளை நீங்கள் தவறாகச் சொல்கிறீர்கள் என்று நினைக்கிறேன். நீங்கள் வேண்டுமென்றால் அதைப் படித்துப் பாருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சட்டம் சொல்கிற விஷயம். இன்னொரு பக்கம் வாங்கப்போகும் 18,000. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அதை திரும்பப் பாருங்கள். அதாவது 2023-ல் ... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.



2012 மார்ச் 29]

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் GSDP பற்றி இப்போது பேசுகிறார். "This Budget conforms to the norms for fiscal prudence set by the Thirteenth Finance Commission. As mandated, the State will maintain a revenue surplus and a fiscal deficit within 3% of the GSDP". 3% of the GSDP இருக்கலாம் என்று Thirteenth Finance Commission-ஏ சொல்லியிருக்கிறது. அதை எப்படித் தவறு என்று இவர் சொல்கிறார் என்று புரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதைக்கு நீங்கள் கொடுத்திருக்கிற கடைசி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

பிற்பகல் 12-25

**திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Fiscal Responsibility Act-ஐ பற்றி அவர் பேசுவதாக நான் கருதவில்லை. மாண்புமிகு உறுப்பினர் சொல்வது Perspective Plan. 2023-ல் GSDP போட்டு ரூ.40,000- 10,000 dollars per capita income என்று போட்டிருப்பது, அந்தக் கணக்கைப் பற்றி அவர் பேசிக்கொண்டிருக்கிறார் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன், உரையை முடியுங்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:** சரி, உரையை முடித்துவிடுகிறேன். ஒரு கையிலே ரூ.18,387 கோடி கடன்கள் வாங்கி இன்னொரு கையிலே பழைய கடனுக்குக் கொடுக்கிற வட்டி மட்டுமே ரூ.10,945 கோடி கொடுத்துவிட்டு, இந்த வட்டி செலுத்தியது போக, மீதம் இருக்கக்கூடிய ரூ.7,442 கோடியையும் பொதுத் துறை நிறுவனங்களை மூழ்காமல் காப்பாற்ற முதலீடு செய்யப் போகிறது இந்த அரசாங்கம். C.A.G. அறிக்கையின்படி, தமிழக அரசு 78 பொதுத் துறை நிறுவனங்களில், அரசு செய்திருந்த முதலீட்டிலிருந்து சராசரியாக அரை சதவிகிதத்திற்கும்

[திரு. க. பாண்டியராஜன்] [2012 மார்ச் 29

குறைவாகவே வருமானம் கிடைக்கிறது. இந்த முதலீட்டில் நாம் கடன் பெற தரும் வட்டி விகிதமாவது திரும்பக் கிடைக்குமா என்பதை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டும். நிதி மேலாண்மையில் இந்த அம்சம் சரியாக நிருவகிக்கப்படாவிட்டால், தமிழகம் கடன் பொறியிலிருந்து debt trap - மீளமுடியாமல் மாட்டிக்கொள்ள நேரிடும். இந்த நிலையிலிருந்து தமிழகத்தை மீட்டெடுத்து மீண்டும் தலை நிமிர்ந்து நிற்க வைக்க வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய தி.மு.க. அரசு தமிழகத்தை debt trap-ல் சிக்க வைத்துவிட்டுப் போய்விட்டது. அதிலிருந்து தமிழகத்தை மீட்பதற்குத்தான் நாங்கள் போராடிக்கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதை உணராமல் மாண்புமிகு உறுப்பினர் எதையெதையோ பேசிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. இராமகிருஷ்ணன், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. தங்கம் தென்னரசு, உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன், பேசுங்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:**

'பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தம்தம்
கருமமே கட்டளைக் கல்'

என்றார் வள்ளுவர். சொல்லுக்கும், செயலுக்கும் எள் முனையும் தொடர்பில்லாத நிலைமையே கல்வி, வேலைவாய்ப்பு ஆகிய இரு துறைகளிலும் அதிகமாக நிலவுவதைக் காண்கிறேன். சென்ற வருடம் தேசிய அளவில் பேசப்பட்ட இரு முக்கிய ஆய்வுகள் Pratham, Aspiring Minds ஆகிய நிறுவனங்களால் நடத்தப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ஆர்.என். கிட்டுசாமி அவர்கள். (குறுக்கீடு) Please sit down. நிறைய பேசிவிட்டீர்கள். (குறுக்கீடு)



2012 மார்ச் 29]

**திரு. ஆர்.என். கிட்டுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வணங்குகிற தெய்வம், (குறுக்கீடு) ஒன்றரை கோடி கழகத் தொண்டர்களின் காவல் தெய்வம் . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.என். கிட்டுசாமி, please sit down. மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) திரு. பாண்டியராஜன், உட்காருங்கள். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் பேசட்டும். (குறுக்கீடு) மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தேவையில்லாமல் பேசுகிறார். சொல்லுக்கும் செயலுக்கும் தொடர்பில்லை; செயல் வடிவம் கொடுக்கவில்லை என்று சொன்னார். கடந்த முறை பட்ஜெட்டில் கல்வித் துறை சம்பந்தப்பட்ட அறிக்கைகளில் சொல்லியதில் எதைச் செய்யாமல் இருக்கிறார்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்? சொல்லிய அத்தனையும் இன்றைக்கு நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. தேவையில்லாமல் குற்றம் சொல்வதற்காக ஏதேதோ உளற வேண்டாமென்று நான் இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. க. பாண்டியராஜன்:** ** திறன் வளர்த்தல் திட்டத்தில் சென்ற பட்ஜெட்டில் சொல்லப்பட்டபடி ஒன்றரை இலட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு பயிற்சி வழங்கப்பட்டதா? வழங்கப்பட்டிருந்தால் ரூ.100 கோடி allotment-க்கு பதிலாக ரூ.75 கோடி செலவு செய்யப்பட்டதாக இந்த பட்ஜெட்டில் சொல்லியிருக்கிறீர்கள். வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருக்கின்ற இளைஞர்களின் எண்ணிக்கை 5 இலட்சத்திற்கும் மேல் உயர்ந்திருக்கிறது. கல்வியின் தரத்திற்கு, அமைச்சருக்குச் சொல்ல வேண்டுமென்றால், ** இந்த வருடமாவது ஒதுக்கப்படும் நிதியை கல்வித் தரத்தை உயர்த்தவும், வேலைவாய்ப்பை பெருக்கவும் பயன்படுத்தி. . . (குறுக்கீடு)

---

** 30-3-2012 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அளித்த ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2012 மார்ச் 29

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

பிற்பகல் 12-30

**திரு. க. பாண்டியராஜன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. பாண்டியராஜன், please sit down. மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் பேசுகிறார்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன், இப்போது சில புள்ளிவிவரங்களை நீங்கள் சொன்னீர்கள். அதற்கு source என்ன? அந்த source-ஐ என்னிடம் நீங்கள் கொடுத்தால், அந்த statistics அவைக் குறிப்பிலே இருக்கும். இல்லையென்றால், அது அவைக் குறிப்பில் இருக்காது. (குறுக்கீடு) அடுத்து, திரு. ஆர்.என். கிட்டுசாமி அவர்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அதை என்னிடம் கொடுங்கள். (குறுக்கீடு) திரு. ஆர்.என். கிட்டுசாமி அவர்கள்.

**திரு. ஆர்.என். கிட்டுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) நான் வணங்குகின்ற தெய்வம், ஒன்றரை கோடி கழகத் தொண்டர்களின் காவல் தெய்வம்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பாண்டியராஜன், நீங்கள் சொன்ன அந்த statistics-ஐ என்னுடைய அறைக்கு வந்து என்னிடம் கொடுங்கள். நீங்கள் கொடுக்கும் புள்ளிவிவரம் சரியான புள்ளிவிவரமாக இருந்தால், நான் அதை அவைக் குறிப்பிலே ஏற்றுவேன். இல்லையென்றால், அது அவைக் குறிப்பிலே ஏறாது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.என். கிட்டுசாமி அவர்கள்.

** 30-3-2012 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அளித்த ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2012 மார்ச் 29]

***திரு. ஆர்.என். கிட்டுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வணங்குகின்ற தெய்வம், ஒன்றரை கோடி கழகத் தொண்டர்களின் காவல் தெய்வம், ஏழரை கோடி தமிழர்களின் நம்பிக்கை நட்சத்திரம், தியாகத்தின் திருவிளக்கு, திராவிடத்தின் மணி விளக்கு, உலகத் தமிழர்களின் ஒப்பற்ற ஒளி விளக்கு, எதிரிகளுக்கும், ஏமாற்றுக்காரர்களுக்கும் சிம்மத் தாய், (மேசையைத் தட்டும் ஒலி) எங்களைப் போன்ற தொண்டர்களுக்கு அன்புத் தாய், இந்திய துணைக் கண்டத்தின் இரும்புப் பெண்மணி, இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து, வணங்கி என்னுடைய கன்னிப் பேச்சைத் தொடங்குகின்றேன்.

அம்மா, சாதாரணத் தொண்டனாகிய எனக்கு மொடக்குறிச்சி ஒன்றிய அம்மா பேரவையினுடைய ஒன்றியச் செயலாளராகப் பொறுப்பு தந்தீர்கள். 1994-லே அம்மா பேரவையினுடைய மாவட்டச் செயலாளராக என்னை நியமனம் செய்தீர்கள். ஒரு வார காலத்திற்குள்ளாக என்னை ஈரோடு மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியினுடைய தலைவராக நியமனம் செய்தீர்கள். 1996-ல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலிலே, மொடக்குறிச்சி தொகுதியில் 1,032 பேர் போட்டியிட மனு செய்த அந்த வேளையிலே, என்னை வேட்பாளராக அறிமுகம் செய்தீர்கள். 2006 ஆம் ஆண்டில் என்னை ஈரோடு மாநகர் மாவட்ட அண்ணா தொழிற்சங்கச் செயலாளராக நியமனம் செய்தீர்கள். தற்போது நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலிலே மொடக்குறிச்சி தொகுதியிலே கழக வேட்பாளராக அறிமுகம் செய்து, என்னை வெற்றி பெறச் செய்தீர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள், தயவு செய்து அமைதி காக்கவும்.

**திரு. ஆர்.என். கிட்டுசாமி:** இன்றைக்கு வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தச் சட்டமன்றப் பேரவையிலே பங்குகொண்டு பேசுகின்ற வாய்ப்பினை எனக்குக் கொடுத்த என்னுடைய குடும்ப விளக்கு, என்னுடைய குலதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களே, நானும், என் குடும்பமும் காலம் உள்ளவரை தங்களுக்கு நன்றிக் கடன் பட்டவர்களாக இருப்போம் தாயே!

என்னை 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்த மொடக்குறிச்சி தொகுதி

[திரு. ஆர்.என். கிட்டுசாமி] [2012 மார்ச் 29

வாக்காளப் பெருமக்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது வெற்றிக்காக உழைத்திட்ட கழக நிருவாகிகள், உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு இயக்கம் தேர்தலைச் சந்திக்கின்றபோது பல்வேறு வாக்குறுதிகளைச் சொல்லி வாக்குகளைக் கேட்பது வழக்கம். அதைப்போலத்தான், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களும் மக்களுக்குப் பல்வேறு வாக்குறுதிகளைக் களத்திலே கொடுத்தார்கள். கொடுத்த வாக்குறுதிகள் அனைத்தையும் இன்றைக்கு ஒன்றன்பின் ஒன்றாக நிறைவேற்றியிருக்கிறார்கள். தமிழக மக்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்மீது அசைக்க முடியாத நம்பிக்கை வைத்து மகத்தான வெற்றியைக் கொடுத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆட்சி அதிகாரத்திலேயிருந்தபோது, தன்னையும், தன் குடும்பத்தையும் மட்டுமே கருத்திலே கொண்டு, மக்களுடைய நலனைப் புறந்தள்ளியவர்களை, மக்கள் கூட்டம் இன்றைக்குப் புறந்தள்ளி, ஓட, ஓட, விரட்டிவிட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மக்களுக்கு அளித்த அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றி வருகின்றார்கள். அதனுடைய வெளிப்பாடுதான் இந்த நிதிநிலை அறிக்கை. இந்த நிதிநிலை அறிக்கைமீது எந்தக் குறையும் சொல்ல முடியாமல் போனதால், சபைக்கு உள்ளே வந்து பேச வேண்டியவர், சபைக்கு வெளியேயிருந்து தள்ளாடும் வயதிலும், இந்த ஆட்சிமீது பொல்லாங்கு கூறி வருகிறார். மத்திய பட்ஜெட் குறித்து விமர்சித்த எதிர்க்கட்சிகள், அம்மா அவர்களின் நிதிநிலை அறிக்கையைக் குறை கூறவில்லை என்று ஆதங்கப்படுகிறார். இவருடைய ஆட்சிக் காலத்தில் கொடுக்கப்பட்ட வாக்குறுதி நிறைவேற்றப்பட்டதா? அனைத்துத் திட்டங்களும் நிறைவேறினவா என்றால், இல்லை; இல்லவே இல்லை.

பிற்பகல் 12-35

கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக்காலத்தில் சட்டம்- ஒழுங்கு சரியில்லை. ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கே பாதுகாப்பு இல்லை. காவல் நிலையங்களிலேயே கொள்ளை போனது. காவல் துறை உயர் அதிகாரிகள் படுகொலை செய்யப்பட்டார்கள். கட்டப் பஞ்சாயத்துகளும், கந்துவட்டிக் கொடுமைகளும், கள்ள



2012 மார்ச் 29] [திரு. ஆர்.என். கிட்டுசாமி]

லாட்டரிச் சீட்டுகளும், நில அபகரிப்புகளும் தாராளமாக நடைபெற்றன. ஆட்சி அதிகாரத்தில் இருந்த அமைச்சர்களே நிலங்களையும், வீட்டுமனைகளையும், அடுத்தவன் வீட்டுச் சொத்துகளையும் அபகரித்த வரலாறு நித்தம் நித்தம் நடைபெற்றது. கட்டி முடிக்கப்படாத தலைமைச் செயலகத்திற்கு சினிமா செட்டிங்ஸ் போட்டு அதற்குத் திறப்பு விழா இந்த நாட்டிலே நடைபெற்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

இன்று தர்மத் தாய் ஆட்சி செய்கின்றபோது சட்டம்- ஒழுங்கு சரியாக இருக்கிறது. காவல் துறைக்கு உரிய மரியாதை கிடைக்கிறது. நில அபகரிப்பு வழக்குகள் போடப்பட்டு உரியவர்களிடம் நிலம் ஒப்படைக்கப்படுகின்றது. கள்ள லாட்டரி விற்போர், கட்டப் பஞ்சாயத்து செய்வோர், நில அபகரிப்புச் செய்தோர் சிறைக் கம்பிக்குப் பின்னாலே இருக்கிறார்கள். இன்றைக்கு நல்ல நிருவாகம், நேர்மையான ஆட்சி நடைபெறுகிறது. மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகள் சிறப்பாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘தானே’ புயல் வந்தது. விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களைப் புரட்டிப்போட்டது. மக்கள் வாழ்வாதாரங்களை இழந்து நின்றார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திறமைமிக்க நிருவாகத்தால் 15 தினங்களுக்குள் ‘தானே’ புயல் வந்த சுவடு தெரியாமல் போனது. வீடிழந்த மக்களுக்கு 1 இலட்சம் கான்கிரீட் வீடுகள் கட்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டுமனைப் பட்டா இல்லாமல் இருக்கும் மக்களுக்கு நடப்பு நிதியாண்டிலே 1 இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படும் என்று அறிவித்திருப்பது ஏழை, எளிய மக்களின் வாழ்க்கையில் ஒளி ஏற்றுவதாகவுள்ளது. அதேபோல, வட்டாட்சியர் அலுவலகங்களுக்குத் தேவையான வசதிகளை மேம்படுத்த ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்திருப்பது வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

இந்த நிதிநிலை அறிக்கையில் எப்போதும் இல்லாத அளவாக, வேளாண்மைத் துறைக்கு 3,804.96 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருப்பது விவசாயப் பெருங்குடி மக்களிடையே பெரும்

[திரு. ஆர்.என். கிட்டுசாமி] [2012 மார்ச் 29

வரவேற்பைப் பெற்றுள்ளது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீர்மிகு நடவடிக்கையால் இவ்வாண்டு தானிய உற்பத்தி அளவு 120 இலட்சம் மெட்ரிக் டன் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதை அடைவதற்குப் பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயப் பெருங்குடி மக்களின் நலனைக் கருத்திலே கொண்டு நெல்லுக்கு, குவிண்டால் ஒன்றுக்கு, சாதாரண ரகத்திற்கு 50 ரூபாயும், சன்ன ரகத்திற்கு 70 ரூபாயும் ஊக்கத் தொகையாக இந்த அரசு வழங்கி வருகின்றது. இதனால், மொத்த விலையாக குவிண்டால் ஒன்றுக்கு, சாதாரண ரகத்திற்கு ரூ.1,130/-ம், சன்ன ரகத்திற்கு ரூ.1,180/-ம் கிடைக்க விவசாயிகளுக்கு வழிவகை ஏற்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் 10 இலட்சம் விவசாயிகளைப் 'பயிர் காப்பீட்டுத் திட்டத்தில்' கொண்டு வர அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. இத்திட்டம் விவசாயிகளுக்குப் பாதுகாப்பானது.

பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு நிதியாண்டில் கூட்டுறவு நிறுவனங்கள்மூலம் வழங்கப்படும் பயிர்க் கடனை 4,000 கோடி ரூபாயாக உயர்த்தியதோடு மட்டுமல்ல, கடனை முழுமையாகத் திருப்பிச் செலுத்தும் விவசாயிகளுக்குப் பயிர்க் கடன், வட்டியில்லாக் கடனாக அளிக்கப்படும் என்று அறிவித்திருப்பதும், இந்த வட்டியை அரசே செலுத்த, வரவு-செலவுத் திட்டத்திலே 160 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதும் மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றுள்ளது.

கால்நடை பராமரிப்புத் துறைக்கு எப்போதும் இல்லாத அளவிற்கு இந்த ஆண்டில் 814.03 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருப்பது பாராட்டப்பட வேண்டிய ஒன்று. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், ரேஷன் கடைகளிலே அரிசி வாங்கும் அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும், மாதந்தோறும் 20 கிலோ விலையில்லா அரிசி வழங்கப்படும் என்றார்கள். அதை தற்போது நடைமுறைப்படுத்தி வருகிறார்கள். வழங்குகின்ற அரிசி, நல்ல தரமான அரிசியாக வழங்கப்படுகிறது. கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே புழுத்துப்போன அரிசியைப் போட்டார்கள்.



2012 மார்ச் 29] [திரு. ஆர்.என். கிட்டுசாமி]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைச் சாப்பிட வேண்டுமென்றால் அதற்கு கருவாட்டுக் குழம்பு வைக்க வேண்டும். கருவாட்டுக் குழம்பு வைத்தால்தான் அந்தச் சாப்பாட்டைச் சாப்பிட முடியும். இன்றைக்கு அப்படியா நிலைமை? அப்படியல்ல, தரமான அரிசி இன்றைக்கு வழங்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதிக் கூட்டுறவு சங்கங்களில் வீட்டு வசதிக் கடன் பெற்றவர்களுக்கு அவர்களின் கடன் சுமையைக் குறைக்க 545 கோடி ரூபாய் வட்டிச் சலுகை அளித்து, 1.14 இலட்சம் பயனாளிகள் பயன்பெறுகின்ற விதத்திலே அறிவித்திருப்பது வரவேற்க வேண்டிய விஷயம்.

பிற்பகல் 12-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை அறிவித்துள்ளார்கள். அந்த மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் ஆண்டுக்கு, ஒரு நபருக்கு 4 இலட்சம் ரூபாய் வீதம் மருத்துவமனையில் மருத்துவம் பார்ப்பதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலும் மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தைக்கொண்டு வந்தார்கள். பயனாளிகள் மருத்துவமனைக்குச் செல்கின்றபொழுது, பரிசோதனை என்ற பெயரால் பல ஆயிரம் ரூபாய் கொள்ளை அடிக்கப்பட்டது. அந்தத் திட்டம் தனியார்களுக்குத் தாரைவார்க்கப்பட்டது. அந்தத் திட்டத்தின்மூலம் கடந்த ஆட்சியாளரின் குடும்பம் பயனடைந்தது. இன்றைக்கு அம்மா அவர்கள் கொண்டு வந்திருக்கிற மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை மக்கள் வரவேற்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்ப்பிணிப் பெண்களின் உடல் நலத்தைக் கருத்திலே கொண்டு, பிறக்கின்ற குழந்தைகள் நல்ல ஆரோக்கியத்தோடு பிறக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பேசகின்ற பேச்சு கன்னிப் பேச்சு. எனவே குறுக்கிடாதீர்கள்.

**திரு. ஆர்.என். கிட்டுசாமி:** கர்ப்பிணிப் பெண்களுக்குப் பேறுகால உதவித் தொகையாக ரூ.12,000/- அம்மா அவர்களின் அரசு வழங்கி வருகின்றது. அதை மகிழ்ச்சியோடு பெற்றுச் செல்கிறார்கள்.

[திரு. ஆர்.என். கிட்டுசாமி] [2012 மார்ச் 29

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழையெளிய மக்கள், வறுமைக்கோட்டுக்குக்கீழே வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஏழையெளிய மக்கள் தங்களின் இளம் பெண்களுக்குத் திருமணம் செய்ய முடியாமல் தவிக்கும் நிலையைக் கருத்தில்கொண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இளம் பெண்களுடைய திருமணத்திற்காக, திருமண உதவித் தொகையாக ரூ.25,000/- மும், தாலிக்கு நான்கு கிராம் தங்க நகையும் வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதை வழங்கிக்கொண்டும் இருக்கிறார்கள்.

பட்டம் பெற்ற, பட்டயப் படிப்பு படித்த பெண்களுக்குத் திருமண உதவித் தொகையாக ரூ.50,000/-மும், தாலிக்கு நான்கு கிராம் தங்கமும் வழங்கப்படும் என்று சொன்னார்கள். அதை வழங்கிக் கொண்டு இருக்கிறார்கள். இதை மனிதநேயமுள்ள மக்கள், மனம் திறந்து பாராட்டுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் அ.தி.மு.க. ஆட்சி எப்பொழுதெல்லாம் வருகிறதோ, அப்பொழுதெல்லாம் கல்வியினுடைய வளர்ச்சியும் கூடும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் மெதுவாக, பொறுமையாகப் பேசுங்கள்.

**திரு. ஆர்.என். கிட்டுசாமி:** அதற்குப் பல்வேறு சான்றுகளைச் சொல்லலாம். முன்பெல்லாம் தமிழகத்திலேயே சாதாரண, சாமானிய மக்கள் தங்களுடைய குழந்தைகளை ஆரம்ப பாடசாலைகளுக்கு அனுப்புவார்கள். அந்தக் குழந்தைகள் 2 ஆம் வகுப்பு, 3 ஆம் வகுப்பு வரை படிக்கும். 5 ஆம் வகுப்பைத் தாண்டுவது அரிதாக இருக்கும். குடும்பச் சூழ்நிலை மற்றும் வறுமையின் காரணமாக சிறு குழந்தைகளைக்கூட வேலைக்கு அனுப்புவார்கள். ஆடு, மாடுகள் மேய்க்கப் பயன்படுத்துவார்கள். தோட்டத்தில், பண்ணையில் சம்பளத்திற்காக வேலைக்கு அனுப்புவார்கள். ஒரு சில வீடுகளில் பத்து வயது குழந்தை, மூன்று வயது குழந்தையைப் பார்த்துக்கொள்ளும். கணவனும் மனைவியும் வேலைக்குச் சென்று விடுவார்கள். இந்தக் குழந்தைகளுக்குப் படிப்பறிவே இருக்காது. கைநாட்டுப் பேர்வழிகளாக இருப்பார்கள். இதையெல்லாம் நன்கு அறிந்த நம்முடைய ஒப்பற்ற தலைவர், தங்கத் தலைவன் புரட்சித் தலைவர்



2012 மார்ச் 29] [திரு. ஆர்.என். கிட்டுசாமி]

எம்.ஜி.ஆர். அவர்கள் குழந்தைகளுக்காகச் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்போது தி.மு.க. தலைவர் இந்தத் திட்டத்தை நையாண்டி செய்து, குழந்தைகளை தட்டேந்தி பிச்சை எடுக்க வைத்து விட்டார் எம்.ஜி.ஆர். என்று குறை சொன்னார்.

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக பொறுப்பேற்றபோதெல்லாம் கல்வியில் மிகப் பெரிய புரட்சிகள் ஏற்பட்டன. முன்பெல்லாம் தனியார் பள்ளிகளுக்குச் செல்கின்ற பிள்ளைகளை, அரசு நடத்தும் பள்ளிகளுக்குச் செல்லும் குழந்தைகள் ஏக்கத்தோடு பார்க்கும். அவர்கள் சீருடை அணிந்துகொண்டு, மிடுக்கோடு செல்வதைப் பார்த்து ஏங்கும். இன்றைக்கு நிலைமை தலை கீழாக மாறியுள்ளது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அம்மா அவர்கள் பள்ளிக் குழந்தைகளுக்காகப் பல திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இன்றைக்கு அரசுப் பள்ளிகளுக்குச் செல்கிற அந்தக் குழந்தைகள், பள்ளிகளுக்குச் செல்கின்றபோது, அம்மா அவர்கள் கொடுத்திருக்கிற அந்தச் செருப்பைப் போட்டுக்கொண்டு, ஆண்டுக்கு நான்கு செட் சீருடை அம்மா அவர்கள் கொடுக்கும் அந்தச் சீருடையை போட்டுக்கொண்டு, அம்மா அவர்கள் கொடுத்திருக்கிற இலவச நோட்டு, பாடப் புத்தகத்தை விலையில்லாப் பையிலே போட்டுக்கொண்டு, . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவருக்கு மைக் கொடுக்கவில்லை. நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். மைக் கொடுத்தால்தான் அவர் பேசுவது அவைக் குறிப்பில் பதிவாகும். இல்லையென்றால் அது பதிவாகாது. மாண்புமிகு உறுப்பினர், இன்னும் 9 உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. நீங்கள் உரையை இரண்டு நிமிடங்களில் முடித்து விடுங்கள்.

**திரு. ஆர்.என். கிட்டுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நடத்துகிற பள்ளிகளுக்குச் செல்கிற பிள்ளைகள் அம்மா கொடுத்திருக்கிற செருப்பைப் போட்டுக்கொண்டு, அம்மா கொடுத்திருக்கிற விலையில்லாச் சீருடையைப் போட்டுக் கொண்டு, அம்மா கொடுத்திருக்கிற விலையில்லாப் பையிலே, விலையில்லாப் பாடப் புத்தகத்தையும், விலையில்லா நோட்டு புத்தகத்தையும் போட்டுக்கொண்டு, இப்போது கொடுத்திருக்கிற விலையில்லா மிதிவண்டியிலே அம்மா கொடுத்திருக்கிற அந்த

[திரு. ஆர்.என். கிட்டுசாமி] [2012 மார்ச் 29

லேப்டாப்-ஐ தோளிலே மாட்டிக்கொண்டு, வீதிகளில் சைக்கிள்களில் போகின்றபொழுது, இன்றைக்குத் தனியார் பள்ளிகளில் படிக்கின்ற பிள்ளைகள் இந்தப் பிள்ளைகளைப் பார்த்து ஏங்குமா இல்லையா என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட புரட்சி இன்று அம்மா அவர்களின் ஆட்சியில் வந்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அது மட்டுமல்ல, 10 ஆம் வகுப்பு, 11 ஆம் வகுப்பு படிக்கின்ற மாணவ, மாணவிகளுக்குத் தலா ரூ.1,500/-,12 ஆம் வகுப்பு படிப்போருக்கு ரூ.2,000/-, 12 ஆம் வகுப்பு படித்துவிட்டு வெளியே செல்லுகின்றபோது வட்டியோடு சேர்த்து ரூ.5,000/- கையிலே கொடுக்கின்ற திட்டத்தைக் கொடுத்திருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகத்திலே மிகப் பெரிய கல்விப் புரட்சியை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, உலகத்தில் எந்த நாட்டிலும் இல்லாத அளவிற்கு, இந்திய துணைக் கண்டத்திலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு இன்றைக்கு விலையில்லா மடிக் கணினி அளிப்பதால், மிகப் பெரிய கல்விப் புரட்சி ஏற்பட்டிருக்கிறது என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகின்றேன். (மணியடிக்கப்பெற்றது)

விலையில்லா கிரைண்டர், விலையில்லா மிக்ஸி, விலையில்லா மின் விசிறி இவற்றையெல்லாம் பெற்றுக்கொண்டு, மக்கள் இன்றைக்கு மகிழ்ச்சியோடு இருந்துகொண்டு இருக்கிறார்கள்.

பிற்பகல் 12-45

இந்தத் திட்டங்களையெல்லாம் ஏற்றுக்கொள்ள முடியாதவர்கள், பொறுத்துக்கொள்ள முடியாதவர்கள் இங்கே குறை சொல்கிறார்கள். அந்தக் குறை எங்கிருக்கிறது என்றால், அவர்களுடைய கண்களிலே குறை இருக்கிறது, கருத்திலே குறை இருக்கின்றது என்பதைத் தங்களின் மேலான கவனத்திற்குச் சொல்லி, என்னுடைய தொகுதி சம்பந்தமான ஒரேயொரு பிரச்சினையைச் சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், கவனிக்க வேண்டும். ஏற்கெனவே தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. தொகுதி சம்பந்தமான பிரச்சினைகளை மாண்புமிகு அம்மா அவர்களிடம் எழுதிக் கொடுத்து விடுங்கள், அவற்றின்மீது அரசால் தனியாக நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோல, தொகுதி



2012 மார்ச் 29] [பேரவைத் தலைவர்]

பிரச்சினைகள் அடங்கிய மனுவின் நகல் ஒன்றினை என்னிடத்திலே கொடுங்கள், அது அவைக் குறிப்பிலே பதிவு செய்யப்படும். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. ஆர்.என். கிட்டுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதிப் பிரச்சினைகள். தமிழகத்திலே இவ்வளவு பெரிய கல்விப் புரட்சியைச் செய்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை பொற்பாதம் பணிந்து வணங்கி கேட்டுக்கொள்வதெல்லாம், மொடக்குறிச்சி தொகுதியில் அரசுக் கலைக் கல்லூரி ஒன்றினை நடப்பு நிதியாண்டிலே ஏற்படுத்தித் தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மொடக்குறிச்சி தொகுதியில் 30,000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள், சமுதாயத்தின் அடித்தளத்தில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற மக்கள் தங்கள் பிள்ளைகளை மேற்படிப்பு படிக்க வைக்க அரசுக் கலைக் கல்லூரி ஏற்படுத்தினால் காலம் உள்ள வரை அம்மா அவர்கள் பெயர் நிலைத்திருக்கும். மொடக்குறிச்சி தொகுதி மக்கள் நன்றி உடையவர்களாக இருப்பார்கள்.

மொடக்குறிச்சி தொகுதி, அரச்சலூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கொடுமுடியில் உள்ள அரசுப் போக்குவரத்துப் பணிமனைக்கு ஒதுக்கப்பட்ட நிலத்தில் விரைவில் புதிய கட்டடத்தைக் கட்டி பணிமனையைத் திறக்க வேண்டுமாய்ப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

கொடுமுடியில் ஆவுடையார்பாறையில், நொய்யலாற்றின் குறுக்கே தரைமட்டப் பாலம் ஒன்று கட்டிக்கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். பள்ளிக் குழந்தைகள் இரயில் பாதையில் செல்வதால் விபத்து ஏற்படுகிறது.

காளிங்கராயன் வாய்க்காலில் சாயக் கழிவு கலப்பதால் விவசாய நிலங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. குடிநீர் ஆதாரம் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. அம்மா அவர்கள் இதற்கு ஒரு நல்ல முடிவு செய்து காளிங்கராயன் வாய்க்கால் கரையில்

[திரு. ஆர்.என். கிட்டுசாமி] [2012 மார்ச் 29

கான்கிரீட் தளம் அமைத்து, வாய்க்காலைச் செப்பனிட்டு சாயக் கழிவு கலப்பதைத் தடுத்திட ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தானியங்களைப் பாதுகாத்திட தானியக் கிடங்கு வசதியையும் அமைத்துக் கொடுத்திட வேண்டுகிறேன்.

மொடக்குறிச்சி தொகுதியில் மஞ்சள் அரவை ஆலை ஒன்றினையும் அமைத்துக் கொடுத்திட வேண்டுகிறேன்.

காவிரியின் குறுக்கே கொடுமுடியிலிருந்து பிலிக்கல்பாளையம் செல்ல ஆற்றுப் பாலத்தைக் கட்டிக் கொடுக்க வேண்டுகிறேன்.

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், பனப்பாளையம் பாலத்தை உயர்மட்டப் பாலமாகக் கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஊஞ்சலூர்-கொளத்துப்பாளையம் நெடுஞ்சாலையில் குரங்கன்பள்ளம் இடையே ஒரு உயர்மட்டப் பாலம் கட்டித் தர வேண்டுகிறேன்.

மொடக்குறிச்சி தொகுதி, அவல்பூந்துறை அருகே சுமார் 200 ஏக்கர் பரப்பிலுள்ள குளத்தைத் தூர் வாரி படகுத் துறை மற்றும் பூங்கா அமைத்து சுற்றுலா மையமாக்கிட வேண்டுகிறேன்.

மொடக்குறிச்சி தொகுதி, அரச்சலூர் காவல் நிலையம் மிகவும் பழுதடைந்துள்ளதால், புதிய கட்டடத்தைக் கட்டிக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அரச்சலூரில் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான பயன்படுத்தப்படாத காலி நிலம் உள்ளதால் அதில் பேருந்து நிலையம் அமைத்துக் கொடுத்திட வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மொடக்குறிச்சி தொகுதியில் நார் கயிறு திரிக்கும் ஆலைகள் அதிகமாக உள்ளதால் கயிறு ஏற்றுமதி மையம் ஒன்றை அரச்சலூரில் ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கொடுமுடியில் உள்ள சார்பு நீதிமன்றத்துக்குப் புதிய கட்டடம் ஒன்றைக் கட்டிக் கொடுக்கக் கேட்டுக்கொள்கிறேன்.



2012 மார்ச் 29] [திரு. ஆர்.என். கிட்டுசாமி]

அருள்மிகு ஸ்ரீமகுடேஸ்வரசாமி, வீரநாராயண பெருமாள் வகையறா திருக்கோயில்களைப் புனரமைத்து திருக்குடமுழுக்கு விழா நடத்த வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

220 கே.வி. மின் நிலையத்தை அரச்சலூர் மற்றும் முள்ளாம்பரப்பு பகுதியில் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர் மாணவர் விடுதி அரச்சலூரிலும், மாணவியர் விடுதியை சிவகிரியிலும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுகிறேன். எனது கோரிக்கைகளை நடப்பு நிதியாண்டிலேயே நிறைவேற்றித் தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

எத்தனையோ கோடீஸ்வரர்கள் இருக்கிற நேரத்தில், சாதாரண ஏழையாகிய என்னை இந்த அவையிலே பேச வைத்து அழகு பார்த்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், இந்த அவைக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இம்மாமன்றத்திற்கு இரண்டாவது முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பேச வாய்ப்புத் தந்து உதவிய எங்கள் தலைவர் வெற்றியிலும், தோல்வியிலும் வைர நெஞ்சுறுதியுடன், மக்களோடு மக்களாக, மக்கள் பணியே மகேசன் பணி என்று ஏற்று, உழைத்து உலகத்தை எழுப்புகிற உதய சூரியனையே தட்டி எழுப்புகிற, ஏழரை கோடி தமிழ் மக்களின் இதயங்களில் வீற்றிருக்கும் எங்கள் மரியாதைக்குரிய தலைவர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன்.

நாடு போற்றும் அன்பின் திருவுருவம் கழகத்தினுடைய பொதுச் செயலாளர், இனமான பேராசிரியர் அவர்களை வணங்கி, அனுபவம் பெறட்டும் எனத் தந்தை ஊக்கம் தர, ஊர் ஊராய் வலம் வந்து, ஊரும், நகரும், ஒட்டுமொத்த தமிழகமும் உயர ஓய்வின்றி உழைத்திடும் எங்கள் அன்புத் தளபதி கழகப் பொருளாளர் அவர்களை வணங்கி, இம்மாமன்றத்தில் எனக்குப் பேச வாய்ப்பளித்த எங்கள் சட்டமன்றக் கட்சித் துணைத் தலைவர் அண்ணன் துரைமுருகன் அவர்களுக்கும், எங்கள் கட்சிக் கொறடா

[திரு. டி. செங்குட்டுவன்] [2012 மார்ச் 29

அண்ணன் மாண்புமிகு சக்கரபாணி அவர்களுக்கும், எங்களது மாவட்டத்தின் இயக்கப் பணிகளுக்கு எனக்கு ஆலோசனை வழங்கும் முன்னாள் அமைச்சர் மரியாதைக்குரிய அண்ணன் எ.வ. வேலு அவர்களுக்கும், இறுதியாக என்னுடைய உரையை நீண்ட நேரம் பேசுவதற்கு வாய்ப்பளித்திருக்கிற உங்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை நான் முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

புதிதாக உருவாக்கப்பட்ட வேப்பனஹள்ளி தொகுதியின் முதல் சட்டமன்ற உறுப்பினர் என்கிற வரலாற்றை எனக்கு உருவாக்கித் தந்த வேப்பனஹள்ளி வாக்காளப் பெருமக்களுக்கும், எனக்காக இரவு, பகல் பாராமல் உழைத்திட்ட கழக முன்னணியினர், கூட்டணி கட்சி நிர்வாகிகள் அனைவருக்கும் எனது பணிவான நன்றியினை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனஹள்ளி தொகுதி என்பது புதிதாக உருவாக்கப்பட்ட தொகுதி. முழுக்க, முழுக்க கிராமப் பகுதிகள் அடங்கிய தொகுதி. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஓடும் தென்பெண்ணை ஆறு, இத்தொகுதி வழியாகத்தான் ஓடுகிறது. இருப்பினும் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள், நீரில்லாமல் வானம் பார்த்த பூமியாகவே உள்ளன. ஏரிகள் எல்லாம் காய்ந்து போயுள்ளன. ஓசூருக்கு அருகில் உள்ள கெலவரப்பள்ளி அணையிலிருந்து வெட்டப்பட்டு வரதாபுரம் ஏரி வரை வரும் கால்வாயை துரை ஏரி, வேம்பள்ளி அணை வரை நீட்டித்துத் தந்து உதவிடவும், கெலவரப்பள்ளி அணைக்குக்கீழ் உள்ள முத்தாலி பகுதியிலிருந்து, புதிய கால்வாய் வெட்டி, அத்திமுகம், பன்னபள்ளி, நர்சாபுரம், அங்கொண்டப்பள்ளி, பட்டா குருபரபள்ளி, செட்டிப்பள்ளி உள்ளிட்ட பகுதிகளில் உள்ள ஏரிகளுக்கும், சாமனப்பள்ளி வரை உள்ள கால்வாயை செம்பரசனப்பள்ளி, உல்லட்டி, தியாகராசப்பள்ளி, ஏனு சோனை, ஆலங்கிரி, ஒச அள்ளி உள்ளிட்ட சுற்று வட்டாரப் பகுதிகளில் உள்ள ஏரிகளுக்கும், அதேபோல, பேரண்டபப்பள்ளி அருகில் தென்பெண்ணை ஆற்றிலிருந்து சானமாவு, உத்தனப்பள்ளி, டி. குருபரபள்ளி, பென்னிக்கல், அனேசீபம் உள்ளிட்ட கிராமங்களில் உள்ள காய்ந்து போன அந்தப் பகுதிகளுக்கெல்லாம் நீர் வழங்கிட இந்த அரசை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.



2012 மார்ச் 29] [திரு. டி. செங்குட்டுவன்]

தொகுதியின் மையப் பகுதியான சூளகிரிக்கு ஒரு புதிய பேருந்து நிலையம் ஏற்படுத்தித் தர நான் இந்த அரசைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். சூளகிரியில் அரசு சார்பில் காய்கறி மார்க்கெட் ஒன்றை அமைத்துத் தரவும் கோருகிறேன்.

வேப்பனஹள்ளி அருகில் சிங்கிரிப்பள்ளி அணைக்காக மக்கள் நீண்ட காலமாக காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த அணையையும் கட்டித் தர இந்த அரசை நான் வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டி, வலது, இடது புற கால்வாய் வெட்டி மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய சொந்தத் தொகுதியில், அந்தத் தொகுதியில் எனது சொந்த ஒன்றியத்தில் உள்ள பாலிகானூர், பெல்லம்பள்ளி, பூவத்தி, ஆலப்பட்டி, மோரமடுகு, சோக்காடு, துடுகனஹள்ளி, சாப்பரம், மோரம்பள்ளி, குட்டப்பட்டி, பன்னிஹள்ளி, பாலகுறி, இட்டிக்கல், அகரம் போன்ற பகுதிகளில் உள்ள நீர் இன்றி காய்ந்து போய் இருக்கின்ற ஏரிகளுக்கெல்லாம் நீர் தருமாறு இந்த அரசை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, நான் நிதிநிலை அறிக்கைக்கு வருகிறேன்.

பிற்பகல் 12-50

நிதிநிலை அறிக்கையை வாசிப்பதற்கு முன்பாக ‘எடுத்த காரியம் யாவினும் வெற்றி’ என்கின்ற பாரதியார் பாடலின் வரியுடன் நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையை படிக்கத் தொடங்கினார்கள். மக்கள் அரசுக்குத் தருகின்ற வரிப் பணத்தில் மக்களுக்கான திட்டங்களாகவே வகுக்கப்பட்டு, ஒவ்வொரு நிதியாண்டிற்கும் எந்தத் திட்டத்திற்கு எவ்வளவு நிதி ஒதுக்கீடு, எந்தெந்த வகையிலே அவை செலவு செய்யப்படுகின்றன என்ற விளக்கத்தை அளிப்பதே நிதிநிலை அறிக்கை என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்றுதான்.

இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில், ஒட்டுமொத்தமாக வருவாய் வரவு ரூ.1,00,589.92 கோடி என்று சொல்லப்பட்டிருக்கிறது. வருவாய் செலவுகள் 98 ஆயிரத்து 214 கோடி என்று சொல்லப்பட்டிருக்கின்றது. வருவாய் உபரி 2 ஆயிரத்து 376 கோடி என்று இந்த நிதிநிலை அறிக்கையிலே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. 2 ஆயிரத்து 376 கோடி உபரி வருவாய்

வருகின்றபோது, ஏழை மக்கள் தலையிலே எதற்காக வரி போட்டு வாட்ட வேண்டும் என்பதற்கு நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்தான் பதில் சொல்ல வேண்டும். 2011-2012 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கைக்கு முன்பே 4,000 கோடி புதிய வரிகள் போட்டீர்கள். 2012-2013 இந்த நிதிநிலை அறிக்கையிலே 1,500 கோடிக்கு வரி போட்டிருக்கிறீர்கள். அதுமட்டுமல்லாமல், வரலாறு காணாத வகையிலே பேருந்துக் கட்டணத்தை உயர்த்தியிருக்கிறீர்கள். பால் விலையை உயர்த்தியிருக்கிறீர்கள். உத்தேச மின் கட்டண உயர்வு என்று ஆட்சிக்கு வந்த பிறகு, ஓராண்டிலே நேரடி வரியாக சுமார் 5,500 கோடியும், மறைமுக வரிகளும் விதிக்கப்பட்டு, மக்கள்மீது ஓர் ஆண்டில் மட்டும் சுமார் 13 ஆயிரம் கோடி ரூபாய் வரியை நீங்கள் சுமத்தியதைத்தான் 'எடுத்த காரியம் யாவினும் வெற்றி' என்று சொல்கின்றாரா என்பதற்கு பதில் வேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களிடம் நான் கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் கடந்த ஐந்து ஆண்டுக் காலத்திலே புதிய வரிகள் போடாமலேயே ஆட்சி நடத்தவில்லையா? 2012-2013 ஆம் ஆண்டு பட்ஜெட் குறித்து பொருளாதார அறிஞர்கள், நிதிநிலை ஆலோசகர்கள், நிதித் துறை அதிகாரிகள் ஆகியோர் ஒருசில கருத்துகளை வழங்கியிருக்கிறார்கள். அந்தக் கருத்துகளை அரசினுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். தனியார் நிறுவனங்களின் நிதி ஆலோசகரான திரு. சீனிவாசன், இந்த பட்ஜெட் தாக்கல் செய்வதற்கு முன்பே விற்பனை வரி வீதங்களைக் கூட்டி அரசின் நிதி வருவாயை அதிகப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அ.தி.மு.க. அரசு தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறது. கடந்த வருடமும் இதை நாம் பார்த்தோம். இந்த வருடமும் நாம் பார்க்கிறோம். பொதுவான வரி வீதங்கள் மக்கள் மன்றமான சட்டப் பேரவையில் தீர்மானிக்கப்பட வேண்டிய முக்கிய விஷயம். இதற்கு மாறாக பேரவையில் தாக்கல் செய்வதற்கு முன்பே, வரி வீதங்களை உயர்த்துவது ஜனநாயக நடைமுறைகளுக்கு எதிரானது. இதனை தமிழகத்தின் அரசியல் கட்சிகளும், பொருளாதார நிபுணர்களும் கண்டிக்கவே செய்திருக்கிறார்கள். ஆனாலும், தனது போக்கை இந்த அரசு மாற்றிக்கொள்ளவில்லை. இப்படி மக்கள் மன்றத்திற்கு வராமலேயே வரிகளை உயர்த்துவது, உயர்த்துவது மட்டுமல்லாமல் அதனைச் செயல்படுத்தியதால் கடந்த வருடம் 2011-2012 ஆம் ஆண்டில் மட்டும் சுமார் 13 ஆயிரம் கோடி ரூபாயை அதிக வரியாக இந்த அரசு ஈட்டியுள்ளது. பல்வேறு பொருளாதார சிக்கல்களிலே சிக்கித் தவிக்கும் ஏழை மக்களிடமிருந்து அ.தி.மு.க. அரசால் உறிஞ்சப்பட்ட இரத்தத்தின் வடிவமாகவே இது இருக்கிறது. இந்த 13 ஆயிரம் கோடி ரூபாய் ஒருபுறமிருக்க, நடப்பு பட்ஜெட்டிலே 1,500 கோடி ரூபாய்க்கு வரிகளை விதித்திருக்கிறீர்கள். நம்முடைய இன்றைய கடினமான சூழ்நிலையில் இந்த வரி உயர்வு மக்களின்மீது திணிக்கப்பட்ட பெரும் சுமை என்பதை மக்கள் அனைவரும் அறிவார்கள்.





முந்தைய அரசு கடன் வாங்குவதையே பெருங்குற்றமெனக் குற்றம்சாட்டிய இன்றைய அ.தி.மு.க. அரசு தனது கடன் சுமையைக் குறைப்பதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்தமாதிரி பட்ஜெட்டில் காணவில்லை. மாறாக நடப்பு ஆண்டில் மட்டும் 18,387.04 கோடி ரூபாய் கடன் வாங்க உத்தேசித்திருக்கிறார்கள். இதன்மூலம் இந்த அரசின் மொத்த கடன் சுமை 1 இலட்சத்து 35 ஆயிரத்து 60 ஆயிரம் கோடியாக இருக்கும். மொத்தத்திலே மக்களின் நலன்களையும், வாழ்வாதாரங்களையும் பாதுகாக்காமல் மக்கள் நலன்களைப் புறந்தள்ளுவதாக இருக்கிறது என்று இந்த பட்ஜெட் உரையைப்பற்றி நம்முடைய பொருளாதார நிபுணர் கூறியிருக்கிறார்.

பங்குச் சந்தைகளின் நிதி ஆலோசகரும் பொருளாதார பேராசிரியருமான திரு. வெங்கடசுப்ரமணியம் இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி சொல்லியிருக்கிறார். தமிழக அரசின் தொலைநோக்குத் திட்டம் 2023-ஐ சமீபத்தில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட்டார்கள். இந்த அறிவிப்பில் அடுத்த 11 ஆண்டுகளில் 11 இலட்சம் கோடி ரூபாயை கட்டுமானத் தொழில்களிலே தமிழ்நாடு அரசு முதலீடு செய்வதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றும், இது நடைபெறும்போது வருடம் முழுவதும் 11 சதவிகிதம் பொருளாதார வளர்ச்சியைத் தமிழகம் எட்டும் என்றும், இந்த 11 ஆண்டுகளில் தனி நபர் வருமானம் 6 மடங்காக உயரும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த பட்ஜெட்டிலே கட்டமைப்பு மேம்பாட்டிற்காக ஆயிரம் கோடி ரூபாய் மட்டுமே நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 11 இலட்சம் கோடி ரூபாய் முதலீடு செய்து, 11 ஆண்டுகளில் 11 சதவீத வளர்ச்சியை எட்ட முடியும் என்று சொல்கின்ற அரசு, நடப்பு நிதியாண்டிற்கு ஒரு இலட்சம் கோடி

ஒதுக்கீடு செய்திருக்க வேண்டாமா? வருடம் ஒரு இலட்சம் கோடி ஒதுக்கினால்தானே 11 ஆண்டுகளில் அந்த இலக்கை எட்ட முடியும். ஒரு இலட்சம் கோடி எங்கே? ஆயிரம் கோடி எங்கே? இந்த முதலீட்டில் மாநில அரசின் பங்களிப்பு 25 சதவீதம் என்று வைத்துக்கொண்டாலும்கூட 25,000 கோடியாவது இந்த ஆண்டிலே கட்டமைப்பு மேம்பாட்டிற்காக ஒதுக்கியிருக்க வேண்டும். (குறுக்கீடு)

பிற்பகல் 12-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய உள்கட்டமைப்பு வசதிக்காக ஒவ்வொரு துறைக்கும் பல ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஒரு ஆயிரம் கோடி ரூபாய் என்பது எந்தக் கணக்கிலே சொல்கின்றார் என்று தெரியவில்லை. எனவே, தொழில் துறையிலே இருக்கின்றவர்கள் அவர்கள் சில கருத்துகளைச் சொல்வார்கள். நிதிநிலை அறிக்கைமீது கருத்துகளைச் சொல்வார்கள். அவர்கள் சொல்கின்றபோது, அவர்கள் செய்கின்ற தொழிலை மனதிலே வைத்துக்கொண்டு இந்தக் கருத்தை விமர்சிப்பார்கள். ஒரு பாமர மகன் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அளித்த இந்த நிதிநிலை அறிக்கையை மனதார ஏற்றுக்கொண்டு மகிழ்ச்சியாக இருந்துகொண்டிருக்கின்றான். தயவுசெய்து ஆயிரம் கோடி ரூபாய் என்று மட்டுமல்லாமல், ஒவ்வொரு துறையிலேயும் இப்போது கல்வித் துறையிலே 14,000 கோடி ரூபாய் கொடுத்து மாணவர்களுடைய கல்வித் தரத்தை உயர்த்துவதற்காக பல ஆயிரம் கோடி ரூபாய் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதுவும் உள்கட்டமைப்பு வசதிதான். எதிர்காலத்திலே நல்ல திறமையுள்ள ஒரு இளைஞன் உருவாவதற்குரிய அடிப்படைத் தேவைகளை உருவாக்குவதும் உள்கட்டமைப்பு வசதிதான் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.





**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் 2023 தொலைநோக்குப் பார்வைத் திட்டத்தைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த 2023 தொலைநோக்குத் திட்டத்தைப் பற்றி, பொருளாதார நிபுணர்கள் சொன்ன கருத்தை நான் சொல்லிக்கொண்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உறுப்பினர் தயவுசெய்து உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தொலைநோக்குப் பார்வையில் எதிர்காலத்தில் ஒரு வயது வந்த இளைஞன் தன்னைக் காப்பாற்றிக்கொள்வதற்கும் 2023-ல் தனி மனித வருமானம்10,000 U.S. Dollars வரவேண்டுமென்பதற்காகவும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திட்டம் தீட்டியிருக்கிறார்கள் அதன்படித்தான், அவன் வேலைக்குச் சென்றால் நிதியைப் பெறுவதற்குரிய வாய்ப்பு வந்துவிடுகிறது. அதன் அடிப்படையிலேதான் இந்த உள்கட்டமைப்பு வசதிகளை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கிக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு கட்டமைப்பு மேம்பாட்டிற்கு அதிக நிதி ஒதுக்கியிருக்க வேண்டும். அதைச் செய்ய முடியவில்லை. ஆக, அரசின் பட்ஜெட்டிற்கும் செயலுக்கும் உள்ள இடைவெளி ஆயிரம் கோடிக்கும் இலட்சம் கோடிக்கும் உள்ள இடைவெளியாக இருக்கிறது. அதனால், இந்த பட்ஜெட்டை ஆராயும்போது 4 முதல் 5 சதவீதம் ஆக இருக்கும் தமிழகத்தினுடைய பொருளாதார வளர்ச்சி 11 சதவீதமாக மாறும் என்பது எட்டாக்கனிக்குக் கொட்டாவி விட்டது போல என்று சுட்டிக்காட்டுகின்றார்கள்.

தமிழக வணிக தொழில் கூட்டமைப்பைச் சேர்ந்த திரு. சுப்ரமணிய பிரசாத் இந்த பட்ஜெட்டை பற்றி கருத்தைச் சொல்கின்றபோது "மின்தடை காரணமாக தமிழகத்திலே தொழில் துறை முடங்கிக் கிடக்கிறது. இதனால் இலட்சக்கணக்கான

[திரு. டி. செங்குட்டுவன்] [2012 மார்ச் 29

தொழிலாளர்கள் வேலைவாய்ப்பை இழந்து தவிக்கின்றார்கள். உற்பத்தியும் வெகுவாகக் குறைந்துவிட்டது. இந்த நிலையிலே தமிழகத்தில் உள்நாட்டு உற்பத்தி மட்டும் 63,000 கோடி ரூபாய் உயர்ந்திருக்கிறது என்று பட்ஜெட்டிலே கூறியிருக்கின்றார் நம்முடைய நிதியமைச்சர். இது எப்படி சாத்தியம் ஆகும்?" என்கிறார்.

மேலும், மதுபானங்களின் வரியை 14.5 சதவீதம் உயர்த்தியிருக்கிறீர்கள். மதுபானங்களை அதிகமாகப் பயன்படுத்துவது உடல் உழைப்புத் தொழிலாளர்கள்தான். ரூபாய் 200 சம்பாதிக்கும் ஒரு கூலித் தொழிலாளி . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், மாண்புமிகு அமைச்சர் பேசட்டும்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலெழுந்தவாரியாக மாண்புமிகு உறுப்பினர் சொல்லக்கூடாது. அயல்நாட்டு மதுபானங்களுக்கு 14.5 சதவீதம் விற்பனை வரி என்பது இங்கே ஏற்கெனவே டாஸ்மாக் கடையிலே இருக்கின்ற சரக்குகளுக்கு அல்ல. எப்.எல்.2, எப்.எல்.3 என்று லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கின்ற கிளப்புகளுக்கு வரும் பணக்காரர்கள், வசதியானவர்கள் குடிக்கின்ற Star Hotel-கள் இப்படிப்பட்ட மேட்டுக்குடி மக்கள் அருந்துகின்ற இடங்களில் மட்டும்தான், அதுவும் வெளிநாட்டு மதுபானங்களுக்கு, உயர்தட்டு மக்கள், உயர் வருவாய் மக்கள் பயன்படுத்துகின்ற மதுபானங்களுக்கு மட்டும்தான் 14.5 சதவீதம் வரி விதிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த மதுபானத்தின்மீது 4,000 கோடி ரூபாய்க்கு மேல் வரியைப் போட்டுவிட்டு, மீண்டும் இரண்டாவது முறையாக நீங்கள் 14.5 சதவீதம் வரியைப் போட்டிருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.



2012 மார்ச் 29] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு உறுப்பினர் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் பேசி முடிக்கட்டும். உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் பேசி முடித்தவுடன் பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா இடத்திலும் போடவில்லை. Star Hotel-லில்தான் போட்டிருக்கிறோம். தவறான கருத்தைச் சொல்லிக்கொண்டிருக்கக் கூடாது. மீண்டும் மீண்டும் தவறான தகவல்களைச் சொல்கின்றார். வெளிநாட்டு பானங்களுக்கு மட்டுமே, கிளப்புகள் மற்றும் ஹோட்டல்கள் போன்ற அந்த நிறுவனங்களில் பயன்படுத்துகின்றவர்களுக்கு மட்டும்தான் அந்த வரி விதிக்கப்பட்டிருக்கிறதே தவிர, உள்நாட்டில் தயார் செய்யப்பட்டிருக்கின்ற ஐ.எம்.எப்.எல். மதுபானங்களுக்கு அந்த வரி விதிக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1-00

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குடி மகன்களுக்காக மிகவும் அக்கறையாக இங்கு வாதாடுகிறார். அவருக்குத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இந்த மதுபானங்களுக்கான 14.5 சதவீதம் விற்பனை வரி என்பது Star Hotel-களிலே சாதாரண உணவு வகைகளுக்கே 14.5 சதவீதம் வரி விதிக்கப்படுகிறது. இந்த வரி தண்ணீர் பாட்டில்கள் மற்றும் உணவு வகைகளுக்கே விதிக்கப்படுகிறது. இந்த வரிஆனால், அப்படிப்பட்ட அந்த Star Hotel-களிலே அருந்துகிற மதுவகைகளுக்கு 14.5 சதவீதம் வரி கிடையாது. இந்த வேறுபாட்டைப் போக்க வேண்டும் என்பதற்காகத்தான் இப்போது வரி விதிக்கப்படுகிறது. வருவாயைக் கூட்டுவதும் ஒரு நோக்கம்.

இரண்டாவது, Star Hotel-களிலே வெளிநாட்டிலிருந்து பெறப்படுகின்ற மதுவகைகளுக்கெல்லாம்வரி விதிக்கப்படுவதில்லை. இறக்குமதி செய்யப்பட்டு தனியாரால் வைக்கப்பட்டிருக்கின்ற குடோனிலிருந்து பெறப்பட்டு அரசாங்கத்திற்கு 58 சதவீதம் வரி கட்டப்பட்டு, நேரிடையாக கொள்முதல் செய்யப்பட்டு அந்த

[திரு. சி.வி. சண்முகம்] [2012 மார்ச் 29

Hotel-களிலே விற்கப்படுகின்றன. அதற்கு மாநில அரசாங்கத்தில் வரி விதிக்கப்படுவதில்லை. அதைக் கருத்தில்கொண்டுதான் இதற்கு 14.5 சதவீதம் வரி விதிக்கப்பட்டிருக்கிறதே தவிர, டாஸ்மாக்கில் விற்கப்படுகின்ற மதுவகைகளுக்கு வரி ஏற்றப்படவில்லை என்பதைத் தெளிவாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்று, இதனால் ஆயிரம் கோடி, இரண்டாயிரம் கோடி வரி அரசாங்கத்திற்கு வருகிறது என்ற கருத்து சரியல்ல. இதனால் அரசாங்கத்திற்கு வரும் வரி 150 கோடி ரூபாய் மட்டும்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து மின் உற்பத்திக்கு வருகிறேன். இந்த அரசு ஆட்சிக்கு வந்து. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காலையிலேதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாக தொலைநோக்குப் பார்வையோடு நல்ல அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார்கள். திரும்பவும் அந்த சப்ஜெட்க்குப் போய் நேரத்தை வீணாக்க வேண்டாம். வேறு சப்ஜெட்க்குப் போங்கள். இப்போது நீங்கள் அதை ஆரம்பித்தீர்கள் என்றால் பதில் சொல்ல முடியாமல் போகின்ற நிலைமை உங்களுக்கு வரும்.

**திரு. டி. செங்குட்டுவன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் இப்படிச் சொல்லக்கூடாது. (குறுக்கீடு) நான் என்ன சொல்கிறேன் என்று சொன்னால், என்னுடைய கருத்தைப் பதிய வைப்பதற்கு நீங்கள் அனுமதிக்க வேண்டும். நான் ஏதாவது தவறான செய்திகள் சொல்லியிருந்தால், நீங்கள் எனக்குச் சொல்லலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அவையினுடைய பொன்னான நேரத்தைக் கருத்தில்கொண்டுதான் அந்தக் கருத்தைச் சொன்னேன்.

**திரு. டி. செங்குட்டுவன்:** பொன்னான நேரம் என்பதை அந்த side-க்குச் சொல்லுங்கள்.



2012 மார்ச் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காலையில் நீங்கள் வரவில்லையா? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதுகுறித்து விதி 110-ன்கீழ் அறிக்கை அளித்தார்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** நான்கே மாதத்தில் தமிழகத்தில் மின்வெட்டே இல்லாமல் செய்வதுதான் முதல் பணி என்று சொன்னீர்கள். நான் இல்லையென்று சொல்லவில்லை. (குறுக்கீடு) இருங்கள், கொஞ்ச நேரம் இருங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006 ஆம் ஆண்டு கழக ஆட்சி இருந்த வரை மின் உற்பத்தியில் உபரி மாநிலமாக இருந்த தமிழகத்தை (மேசையைத் தட்டும் ஒலி) அதன் பின்னர், ஆட்சிக்கு வந்த தி.மு.க. இருளில் தள்ளிவிட்டு, நாங்கள் புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டு வைத்திருந்த மின் உற்பத்தித் திட்டங்களைக்கூட கிடப்பில் போட்டு, செயல்படுத்தாமல் தமிழ்நாட்டை இருளில் மூழ்கடித்துவிட்டுச் சென்றவர்களுக்கு மின் உற்பத்தியைப் பற்றிப் பேசுவதற்கு எந்த அருகதையும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், அதைத்தான் நான் அப்போதே சொன்னேன். (குறுக்கீடு) திரு. தங்கம் தென்னரசு, (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதி காக்கவும். (குறுக்கீடுகள்)

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படியெல்லாம் பேசக்கூடாது. இது சட்டமன்ற மரபு கிடையாது. இல்லையில்லை, ஒரே ஒரு கருத்துதான் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் நீங்கள் சப்ஜெட்டுக்குப் போங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. சக்கரபாணி, நீங்கள் என்னைப் பார்த்துப் பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் சப்ஜெட்க்குப் போங்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** நான் சப்ஜெட்க்குத்தான் வருகிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் சொல்லியிருக்கின்ற கருத்து என்னவென்றால்

[திரு. டி. செங்குட்டுவன்] [2012 மார்ச் 29

திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஐந்தாண்டுக்கால ஆட்சியிலே எந்தப் புதிய மின் திட்டமும் ஆரம்பிக்கவில்லை என்ற கருத்தை நீங்கள் சொல்லுகிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடம் தங்கள் வாயிலாக சில கேள்விகளைக் கேட்க விரும்புகிறேன். 2001-லிருந்து 2006 ஆம் ஆண்டு வரையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது மின் உற்பத்தி நிறுவுதிறனை 2,518 மெகா வாட் அளவிற்கு அதிகப்படுத்தினோமா, இல்லையா? அது உண்மையா, இல்லையா? (மேசையைத் தட்டும் ஒலி) 2006 முதல் 2011 வரை ஆட்சியிலே இருந்த மைனாரிட்டி தி.மு.க அரசு ஆட்சிக் காலத்தில் அவர்கள் மின் நிறுவுதிறனை அதிகப்படுத்தியது வெறும் 206 மெகா வாட் அளவுக்கு மட்டும்தானா, இல்லையா? இது உண்மையா, இல்லையா? 2006 ஆம் ஆண்டு வரையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்த வரை தமிழகம் மின் உற்பத்தியில் மிகை மாநிலமாக இருந்ததா இல்லையா? (மேசையைத் தட்டும் ஒலி) 2006 முதல் 2011 வரையிலான மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மின் பற்றாக்குறை மாநிலமாக ஆனதா, இல்லையா? இதெல்லாம் உண்மையா, இல்லையா? (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில், அந்த ஐந்தாண்டுக் கால ஆட்சியிலே சுமார் ரூ.55,000 கோடிக்கு தொழில்களில் முதலீடு செய்யப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் நீங்கள் சம்பந்தமில்லாமல் சொல்கிறீர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எழுப்பிய வினா, 206 மெகா வாட் மின் நிறுவுதிறன்தான். உங்களுடைய ஐந்தாண்டுக் கால ஆட்சியில் அதிகப்படுத்தப்பட்டது என்பதுதான். அதற்கு என்ன பதில்? அதைச் சொல்லுங்கள்.



2012 மார்ச் 29]

**திரு. டி. செங்குட்டுவன்:** நான் என்ன சொல்ல வருகிறேன் என்பதைக் கூற தயவுசெய்து என்னை 5 நிமிடங்கள் பேச அனுமதியுங்கள். உங்களுக்கு மெஜாரிட்டி இருப்பதன் காரணமாக எங்களைத் தடுத்து விடாதீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யாரும் உங்களைத் தடுக்கவில்லையே!

**திரு. டி. செங்குட்டுவன்:** எங்களுடைய கருத்துகளைப் பதிய வையுங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006-2011-லே எங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் கலைஞர் ஆட்சியில் இருக்கிறபோது எண்ணூர் அனல் மின் நிலைய இணைப்பு மூலமாக உற்பத்தி அளவு 600 மெகா வாட்டுக்கு திட்ட மதிப்பீடு செய்து ரூ.3,136/- கோடியில் 8-12-2006 அன்று எங்களுடைய ஆட்சியிலே அந்தப் பணி ஆரம்பிக்கப்பட்டதா, இல்லையா? Number one. இரண்டாவது, மேட்டூர் அனல் மின் நிலையம் திட்டம், மொத்த உற்பத்தி அளவு 6,000 மெகா வாட்; திட்ட மதிப்பீடு ரூ.3,100 கோடி; திட்டம் தொடங்கப்பட்ட நாள் 2-5-2007. இது உண்டா, இல்லையா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்குட்டுவன், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிடட்டும். (குறுக்கீடு) ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு அமைச்சர் பதில் சொன்ன பிறகு, உங்களைப் பேச அனுமதிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்திலே போடப்பட்டது. அதனுடைய தொடர்ச்சியாக, இந்தத் திட்டத்தை ஆரம்பித்திருந்தாலும்கூட, அந்தத் திட்டங்களெல்லாம் 2010 ஆம் ஆண்டுக்குள்ளேயே உற்பத்தியைத் தொடங்கியிருக்க வேண்டும். ஆனால், உங்களுடைய திறமைக் குறைவின் காரணமாகவும், அதிலே போதிய கவனம் செலுத்தாததன் காரணமாகவும், இன்னும், இந்தச் சபையிலே சொல்ல முடியாத பல்வேறு காரணங்களாலும் அந்த மின் உற்பத்தியைக் குறிப்பிட்ட காலத்திற்குள் உங்களால் தொடங்க முடியவில்லை. 2010 ஆம் ஆண்டிலே மின் உற்பத்தியைத் தொடங்கியிருந்தால், இன்றைக்கு

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2012 மார்ச் 29

இந்த நிலை வந்திருக்காது. உங்களுடைய நிருவாகச் சீர்கேடுதான் காரணம். இந்த மின்சாரப் பற்றாக்குறைக்கு முழுமுதற்காரணம் உங்களுடைய ஆட்சிதான். ஆகவே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கேட்ட கேள்விக்கு மட்டும் நேரடியாக உங்களின் பதிலை எதிர்ப்பார்க்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** வெறும் புரிந்துணர்வு ஒப்பந்தம் மட்டும் போட்டுவிட்டால் போதாது. நீங்கள் போட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மின் நிருவாகம், மின் உற்பத்தி எந்த இலட்சணத்தில் இருந்தது என்றால், எங்கள் ஆட்சிக் காலத்தில் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தோடு கூட்டு முயற்சியில் 1,000 மெகா வாட் திறன்கொண்ட அனல் மின் நிலையத்தை நிறுவ 19-6-2003 அன்று எனது தலைமையிலான ஆட்சியில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்தத் திட்டத்தின்மூலம் கிடைக்க வேண்டிய மின்சாரத்தின் அளவு 750 மெகா வாட். இந்த 750 மெகா வாட் மின்சாரமும் தமிழ்நாட்டிற்கே கிடைக்க வேண்டுமென்றுதான் புரிந்துணர்வு ஒப்பந்தம். ஆனால், தி.மு.க. ஆட்சியில் இந்த மின் உற்பத்தியைப் பற்றி சரியாகப் புரிந்துகொள்ளாமல், இந்தத் திட்டத்தைப்பற்றி சரியாக புரிந்துகொள்ளாமல், மத்திய அரசிடம் சரியாக எடுத்துக் கூறாத காரணத்தால், அவர்களே, இதுவொரு மத்திய அரசுத் திட்டம் என்று கூறியதால் மத்திய அரசு இதில் தலையிட்டு Gadgil formula என்ற அடிப்படையில் நமக்குக் கிடைக்க வேண்டிய மின்சாரத்தை 750 மெகா வாட்டிலிருந்து 387 மெகா வாட் எனக் குறைத்துவிட்டார்கள். ஆகவே, நாங்கள் சிரமப்பட்டு, எங்கள் ஆட்சிக் காலத்தில், 1,000 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய ஒரு புதிய திட்டத்திற்குப் புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டு, இதன்மூலமாக 750 மெகா வாட் மின்சாரம் நமக்குக் கிடைப்பதற்கு வழி செய்து வைத்திருந்தும்கூட அதைப் புரிந்துகொள்ள வக்கில்லாமல், புரிந்துகொள்ள முடியாமல் (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அரசிடம் தவறாக எடுத்துக்கூறி கிடைக்க வேண்டிய மின்சாரத்தையும் குறைத்து வெறும் 387 மெகா வாட் அளவுக்கு குறைத்து விட்டார்கள் என்றால் இவர்களுடைய நிருவாகத்தைப் பற்றி என்னவென்று சொல்வது?



2012 மார்ச் 29] [செல்வி ஜெ ஜெயலலிதா]

பிற்பகல் 1-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், உரையை சீக்கிரம் முடியுங்கள். வேறு சப்ஜெக்டுக்குப் போங்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள் இப்போது உடன்குடியில் ஒரு புதிய மின் திட்டத்தை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றின்மூலமாக அறிவித்திருக்கிறார்கள். நான் உங்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்வது எல்லாம், உடன்குடியிலே போடப்பட்ட மின்சாரத் திட்டம் என்பது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே போடப்பட்டது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** உடன்குடி மின் திட்டத்திற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலே புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டது. அம்மா அவர்கள் தொடங்கிய திட்டம் என்பதால்தான் நீங்கள் 5 ஆண்டுக்காலம் அதைத் தொடங்கவே இல்லை. மைனாரிட்டியாக இருந்தாலும் ஓர் அரசுக்கு 5 ஆண்டுக் காலம் என்பது சொன்னதைச் செய்வதற்கு போதிய அவகாசம் ஆகும். ஐந்தாண்டுக் காலத்திற்குள்ளே செய்திருக்க முடியும். ஆனால், அம்மா அவர்கள் ஆட்சியில் தொடங்கிய திட்டம் என்பதற்காக கிடப்பிலே போட்டீர்கள். இப்போது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மீண்டும் அந்தத் திட்டத்தைத் தூசு தட்டி எடுத்து இப்பொழுது புதிய உற்பத்திக்கான அறிவிப்புகளைச் செய்திருக்கிறார்கள். நீங்கள்தான் இதற்குக் காரணம் என்றெல்லாம் பெருமை கொண்டாடாதீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

[2012 மார்ச் 29

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. ஆட்சியில் இருந்தபோது ஒரு திட்டம், மாநில அரசின் மின் உற்பத்தித் திட்டமா அல்லது மத்திய அரசின் மின் உற்பத்தித் திட்டமா என்பதைக்கூட அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. இப்போது எதிர்க்கட்சியாக இருக்கின்றபோது பேசுகின்ற உறுப்பினர் அவர்களுக்கு மின் உற்பத்தியைப் பற்றி குறை சொல்ல வேண்டும் என்ற ஆசை இருக்கிறதே தவிர, ஒரு அனல் மின் திட்டத்திற்குப் புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டது அ.இ.அ.தி.மு.க. ஆட்சியிலா அல்லது தி.மு.க. ஆட்சியிலா என்பதுகூடத் தெரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** உடன்குடி புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டது மாநில அரசு மட்டுமல்ல. தமிழ்நாடு மின்சார வாரியமும், BHEL நிறுவனமும் இணைந்துதான் புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டன. BHEL நிறுவனம் 32½ கோடி ரூபாய், தமிழ்நாடு மின்சார வாரியம் 32½ கோடி ரூபாய்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், உட்காருங்கள். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** தமிழ்நாடு மின்சார வாரியமும், BHEL நிறுவனமும் இணைந்து joint venture-ல் போட்ட உடன்குடி மின் உற்பத்தித் திட்டத்திற்காக நீங்கள் இருந்தவரை ஒரு துரும்பையாவது கிள்ளி போட்டு இருக்கிறீர்களா? இந்தத் திட்டத்திற்காக joint venture-ல் agreement போட்டு, அதற்கு நான்கு ஆண்டுக் காலமாகியும் அவர்களுடைய தி.மு.க. ஆட்சியில் அந்த ஒப்பந்தத்தைப் போட்டுவிட்டு அப்படியே கிடப்பிலே போட்டுவிட்டார்கள். அதற்குப் பிறகு ஒரு சதவீதம் வேலைகூட அதில் நடைபெறவில்லை. ஆனால், இப்பொழுது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்தத் திட்டத்தைப் புதுப்பித்து இப்பொழுது உற்பத்தியைத் தொடங்குவதற்கான முயற்சிகளை அம்மா அவர்களுடைய அரசு எடுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.



2012 மார்ச் 29]

**திரு. டி. செங்குட்டுவன்:** உடன்குடி புரிந்துணர்வு ஒப்பந்தம் தி.மு.க. ஆட்சியிலே போடப்பட்டது என்று நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொண்டதற்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய ஆட்சிக் காலத்திலே, நான்கு ஆண்டுக் காலமாக... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், திரு. டி. செங்குட்டுவன்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** நான்கு ஆண்டுக் காலமாக இந்தத் திட்டத்திற்காக என்ன முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறீர்கள்? 10 சதவீதம், 25 சதவீதம் வேலையைப் பார்த்துவிட்டிருந்தீர்கள் என்றால்கூடப் பரவாயில்லை. ஒரு சதவீதம் வேலையைக்கூட நீங்கள் தொடங்கவில்லை, அதற்குரிய எந்த முயற்சியையும் செய்யவில்லை. இப்பொழுது புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் நீங்கள் கிடப்பிலே போட்டுவிட்ட திட்டங்களை எல்லாம் எடுத்து அதையும் செய்கிறார்கள். புதிய திட்டங்களையும் அறிவித்து இருக்கிறார்கள். அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலே ஏற்கெனவே போட்ட திட்டங்களையும் இப்பொழுது விரைவுபடுத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டதோடு நாங்கள் நிற்கவில்லை. தமிழ்நாடு மின்சார வாரியம் சார்பாக 32½ கோடி ரூபாயும், BHEL நிறுவனம் சார்பாக 32½ கோடி ரூபாயும், ஆக, ஒட்டுமொத்தமாக 65 கோடி ரூபாயை முதலீடு செய்து, ஆரம்ப கட்ட நிதியாகப் போட்டு, 1,305 எக்டேர் புறம்போக்கு நிலத்தையும், அதேபோல, 116 எக்டேர் தனியார் பட்டா நிலங்களையும் கையகப்படுத்துகிற பணி நடைபெற்றது. ஆகவே, எந்த முயற்சியும் செய்யவில்லை என்று தயவுசெய்து சொல்ல வேண்டாம். (குறுக்கீடு)

[2012 மார்ச் 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1-15

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய ஆட்சிக் காலத்திலே போடப்பட்ட உடன்குடி மின் உற்பத்தித் திட்டத்தில், உடன்குடியில் BHEL நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்தும் திட்டம் பற்றி 2011-2012 ஆம் நிதிநிலை அறிக்கையிலேயே தெரிவிக்கப்பட்டுள்ளது. உடன்குடி விரிவாக்கத் திட்டம் என்பது BHEL நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்த தி.மு.க. அரசால் உத்தேசிக்கப்பட்ட உடன்குடி திட்டம் அல்ல என்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டு இருக்கிறோம். அதேமாதிரி, மற்றொரு தகவலையும் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். தெளிவாகச் சொல்கிறேன். நிதிநிலை அறிக்கையைக் கொஞ்சம் படியுங்கள். நன்றாகப் படித்துவிட்டுச் சொல்லுங்கள். மின்சக்தித் துறையில் தமிழ்நாடு நெருக்கடியான சூழ்நிலையை சந்தித்து வருகிறது. மொத்தத் தேவையில் நமது சொந்த உற்பத்தித் திறன் 30 சதவீதம் மட்டுமே உள்ள சூழ்நிலையில், மற்ற ஆதாரங்களைச் சார்ந்தும், அதிக விலை கொடுத்தும் மின்சாரத்தைப் பெறவேண்டிய சூழ்நிலை உள்ளது. தேவைக்கும் விநியோகத்திற்கும் இடையே உள்ள பெரும் இடைவெளி காரணமாக, மின் வினியோக அமைப்பின் நிலைத் தன்மையைப் பராமரிப்பதற்காக மின் வினியோகத்தை கட்டுப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டியுள்ளது. வெளி மாநிலங்களிலிருந்து கிடைக்கும் மின்சாரத்தை நமது மாநிலத்திற்குக் கொண்டு வருவதற்கான மின் வழித்தடங்களில் நெருக்கடி உள்ளதால், மின்சாரத்தை வெளியிலிருந்து கொண்டு வருவதற்கும் வழிவகை இல்லை. எனவே, தற்போது நமது மாநிலத்திலேயே அமைக்கப்பட்டு வரும் திட்டங்களைத் துரிதப்படுத்தியும், மாநில அரசு மூலமாகவோ, கூட்டு முயற்சிகள் மூலமாகவோ, புதிய திட்டங்களைத் தொடங்கியும், நமது மாநிலத்தின் சொந்த மின் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது.

பாரத மிகுமின் நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டிருந்த 1,500 மெகா வாட் உடன்குடி உயர் அழுத்த



2012 மார்ச் 29] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

நிலை அனல் மின் நிலையத் திட்டம், நான்கு ஆண்டுகளாகியும் தொடங்கப்படாத நிலை உள்ளதால், அக்கூட்டு முயற்சியைக் கைவிட்டு, மாநிலத் திட்டமாகவே 8,000 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அண்மையில் அறிவித்திருப்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்களா? நன்றாகப் படித்துவிட்டு இங்கே பேச வேண்டும். நான்கு ஆண்டுக் காலமும் உங்களுடைய ஆட்சிக் காலத்திலே அதைத் தொடங்காமல் கிடப்பிலே போட்டிருந்த காரணத்தினால், Joint venture ஆகப் போட்ட திட்டத்தை இரத்து செய்துவிட்டு, அதை இப்போது மாநில அரசின் திட்டமாக எடுத்துச் செயல்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்கள் எடுப்பார்கள் என்று நிதிநிலை அறிக்கையிலே தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே, நிதிநிலை அறிக்கையை தெளிவாகப் படித்துவிட்டு விமர்சனம் செய்யவும். இந்த நிதிநிலை அறிக்கையிலே 1,500 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரத்தை பொறுத்தவரையிலே... (குறுக்கீடுகள்) ஒரே வரியில் முடித்துவிடுகிறேன். உடன்குடி மின் திட்டமானது தி.மு.க. ஆட்சிக் காலத்தில் போடப்பட்ட Joint Venture. (குறுக்கீடுகள்) என்னைக் கொஞ்சம் பேசவிடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூங்குகிறவர்களை எழுப்பலாம். ஆனால், தூங்குகிற மாதிரி நடிக்கிறவர்களை எழுப்ப முடியுமா? விஷயத்தைப் புரிந்துகொண்டு அதை மூடி மறைக்க முயற்சிக்கும் முயற்சி எடுபடாது. நீங்கள் கடந்த ஆட்சியிலே செய்துவிட்ட தவறு. கடந்த 4 ஆண்டுக் காலமாக அதிலே என்ன முயற்சிகள் எடுத்தீர்கள் என்ற கேள்விக்கு பதில் இல்லை. அந்தத் திட்டம் அப்படியே கிடப்பில் போடப்பட்டிருந்தது. அதைத்தான்,

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2012 மார்ச் 29

எங்களுடைய அம்மாவுடைய அரசு எடுத்து, மாநில அரசின் சொந்தத் திட்டமாக நிறைவேற்றுவதற்காக இப்பொழுது 1,500 கோடி ரூபாயை அரசு பங்கு மூலதனமாகவும் கொடுத்து இந்தத் திட்டத்தைத் தொடங்க இருக்கிறது என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறோம். ஆகவே, நாங்கள் மீண்டும் மீண்டும் கூறுவது என்னவென்றால் நீங்கள் நன்றாகப் புரிந்துகொண்டு பேச வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இப்போது அடுத்த சப்ஜெக்டுக்குப் போகிறேன். இதிலாவது மாண்புமிகு அமைச்சர் அவர்களின் குறுக்கீடு இல்லாமல் இருந்தால் நன்றாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்குட்டுவன் அவர்கள், நீங்கள் குறுக்கீடு வராமல் பேசுங்கள். நீங்கள் குறுக்கீடு வராமல் பார்த்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு)

**திரு. டி. செங்குட்டுவன்:** அமைச்சர் அவர்கள் உட்காருங்கள். உங்கள்சப்ஜெக்ட் முடிந்தது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற முறை நீங்களும் இந்த சட்டமன்றத்திலே இருந்தீர்கள். நாங்கள் பேசுகின்றபோது எல்லா அமைச்சர்களும் எங்களை எழுந்து பேசவிடமாட்டார்கள். கேட்டால், குறுக்கீடு இல்லாமல் பேசக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று அந்த சட்டப் பேரவைத் தலைவர் சொல்வார். இப்போதும் அதேதான். "முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்". எங்களை அப்போது எங்கே பேசவிட்டீர்கள். அந்த சபாநாயகர் குறுக்கீடு இல்லாமல் பேசக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று சொன்னார் அல்லவா? ஆனால், இப்போதுசட்டப் பேரவைத் தலைவர் உங்களுக்கு வேண்டிய நேரம் ஒதுக்குகிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.



2012 மார்ச் 29]

**திரு. டி. செங்குட்டுவன்:** அடுத்து, போக்குவரத்துத் துறைக்கு வருகிறேன். பஸ் கட்டணத்தை உயர்த்தி இருக்கின்றீர்கள். அதில் என்ன நிலைமை என்று மக்களுக்கே தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இதே அவையில், நாங்கள் எதிர்க்கட்சி உறுப்பினர்களாக இருந்தபோது, மாண்புமிகு அம்மா அவர்கள் எழுந்து பேசும்பொழுது, கிட்டத்திட்ட 65 முறை குறுக்கீடுகள் இருந்தன. நீங்கள் வேண்டுமானால் அவைக் குறிப்பை எடுத்துப் பாருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

பிற்பகல் 1-20

**திரு. டி. செங்குட்டுவன்:** பஸ் கட்டண உயர்வை உயர்த்தி இருக்கின்றீர்கள். ஏன் ஏற்றினீர்கள் என்று நான் அதற்குள் போகவில்லை.

ஆனால் ஒன்று. மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு நான் பணிவோடு தெரிவித்துக் கொள்வதெல்லாம், அதாவது சாதாரண கட்டணம் கிலோ மீட்டருக்கு 28 பைசாவிலிருந்து 42 பைசா, எக்ஸ்பிரஸ் கட்டணம் 56 பைசா, அல்ட்ரா டீலக்ஸ் கட்டணம் 70 பைசா, எங்களுடைய போக்குவரத்துக் கழகம்-சேலம், தருமபுரி, இந்த இரண்டு போக்குவரத்துக் கழகங்களிலும் ஒட்டுமொத்தமாக இருக்கக்கூடிய பஸ்களின் எண்ணிக்கை எவ்வளவு என்று கேட்டீர்களேயானால், சேலத்தில் மட்டும் 1,124 பஸ்கள் இருக்கின்றன. மொஃபசல் பஸ்கள் அதிலே 556 பஸ்கள் இருக்கின்றன. அல்ட்ரா டீலக்ஸ் 20 பஸ்கள் இருக்கின்றன. அதேபோல், தருமபுரியில் எவ்வளவு இருக்கிறது என்று சொன்னால், 865 பஸ்கள் இருக்கின்றன. புறநகர் பஸ்கள், அதாவது மொஃபசல் பஸ்கள் 524 இருக்கின்றன. இதில் என்ன ஒரு வேடிக்கை என்று கேட்டீர்களென்றால், எங்களுடைய போக்குவரத்துக் கழகத்திலே அல்ட்ரா டீலக்ஸ் பஸ்கள் இருக்கின்றன. நான் இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், எக்ஸ்பிரஸ் என்று சொல்லக்கூடிய எந்தப் பேருந்துமே எங்களது போக்குவரத்துக் கழகத்தில் கிடையாது. ஆனால், என்ன நடக்கிறது என்று சொன்னால், கிட்டத்தட்ட 859 சாதாரண பஸ்களிலே எக்ஸ்பிரஸ் என்ற ஸ்டிக்கரை ஒட்டி அதில் கிலோ மீட்டருக்கு 56 காசுகள் என நீங்கள் உயர்த்தி வாங்கிக் கொண்டிருக்கிறீர்கள். ஏன், பஸ் கட்டணம் உயர்த்தப்பட்ட பிறகும் . . . (குறுக்கீடு)

[2012 மார்ச் 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) இருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு, please sit down. மாண்புமிகு அமைச்சர் பதில் சொன்ன பிறகு பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஐந்தாண்டுக் கால தி.மு.க. ஆட்சியில் ordinary, express, L.S.S., M-service, Ultra Deluxe, Semi Deluxe, P.P., இப்படிக் கலர், கலராக பேருந்து இயக்கினீர்கள். போகும்பொழுது ஆர்டினரியாகப் போகும், வரும்பொழுது எக்ஸ்பிரஸ் ஆக வரும், திரும்பிப் போகும்பொழுது அல்ட்ரா டீலக்ஸ் ஆகப் போகும். இதையெல்லாம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சீர்படுத்தி, செம்மைப்படுத்தி, ஏழை, எளிய மக்களுக்குத் தரமான போக்குவரத்துச் சேவைகளை வழங்க வேண்டுமென்று ஆணையிட்டு, சிறப்பான ஒரு நடவடிக்கையாக 19,000 பேருந்துகளில் 50 சதவீதம் பேருந்துகளை, ஏழை எளிய மக்களுக்காக சாதாரணப் பேருந்துகளாக, இயக்குவதற்கு முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த 5 ஆண்டுக்கால தி.மு.க. ஆட்சியில் போக்குவரத்துக் கழகங்களினுடைய கடன் சுமை 6,150 கோடி ரூபாய். இந்தக் கடன் சுமை என்பது கடந்தகால தி.மு.க. ஆட்சியின் நிருவாக சீர்கேட்டினால் ஏற்பட்ட கடன் சுமை. இதுமட்டுமல்லாது, 2,369 கோடி ரூபாய் அளவுக்கு கொடுக்க வேண்டிய நிலுவைத் தொகையை வழங்காமல் வைத்திருந்தார்கள். இந்த நிலுவைத் தொகை எதனால் வந்தது? ஐந்தாண்டுக்கால தி.மு.க. ஆட்சியில் சிறப்பான நிருவாகத்தை நடத்த முடியாமல், நிருவாகச் சீர்கேட்டினால் போக்குவரத்துக் கழகங்களை முழுமையாக, நஷ்டமடையச் செய்து கடுமையான நிதி நெருக்கடியை ஏற்படுத்தியவர்களுக்கு, இந்தப் பேருந்துக் கட்டணத்தினுடைய நிலைமையைப் பற்றிப் பேசுவதற்குத் தகுதி இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்திலே ஓர் உறுப்பினர் பேசுவதற்குத் தகுதியில்லை என்றெல்லாம் சொல்லக் கூடாது. நான் கேட்கின்ற கேள்வி நியாயமானதா? அதில் அர்த்தம் இருக்கிறதா, இல்லையா என்றுதான் அமைச்சர் பதில் சொல்ல வேண்டுமே தவிர, தகுதி இருக்கிறதா, இல்லையா என்று சொல்லக்கூடாது. (குறுக்கீடு)



2012 மார்ச் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கையை நீட்டிப் பேசக்கூடாது. இங்கே, என்னைப் பார்த்துப் பேச வேண்டும்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்ன சொல்கிறேன் என்றால், சாதாரண பஸ்களுக்கெல்லாம் ஸ்டிக்கர் ஒட்டி (குறுக்கீடு) இதிலே அடுத்து நான் என்ன சொல்ல வருகிறேன் என்பதை தயவுசெய்து கேளுங்கள். 859 சாதாரண பஸ்களுக்கு எக்ஸ்பிரஸ் கட்டணம் என்று சொல்லி, கிலோ மீட்டருக்கு 56 பைசா வசூல் செய்வதனால் பயணிகள் அத்தனை பேரும், தனியார் பஸ்களுக்குத்தான் போகிறார்களே தவிர, போக்குவரத்துக் கழகத்தினுடைய பஸ்களுக்கு வருவதில்லை. அதனால் நம்முடைய வசூல் பாதிக்கப்படுகிறது என்ற உண்மையை நான் மாண்புமிகு அமைச்சரிடத்தில் சொல்ல வருகிறேனே தவிர, நீங்கள் பதிவுகளை எடுத்துப் பாருங்கள். ** எனக்குத் தெரியும். நான் போக்குவரத்துக் கழகத்திலே பணி செய்தவன். என்ன கணக்குச் சொல்வார்கள், எப்படி நடக்கும் என்று எனக்குத் தெரியும். இதிலே, சாதாரண பஸ்களுக்கு 56 பைசாவிற்கு பதிலாக 42 பைசாவாக ஆக்கினால், 1,000 ரூபாய் முதல் 2,000/- ரூபாய் வரை வசூல் கூடுதலாகக் கிடைக்கிறதா, இல்லையா என்று பாருங்கள். அதைத்தான் நான் சொல்ல வருகிறேன். இவை மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தெரியாது. 859 சாதாரண பஸ்களை எக்ஸ்பிரஸ் பஸ்களாக ஸ்டிக்கர் ஒட்டி, அதிலே கிலோ மீட்டருக்கு 42 பைசா வசூலிப்பதற்கு பதிலாக 56 பைசாவை வசூலிக்கிறீர்களே, அதனால் இந்தப் போக்குவரத்துக் கழகங்களுக்கு நஷ்டமா அல்லது இலாபமா? தயவுசெய்து அதை மட்டும் அமைச்சர் அவர்கள் தெரியப்படுத்த வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில் சாதாரண பேருந்துகளை எக்ஸ்பிரஸ் பஸ்களாக மாற்றியுள்ளதாகச் சொல்கிறார். தருமபுரி மாவட்டத்தைப் பற்றி தவறான தகவல்களை அவர் கொடுத்துக் கொண்டிருக்கிறார். ஏனென்று சொன்னால்,

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அங்கே அதுபோன்ற ஒரு நிலைமை வந்தால், அவர் தொழிற்சங்கத்தினுடைய தலைவராக இருக்கிறார், உடனடியாக அவர்கள் ரோட்டிற்கு வந்துவிட்டிருப்பார்கள். அவைக்குத் தவறான தகவலைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. செங்குட்டுவன், நீங்கள் உரையாற்றியது போதும். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. கணேசன் அவர்கள் பேசவேண்டும். அதற்கு முன்பாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள், ** என்று பேசிய அந்தச் சொற்றொடர் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எக்ஸ்பிரஸ் என்று ஸ்டிக்கர் ஒட்டி ஓட்டுவதாகச் சொன்னார்கள். அது முற்றிலும் தவறானது. உறுப்பினர் தவறான தகவலை அவைக்குக் கொடுத்துக் கொண்டிருக்கின்றார். இதனால் பேருந்துகளினுடைய, மற்றும் பயணிகளினுடைய எண்ணிக்கை குறைந்திருப்பதாகச் சொன்னார். 2010 டிசம்பர் மாதத்தில், சேலம் அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில், ஒட்டுமொத்தமாகப் பயணித்த ஒரு மாத பயணிகளுடைய எண்ணிக்கை 17 இலட்சத்து 76 ஆயிரம். அதற்கு அடுத்த வருடம், 2011 டிசம்பரில், 20 இலட்சத்து 23 ஆயிரம் பயணிகள் பயணித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) டிசம்பர் 2010 ஆம் ஆண்டைவிட 2011 டிசம்பர் மாதத்தில் 13.79 சதவிகிதம் பயணிகளுடைய எண்ணிக்கை அரசுப் போக்குவரத்துக் கழகத்தில் கூடியிருக்கிறது. பயணிகள் அதிகமாகப் பயணித்திருக்கிறார்கள். தயவுசெய்து தவறான தகவலை உறுப்பினர் அவர்கள் அவையில் பதிவு செய்யக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. கணேசன் அவர்கள். (குறுக்கீடு) திரு. கணேசன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) திரு. செங்குட்டுவன், நீங்கள் நிறைய நேரம் பேசிவிட்டீர்கள். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் நிறைய நேரம் பேசிவிட்டீர்கள். (குறுக்கீடு)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





***திரு. பா. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழக நிரந்தரப் பொதுச் செயலாளர், எங்கள் ஆராதனைக்குரிய தெய்வம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாத கமலங்களை வணங்குகிறேன்.

இம்மாமன்றத்தில் 2012-2013 ஆம் ஆண்டுக்கான மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மாட்சிமைமிக்க வரவு-செலவுத் திட்டப் பொது விவாதத்தில் பங்கேற்று எனது கன்னிப் பேச்சை ஆற்றுவதற்கு அனுமதித்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை மீண்டும் வணங்குகிறேன்.

குடவோலை முறையில் ஜனநாயகப் பணியாற்ற வாக்கெடுப்புத் தேர்தல் பாதையைத் தேடிக் கொடுத்த இடம், மக்களாட்சியின் மாண்பினை உலகுக்கு உணர்த்திய இடம், வரலாற்றுச் சீர் பெற்ற ஊர், உத்திரமேரூர் ஆகும். உத்திரமேரூர் சட்டப் பேரவை உறுப்பினராக என்னைத் தெரிவு செய்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை மீண்டும் வணங்குகிறேன். உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதி மக்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நற்றமிழ் நாட்டை நலம்பெற உயர்த்திடவே, நாளும் சிந்தனையைத் தேக்கி, பற்பல திட்டங்களைத் தீட்டுகிறார். சொல்லும் செயலும் தமிழர் வளம் காணவே அல்லும் பகலும் அயராமல் உழைத்தே அன்னைத் தமிழ்நாட்டைக் காத்து நிற்பவரே, நாடே அம்மா என்றழைப்பதில் உலகத் தமிழினமே மகிழ்ச்சி கொள்ளும்.

'உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதுஆம் நட்பு'

எனும் வள்ளுவரின் வாக்கின்படி, வாழ்க்கையே அற்றுப் போனது, இனி இவ்வுலகில் யார் நமக்கு என்று ஏங்கி, உடலும் உள்ளமும் தவித்துக் கொண்டிருந்த இலங்கைத் தமிழருக்குத் தாய் என்று காட்ட தமிழருக்கு வாய்த்தவரே, நெஞ்சமெல்லாம் நேர்மையாக்கி, நேர்மையெல்லாம் நினைவாக்கி, நினைவெல்லாம் தமிழாக்கி, நாளும் பொழுதும் அவர் தரம் உயர, அயராமல் உழைத்து அகிலத்தில் அன்னைத் தமிழ் நாட்டைக் காப்பவரே, இதய தெய்வம் அன்பு நதியினிலே நனைவோம்.

[திரு. பா. கணேசன்] [2012 மார்ச் 29

'இது, எனது எனும் கொடுமையைத் தவிர்ப்போம்;
உணர்வெல்லாம் கனல் இடை அயர்வினை எரிப்போம்.
ஒரு பொருள் தனி எனும் மனிதரைச் சிரிப்போம்'

என்ற பாவேந்தர் வரிகளை மெய்ப்பித்திட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எழுந்தார், தமிழையும் தமிழ்நாட்டையும் களவாடிய கயவர்கள் ஓடினர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் ஒரு விடியல் விடியாதா நமக்கு என விரக்தியால் வேதனையுற்ற தமிழர்களுக்கு நல் வாய்ப்பாக வாய்த்தவர், 'கடமையைச் செய் பலனை எதிர்பாராதே' என்ற கண்ணனின் கருணை வடிவம், 'அடிமை எண்ணம் விடு, பாரதத் திருநாட்டை மீட்டு எழு' என்றுரைத்த உலக உத்தமர் அண்ணல் காந்தியடிகளின் சத்திய வரி, 'பெண்ணினத்தின் தமிழ் வாழ்வே, நல்வாழ்வே பூவுலகின் முன்னேற்றம்' என உரைத்த அன்னை தெரசாவின் மறு உரு, நெஞ்சை நிமிர்த்தி, நேர்ப்படப் பேசி வஞ்சத்தை ஒழித்த பாரதியின் எண்ணத்தின் திரு; கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் திராவிட இயக்க மந்திரத்தை நாளும் சுவாசிப்பவர், 'உழைப்பவரே உயர்ந்தவர்' எனும் உலக மானுட முன்னேற்றத் தத்துவத்தை ஊருக்கு உரைத்த மக்கள் திலகத்தின் எண்ணமாய், வடிவாய், வாழும் எங்கள் குடும்ப குலவிளக்கே, முப்பொழுதும் எப்பொழுதும் எங்கள் மாண்புமிகு அம்மாவின் சுட்டு விரல் அசைவினையே விழித்திருந்து பார்த்திருந்து, கழகத்தின் கடமைகளை ஆற்றி, முகவரியற்று இருந்த என்னை பல்வேறு கழகப் பொறுப்புகளில் கழகப் பணியாற்றி, 'பணியை நீங்கள் பாருங்கள், நான் உங்கள் குடும்பத்தைக் காப்பாற்றுகிறேன். உழைத்து இயக்கத்தை வளர்ப்பதற்கு உங்களைத் தயார் செய்து கொள்ளுங்கள். உங்கள் நலனில் நான் அக்கறை கொள்வேன்' என அவ்வப்போது உரைத்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அடிமட்டத் தொண்டர்களையும் எழுச்சி பெற வைத்து, அனைத்துப் பதவிகளிலும் என்னை அமர்த்தி அழகுபார்த்த எங்கள் குடும்ப தெய்வமே! ஏழு கோடி தமிழ் மக்களின் காவல் தெய்வமே! மூன்றாம் முறையாய் முத்தமிழ் நாட்டின் முதல்வராய், மூன்றாம் பிறைபோல மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவோடு நிதம் வாழும் இந்த எளிய தொண்டன், நெடுஞ்சாண்கிடையாய் உங்கள் திருப்பாதத்தில் படியாய்க் கிடந்து தாள் பணிகிறேன் அம்மா!



2012 மார்ச் 29] [திரு. பா. கணேசன்]

பிற்பகல் 1-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பட்ஜெட், ஏழைகளின் வாழ்வை ஏற்றம் பெறச் செய்யும் gift packet; மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 2012-2013 ஆம் ஆண்டு வர-செலவுத் திட்டம் வாழ்க்கைக்குத் தேவையான அத்தியாவசியமான, அற்புதமான திட்டம் என்று பொருளாதார வல்லுநர்கள் பாராட்டுகிறார்கள். ஆனால், 'நான்தான் ஒட்டுமொத்த தமிழர்களின் தலையெழுத்து; தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் குத்தகைக்காரர்கள்' என்று தனக்குத் தானே செருக்கில் வாழ்ந்து, தாய்த் தமிழை விற்று வருபவர்கள் கூறுகிறார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 2012-2013 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தால் மக்களின் வாழ்க்கைத் தரம் உயராது என்று கூறுகிறார்கள். உயராது, உயராது. ஏனென்றால், வரப்புயர நீர் உயரும்; நீர் உயர நெல் உயரும்; நெல் உயரக் குடி உயரும்; குடி உயரக் கோல் உயரும்; கோல் உயரக் கோன் உயர்வான்; கோன் உயர இந்த நாடு உயரும் என்ற அவ்வை அருந்தமிழை அறுகோணத்தில் பாழாக்கினார் இந்தப் பெரியவர்.

தான் உயர மனை உயரும்; மனை உயர மக உயரும்; மக உயர கனி உயரும்; கனி உயர துணை உயரும்; துணை உயர சுற்றம் உயரும்; சுற்றம் உயர ராசாக்கள் அழிவர். ராசாக்கள் என்றால் நகர்வலம் வருவார்கள் அன்று. ஆனால், இன்று ராசாக்கள் கம்பிக்குப் பின்னால். குடும்பமே கழகம்; கழகமே குடும்பம் எனக் கூத்திடும் இவர்கள், சொல்கிறார்கள் மக்களுக்குப் பயன்தராத திட்டங்கள் இவை என்று. பயனற்றது என்கிறார்கள்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சமூகத்தின் நலிவைப் போக்க வளமான கல்வியே வாழ்வின் அடிப்படை என்று உணர்த்தும்வகையில், ஏற்றமிகு கல்வித் திட்டத்தைத் தீட்டி பள்ளிக் கல்விக்கு ரூ.14,552 கோடி ஒதுக்கியுள்ளார். இது மக்களுக்குப் பயன்தராத திட்டமா? இவர்களுக்கு வேண்டுமானால் பயன்பெறாதத் திட்டங்களாக இருக்கலாம்.

ஆறாம் வகுப்பு மாணவர்களுக்கு விலையில்லாச் சீருடை, ஒன்று முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவச் செல்வங்களுக்கு

[திரு. பா. கணேசன்] [2012 மார்ச் 29

விலையில்லா மிதியடி, புத்தகப் பை, ஜியாமெட்ரிக் பாக்ஸ், வண்ணப் பென்சில்கள், உலக வரைபடப் புத்தகம், பாடக் குறிப்பேடு இவையெல்லாம் தமிழ்ப் பெருங்குடி மக்களின் குழந்தைகளுக்கு வேண்டாம் என்கிறார்களா? இது அவர்களுக்குப் பயன் தராது என்கிறார்களா? இன்றைய தலைமுறையின் தேவையை நினைப்பவர் அரசியல்வாதி; நாளைய தலைமுறையின் தேவையைக் கருதுபவர் அரசியல் ஞானி. இந்திய அரசியலில் ஞானியாகத் திகழும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நீர்வள மேலாண்மைக்கு இதுவரை இல்லாத அளவுக்கு ரூ.3,824 கோடி ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

புதிய ஏரிகள் வடிவமைப்புக்கு இந்தியாவிலேயே எடுத்துக்காட்டாய்- எல்லோரும் நதி இணைப்பைப் பற்றி பேசிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில், தமிழகத்தில் தாமிரபரணி, கருமேனியாறு, நம்பியாறு இணைப்புத் திட்ட ஒதுக்கீட்டிற்கு ரூ.100 கோடி. 13,699 ஏரிகளை மேம்படுத்துதல்.

"தானம் தவம்இரண்டும் தங்கா வியன்உலகம்
வானம் வழங்காது எனின்"

என்னும் குறளின் பொருளுணர்ந்து மாநிலத்தில் நீர் நிலைகளின் தரத்தை மேம்படுத்த நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். மாண்புமிகு அம்மாவின் தொலைநோக்குப் பார்வையில் எழிலார்ந்த திட்டங்கள் இன்னும் வரிசையில் அணிவகுக்கும் அற்புதத்தை நாம் அறிவோம். "தாய்" திட்டத்தில் குக்கிராமங்கள் புனரமைப்பு, பசுமை வீடுகள் தந்து பாட்டாளி வர்க்கத்தைப் பாதுகாக்கும் பாரதம் போற்றும் ஆயிரம் கோடியில் பாங்கான திட்டம்.

'கிராமங்களே இந்தியாவின் முதுகெலும்பு' என்றார் மகாத்மா காந்தி. அவரது கூற்றினைச் செயல்படுத்தி, கிராமங்களை முன்னேற்றம் அடையச் செய்யும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு எப்பொழுதும் இல்லாத வகையில் ஏழாயிரம் கோடி ஒதுக்கீடு. 'காணி நிலம் வேண்டும்' என்ற கவிஞனின் கனவு நனவாக ஏழைக் குடும்பங்களுக்கு ஒரு இலட்சம் வீட்டு மனைப் பட்டாக்கள். ஓலை வேய்ந்த குடிசைக்குள்ளே ஒளிவிளக்கு. 14 இலட்சம் குடிசைகளுக்கு இலவச சி.எப்.எல். பல்புகள். பேருந்துக்குத் தவமிருக்கும் நிலையில்லை இனி. நெரிசலைக் குறைக்க அம்மா ஆட்சியில் ரூ.548 கோடியில் 3,000 புதிய பேருந்துகள்.



2012 மார்ச் 29] [திரு. பா. கணேசன்]

பிற்பகல் 1-35

அம்மி இழுக்க வேண்டாம், ஆட்டுக்கல்லில் அரைக்க வேண்டாம், காற்று வாங்கக் கடற்கரைக்குக் கால்கடுக்கப் போகவேண்டாம். இந்த நிதியாண்டில் 35 இலட்சம் குடும்பங்களுக்கு விலையில்லா மிக்ஸி, கிரைண்டர், மின் விசிறி. வீரியமிக்க சூரியக் கதிர், உடல் நலம் காக்கும் புதிர், இதோ 60 ஆயிரம் வீடுகளுக்கு சூரிய மின் விளக்குகள்.

போக்குவரத்தில் புதுப்புதுத் திட்டங்கள். புறநகர் மக்கள் வாழ்வில் விடியல்; ரூ.8,500 கோடியில் 57 கிலோ மீட்டர் நீளத்தில் மோனா இரயில். கலக்கம் ஏன் இனி, உடனுக்குடன் வட்டித் தள்ளுபடி, வீட்டு வசதிக் கடன் பெற்றவர்களுக்கு ரூ.390 கோடி வட்டித் தள்ளுபடி.

இறைவனும் குளிர எண்ணற்ற திட்டம், அம்மா ஆட்சியில் மலருது சட்டம். 1,006 கோயில்களுக்குக் குடமுழுக்கு. மலையேறி தரிசித்து மயிலோனின் அருளைப் பெற, பழனி தண்டாயுதபாணி கோயிலில் மாற்றுத் திறனாளிகள், பெண்கள், குழந்தைகளுக்கு ரோப் கார்.

விடுதி மாணவர்கள் வசதியாக உறங்குவதற்கு கட்டில் தந்தார், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட கல்லூரி மாணவர்களுக்கான விடுதி அறைகளில் கட்டில் வசதி.

இப்படி எண்ணற்ற பயனுள்ள திட்டங்களை, பல துறைகளுக்குத் தந்து, ஆக்கத்தை ஏற்படுத்தியவர்தான் நம் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். தமிழ் பேசினால் ஆயுள் கூடும் என்பது மொழியியல் ஆய்வாளர்கள் கூற்று. அதைத் தவறாகப் புரிந்துகொண்டு, தன்னைப் பற்றித் தமிழில் பேசவும், பேசும்பொழுது மான் ஆடவும், மயில் ஓடவும், வழிவகுத்து அதனால் வரும் மயக்கத்தால் மச்சான் மொழிகளுக்கு ஆட்பட்டு, தமிழை விற்றுவரும் இவர்கள், எங்கும் தமிழ் என்கின்றனர். ஆனால், உண்மையில் இவர்களின் ஆட்சியில் தமிழறிஞர்கள், எங்கே தமிழ் என்று தேடினர்.

தமிழமைப்புகள் அமைத்துத் தமிழ்ப் பணியாற்றுபவருக்கும் ரூபாய் ஐந்து இலட்சத்தில் தமிழ்த்தாய் விருதுடன் கேடயம் பரிசு. அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு ரூ.2,000/-. நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாய் தமிழை வளர்த்து வாழ்ந்து வருபவர்

*[திரு. பா. கணேசன்]* [2012 மார்ச் 29

எங்கள் தங்கத் தாரகை, மனிதப் புனிதம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

உலகத் தமிழ்ச் சமூகத்தின் விடிவெள்ளி, உண்மையை மட்டும் பேசி ஊருக்கு உழைத்துவரும் எங்கள் தாயே, அம்மா. உங்களுக்கு உறவென்று சொல்ல, தர்மம் உண்டு; உறவென்று சொல்ல, தெய்வம் உண்டு; உறவென்று சொல்ல, உலகத் தமிழர் உண்டு; உறவென்று சொல்ல, கோடானுகோடி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் உண்டு, அத்தொண்டர்களில் அடிமட்டத் தொண்டன் நான். இத்தொண்டன் என்றென்றும் மாண்புமிகு அம்மா அவர்களின் சுட்டுவிரலுக்கு அசையும் முதல் தொண்டனாகப் பணியாற்றுவேன்.

நல்லவர்க்கெல்லாம் சாட்சிகள் இரண்டு, ஒன்று மனசாட்சி; மற்றொன்று தெய்வத்தின் சாட்சி. எங்கள் குடும்ப தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உள்ளத்திற்கு, இலங்கையில் மனித உரிமை மீறல் கண்டிப்பு, ஐ.நா. அவையில் வெற்றி, உங்கள் மனித நேயமே இதற்கு சாட்சி. இன்னொன்று, தெய்வம் திகழும் இத்திருநாட்டில் சித்திரை முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு என அறிவித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு சங்கரன்கோவிலே சாட்சி என்று கூறி உங்கள் பாதங்களை வணங்கி என்றும் உங்கள் பின்னால் இருக்கும் தொண்டன் நான்.

எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்; ஆம் இவர்களுக்கு எண்ணிக்கையில் 29-ஐத் தந்து, சட்டமன்ற உறுப்பினர் என எழுத்தும் தந்து, அரசியல் வாழ்விற்கு ஆதாரத்தையும் தந்தவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். நன்றி மறத்தலில் இவர்கள் வல்லரசுகள். அம்மாவை நம்பிக் கெட்டவர்கள் இல்லை, நம்பாமல் கெட்டவர்கள் உண்டு. அன்று அறிமுகம் செய்து வைத்தது எங்கள் அம்மா, இன்று 'நாங்கள்தான் எல்லாம்' என்கின்றனர். ஆனால், இவர்களெல்லாம் சும்மா; தமிழகம் இன்றும் என்றும் அம்மாவின் பின்னால். இதற்கு சரித்திரச் சான்று, சங்கரன்கோவிலே ஆகும் என உலகம் உரைக்கும் எனக் கூறி மீண்டும் எங்கள் குல தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து எனது உரையை நிறைவு செய்வதற்குமுன், உத்திரமேரூர் தொகுதியின் *(மணியடிக்கப்பெற்றது)* ஒரேயொரு வரி, உரையை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கணேசன், தொகுதிப் பிரச்சினைகளை எழுதிக் கொடுத்துவிடுங்கள்.



2012 மார்ச் 29]

**திரு. பா. கணேசன்:** உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதி மக்களின் கோரிக்கைகளை மாண்புமிகு அம்மா புரட்சித் தலைவியின் மேலான பார்வைக்கு சட்டமன்றத்தின் வாயிலாக சமர்ப்பிக்கிறேன்.

உத்திரமேரூர் தொகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பொறியியல் கல்லூரி, தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க வேண்டும்.

*பிற்பகல் 1-40*

உத்திரமேரூர் ஒன்றியத்திலுள்ள ஒரக்காட்பேட்டை மற்றும் சுற்றியுள்ள கிராமங்கள் காஞ்சிபுரம், செங்கல்பட்டு சாலைகளை இணைக்கும் பாலாற்றின் குறுக்கே மேம்பாலம் கட்ட வேண்டும். உத்திரமேரூரில் நிலவும் போக்குவரத்து நெரிசலைப் போக்கிட சாலையை அகலப்படுத்த வேண்டும். *(மணியடிக்கப்பெற்றது)* உத்திரமேரூர். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கணேசன், எழுதிக் கொடுத்துவிடுங்கள். அது அவைக் குறிப்பிலே பதிவாகிவிடும். நன்றி சொல்லி உட்காருங்கள்.

**திரு. பா. கணேசன்:** வாலாஜாபாத் நகரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டாட்சியர் அலுவலகம் அமைக்க வேண்டும். மற்றும் பல்வேறு தொகுதியின் கோரிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்கள் பொற்பாதங்களில் வணங்கி சமர்ப்பிக்கின்றேன். இந்த எளிய தொண்டனை இந்த மாமன்றத்தில் பேச அனுமதித்த எங்கள் தெய்வத்திற்கு மீண்டும் ஒரு முறை நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்து கொள்கிறேன் அமர்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

தொகுதிப் பிரச்சினைகளைப் பொறுத்தவரையில் உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குப் புதிய அலுவலகக் கட்டடம் கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

உத்திரமேரூர் காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டுதல், உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்தல், உத்திரமேரூர் பேருந்து நிலையம், வாலாஜாபாத் பேருந்து நிலையத்தை விரிவாக்கம் செய்தல் மற்றும் வாலாஜாபாத் நகரின் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க புறவழிச் சாலை அமைத்தல் போன்றவற்றை செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வாலாஜாபாத் நகரை தலைமையிடமாகக் கொண்டு புதிதாக வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் வாலாஜாபாத் பேரூராட்சியில் தீயணைப்பு நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

உத்திரமேரூர் ஒன்றியத்தில் அனுமந்தண்டலம்-சிலாம்பாக்கம் கிராமத்தை இணைக்கும் உத்திரமேரூர் ஏரி வரவுக் கால்வாயின் குறுக்கே பாலம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வாலாஜாபாத்-சுங்குவார்சத்திரம் சாலை தென்னேரியில் மேம்பாலம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. கலை அரசு அவர்கள்.

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையில் பேச வாய்ப்பளித்த, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், சமூக நீதிக் காவலர் மருத்துவர் அய்யா அவர்களுக்கும், மருத்துவர் சின்னய்யா அவர்களுக்கும், தொகுதி மக்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், இந்த அவைக்கு அளித்திருக்கின்ற நிதி அறிக்கையில், சர்க்கரை வியாதிக்குப் பயன்படுத்தும் இன்சுலின், கோதுமை, ஓட்ஸ், கையால் செய்யப்படும் பூட்டுகள், ஹெல்மெட், பாலூட்டும் புட்டிகள் ஆகியவற்றிற்கு வரி விலக்கு அளித்திருப்பதை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் வரவேற்று நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். E-bikes, CFL Bulbs, Sanitary Napkins, Tyres போன்றவற்றிற்கு மதிப்புக் கூட்டு வரி குறைத்து அறிவிக்கப்பட்டுள்ளதும் வரவேற்கக்கூடியது. மாண்புமிகு முதல்வர் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) ரூபாய் 548 கோடியில் 3,000 புதிய பேருந்துளை வாங்கி தமிழகத்தில் வெள்ளோட்டம்விட இருக்கக்கூடியது, மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். காவல் துறைக்குக் கூடுதலாக ரூபாய் 400 கோடி ஒதுக்கீடு செய்து 4,340 குடியிருப்புகள் அமைக்க இருப்பது, மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். அதேபோல், கோயில்களுக்கு கும்பாபிஷேகம் செய்வதும், அன்னதானம் வழங்குவதும் வரவேற்கக்கூடிய நிகழ்வுகள்.





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாயத்தைப் பொறுத்தமட்டில், திருந்திய நெல் சாகுபடி பரப்பு 28 இலட்சம் ஏக்கர் உயர்த்தப்படுமென்றும், 15,000 ஏக்கரில் நவீன கரும்பு சாகுபடி உற்பத்தி செய்யப்படுமென்றும் நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. விவசாய வளர்ச்சி என்பது விவசாய உற்பத்தியைப் பெருக்குவதை மட்டும் இலக்காகக் கொண்டிருக்கக்கூடாது. உற்பத்தி செய்த பொருட்களை கட்டுப்படியாகும் விலைக்கு விற்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இன்றைக்கு விவசாயிகள் மிகுந்த வேதனையோடு இருக்கிறார்கள். தண்ணீர் கிடையாது, மின்சாரம் கிடையாது. அரசு மின்சார உற்பத்தியில் தன்னிறைவை அடைவதற்கு தொலைநோக்குத் திட்டம் வைத்திருக்கிறது என்பதை நாங்கள் வரவேற்கின்றோம். ஆனால், இடைப்பட்ட காலத்தில் இருக்கக்கூடிய சூழ்நிலைக்கு அரசு என்ன செய்யப் போகிறது என்பதுதான் எங்களுடைய கேள்வி. இன்றைக்கு விவசாயிகள் எப்போது மின்சாரம் வரும் என்று அரிக்கேன் விளக்குகளையெல்லாம் வைத்துக்கொண்டு நிலத்திலே காத்துக் கொண்டிருக்கிறார்கள். வேதனையோடு இருக்கிறார்கள். விவசாயத்தை நம்பியிருக்கக்கூடிய மக்கள், வேதனையின் விளிம்பிற்கே சென்றுவிட்டார்கள் என்று சொன்னால்கூட அது மிகையாகாது. ஆகவே, நெல்லுக்கு குவிண்டாலுக்கு 2,000 ரூபாயும், கரும்புக்கு டன் ஒன்றுக்கு 3,000 ரூபாயும் கொள்முதல் விலை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு மஞ்சளைப் பயிரிட்டவர்கள் அதற்குண்டான விலையைப் பெற முடியாமல், ஈரோடு மார்க்கெட்டில் மஞ்சள் ஏற்றிச்சென்ற லாரிகளெல்லாம் மஞ்சளை இறக்க முடியாமல் அங்கே காத்துக் கொண்டிருக்கின்றன. அந்த அளவுக்கு மஞ்சளினுடைய விலை வீழ்ச்சி அடைந்திருக்கிறது. 'உழவன் கணக்கெடுத்தால் உழவுக் கோலுக்குக்கூட மிஞ்சாது' என்று எங்கள் கிராமத்திலே பழமொழி சொல்வார்கள். அந்த அளவுக்குத்தான் இன்றைக்கு விவசாயிகளினுடைய நிலைமை இருக்கிறது. விவசாயிகளுடைய இந்த நிலைமையைக் கருத்திற்கொண்டு, நீங்கள் மின்சாரத்தைத் தர இருக்கக்கூடிய காலம்வரையில், அவர்களுக்கு நிவாரணம் கிடைக்கின்ற வகையில், இலவசமாக டீசல் இன்ஜின்களை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு, பல்வேறு நலத் திட்டங்களை, பல்வேறு இலவசங்களை அளித்துக் கொண்டிருக்கக்கூடிய இந்த

*[திரு. ம. கலை அரசு]* [2012 மார்ச் 29

அரசு, விவசாயத்தையே பெரிதும் நம்பிக் கொண்டிருக்கக்கூடிய இந்த நாட்டிலே இருக்கக்கூடிய விவசாயிகளுடைய துன்பங்களை, துயரங்களைப் பார்த்து, இலவசமாக டீசல் இன்ஜின்களையும், டீசலையும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் *1-45*

இன்றைக்கு விளை நிலங்களெல்லாம் மனைகளாகப் போடப்பட்டு எங்கும் கல் நடப்பட்டு வருகிறது. அவற்றை அரசு முறைப்படுத்தி, நெறிப்படுத்தி, விவசாயத்தை ஊக்குவிப்பதற்கு நல்ல நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

விவசாயத்திற்கு வழங்கப்படுகின்ற மின்சாரம் மிக மிகக் குறைவாக இருக்கிறது. *10* மணி நேரம், *15* மணி நேரம் மின் தடை ஏற்படுகின்றது. கிடைக்கக்கூடிய மின்சாரம்கூட எப்பொழுது வரும் என்று தெரியவில்லை. மின்னல் வேகத்தில் வந்து, மின்னல் வேகத்திலே சென்றுவிடுகிறது என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடு) மின்சாரத்தைக் கொடுத்துவிட்டால், நாங்கள் பேச வேண்டிய அவசியமே இருக்காது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின்சாரம் வினியோகம் செய்யப்படும் நேரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த மணி நேரம் முதல் இந்த மணி நேரம் வரை மின்சாரம் வினியோகிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த நேரத்தில் விவசாயிகள் மின்சாரத்தைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். ஒரு நேரத்தில் வருகிறது, ஒரு நேரத்தில் வரவில்லை என்று சொல்வது தவறான ஒரு கருத்தாகும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியபடி முறைப்படுத்தி இன்றைக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை



2012 மார்ச் 29] *[திரு. ம. கலை அரசு]*

என்பதுதான் என்னுடைய கோரிக்கை. உண்மையான நிலையும்கூட அதுதான். வாதத்திற்கு வேண்டுமானால் சொல்லலாம். ஆனால், எப்பொழுது மின்சாரம் வரும், எப்பொழுது மின்சாரம் தடைப்படும் என்கின்ற ஒரு சூழ்நிலை எங்கள் பகுதியில் தெரியாது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். அதுவும் வருகின்ற மின்சாரம் சீரான முறையில் கிடைப்பதில்லை. இதனால், பல மின் மோட்டார்கள் பழுதடைந்த நிலையிலே காணப்படுகின்றன. இவற்றுக்கெல்லாம் அரசு உடனடியாகத் தீர்வு காண வேண்டும். நீங்கள் *2023* தொலைநோக்குப் பார்வை திட்டத்தில் மின்சார உற்பத்தியைப் பெருக்குவதற்குத் திட்டத்தை வகுத்துக் கொண்டிருக்கிறீர்கள், வரவேற்கின்றோம். ஆனால், அதுவரையில் என்ன நிலைமை? இந்த நிலைமையை மாற்றுவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள் என்பதை நீங்கள் இந்தப் பேரவைக்குத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

நீராதாரத்தைப் பெருக்குகின்ற வகையில் நதிகளை இணைக்க வேண்டும் என்பதுதான் எங்கள் கட்சியினுடைய தலையாய கொள்கை. அந்த வகையில் நதிகளை இணைத்து, அதுவும் குறிப்பாக காவிரி, பாலாறு போன்ற ஆறுகளை இணைத்து கிருஷ்ணகிரி, வேலூர் மற்றும் காஞ்சிபுரம் போன்ற மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள், பொதுமக்கள் பயன்படக்கூடிய வகையில் திட்டங்கள் தீட்டப்பட வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், அண்டை மாநிலங்களாக இருக்கக்கூடிய கேரளம், கர்நாடகம், ஆந்திரா போன்ற மாநிலங்களெல்லாம் நமக்குத் தர வேண்டிய தண்ணீரைக்கூட தராமல் இன்றைக்குப் பல்வேறு வழிகளில் நமக்குத் தொல்லை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவற்றுக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காணுகின்ற வகையில் அரசு செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மருத்துவத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து முதல்வர் காப்பீட்டுத் திட்டத்தை அறிவித்திருக்கிறீர்கள், மகிழ்ச்சிக்குரிய செய்தி. அதே நேரத்தில், தரமுள்ள மருத்துவமனைகளை இந்தத் திட்டத்திலே இணைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். ஓர் உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், டயாலிசிஸ் ஒரு நோயாளிக்குச் செய்யப்பட வேண்டுமென்று

[திரு. ம. கலை அரசு] [2012 மார்ச் 29

சொல்லுகின்றபோது, அவருக்கு 12 முறை அல்லது 8 முறை அல்லது 14 முறை ஒரு மாதத்திற்கு டயாலிசிஸ் செய்ய வேண்டுமென்று மருத்துவர்கள் அறிவுறுத்துகிறார்கள். ஆனால், காப்பீட்டுத் திட்டத்தில் 8 முறைதான் அரசு அனுமதிக்கும் என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. இதனை மாற்றி, நோயாளிகளுடைய நிலைமையை அறிந்து எத்தனை முறை வேண்டுமானாலும் அவர்கள் டயாலிசிஸ் செய்துகொள்ளலாம் என்கின்ற அறிவிப்பை வெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டயாலிசிஸ் என்பது kidney failure cases-க்கு பண்ணக்கூடிய ஒரு treatment. இது 8 தடவை, 20 தடவையெல்லாம் பண்ண முடியாது. ஒரு குறிப்பிட்ட அளவு செய்த பிறகு, அதற்கு kidney transplantation தான் செய்ய வேண்டியிருக்கும். இல்லாவிட்டால் அதனால் உயிரிழப்பு ஏற்படுவதற்கு வாய்ப்பாக அமையும். ஆகவே, ஒரு குறிப்பிட்ட அளவு டயாலிசிஸ் செய்த பிறகு அவர்களுக்கு kidney transplant operation பண்ண வேண்டியிருக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. அதாவது, ஒரு மருத்துவர் 12 முறை டயாலிசிஸ் செய்ய வேண்டுமென்று prescribe செய்கிறார். ஆனால், நம்முடைய காப்பீட்டுத் திட்டத்தில் 8 முறைதான் செய்ய முடியும் என்று சொல்கிறார்கள். இதைத்தான் நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

பிற்பகல் 1-50

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டயாலிசிஸ் என்பது ஒரு குறிப்பிட்ட தடவை மட்டுமே பண்ண வேண்டியிருக்கும். அதிக



2012 மார்ச் 29] [டாக்டர் வி.எஸ். விஜய்]

தடவை பண்ணினால் அது உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலை ஏற்படும். ஆகவே, மருத்துவர்கள் சொல்கின்றார்கள் என்பதற்காக நாம் 20 தடவை டயாலிசிஸ் பண்ண வேண்டிய அவசியம் கிடையாது. ஆகவே, குறிப்பிட்ட தடவை டயாலிசிஸ் பண்ணிய பிறகு நோயாளிகளுக்கு Kidney transplant பண்ணுவதுதான் முறையாக இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடம்.

***திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களே ஒரு மருத்துவர். அவரோடு மருத்துவம் பற்றிப் பேசுவதற்கு எனக்குத் தகுதியில்லை என்றாலும், அனுபவ அடிப்படையிலே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய நண்பருக்கு நாங்கள் 200 முறைக்கு மேல் டயாலிசிஸ் பண்ணிக்கொண்டு இருக்கிறோம். Kidney-யை மாற்றுவதற்கு நாங்கள் தயாராக இருந்தாலும், மாற்றிக்கொள்பவருடைய உடல் ஒத்துக்கொள்ளாது என்பதால் டயாலிசிஸ் தொடர்கிறது. இனி இறக்கும் வரை அவர் டயாலிசிஸ் பண்ண வேண்டியதுதான். அது 8 முறையாக இருந்தால் என்ன, 80 முறையாக இருந்தால் என்ன? அரசு செய்யாவிட்டால் அவர்கள் 9 ஆவது முறை டயாலிசிஸ் பண்ணாத காரணத்தால் உயிரிழந்து விடுவார்கள். ஆகவே, 8 முறை என்ற அந்த நிபந்தனையை எடுக்க வேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கலை அரசு, உரையை சீக்கிரம் முடியுங்கள், இன்னும் 8 பேர் பேசவேண்டும்.

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 8 முறை டயாலிசிஸ் பண்ணுவதற்குதான் நம்முடைய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்திலே வழிவகை இருக்கிறது என்று மருத்துவர்களே சொல்கிறார்கள். ஆனால், அவர்கள் 12 முறை பண்ணவேண்டுமென்று prescribe பண்ணுகிறார்கள். தொடர்ந்து நாம் Kidney transplantation பண்ணுவதைத் தடுக்கச் சொல்லவில்லை. ஆனால், மருத்துவக்

காப்பீட்டுத் திட்டத்திலே மருத்துவர் கூறினால் எத்தனை முறை வேண்டுமானாலும் டயாலிசிஸ் செய்வதற்கு வழிவகை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சில பேருக்கு Kidney transplantation பண்ண முடியாது. அவர்களுக்கு வேண்டுமானால் இந்த டயாலிசிஸ் சிகிச்சையைத் தொடர வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கலை அரசு. உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. கல்வித் துறையைப் பொறுத்தமட்டிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் பல்வேறு சலுகைகளை வழங்கி இன்றைக்கு ஒரு புரட்சியை செய்து கொண்டிருக்கிறார்கள். அதற்காக நாங்கள் அந்தத் திட்டத்தை வரவேற்கின்றோம். குறிப்பாக, பத்தாம் வகுப்பு வரையில் இலவச நோட்டுப் புத்தகங்கள் வழங்குகின்ற அந்தத் திட்டத்தை நாங்கள் வரவேற்கின்றோம். இளைஞர்களால் மட்டும்தான் இந்தச் சமுதாயத்தை நல்வழிப்படுத்த முடியும் என்கின்ற ஒரு உயரிய நோக்கத்தோடு மாணவர்களுடைய கல்விக்காக பாடுபட்டுக்கொண்டிருக்கின்ற முதல்வர் அவர்களுக்கு நாங்கள் நன்றி தெரிவித்துக்கொள்கிறோம். அதேவேளையில், இன்றைக்கு L.K.G. வகுப்பிலே சேருவதற்குக்கூட ஒரு இலட்சம் ரூபாய் வரையில் capitation fee வாங்குகின்ற ஒரு சூழ்நிலை நிலவுகிறது. அதைத் தடுத்து நிறுத்த வேண்டிய மிகப் பெரிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கலை அரசு, உரையை முடியுங்கள். நன்றி சொல்லி முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.





**மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது பேசுகின்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கல்வித் துறைக்கு மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் நிறைய திட்டங்களையெல்லாம் அறிவித்திருக்கிறார்கள், நிதி ஒதுக்கியிருக்கிறார்கள் என்றெல்லாம் பாராட்டிப் பேசினார்கள், வரவேற்கத்தக்கது. அதேநேரத்தில், L.K.G. படிப்பதற்கு ஒரு இலட்சம் ரூபாய் நன்கொடை கேட்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார். இது எந்தப் பள்ளியில் யார் வசூலிக்கிறார்கள் என்பதைத் தெரிவித்தால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கலை அரசு, உரையை முடியுங்கள்.

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தினந்தோறும் செய்தித்தாள்களைப் பார்ப்போமேயானால், கொலை, கொள்ளை மற்றும் சமூக விரோத செயல்கள், வங்கிக் கொள்ளை இப்படிப் பல்வேறு அருவருக்கத்தக்க செயல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவற்றைத் தடுத்து நிறுத்துகின்ற ஒரு மிகப் பெரிய தார்மீகப் பொறுப்பு அரசுக்கு இருக்கிறது என்பதை உணர்ந்து நம்முடைய காவல் துறையினர் Scotland Yard Police-க்கு இணையானவர்கள் என்று பெயர் பெற்றவர்கள். ஆனால், குற்றங்கள் நடைபெறுவதைப் பார்க்கின்றபோது, தவறு எங்கே நடக்கிறது என்பதைத் தெரிந்து, தவறு நடக்காமல் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கலை அரசு, உரையை முடியுங்கள் நேரம் ஆகிவிட்டது.

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போக்குவரத்து மேலாண்மையைப் பொறுத்தமட்டில், இன்றைக்குத் தமிழ்நாடு நெரிசலில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறது. வேலூரிலிருந்து கிளம்பி சென்னைக்கு வரவேண்டுமென்று சொன்னால் 4 அல்லது 5 மணி நேரம் ஆகிறது. காரணம், ஆங்காங்கே போக்குவரத்து நெரிசல். போக்குவரத்து மேலாண்மையை நன்கு பயன்படுத்தி நெரிசலைத் தவிர்க்க ஆங்காங்கே மேம்பாலங்கள் அமைக்குமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

*[திரு. ம. கலை அரசு]* [2012 மார்ச் 29

பிற்பகல் *1-55*

அணைக்கட்டு தொகுதியைப் பொறுத்தமட்டில், விவசாயத்தையே பெரிதும் நம்பி இருக்கக்கூடிய தொகுதி. ஏற்கெனவே அங்கே நாங்கள் பல முறை வேண்டுகோள் விடுத்திருக்கின்றோம். கடந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்கூட, மாண்புமிகு முதல்வர் அவர்கள் மேலரசம்பட்டு பகுதியில் ஒரு அணையைக் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டுகின்ற ஒரு சூழ்நிலை வந்தும்கூட, இன்றுவரையில் அந்த அணை கட்ட எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் கேட்பாரற்றுக் கிடக்கிறது. மேலரசம்பட்டு அணையை கட்டி முடிப்பதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று, மலைப் பகுதியாக இருக்கக்கூடிய பீஞ்சம்மந்தை மற்றும் ஜார்தான்கொல்லை போன்ற பகுதிகளுக்கு நல்ல சாலை வசதியும் மற்றும் மலைவாழ் மக்களுக்கு அனைத்து வசதிகளும் செய்து தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று, வேலூரிலே சேகரிக்கப்படுகின்ற குப்பைகளை எல்லாம் சதுப்பேரிப் பகுதியிலே கொண்டுபோய்க் கொட்டி, மலை போல் குவித்து, அங்கே சுற்றுப்புறச் சூழ்நிலை பாதிக்கப்படுகின்ற நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கலை அரசு, உரையை முடியுங்கள். நேரம் ஆகிவிட்டது.

**திரு. ம. கலை அரசு:** அங்கே இருக்கக்கூடிய மக்களெல்லாம் இதற்கு மிகப் பெரிய ஆர்ப்பாட்டங்களை நடத்தி கொண்டிருக்கிறார்கள். மக்கள் எந்தவகையிலும் பாதிக்கப்படாத ஒரு பகுதியைத் தேர்ந்தெடுத்து, அங்கே கொண்டு போய்க் குப்பையைக் கொட்டி, மக்களுக்கு நல்லது செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது, விவசாயிகள் விவசாயத்தை விட்டுவிட்டு,



2012 மார்ச் 29] *[திரு. செ. தாமோதரன்]*

ஓடிவிடலாமா என்றிருக்கிறார்கள் என்று சொன்னார். இவையெல்லாம் கடந்த ஐந்தாண்டுக் காலத்திலே இருந்தது. இப்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய காலத்திலே அப்படியில்லை. தமிழகத்திலுள்ள ஒவ்வொரு குடிமகனுடைய வாழ்க்கையிலும் மாண்புமிகு அம்மா அவர்கள் எப்படி அக்கறை கொண்டிருக்கிறார்களோ, அதேபோல வேளாண்மையைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு பயிரின் வளர்ச்சியிலும் மாண்புமிகு அம்மா அவர்கள் அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன்.

இன்றைக்கு கடந்த காலத்தைவிட, தமிழகத்தைப் பொறுத்தவரையில், பயிர் சாகுபடியின் பரப்பு அதிகமாக இருக்கின்றது. நெல், கரும்பு, எண்ணெய்வித்துப் பயிர்கள், பணப் பயிர்கள், காய்கறிப் பயிர்கள், நறுமணப் பயிர்கள் என்று அனைத்துப் பயிர்களுடைய சாகுபடியும் அதிகமாகி இருக்கிறது. அதற்குக் காரணம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பொறுத்தவரையில், அனைத்துப் பயிர்களுக்கும், நிறைய உதவிகளை, மானியங்களைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

வேளாண்மைத் துறையை இயந்திரமயமாக்க வேண்டுமென்று வேளாண்மைக்குத் தேவையான, விவசாயிகளுக்குத் தேவையான இயந்திரங்களைக் கொடுத்து, அவை அனைத்திற்கும் *50* சதவிகிதம் அளவிலே மானியம் வழங்கப்பட்டு வருகிறது. இப்படி சிறப்பான நல்ல திட்டங்களையெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்கள் கொடுத்ததன் அடிப்படையிலேதான், இன்றைக்கு விவசாயிகள் விவசாயத்தை விட்டு ஓடாமல் மீண்டும் நல்ல முறையிலே விவசாயத்தில் ஈடுபட வேண்டுமென்ற எண்ணத்திலே இருக்கிறார்கள். அதனால்தான் பயிரினுடைய சாகுபடி பரப்பு கடந்த *5* ஆண்டுக் காலத்தைவிட இந்த ஆண்டிலே அதிகமாகி இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள். (குறுக்கீடு) என்ன சொல்லப் போகிறீர்கள்? உரையை முடித்துவிட்டீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் பதில் சொல்லிவிட்டாரே! அதற்கு மேல் என்ன விளக்கம்? (குறுக்கீடு) நேரம் இல்லை, உட்காருங்கள். மாண்புமிகு

[பேரவைத் துணைத் தலைவர்] [2012 மார்ச் 29

உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள். (குறுக்கீடு) அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டிவரும். சரி, உரையை முடியுங்கள்.

**திரு. ம. கலை அரசு:** விவசாய உற்பத்தியைப் பெருக்குவது மட்டும் தன்னிறைவு அடைவதற்கான வழியாக இருக்காது. உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களுக்கு உரிய விலை கிடைப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும். இன்றைக்கு மஞ்சளை எடுத்துக்கொள்ளுங்கள். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால், ஒரு குவிண்டால் ரூ.17,000/- க்கு விற்றது. இன்றைக்கு ரூ.3,500/-க்குத்தான் விற்கப்படுகிறது. தயவு செய்து விவசாயிகளினுடைய நிலைமையை எண்ணிப் பாருங்கள். அதற்கு என்ன வழிவகை உள்ளது?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.

**திரு. ஏ. லாசர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்களே, அனைவருக்கும் வணக்கம். தமிழக அரசின் 2012-2013 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையினை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ளார்கள். அதை அவர் இறுதிப்படுத்துகின்றபொழுது அனைவருக்கும் சம நிலையில் பயன்தரக்கூடிய ஒரு நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்துள்ளதாகவும், இந்த அறிக்கையின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் வரவேற்கத்தக்கவைகளை வரவேற்றும், அதேநேரத்தில் ஆக்கபூர்வமான விமர்சனங்களைச் செய்தால் இரண்டையும் சமமாக எடுத்துக்கொள்வோம் என்கிற கருத்தினை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பதிவு செய்திருக்கிறார்கள்.

பிற்பகல் 2-00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. ஏ. லாசர்:** அத்தகைய தன்மையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் இந்த நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துகளைப் பதிவு செய்கிறேன். அதற்கு முன்னதாக ஒரு விஷயத்தை இங்கே பதிவு செய்ய வேண்டுமென்று கருதுகிறேன். காவிரி நீரில் தமிழகத்திற்கு உரிய பங்கு குறித்தும், கோடை



2012 மார்ச் 29] [திரு. ஏ. லாசர்]

காலங்களில் கர்நாடக அரசு காவிரி நீர்த்தேக்கங்களிலிருந்து பாசனத்திற்குத் தண்ணீர் எடுக்கக்கூடாது; அது தமிழ்நாட்டு விவசாயிகளுக்குக் கடும் பாதிப்பை ஏற்படுத்தும் எனக் கூறி தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தை அணுகியுள்ளது, சரியான நிலைப்பாடு. ஆனால், இந்நிலையில் தமிழக அரசு நீதிமன்றத்திற்குச் சென்றதனால், ஒரு சொட்டு தண்ணீர்கூட தரமாட்டோம் என்று கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த அமைச்சர்கள் அறிவித்திருக்கிறார்கள். இதை எந்த வகையிலும் ஏற்கமுடியாது. ஒப்பந்தத்தை மீறுகிற விதத்தில் தமிழ்நாட்டுக்குப் பாதகமான முறையில் கர்நாடக அமைச்சர்கள் பேசியிருப்பதை நாம் வன்மையாகக் கண்டிப்பதுடன், அதில் தமிழகத்திற்கான உரிய பங்கினைப் பெற தமிழக அரசு தொடர்ந்து குரல் கொடுத்திட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அரசினுடைய இந்த பட்ஜெட்டில் வரவேற்கத்தகுந்த பல அம்சங்கள் உள்ளன. குறிப்பாக, பள்ளிக் கல்வித் துறைக்கு ரூபாய் 14,552.82 கோடியும், ஆதி திராவிடர், பழங்குடியினர் சிறப்புத் துணைத் திட்டத்திற்கு ரூபாய் 6,108.60 கோடியும், வேளாண்மைத் துறைக்கு ரூபாய் 3,804.96 கோடியும், நீர் மேலாண்மைத் துறைக்கு ரூ.3,624.73 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவை வரவேற்கத்தக்கவை.

அதுபோல, 'தானே' புயலால் பாதிக்கப்பட்ட பகுதியில் ஒரு இலட்சம் கான்கிரீட் வீடுகள் கட்டுவதற்கான நிதி ஒதுக்கீடு, ஒரு இலட்சம் பேர்களுக்குக் குடிமனைப் பட்டா இவ்வாண்டு வழங்கவிருப்பது போன்ற திட்டங்களை இந்த நிதிநிலை அறிக்கையில் அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது. இந்த நிதிநிலை அறிக்கையில் பல்வேறு திட்ட அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. திட்ட அறிவிப்புகள் தேவைதான். ஆனால், அந்த அறிவிப்புகளை அமல்படுத்துகிற நிர்வாக ஏற்பாடுகள் உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும். இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், கடந்த நிதிநிலை அறிக்கையிலே, முதியோர், விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ஆகியோருக்கான உதவித் தொகையை உயர்த்தி, மாதம் ரூ.1,000 என இந்த அரசு அறிவித்தது. அது தமிழ்நாட்டில் மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றது. ஆனால், அதனுடைய அமலாக்கம் உரியவர்களுக்கு, உரிய காலத்தில் போய்ச் சேரவில்லை என்பது படிப்பினையாக உள்ளது.

*[திரு. ஏ. லாசர்]* [2012 மார்ச் 29

*உதாரணத்திற்கு, என்னுடைய பெரியகுளம் தொகுதியில் பொது மக்களிடமிருந்து 4,800 மனுக்கள் என் மூலமாகப் பெறப்பட்டு, கடந்த ஆண்டு மே மாதம் கடைசியில், வட்டாட்சியரிடம் ஒப்படைக்கப்பட்டன. ஆனால், அந்த மனுக்களின் மீதான விசாரணை என்பது கடந்த 10 மாதங்களாக முடியவில்லை. இதுகுறித்து பலமுறை மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர், வட்டாட்சியர் ஆகியோரோடு பேசியுள்ளேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் அவர்களுக்கும் இதுகுறித்து கடிதம் எழுதி அனுப்பியுள்ளேன். ஆனால், இதன்மீது உரிய நடவடிக்கை இல்லை. இதுகுறித்துக் கேட்டால், போதிய அதிகாரிகள் இல்லை என்கிற பதில் வருகிறது. அதில் உண்மையும் இருக்கிறது. 40 பேர்கள் பணியாற்ற வேண்டிய வட்டாட்சியர் அலுவலகத்தில் 22 ஊழியர்கள்தான் பணியாற்றுகிறார்கள். மிகப் பெரிய போராட்டத்திற்குப் பின்பு, கடந்த மாதம் 260 பேர்களுக்கு மட்டுமே இந்த நலத் திட்ட உதவி வழங்கப்பட்டது.*

*அதேநேரத்தில், கடந்த காலத்தில் வட்டாட்சியர் அலுவலகங்களில் இடைத்தரகர்கள் மூலமாக 3,000, 4,000 ரூபாய் என்று பணத்தை வாங்கிக் கொண்டு, உதவித் தொகைக்கான ஆணைகளை வட்டாட்சியர் அலுவலகம் கொடுத்து வந்த பழக்கம் இன்றும் தொடருகிறது. இடைத்தரகர்களின் பிடியில் வட்டாட்சியர் அலுவலகங்கள் இருக்கும் வரை, சாதாரண ஏழைகளுக்கு இந்தத் திட்டங்கள் பலன் தராது போய்விடும். இதைத் தடுக்க தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த முறைகேடுகளை உடனடியாகக் களைந்து, இந்த உதவித் தொகைகளை உடனடியாக வழங்கிட வேண்டுமெனக் கோரி, இந்த மாதம் 15 ஆம் தேதி இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட முதியோர்கள் என் தலைமையில் திரண்டு, பேரணியாகச் சென்று பெரியகுளம் வட்டாட்சியாளரிடம் மனு கொடுத்த நிகழ்வும் நடந்திருக்கிறது என்பதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.*

*தேனி நகராட்சி மற்றும் பெரியகுளத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் குடிநீர்த் தட்டுப்பாடு இருப்பது குறித்தும், அதை நிவர்த்தி செய்ய அரசு துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கடந்த பட்ஜெட் கூட்டத் தொடரில் நான் பேசினேன். தமிழக*



2012 மார்ச் 29] *[திரு. ஏ. லாசர்]*

*அரசு, தேனி நகர் குடிநீர்த் திட்டத்திற்கான ஆய்வுக்கு உத்தரவிட்டுள்ளது; மிக்க நன்றி.*

*ஆய்வுகளை முடித்து, உடனடியாக குடிநீர்த் திட்டப் பணிகளுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். 7 நதிகளையும், 6 அணைகளையும் கொண்ட தேனி மாவட்டத்தில், பெரும்பகுதியான மக்கள் குடிநீர்த் தட்டுப்பாட்டினால் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு முறையான, நிர்வாக ஏற்பாடுகள் கடந்த காலத்தில் செய்யப்படாததனால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. இதைத் தவிர்த்திட தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.*

*பிற்பகல் 2-05*

*பெரியகுளம் தொகுதியில் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பும், பல்லாயிரக்கணக்கான மா உற்பத்தி விவசாயிகளுக்கு கூடுதல் விலையும் கிடைக்கும் விதத்தில் ஒரு மாம்பழக்கூழ் தயாரிப்பு நிலையம் அமைக்கப்பட வேண்டுமென்று கடந்த பட்ஜெட்டில் பேசியிருக்கிறேன். அதை இந்தப் பட்ஜெட்டிலாவது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இணைத்து அறிவிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.*

*அதேபோல, பெரியகுளத்தில், அடுக்கம் வழியாக கொடைக்கானல் செல்லும் பாதை அப்பகுதியினுடைய பொதுமக்களின் பொருளாதார வளர்ச்சிக்குப் பேருதவியாக இருக்குமெனக் குறிப்பிட்டிருந்தேன். அதுகுறித்து, தமிழக அரசு ஒரு ஆய்வுக்கு உத்தரவிட்டுள்ளது. ஆய்வுக்குப்பின், அப்பணிகளைத் தொடங்கி, சாலை போடுவதற்கான பணிக்கு உத்தரவிட வேண்டுமாய் மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.*

*'நலத் திட்டங்கள் மட்டுமே நாட்டு மக்களின் பொருளாதார வாழ்க்கையை மேம்படுத்திடாது; ஒவ்வொரு குடிமகனும் தன்னுடைய சொந்தப் பொருளாதார மேம்பாட்டைத் தன்னுடைய சுயமுயற்சியில் உழைப்பின்மூலம் பெற்று, சுய கௌரவத்தோடு வாழ்வதைத்தான் இந்தத் தமிழக அரசு விரும்புகிறது. அதற்கான முறையில், எங்கள் திட்டங்கள் எதிர்காலத்தில் இருக்கும்' என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடந்த நிதிநிலை*

*[திரு. ஏ. லாசர்]* [2012 மார்ச் 29

அறிக்கையின்போது குறிப்பிட்டார்கள். அத்தகைய தன்மையில், தொழில், விவசாயம், கல்வி, புதிய வேலைவாய்ப்புகள் போன்ற பிரச்சினைகளில் அரசு ஒரு கொள்கைப் பிரகடனத்தை வெளியிட்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும். நிதிநிலை அறிக்கை என்பது இலவசங்கள் குறித்த அறிவிப்பாகப் போய்விடக் கூடாது. அது அரசின் கொள்கை முடிவுகளையும், அதற்கான செயல் திட்டங்களையும் அறிவிக்கும் ஆவணம் என்ற விதத்தில் அமைவதே பொருத்தமாக இருக்கும்.

தமிழ்நாட்டில், பெரும்பகுதியான மக்கள் விவசாயம், தொழில், வர்த்தகம் சார்ந்து வாழ்பவர்கள். இவற்றில் பெரும்பகுதியான மக்களை ஈடுபடுத்துவதன்மூலமே உற்பத்திப் பெருக்கமும், வேலைவாய்ப்பும் உருவாக்கிட முடியும்.

கிராமப்புற நிலமில்லா ஏழைகளுக்கு நில உச்சவரம்புச் சட்டத்தை அமலாக்கி, மீதமுள்ள நிலங்களை எடுத்து நிலமற்றவர்களுக்கு விநியோகிக்கும் திட்டம் தமிழ்நாட்டில் தற்போது நடைமுறையில் இல்லை. கடந்த நிதிநிலை அறிக்கையிலும், தற்போதைய அறிக்கையிலும் நிலக் குவியலை உடைப்பதற்கோ, நிலமற்றவர்களுக்கு நிலம் கொடுப்பதற்கோ எந்த அறிவிப்பும் இல்லை. இது கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு வழிவகுக்காது.

புதிய தொழில்கள் ஏராளமாக உருவாகின்றன. மத்திய, மாநில அரசுகளும் அவற்றிற்கு ஏராளமான சலுகைகளை வழங்குகின்றன. இன்றைய நவீன தொழில் உற்பத்தி முறை வேலைவாய்ப்புகளைக் குறைத்து, உற்பத்தியைப் பெருக்குகிறது. தனியார் நிறுவனத்தாரும் அதையே விரும்புகிறார்கள். மனிதவளத்தைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக இயந்திரங்களும், நவீன தொழில்நுட்பங்களும் மட்டுமே அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றன. இது தனியாரின் இலாபத்தைக் குவிக்கும்; இலட்சக்கணக்கான உழைப்பாளிகளின் வாழ்வைப் பறிக்கும்; பணியமர்த்தப்படும் தொழிலாளர்களுக்கு வேலைப் பாதுகாப்போ, கூலிப் பாதுகாப்போ எந்தத் தனியார் நிறுவனங்களும் வழங்குவதில்லை. எனவே, தொகுப்பூதிய ஊழியர்களாக 75 சதவிகித தொழிலாளர்களின் வாழ்க்கை நிலை உள்ளது. இது தொழிலாளிகளிடம் உற்சாகமற்ற, நம்பிக்கையற்ற வாழ்க்கை முறைகளையே உருவாக்கி வருகிறது. இவை போக்கப்பட வேண்டும். ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்சக் கூலியாக ரூ.10,000/- என்பதனை அரசு உறுதிப்படுத்திட வேண்டும்.



2012 மார்ச் 29] *[திரு. ஏ. லாசர்]*

சமீபத்திய உலகமயமாக்கல், தனியார்மயமாக்கல் போன்ற கொள்கைகள் தனியார் தொழில் நிறுவனங்களையே பாதுகாப்பதோடு, அவற்றில் பணிபுரியும் உழைப்பாளிகளுக்கு வேலை பாதுகாப்பற்ற நிலைகளையே உருவாக்கி வருகிறது. இது போன்ற நிலையைத்தான் தமிழ்நாட்டில் புதிதாகத் துவக்கப்படும் அந்நிய நாட்டு தொழில் நிறுவனங்களும் அமலாக்கி வருகின்றன. இதுபோன்ற பிரச்சினைகளில் தமிழக அரசு தனது நிலைப்பாட்டினை தெளிவுபடுத்துவதோடு உற்பத்திப் பெருக்கம், உழைப்பாளிகளின் நலன் சார்ந்த கொள்கைகளைப் பிரகடனப்படுத்திட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 2-10*

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 'தொலைநோக்குத் திட்டம் 2023' குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்கள். தொழில், விவசாயம், வர்த்தகம், வேலைவாய்ப்பு, கல்வி, சுகாதாரம், அடிப்படை வசதிகள், குடியிருப்பு, நவீன போக்குவரத்து, சுற்றுச்சூழல் மேம்பாடு, சாலை வசதி என்கிற அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய ரூ.15 இலட்சம் கோடிக்கான தமிழகத்தின் முன்னேற்றம் குறித்த முதல்வருடைய அறிவிப்புகள், தமிழகச் சட்டமன்றத்தில் வைக்கப்பட்டு, அவை விவாதிக்கப்பட்டு இருந்தால், தமிழக மக்கள் அதனைப் புரிந்துகொள்வதற்கும், சட்டமன்ற உறுப்பினர்கள் அது குறித்த கருத்துகளைத் தெரிவிப்பதற்குமான வாய்ப்பும் அமைந்திருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், உரையை ஒரு நிமிடத்தில் முடித்துவிடுங்கள்.

**திரு. ஏ. லாசர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனவே இது குறித்து விவாதிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாட்டில் மின்சாரத் தட்டுப்பாடு குறித்தும், அதை எதிர்காலத்தில் எப்படிச் சந்திக்க இருக்கிறோம் என்பது பற்றியும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் விதி 110-ன்கீழ் ஒரு அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்கள். அது சிறப்பாகச் செயல்பட வேண்டும். ஆனால், இந்த இடைப்பட்ட காலத்தில் மின் தட்டுப்பாடு என்பது மக்களுக்கும், அரசிற்கும் தலைவலியாக உள்ளது. தமிழகத்தில் அறிவிக்கப்படாத மின் வெட்டு என்பது அமலாகி வருகிறது. கடந்த கால அரசின் பலகீனங்களை மட்டும் சொல்லிக்கொண்டு இருப்பது அதற்குத் தீர்வாக அமையாது.

[திரு. ஏ. லாசர்] [2012 மார்ச் 29

பாரத மிகுமின் நிறுவனத்தினுடன் இணைந்த உடன்குடி அனல் மின் திட்டம்மூலம் 1,600 மெகா வாட் மின் உற்பத்தியைப் பெற மத்திய அரசை நம்பிப் பலனில்லை என்று முடிவெடுத்து, மாநில அரசே ரூ.8,000 கோடி செலவில் அத்திட்டத்தை நிறைவேற்ற எடுத்த முடிவு மிகச் சிறந்த முடிவாகும். இதுபோன்ற பல முன்முயற்சிகளை எடுப்பது, தமிழகத்தின் மின் தட்டுப்பாட்டைத் தீர்ப்பதற்கு சரியான வழியாக இருக்கும். தமிழகத்தின் மொத்த மின் தேவையில், 30 சதவிகிதமே மாநில அரசினால் உற்பத்தி செய்யப்படுகிறது. 65 சதவிகித மின்சாரம் தனியாரிடமிருந்தும், வெளி மாநிலங்களிடமிருந்தும் அதிக விலை கொடுத்து வாங்கப்படுகிறது. இதிலிருந்து இலவச மின்சாரம், பெரு நிறுவனங்களுக்கு குறைந்த கட்டணத்தில் மின்சாரம் வழங்கப்படுகிறது. இதுவே தமிழக மின்சார வாரியம் மிகப் பெரிய நட்டத்தில் இயங்குவதற்கு அடிப்படைக் காரணமாக உள்ளது. இதைக் களைவதற்கு தமிழக அரசு புதிய திட்டங்களை இப்பொழுது அறிவித்திருக்கிறது. இதைச் சிறப்பாகச் செயல்படுத்த வேண்டும். அதே நேரத்தில், இரவு நேரங்களில் முதியோர்கள், உழைப்பாளிகள், குழந்தைகள், நோயாளிகள் தூங்கும் வகையில் மின்வெட்டைக் குறைத்திட அரசு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

விவசாயத்தைப் பாழ்படுத்தும் பார்த்தீனியச் செடிகளை ஒழிப்பதற்கு கடந்த நிதிநிலை அறிக்கையில் அறிவிப்பு வெளியிடப்பட்டது. ஆனால் அது என்ன ஆனது என்று எதுவும் தெரியவில்லை. இந்த அறிக்கையிலும் அது குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

குடிமனைப் பட்டா ஒரு இலட்சம் பேர்களுக்கு இவ்வாண்டு வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், தமிழ்நாட்டில் 25 இலட்சத்திற்கு மேற்பட்டோர் குடிமனைப் பட்டா கேட்டு காத்திருக்கின்றனர். பெரும்பகுதியான குடியிருப்புகள் நத்தம் புறம்போக்குகள் இல்லாத இடங்களில் இருக்கின்றன. எனவே, நீர்ப் பிடிப்பு உள்ள இடங்களைத் தவிர்த்து, ஏனைய புறம்போக்கு நிலங்களை வகை மாற்றம் செய்து, (மணியடிக்கப்பெற்றது) பட்டா கொடுத்தால் மட்டுமே, இப்பிரச்சினைகளுக்கு காலத்தே ஒரு தீர்வு காண முடியும். இல்லையேல் இப்பிரச்சினை அனுமார் வாலாகத் தமிழ்நாட்டில் தொடரும்.



2012 மார்ச் 29] [திரு. ஏ. லாசர்]

அதுபோல, கோயில் நிலக் குடியிருப்புதாரர்களுக்கும், அவ்விடங்களைச் சொந்தமாக வழங்கிட தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். தலித், பழங்குடியினருக்கான சிறப்பு துணைத் திட்டத்தில் ஒதுக்கப்படுகிற நிதியில் ரூபாய் ஆயிரம் கோடியை பயன்படுத்தி குடிமனைக்கான பட்டா இடங்களை வாங்கி ஏழையெளிய தலித் மக்களுக்கு விநியோகம் செய்தால், ஏழைகளுக்கு குடிமனைப் பட்டா கிடைக்க வழி ஏற்படும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

தமிழ்நாட்டில் நிலவும் தீண்டாமைக் கொடுமைகள் குறித்தோ, அதை அகற்றுவதற்கு தமிழக அரசு எந்தவிதமான நடவடிக்கைகள் எடுத்து வருகிறது என்பது குறித்தோ இந்த அறிக்கையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

விவசாயத் தொழிலாளர்களுக்கான மகாத்மா காந்தி அவர்களது பெயரில் அமைந்துள்ள 100 நாள் வேலைத் திட்டத்திற்கு மத்திய அரசு சமீபத்தில் தீர்மானித்துள்ள ரூ.135 தினக் கூலியை அமலாக்கிட தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேநேரத்தில் இப்பணிகளுக்குச் செல்பவர்களுக்கு நேரத்தை அளவுகோளாகக் கொண்டு, பணிகள் கொடுக்கப்பட வேண்டும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

‘தானே’ புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு கூட்டுறவு பயிர்க் கடன்கள் அனைத்தையும் இரத்து செய்ய வேண்டுமாய் தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர், நன்றி சொல்லி உரையை முடித்துவிடுங்கள்

**திரு. ஏ. லாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பு பிரச்சினைகளில் அரசின் வேலைவாய்ப்புகள் குறித்து. . . (குறுக்கீடு)

[2012 மார்ச் 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் ஊர் பெரியகுளம் என்பதால், அந்த மண்வாசனை பாருங்கள். (சிரிப்பு) அவை முன்னவரே உங்களுக்கு recommend பண்ணுகிறார். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.

**திரு. ஏ. லாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பு பிரச்சினைகளில் அரசின் வேலைவாய்ப்புகள் குறித்து மட்டும் தமிழக அரசு பேசி வருகிறது. அதிலும் கடந்த நிதிநிலை அறிக்கையின்போதே ஏராளமான . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் நன்றி சொல்லி முடித்துவிடுங்கள்.

**திரு. ஏ. லாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு விஷயத்தை மட்டும் சொல்லிவிடுகிறேன். சட்டம்-ஒழுங்கு பிரச்சினை குறித்து நிறைய பேசி இருக்கிறார்கள். நான் அதற்குள் அதிகமாகப் போகவில்லை. ஆனால், தமிழ்நாட்டில் சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை பற்றிய செய்தி அதிகமாக பத்திரிகைகளிலேயும், ஜனங்களிடமும் வருவதையும், தமிழக அரசு கவனத்தில்கொள்ள வேண்டும். நாங்கள் சொல்கிறோம் என்பதற்காக அல்ல. நேற்றுகூட சிவகங்கையில், கும்மிடிப்பூண்டியில், தருமபுரியில் ஆசிரியர்கள் தாக்கப்பட்டது எல்லாமே போலீசினுடைய அத்துமீறல்கள்,இந்த அரசின்மீது ஒரு கெட்ட பெயரை ஏற்படுத்துகிற நிலை இருக்கிறது என்பதைக் கணக்கில் கொண்டு தமிழக அரசு சட்டம்-ஒழுங்கை . . .

பிற்பகல் 2-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையாற்றியது போதும். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி அவர்கள்.

***திருமதி ச. முத்துசெல்வி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். தென்பாண்டி மண்டலமாம், திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் தொகுதியிலிருந்து மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அற்புதமான பிரச்சாரத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினராக இங்கே பேச உள்ளேன்.



2012 மார்ச் 29] *[திருமதி ச. முத்துசெல்வி]*

தங்கத் தாரகை, தமிழகத்தின் நிரந்தர முதலமைச்சர், கட்சியின் கடைக்கோடி தொண்டனாக இருந்த என்னைக் கண்டெடுத்து, சங்கரன்கோவில் நகரமன்றத் தலைவியாக அறிமுகம் செய்து, நடந்து முடிந்த இடைத் தேர்தலில் சட்டமன்ற வேட்பாளராக அறிவித்து என்னை வெற்றி பெறச் செய்து, என்னை சட்டமன்ற உறுப்பினராக்கி இம்மாமன்றத்தின் வாயிலாகப் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் பொற்பாதம் தொட்டு வணங்கி, எனது கன்னிப் பேச்சினைத் தொடர்கின்றேன்.

சங்கத் தமிழ் முழங்கும் தங்கத் தாரகையே, சங்கரன்கோவில் வெற்றியின் சரித்திரமே; நான் வெல்வதற்குக் காரணம் உங்கள் மகத்துவமே; குடும்ப ஆட்சி மாற்றத்திற்காக தவமிருந்த தமிழர்களை வரம் கொடுத்து வாழ வைக்கும் வரலட்சுமியே; முகராசி கொண்ட மகராசியே; (மேசையைத் தட்டும் ஒலி) வளமான தமிழகத்தின் பொற்கால தலைவியே; பாரதி கண்ட புதுமைப் பெண்ணே; பாரதம் இனி உங்கள் பின்னே; மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தந்த அன்னையே; இன்றைய தமிழகமே, நாளை பாரதமே; (மேசையைத் தட்டும் ஒலி) உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவியே; தமிழகத்தின் குலவிளக்கே, பாரதத்தின் ஒளி விளக்கே; மாற்றம் தந்த மகராசியே, தமிழகத்திற்கு ஏற்றம் தருவது உங்கள் கைராசியே; அன்னையே, சாதனை படைக்கும் சரித்திரத் தலைவியே; நாடும் நமதே, நாளையும் நமதே, நாற்பதும் நமதே, நாடாளுமன்றமும் நமதே. (மேசையைத் தட்டும் ஒலி) அகவை 65-ல் இந்தியாவை ஆளப் போகும் அன்னையே; (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வுலக சரித்திரம் நம்பியிருப்பது உங்களையே!

மக்கள் நலனுக்காக நாள் ஒன்றுக்கு 22 மணி நேரம் கண் விழித்து, மக்களின் நலனுக்காக அயராது பாடுபட்டு வரும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கடந்த பத்தாண்டு கால பொற்கால ஆட்சியிலும், தற்போது அம்மாவின் ஆட்சிக் காலத்திலும் தமிழ்நாட்டு மக்களுக்காக வழங்கப்பட்டுள்ள எண்ணற்ற திட்டங்கள், எண்ணிலடங்கா திட்டங்கள், மக்கள் நலத் திட்டப் பணிகள் சிலவற்றை இங்கு கூற விரும்புகிறேன்.

[திருமதி ச. முத்துசெல்வி] [2012 மார்ச் 29

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்று பச்சிளம் குழந்தைகளின் பசிப் பிணி போக்கிட சத்துணவுத் திட்டம் கொடுத்த டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் வழியில், ஆலயங்களில் பசி போக்கும் வகையில் பக்தர்களின் பசி போக்கிட அன்னதானத் திட்டம் கொடுத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆதரவற்ற பச்சிளம் குழந்தைகளை பேணிக் காத்திடும் வகையில் விரிவுபடுத்தப்பட்ட அரசு தொட்டில் குழந்தைத் திட்டம் கொடுத்த தென்னகத்து அன்னை தெரசா டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவ மாணவியர் நலன் கருதி, தன்னுடைய பத்தாண்டு கால பொற்கால ஆட்சியில் விலையில்லா சைக்கிள் திட்டம் கொடுத்து, தற்போது 40 ஆயிரம் மதிப்பீட்டிலான விலையில்லா மடிக் கணினி கொடுத்து கல்வித் துறையில் கலங்கரை விளக்கமாக தமிழகத்தில் பவனி வருபவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

பள்ளிப் படிப்பை முடித்து 18 வயது நிரம்பிய பெண்களுக்கான திருமண உதவித் தொகையை 25 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கி, அரை பவுன் தங்க நாணயம் வழங்கி, பட்டப் படிப்பு முடித்த பெண்களுக்கான திருமண உதவித் தொகையை 50 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கி, அரை பவுன் தங்க நாணயம் வழங்க உத்தரவிட்ட வள்ளல் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

விலையில்லா மிக்ஸி, கிரைண்டர் மற்றும் மின் விசிறி வழங்கிய தங்கத் தாரகை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொன் மலர் பாதங்களில் எனது சார்பாகவும், சங்கரன்கோவில் சட்டமன்ற மக்களின் சார்பாகவும் கோடானுகோடி நன்றியினை மாண்புமிகு அம்மா அவர்களின் பொன் மலர் பாதங்களுக்கு சமர்ப்பணம் செய்கின்றேன்.

அம்மாவின் கடந்த 10 ஆண்டுக் கால பொற்கால ஆட்சியில் நீலக் கடலில் நீந்திவரும் மீனவர்களின் நலன் கருதி கடலோரப் பாதுகாப்பினை வலுப்படுத்தி, மீனவர்களின் குடும்பங்களில் விளக்கேற்றி வைத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.



2012 மார்ச் 29] [திருமதி ச. முத்துசெல்வி]

தமிழகத்தின் தானியக் களஞ்சியமாக விளங்கக்கூடிய தஞ்சை, திருச்சி, திருவாரூர், நாகை மாவட்டங்களில் வாழ்கின்ற கோடானுகோடி விவசாயப் பெருங்குடி மக்களின் உயிர்நாடியான காவிரி நீர்ப் பிரச்சினையில் 'தமிழக உரிமையை எள்ளளவும் விட்டுக் கொடுக்க மாட்டேன்' என்று சூளுரைத்து, கடந்த 10 ஆண்டுக் கால பொற்கால ஆட்சியில் வங்கக் கடலோரத்தில் துயிலுறங்கும் தங்கத் தலைவர் சமாதி அருகே உண்ணாவிரதம் மேற்கொண்டு, உண்ணா நோன்பு என்ற சொல்லுக்கு இலக்கணத்தை உலகிற்கு உணர்த்தியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2-20

எதிர்த்து நின்ற எதிர்க்கட்சியினர் அனைவரையும் டெபாசிட் இழக்கச் செய்து (மேசையைத் தட்டும் ஒலி) என்னை வெற்றி பெறச் செய்து இந்த மாமன்றத்திற்கு அழைத்து வந்த எனது சங்கரன்கோவில் தொகுதி மக்களுக்கு நன்றிக் கடன் பட்டிருக்கிறேன். இம்மாமன்றத்தில் அவர்களுக்கு கோடானுகோடி நன்றிகளைச் சமர்ப்பிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும் எனது தொகுதி மக்களுக்காக பாடுபட காத்துக் கொண்டிருக்கிறேன் என்பதையும் இந்த மாமன்றத்தில் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனது தொகுதி மக்களின் கோரிக்கைகளை இந்த மாமன்றத்தில் பதிவு செய்கிறேன். சங்கரன்கோவில் தொகுதியில் சங்கரநாராயணன் திருக்கோயில் உள்ளது. இக்கோயில், பக்தகோடிகள் அடிக்கடி அதிகம் கூடுகின்ற பகுதி. இங்கு ஆடித்தபசு திருவிழா மிக விமரிசையாக நடைபெறும். எனவே, இப்பகுதியை சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டும் என்று கேட்டு இம்மாமன்றத்தில் பதிவு செய்கிறேன். மேலும், இதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் கொண்டு செல்கிறேன்.

சங்கரன்கோவில் தொகுதியில் அரசு கலைக் கல்லூரி அமைக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் தேர்தல் வாக்குறுதியாக அறிவித்திருந்தார்கள். அதனை அரசு மகளிர் கலைக் கல்லூரியாக அறிவிக்க வேண்டும் என்று இத்தருணத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

[2012 மார்ச் 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பரவாயில்லை. நீங்கள் நேரம் எடுத்துக்கொண்டு பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினரின் பேச்சு கன்னிப் பேச்சு என்பதால் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் நீங்கள் எடுத்துக்கொள்ளலாம். (மேசையைத் தட்டும் ஒலி)

**திருமதி ச. முத்துசெல்வி:** சங்கரன்கோவிலிலிருந்து ராஜபாளையம் செல்லும் பாதையில் இரயில்வே மேம்பாலம் ஒன்று அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். அப்பகுதியில் உள்ள 5 பள்ளிகளின் மாணவ, மாணவிகள் மற்றும் பொதுமக்கள் இரயில் பாதையைக் கடந்து செல்ல வேண்டியுள்ளதால் ஒரு இரயில்வே மேம்பாலம் அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

சங்கரன்கோவில் டவுனுக்குள் சங்கரன்கோவில் காவல் நிலையம் அமைய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். தற்போது அடுத்த பஞ்சாயத்துக்குரிய இடத்தில் அந்தக் காவல் நிலையம் அமைந்துள்ளது. எனவே, அதனை சங்கரன்கோவில் டவுனிலிலேயே அமைத்துத் தந்தால் அப்பகுதி மக்களுக்கு வசதியாக இருக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், சங்கரன்கோவில் பகுதியில் ஒரு தொழிற்சாலை அமைத்துக் கொடுத்தால் இங்கிருந்து வெளியில் சென்று வேலை பார்ப்பவர்களுக்கு வசதியாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கு ஒரு கோட்டாட்சியர் அலுவலகம் அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். அதுபோல், வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் ஒன்றினையும் அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

சங்கரன்கோவில் தொகுதிக்குட்பட்ட குருவிக்குளம் ஒன்றியத்தில் அமைந்துள்ள திருவேங்கடம் பகுதி 4,000 மக்கள் தொகைகொண்ட ஊராக அமைந்துள்ளது. இங்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், இங்குள்ள மக்கள் கலிங்கப்பட்டி அல்லது குருவிக்குளம் பகுதிகளுக்கு சுமார் 20 கி.மீ. தூரம் தாண்டிச் செல்ல வேண்டியுள்ளது. எனவே, இப்பகுதியில் அவர்களுக்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துக் கொடுத்தால் அவர்களுக்குப் பயனுள்ள வகையில் இருக்கும் என்பதை இத்தருணத்தில் சொல்ல விரும்புகிறேன்.



2012 மார்ச் 29] *[திருமதி ச. முத்துசெல்வி]*

சங்கரன்கோவில் பகுதியில் கறிக்கோழி மற்றும் முட்டைக் கோழிப் பண்ணை அமைத்துத் தரப்படும் என்று அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு இத்தருணத்தில் கோடானுகோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றி சொல்லி முடிக்கட்டும்.

**திருமதி ச. முத்துசெல்வி:** இம்மாமன்றத்திலே எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் இத்தருணத்தில் கோடானுகோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.

**திரு. கு. லிங்கமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2012-2013 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அளித்துள்ளார்கள். இந்த பட்ஜெட் குறிப்பாக ஏழையெளிய கிராமப்புற விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், நகர்ப்புற ஏழை மக்கள் போன்ற நலிவுற்ற மக்களை மனதில்கொண்டு தயாரிக்கப்பட்ட பட்ஜெட் என்பதால், இந்திய கம்யூனிஸ்டு கட்சி இதனை வரவேற்கிறது.

'தானே' புயலால் அழிந்த குடிசை வீடுகளுக்குப் பதிலாக ஒரு இலட்சம் கான்கிரீட் வீடுகள் கட்ட 1,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருப்பது வரவேற்புக்குரியது.

பிற்பகல் 2-25

மேலும், தமிழகம் முழுவதும் 2012-2013 ஆம் நிதியாண்டில் ஒரு இலட்சம் மனைப் பட்டாக்கள் வழுங்குவதும், 13 மாவட்டங்களில், 13 கோடி ரூபாய் செலவில் ஓட்டுனர் பயிற்சிப் பள்ளி அமைப்பதும் வரவேற்பிற்குரியது. 8 ஆம் வகுப்பு படித்தவர்களுக்கு மட்டும் ஓட்டுனர் உரிமம் என்பதை மாற்றி, ஓட்டுனர் பயிற்சி பெற்ற அனைவருக்கும் ஓட்டுனர் உரிமம் வழங்கக் கோருகிறேன்.

[திரு. கு. லிங்கமுத்து] [2012 மார்ச் 29

இவ்வாண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் வேளாண் துறைக்கு 3,804 கோடி ரூபாய் . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 8 ஆம் வகுப்பு படித்தவர்களுக்கு மட்டும் ஓட்டுனர் உரிமம் வழங்கப்படுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். இது முழுக்க முழுக்க மத்திய அரசு கொண்டுவந்த சட்டம். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக தமிழகத்தினுடைய முதலமைச்சராக பொறுப்பேற்ற பின்னர், 8 ஆம் வகுப்பு பயின்றவர்களுக்கு ஓட்டுனர் உரிமம் வழங்கும் நடைமுறையை, மாற்றியமைக்க வேண்டுமென்று மத்திய அரசுக்கு துறையின் மூலமாகக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.

**திரு. கு. லிங்கமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. இவ்வாண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் வேளாண்மைத் துறைக்கு 3,804.96 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருப்பது வரவேற்கத்தக்கது. திருந்திய நெல் சாகுபடி பரப்பை அதிகரிப்பதும், நவீன கரும்பு சாகுபடியும், திருந்திய பயறு சாகுபடியும், அதற்கு தரமான வீரிய ரக விதைகள் உற்பத்தி செய்து வழங்குவதும், வேளாண் உற்பத்தியைப் பெருக்கும். பயிர் சாகுபடி, சந்தை நிலவரம் ஆகிய தகவல்கள் வழங்கும் வர்த்தக மேம்பாட்டு மையம் திருச்சியில் அமைவது, விவசாயிகளுக்கு உதவிகரமாக இருக்கும்.

வெள்ளம், வறட்சி, இயற்கை போன்ற இடர்பாடுகளினால் ஏற்படும் இழப்பிற்கு இழப்பீட்டுத் தொகை பெற பயிர்க் காப்பீட்டில் விவசாயிகளைச் சேர்ப்பதும், ஒவ்வொரு ஆண்டும் காப்பீட்டிற்காக அரசு நிதியை உயர்த்தி ஒதுக்குவதும் விவசாயிகளைப் பாதுகாக்கும் நடவடிக்கையாகும். நீர் மேலாண்மையையும், பயிர் பலவகைப்படுத்துதலையும் ஊக்குவிக்க சொட்டு நீர்ப் பாசனம் அல்லது நுண்ணீர்ப் பாசனத்திற்கு சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியம், மற்ற விவசாயிகளுக்கு



2012 மார்ச் 29] [திரு. கு. லிங்கமுத்து]

75 சதவீத மானியம் அளிப்பது வரவேற்கத்தக்கது. நிலத்திற்கு நீர் பாய்ச்சுதலில் விவசாயிகளுக்குள்ள கடின உழைப்பைக் குறைக்க வேண்டியுள்ளது. இரவு நேரங்களில் மின்சாரம் வழங்காமல் பகலில் வழங்கினால் பாம்பு போன்ற விஷ ஜந்துக்களின் கடிகளிலிருந்து அவர்கள் பாதுகாக்கப்படுவார்கள்.

உரங்கள் மீதான மதிப்புக் கூட்டு வரியை மாநில அரசு குறைப்பதால் விவசாயிகள் ஓரளவிற்கு விலையேற்றத்திலிருந்து பாதுகாக்கப்படுவார்கள். முறையாகப் பயிர்க் கடன் திருப்பிச் செலுத்துபவர்களுக்கு வட்டித் தள்ளுபடி என்பது விவசாயிகளுக்கு ஆறுதலான விஷயம். நெல்லுக்கு ஆதரவு விலையை மேலும் கூடுதலாக உயர்த்தி குவிண்டாலுக்கு 2,000 ரூபாய் அளிப்பதும், கரும்புக்கு வெட்டுக் கூலியுடன் 3,000 ரூபாய் அளித்தால் விவசாயிகள் மேலும் ஆறுதல் அடைவார்கள். நன்றியுடன் இருப்பார்கள்.

அனைத்து அட்டைதாரர்களுக்கும் விலையில்லா அரிசி, விலையில்லா மிக்ஸி, கிரைண்டர், மின் விசிறி அளிப்பதுடன், பசுமை வீடுகள் 1.85 இலட்சம் சூரிய விளக்குகளுடன் கட்டித்தருவது, கறவை மாடுகள், ஆடுகள் விலையில்லாமல் வழங்குவது போன்ற திட்டங்களினால் இந்த மக்கள் பட்டினியிலிருந்து மீட்கப்பட்டுள்ளனர். வேலை தேடி வெளி மாநிலம் சென்றவர்களும் சொந்த வீட்டிற்கு திரும்பிக் கொண்டிருக்கின்றார்கள். இந்த அரசையும், தமிழக முதல்வர் அவர்களையும் அந்தக் குடும்பங்கள் மனதார வாழ்த்திக்கொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

மாநிலத்தில் கால்நடைகள் பெருகுகின்ற அதே நேரத்தில் 20 புதிய கால்நடை மருந்தகங்களையும், 50 கால்நடை துணை மருந்தகங்களையும் தொடங்க அரசு அறிவித்திருக்கிறது. குடியாத்தம் தொகுதியில் அமைந்துள்ள அரவட்லா மலைக் கிராமத்தில் விவசாயத்தைவிட கால்நடை வளர்க்கும் தொழில் அதிகமாக நடக்கின்றது. பால் உற்பத்தி அதிகமாக நடைபெறும் இந்தக் கிராமத்தில் கால்நடைகளுக்கு நோய் வந்தால் அந்த மலையை விட்டு கீழே இறங்கி நெடுந்தொலைவு 6, 7 கிலோ மீட்டர் ஓட்டிச் சென்று சிகிச்சை அளிக்க வேண்டியுள்ளது. எனவே, அரவட்லா மலை கிராமத்திற்கு ஒரு கால்நடை துணை மருந்தகம் அமைத்துத் தரக் கோருகிறேன். எழில்மிகு அரவட்லா மலையை சுற்றுலாத் தலமாக அறிவிக்கக் கோருகிறேன்.

[திரு. கு. லிங்கமுத்து] [2012 மார்ச் 29

பிற்பகல் 2-30

ஆதி திராவிடர் மேம்பாட்டிற்கு இந்த நிதியாண்டில் 6,108.60 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருப்பது மொத்த நிதிநிலையில் 21.82% சதம் என்பது வரவேற்கத்தக்கது.

தமிழக வரலாற்றில் அங்கீகரிக்கப்பட்ட சுயநிதிக் கல்லூரிகளின்மூலம் இலவச மற்றும் கட்டணம் செலுத்தும் இடங்களில் இடம்பெற்று பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ, மாணவியருக்கு மெட்ரிக் படிப்புக்குமேல் உள்ள படிப்புக்கு வழங்கப்படும் கல்வித் தொகை வழங்கப்படும் என மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்திருப்பது ஆதி திராவிடர் மாணவ, மாணவியர்கள் கல்வியில் முன்னேற இந்த அரசும், முதல்வரும் கொண்டுள்ள அக்கறையைக் காட்டுகிறது. இந்தத் திட்டங்கள் அனைத்தும் முறையாக இந்த மாணவர்களுக்கும், மக்களுக்கும் சென்று சேருகின்றனவா என்று அரசு கண்காணிக்க வேண்டும்.

தொகுதி சீரமைப்பிற்குப்பின் குடியாத்தம் தொகுதியில் ஒரு கல்லூரிகூட இல்லை. எனவே, குடியாத்தம் தொகுதிக்கு ஒரு கலைக் கல்லூரி பேரணாம்பட்டில் அமைக்கக் கோருகிறேன்.

நீர்வள மேலாண்மைக்கு ரூ.3,624.72 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மாநில நதிகளை இணைப்பது புதிய உத்வேகம் பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சியானது.

பழைய பேரணாம்பட்டு தொகுதி தற்போதைய குடியாத்தம் தொகுதியில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் கடந்த முறை தொடங்கப்பட்ட பத்திரபல்லி அணை கட்டி முடிக்கப்படாமல் பாதியில் நிறுத்தப்பட்டுள்ளது. தற்போது, அதைக் கட்டி முடிக்க ஆவன செய்யக் கோருகிறேன்.

கடந்த பிப்ரவரி 24 ஆம் தேதி குடியாத்தம் மோர்தான் அணை திறக்கப்பட்டது. இதனால், குடியாத்தம் நகரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கு ஓரளவிற்குக் குடிநீர் வருகின்றது. அணை திறப்பிற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2012 மார்ச் 29] [திரு. கு. லிங்கமுத்து]

போக்குவரத்துத் துறைக்கு 3,000 புதிய பேருந்துகள் வாங்குவது வரவேற்கத்தக்கது. கிராமப்புறங்களுக்கு பேருந்துகளை அதிகமாக இயக்கக் கோருகிறேன். குடியாத்தம் பகுதியில் போக்குவரத்து நெரிசலைத் தீர்க்க குடியாத்தம் நகருக்கு புறவழிச்சாலை அமைக்கக் கோருகிறேன்.

குடியாத்தம் தொகுதி, பேரணாம்பட்டு நகரம் மாநிலத்தின் எல்லையில் அமைந்திருப்பதால், கர்நாடகா, ஆந்திரா செல்லும் பயணிகளும், அங்கிருந்து வரும் பயணிகளும் பேரணாம்பட்டு பஸ் நிலையத்தில் தங்கிப் பயணம் செய்கின்றனர். ஆனால், போதுமான அளவில் இங்கு பஸ் நிலையம் இல்லை. எனவே, பேரணாம்பட்டு நகரத்தில் புதிய பஸ் நிலையம் அமைக்கக் கோருகிறேன். இதற்குரிய இடமும் இருக்கின்றது.

பெருகிவரும் மின் தேவையைக் கருத்தில்கொண்டு உடன்குடி அனல் மின் உற்பத்திக்கு ரூ.8,000 கோடி ஒதுக்கியது வரவேற்கத்தக்கது. புதிய மின் உற்பத்தித் திட்டங்களுக்குப் பங்கு மூலதனமாக ரூ.1,500 கோடி ரூபாயும், தமிழ்நாடு மின் உற்பத்திப் பகிர்மானக் கழகத்திற்கு மானியமாக ரூ.2,058.19 கோடி அளிப்பது, மின் சேமிப்பிற்காக 14.62 இலட்சம் குடிசை வீடுகளுக்கு CFL பல்பு வழங்குவது, காற்றாலை மின் உற்பத்திக்கு ஊக்கம் அளிப்பது, தெரு விளக்குகள் சூரிய மின் சக்தி விளக்குகளாக மாற்றுவது, பசுமை வீடுகளுக்குச் சூரிய சக்தி மின் விளக்குகள் அமைப்பது அனைத்தும் மாநில மக்களின் மின் நுகர்வைப் பூர்த்தி செய்ய எடுக்கின்ற முயற்சி என்பதால் இவற்றை வரவேற்கின்றோம்.

கூட்டுறவு வீட்டு வசதிக் கடன் பெற்றவர்கள், அசலுக்கு மேலும் இரண்டு மடங்குக்கூட கடனைக் கட்டித் திருப்பியிருக்கின்றார்கள். எனவே, இதைக் கருத்தில்கொண்டு அபராத வட்டியைத் தள்ளுபடி செய்வதுடன், வட்டியையும் தள்ளுபடி செய்து கடனை மட்டும் வசூல் செய்ய ஆவன செய்யக் கோருகிறேன்.

கோயில் இடங்களில் குடியிருப்பவர்களுக்கு மனைப் பட்டா வழங்கவும், கோயில் இடங்களில் விவசாயம் செய்யும் சிறு, குறு விவசாயிகளுக்குப் பட்டா வழங்கினால் அவர்கள் இல்லங்களில் தமிழக முதல்வர் அவர்கள் விளக்கேற்றி வைத்ததுபோல் மகிழ்வார்கள். அன்னதானம் திட்டம், வயது முதிர்ந்த ஏழை மக்களுடைய பசியைப் போக்கும் திட்டம் என்பதால் மனதார வரவேற்கின்றோம்.

[திரு. கு. லிங்கமுத்து] [2012 மார்ச் 29

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விரிவாக்கப்பட்ட காப்பீட்டுத் திட்டத்தில் 1,000 நோய்களுக்கு மேல் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிப்பது, நோய் கண்டறிவதற்கு முன்னும், நோய் கண்டறிந்த பின்னும் தொடர் சிகிச்சை அளிப்பது சிறப்பானதாகும்.

பிற்பகல் 2-35

டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறுத் திட்டத்தில் 12,000 ரூபாயாக நிதி உதவியை உயர்த்தியது தாய்-சேய் நலன் காக்க உதவும். குடியாத்தம் தொகுதியில் 2 பொது மருத்துவமனைகளும், 2 ஆரம்ப சுகாதார நிலையங்களும் உள்ளன. இந்த மருத்துவமனைகளில் போதிய மருத்துவர்களையும், செவிலியர்களையும், மருந்தாளுநர்களையும், நியமிக்கவும் மற்ற பிரிவுகளிலுள்ள காலிப் பணியிடங்களை நிரப்பவும் கோருகிறேன்.

பள்ளிக் கல்வித் துறைக்கு இந்நிதியாண்டில் ரூ.14,552.82 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மாணவ, மாணவியர்களுக்கு 4 செட் சீருடை, 2 ஜோடி காலணி, புத்தகப் பைகள், ஜியாமெட்ரி பெட்டிகள், வண்ண பென்சில்கள், வரைபடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் என வழங்குவதும், விடுதிகளில் தங்கிப் படிக்கும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபின மாணவ, மாணவிகளுக்கு உணவுப் படியை உயர்த்துவதும், படுத்து உறங்க கட்டில்களும் வழங்குவதுடன் தேர்ச்சி விகிதத்தை ஊக்குவிக்க ஊக்கத் தொகையாக வைப்பு நிதியும், மடிக் கணினி வழங்குதல் ஆகிய இவையனைத்தும் மாணவ, மாணவிகளின் கல்வி தரத்தை உயர்த்தும் செயல்களாகும்.

வருடத்திற்கு 60 ஆயிரம் ஏழைகளுக்கு பசுமை வீடுகள் கட்டி தருவதும், இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தில் மத்திய அரசின் 33,750 ரூபாயுடன் தமிழக அரசு 66,250 ரூபாய் சேர்த்து வழங்கி 1 இலட்சத்து 553 வீடுகள் வருடத்திற்குக் கட்டுவதும் ஒரு மகத்தான திட்டமாகும். நகர்ப்புற கட்டமைப்புகளை மேம்படுத்த குறைந்த வட்டியில் கடன் வழங்குவதும் நகர்ப்புறத்தை மேம்படுத்தும் என்று கூறி வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. தமிழ்ச்செல்வன் அவர்கள்.



2012 மார்ச் 29]

**திரு. இரா. தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறைஎன்று வைக்கப் படும்”

என்ற வள்ளுவனின் வாய்மொழிக்கொப்ப, கழகம் என்ற ஆலயத்தின் அச்சாரமாய், ஆதாரமாய், ஆதார சுருதியாய், ஆராதனைக்குரிய தெய்வமாய், திராவிட கப்பலுக்குத் திசைகாட்டும் கலங்கரை விளக்காய், விந்தியத்திற்கு தெற்கே வீசும் சந்தனக் காற்றாய், படித்தவரும், பாமரரும் கைகூப்பித் தொழுகின்ற கன்னித் தமிழ் வடிவாய், புத்தனுக்கு பின்னர் இவ்வுலகு கண்ட பேரொளியாய், அகிலமே போற்றும்வண்ணம் அழகான ஆட்சியை நடத்திடும் அதிசயமே, அசந்து போகும் எங்கள் அதிசயமே, அம்மா.

பெரம்பலூர் நகரிலிருந்து புறப்பட்டு டில்லி மாநகரத்திலே 2ஜி அலைக்கற்றை வரிசையில் ஒரு இலட்சத்து எண்பதாயிரம் கோடி ரூபாயைக் கொள்ளை அடித்தவர்களைப் பார்த்து பொட்டல் காட்டில் பூத்திட்ட புதுமலர் என்றும், தலித்துகளின் தகத்தாய கதிரவன் என்றும் போற்றி புகழுகின்றவர்கள் மத்தியில், கழகமே கோயில், அம்மாவே என் தெய்வம் என, விசுவாசமே என் சுவாசம் என பெரம்பலூர் மாவட்டத்தில் 20 ஆண்டுக் காலம் அம்மாவினுடைய நம்பிக்கைக்கும், விசுவாசத்திற்கும் எடுத்துக்காட்டாக விளங்கிய இந்த கடைக்கோடி மாணவனைக் கண்டெடுத்து சட்டப் பேரவையினுடைய பெரம்பலூர் தனித் தொகுதி வேட்பாளராக அறிவித்து, நேரிலே வருகை தந்து, வாக்குகளைக் கேட்டு, 20 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வரம் தந்த எங்கள் அன்னையே, வணங்குகிறேன் தாழ்பணிந்து உம்மையே, எனச் சொல்லி, இந்த சாதாரண தொண்டனை வெற்றி பெறச் செய்த பெரம்பலூர் வாக்காள பெருமக்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினை இத்தருணத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கழகத்தின் அடிமட்ட உறுப்பினராய் 1989-இலே இணைந்து, 1992-இலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் திருநாமத்தைத் தாங்கியிருக்கிற பேரவையினுடைய ஒன்றிய துணைச் செயலாளராய், 1998-இல் பெரம்பலூர் ஒன்றிய கழகத்தினுடைய மாவட்டப் பிரதிநிதியாய், 1999-லிருந்து 2011 வரை

[திரு. இரா. தமிழ்ச்செல்வன்] [2012 மார்ச் 29

புரட்சித் தலைவி அம்மாவின் கருணையால், கடாட்சத்தால் ஏறத்தாழ 12 ஆண்டுக் காலம் அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்களினுடைய மாணவரணி செயலாளராய் பணியாற்றும் வாய்ப்பை வழங்கிய வான்மேகம் கொண்ட எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, தங்களால் வளர்த்து ஆளாக்கப்பட்ட இந்த ஏழை மாணவனின் திருமணத்தை 22-8-2010 அன்று தங்கள் பொற்கரங்களினால் மங்கல நாணை எடுத்துத் தந்து என் வாழ்க்கையில் அகல் விளக்கை ஏற்றி வைத்தீர்கள் அம்மா! அன்றே அடைந்தேன் என் பிறவிப் பயன் தாயே!

பிற்பகல் 2-40

அனைவரும் போற்ற அரசாளும் அம்மா! ஆன்ற பெரும் திட்டங்கள் ஆக்கினீர் இன்றே! விலையில்லா திட்டங்கள் எண்ணிலாதவை, தங்கள் ஈகைப் பண்பினை எடுத்து இயம்பின. உணவு மானியத்திற்கு ரூ.4,900 கோடி. ஊக்கம் ஊட்ட பள்ளி மாணவர்களுக்கு எழிலான திட்டங்கள் ஏராளம், ஏராளம். ஏழைகளுக்கு விலையில்லா மிக்ஸி, கிரைண்டர், மின் விசிறி ஐயமின்றியே அறிவித்தீர், அழகாய் செயல்படுத்தி வருகின்றீர். ஒப்புயர்வற்ற உன்னத நிதிநிலை அறிக்கை, ஓயாது உழைப்பீர் என்பதைப் பறைசாற்றிடும். ஔவையின் ஆத்திச்சூடிபோல் அரிமா நோக்குடன் என்றுமே தாங்கள் தமிழகத்தை ஆண்டிட தரங்கம் சூழ் அரங்கன் தன்னை தலை வணங்கி வேண்டுகிறேன் அம்மா!

அம்மா! வெற்றிமீது வெற்றி வந்து கழகத்தைச் சாரும். அதை வாங்கித் தந்த பெருமையெல்லாம் எங்கள் தாயே உங்களைச் சேரும். (மேசையைத் தட்டும் ஒலி)

அம்மா, கட்டை விரலை உயர்த்தியவர்கள், காலரைத் தூக்கியவர்கள் எல்லாம் சங்கரன்கோவிலில் காணாமல் போய்விட்டார்கள்.

அம்மா, நீங்கள் போடும் அரசியல் கணக்கு Logarithm சூத்திரம், அதை எதிர்கொள்ள திராணியற்றவர்கள் கொள்கிறார்கள் நம்மேல் வீண் ஆத்திரம்.

அம்மா, நீங்கள் ஆள்காட்டி விரலசைத்தால் அதுதான் எங்களுக்கு அரசு ஆணை. தங்கள் முன் கைகட்டி வணங்கும் சேனை, நீங்கள் சுட்டு விரல் அசைத்ததனால், அம்மா நீங்கள்



2012 மார்ச் 29] [திரு. இரா. தமிழ்ச்செல்வன்]

சுட்டுவிரல் அசைத்ததனால் அந்தச் சூரியனும் அடங்கியது, சூழ்ச்சிக்காரர்களின் கூட்டமும் முடங்கியது. எங்கள் கைகள் தேனீர் போடுவதற்கு மட்டுமல்ல, எம் தேசத்தையும் ஆள முடியும் என்பதை நிரூபித்து ஆணாதிக்க சமுதாயத்தை அடித்து, நொறுக்கி அதல பாதாளத்திற்குத் தள்ளி, நானிலம் போற்றும் நல் ஆட்சியை முக்கனி சுவையோடு மூன்றாம் முறை வென்ற எங்கள் முகவரியே, அம்மா!

ஆணின் விலா எலும்பிலிருந்து பெண் பிறந்திருந்தாலும் அம்மா, ஆணின் விலா எலும்பிலிருந்து பெண் பிறந்தாலும் ஆணை விழாமல் தாங்கிப் பிடிக்கிற முதுகெலும்பு பெண் என்பதனை நிரூபிக்கின்ற வகையில் மகளிர் மேம்பாடும், குழந்தை நலன் காத்தலும், அம்மா தங்களின் உள்ளம் கவர்ந்த பணிகள் என்பதனாலே, பெண் கல்வியை ஊக்குவிக்கும் பொருட்டு தாயுள்ளத்தோடு 10 ஆம் வகுப்பு படித்த ஏழைப் பெண்ணின் திருமணத்திற்கு, தாலிக்கு 4 கிராம் தங்கம். அதனுடன் 25 ஆயிரம் ரொக்கம். பட்டப் படிப்பு, பட்டய மேற்படிப்பு படித்த பெண்ணின் திருமணத்திற்கு 50 ஆயிரம் ரொக்கம் அதனுடன் 4 கிராம் தங்கம் என 10 மாதங்களில் எங்கள் அம்மாவின் பொற்கால ஆட்சியில் 69,892 ஏழைக் குடும்பங்களுக்கு ரூ.748.64 கோடி செலவிடப்பட்டிருக்கிறது, நானிலமே இன்று போற்றிப் புகழ்ந்து கொண்டிருக்கிறது. 2012-2013 ஆம் நிதியாண்டிற்கு 748.39 கோடி ரூபாய் ஒதுக்கி சமூக நீதி காத்த வீராங்கனையாய்த் திகழ்கின்றீர்கள் அம்மா!

பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்திற்கு 105 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்து பெண் குலத்தின் பொன் விளக்காய் திகழ்கின்றீர் அம்மா!

பெரம்பலூர் நகரில் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி ஒன்று அமைத்துத் தாருங்கள் அம்மா!

தொலைநோக்குத் திட்டம் 2023. அடுத்த தேர்தலைப் பற்றி சிந்திப்பவன் அரசியல்வாதி. அடுத்த தலைமுறையைப் பற்றி சிந்திப்பவர் அரசியல் ஞானி என்ற மூதோரின் வாக்கிற்கிணங்க தாய்த் தமிழகத்தை மிகுந்த வளம் கொழிக்கும் முதன்மை மாநிலமாக மாற்றிடத் தொலைநோக்கும், குறிப்பிட்ட இலக்கை நோக்கிக் கொண்டு செயல்படும் வழிமுறையும் தேவைப்படுகின்றன எதிர்காலத்திற்கு என்பதனை உணர்ந்து, இந்தச் சவால்களை

[திரு. இரா. தமிழ்ச்செல்வன்] [2012 மார்ச் 29

எதிர்கொள்ள இரண்டு ஐந்தாண்டுத் திட்ட காலவரம்பை கருத்திலே கொண்டு தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023 என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டத்தை அம்மா நிதிநிலை அறிக்கையிலே தீட்டியிருக்கிறீர்கள்.

தனி நபர் வருவாயை ஆறு மடங்காக உயர்த்தவும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியின் மூலமாகத் தமிழகத்தை வறுமையற்ற மாநிலமாக மாற்றவும், மிகச் சிறந்த கட்டமைப்பு வசதிகளையும், மனித வள மேம்பாட்டுக் குறியீடுகளில் முதன்மையாகவும் இந்த உயரிய இலக்கை அடைய தெளிவான திட்டம்தான் மாண்புமிகு அம்மா உங்களின் சீரிய சிந்தனையில் உதித்திட்ட திட்டமாகும்.

உற்பத்தித் துறையின் பங்கினை அதிகரிக்கவும், சிறு மற்றும் நடுத்தர தொழில் துறைகளை எழுச்சி பெறச் செய்யவும், வேளாண் உற்பத்தியை அதிகரித்து தமிழகத்தை அறிவுசார் தலைநகரமாக்கவும், புதுமைகளைப் படைத்திடும் மையமாகவும் (Innovation hub) முன்னிலைப்படுத்தி, பொருளாதாரத்தை வேகமாக வளர்ச்சியடையச் செய்யவும், பெரும் மாற்றங்களை ஏற்படுத்தவும், 15 இலட்சம் கோடி தேவை எனக் கணக்கிடப்பட்டு தமிழ்நாடு கட்டமைப்பு மேம்பாட்டு நிதிக்காக அம்மா அள்ளித் தந்திருக்கிறீர்கள் 1,000/- கோடி ரூபாயை. 2012- 2013 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கீடு செய்துள்ள தொலைநோக்குத் திட்டத்தை நாட்டோரும், நல்மனம் படைத்தோரும் தகைசால் பெரியோரும் போற்றிப் புகழ்கின்றனர் அம்மா.

பிற்பகல் 2-45

ஆதி திராவிட மக்களின் ஓட்டுக்காக மட்டுமே நான் ஆதி திராவிட மக்களின் சம்மந்தி என வாய் ஜாலம் பேசி அம்மக்களை அவதியுற வைத்தவர்கள் மத்தியில், 'கலங்காதே, அம்மா நான் இருக்கின்றேன்' என நேசக் கரம் நீட்டி, அன்பு கூட்டி, புயல் வேகத்தின் செயல் தலைவராய், செந்தமிழ் நாட்டின் முதல்வராய், பேரவையை அலங்கரிக்கும் ஆனிப்பொன் தங்கமே, ஆதி திராவிட மக்களைக் காத்திடும் சிங்கமே!

2012-2013 ஆம் நிதியாண்டு வரவு-செலவுத் திட்டத்தில், பட்டியல் இனத்தவருக்கான துணைத் திட்டத்திற்காக இதுவரை எந்த அரசும், இந்திய துணைக் கண்டத்திலே, எந்த மாநிலமும் ஒதுக்காத



2012 மார்ச் 29] [திரு. இரா. தமிழ்ச்செல்வன்]

அளவில் 6,108.60 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருப்பதன்மூலம், ஆதி திராவிட மக்களினுடைய நம்பிக்கை நட்சத்திரமாக அம்மா நீங்கள் விளங்குகிறீர்கள் என்பதற்கு இதுவே நற்சான்றுப் பத்திரமாகும். இது மாநில ஆண்டுத்திட்ட ஒதுக்கீட்டில் 21.82 சதம் ஆகும். Pre-matric scholarship-10th படித்தவர்களுக்கும், Post-matric scholarship-கல்லூரி படித்தவர்களுக்கும் உதவித் தொகைக்கு 331.31 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது அம்மா.

தவித்த வாய்க்குத் தண்ணீர் கிடைத்ததுபோல், தாழ்ந்து கிடந்த ஆதி திராவிட மாணவர்களின் வாட்டத்தைப் போக்கும் வகையில், பன்னெடுங்காலமாய் விடுதியில் பாயில் படுத்திருந்த மாணவர்களுக்கு, பன்னெடுங்காலமாய் விடுதியில் பாயில் படுத்திருந்த ஆதி திராவிட மாணவர்களுக்கு, பார் போற்றும் கட்டிலை வழங்கிய எங்கள் பைந்தமிழ் பாரியே என்று மாண்புமிகு அம்மா அவர்களை ஆதி திராவிட சமுதாயம் வாழ்த்தி வணங்கிக்கொண்டிருக்கிறார்கள் அம்மா. தாயே, காருள்ளவரை, கடல் நீருள்ளவரை, அந்த மண்ணுள்ளவரை, இந்த விண்ணுள்ளவரை எம் ஆதி திராவிட சமுதாய மக்கள் தங்களுக்கு நன்றியுடையவர்களாக இருப்பார்கள் அம்மா.

காகிதத்தில் திட்டத்தைத் தீட்டி, காற்றிலே பறக்கவிட்டவர்கள் நடுவில், தாழாமல் தாங்குவேன் தமிழகத்தை எனக் கூறி, தாழாமல் தாங்குவேன் தமிழகத்தை எனக் கூறி, நாளும் உழைத்திடும் எங்கள் அம்மா.

> "உழுதுஉண்டு வாழ்வாரே வாழ்வார்மற்று எல்லாம்
> தொழுதுஉண்டு பின்செல் பவர்"

என்ற குறட்பாவிற்கு ஏற்ப, வேளாண்மை துறையில் வியத்தகு சாதனை படைத்துவரும் நுண்ணறிவு கொண்ட எங்கள் தாயே! நுண்ணீர்ப் பாசனத் திட்டத்தில் விவசாயிகளுக்கு 100 சதவிகிதம் மானியம்; நுண்ணீர்ப் பாசனக் கருவிகளை அவர்களே நிறுவும் நிறுவனத்தைத் தேர்ந்தெடுக்கவும், Third Party Inspection கண்காணிக்க வழிவகை செய்யும் திட்டம் போற்றுதலுக்குரியது அம்மா. வேளாண்மையில் புரட்சி ஏற்பட மாண்புமிகு அம்மா அவர்கள் 2012-2013 ஆம் ஆண்டிற்கு ரூ. 3,804.96 கோடி ஒதுக்கீடு செய்தது வேளாண்மைத் துறையில் ஒரு புரட்சியாகும். உணவு

தானிய உற்பத்தி இலக்கு 105 இலட்சம் மெட்ரிக் டன் என்பது வேளாண்மை வரலாற்றில் மற்றொரு மணி மகுடம் ஆகும்.

உணவு, உடை, உறைவிடம் இம்மூன்றும் நம் மக்களுக்குத் தேவையென அறிந்தீர்கள் அம்மா! ஆகவே, விலையில்லா அரிசியை விரைந்தே அளித்தீர் அன்று. ஏன்? "உண்டி முதற்றே உணவின் பிண்டம்" என்ற மணிமேகலை வாக்கை மாநிலத்தில் பறை சாற்றிட பரிசளித்தீர். பசி நீங்கிய மக்களைப் பார்த்து மகிழ்ந்தீர். இன்றோ, கோதுமை, ஓட்ஸ் முதலியவற்றின் மதிப்புக் கூட்டு வரியை மகிழ்வுடன் நீக்கி, மக்களின் உள்ளத்தில் இடம் பிடித்தீர். தமிழகத் தேரை என்றும் இழுத்திட நல்வடம் பிடித்தீர். ஆடையில்லா மனிதன், அரை மனிதன். அவன் அரை மனிதன் ஆகாமல், கல்வியிலும், கடமையிலும் முழு மனிதனாய் விளங்கிட "அனைவருக்கும் கல்வி இயக்கம்" கண்டு, 1,891.42 கோடி ரூபாயைச் செலவிட்டு, கடைகோடி பிள்ளைகளுக்கும் கல்வியைத் தந்தீர்கள் அம்மா! இடைநிற்றல் கல்வியில் கூடாது என்று, இளம் பிள்ளைகளுக்கு, 21.36 இலட்சம் மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் இந்த ஆண்டு 366.70 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கின்றீர்கள் அம்மா!

உடையில் ஏற்றத்தாழ்வு இருந்தால், இளம் பிஞ்சு உள்ளம் ஏங்கும் என்பதை உணர்ந்தே ஆறாம் வகுப்பு முதல் மாணவர்கள் அனைவருக்கும், முழுக்கால் சீருடையும், பெண்களுக்கு சல்வார் கமீசும் தந்திட 329.89 கோடி ரூபாய் கொடுத்து மகிழ்ந்தீர். இது மட்டுமா? ஒன்று முதல் 10 ஆம் வகுப்பு வரையிலும், விலையில்லா காலணிகள், ஒன்றாம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை புத்தகப் பை, 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயில்வோருக்கு, ஜியோமெட்ரி பெட்டிகள், ஒன்று முதல் 5 ஆம் வகுப்பு வரை பயில்வோருக்கு வண்ண பென்சில்கள், 6 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயில்வோருக்கு உலக வரைபடம் என்று எண்ணற்ற பரிசுகளை கல்வித் துறையில் கடல்போல் அள்ளித் தந்தீர் அம்மா!

பிற்பகல் 2-50

எனது பெரம்பலூர் தொகுதியில் அரசு மகளிர் கல்லூரி அமைத்திட ஆவன செய்ய வேண்டுகிறேன். பெரம்பலூர் மாவட்ட மக்களின் நீண்டநாள் கோரிக்கையான மருத்துவக் கல்லூரியை மாவட்ட ஆட்சியர் வளாகத்திலே அமைத்திடவும், பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதி மக்களின் நீண்டநாள்





கஷ்டத்தைப் போக்கும்வண்ணம் குன்னம் வட்டத்தை இரண்டாகப் பிரித்து, செட்டிகுளத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டத்தை உருவாக்கிட வேண்டும் என்றும், வேப்பந்தட்டை வட்டாரத் தலைமையிடத்தில் புதிய காவல் நிலையம் அமைத்திடவும், கிருஷ்ணாபுரத்தில் தீயணைப்பு- மீட்பு நிலையம் அமைத்திடவும், எசனையில் புதிய ஆரம்ப சுகாதார நிலையத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் கருணையோடு வழங்க வேண்டுமாய்க் கேட்டு, நாட்டு மக்களின் வாட்டத்தைப் போக்கிட விலையில்லா திட்டங்கள் பல வழங்கி, விலைமதிப்பற்ற நிதிநிலை அறிக்கை மாண்புமிகு அம்மாவின் பொற்கால ஆட்சியில் மற்றொரு மைல் கல் எனச் சொல்லி, அம்மாவின் மலர்ப் பாதம் வணங்கி அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2012-2013 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீதான பொது விவாதத்தில் பேச எனக்கு வாய்ப்பளித்த எங்களுக்கு எல்லாமுமாய் இருக்கின்ற, தேசிய முற்போக்கு திராவிட கழகத் தலைவர் புரட்சிக் கலைஞர் டாக்டர் கேப்டன் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மத்திய அரசினுடைய 41 சதவீத மானியத்துடனும், மாநில அரசினுடைய 9 சதவீத மானியத்துடனும், ஜவுளிப் பூங்காக்கள் அமைக்கும் செயல் திட்டம் உள்ளது. ஆனால், அதில் தனியார்கள் 50 சதவீதப் பங்களிப்பு செய்ய வேண்டும் என்ற நிலை இருப்பதால், இத்திட்டத்தை செயல்படுத்துவதில் சிரமம் இருக்கிறது. எனவே, மாநில அரசின் பங்குத் தொகையை 34 சதவீதமாக உயர்த்தி, தனியார் பங்களிப்பை 25 சதவீதமாக்கி செயல்படுத்தினால், ஜவுளித் துறையில் ஒரு பெரிய மறுமலர்ச்சி உருவாகும். திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரியில் தொழில் பூங்கா அமைக்கப்படும் என்ற திட்டம் எந்த நிலையில் உள்ளது என்று அறிய விரும்புகின்றேன்.

மீனவர்கள் ஆழ்கடலுக்குச் சென்று மீன்பிடிக்கும்போது வழி தவறி நமது எல்லையைத் தாண்டுவதும், அதன்மூலம் அவர்களுக்கு ஆபத்து ஏற்படுவதையும் நிரந்தரமாகத் தடுப்பதற்கு திட்டங்கள்

[திரு. ர.ம. பாபு முருகவேல்] [2012 மார்ச் 29

ஏதும் இல்லை. மேலும், சூரை மீன்களைப் பிடிப்பதற்கு நிதியுதவி வழங்கினால் மட்டும் போதாது, அதற்குரிய பயிற்சியை அளிப்பதற்கான திட்டங்களை வகுக்க வேண்டும். ஆழ்கடலில் இருக்கும் மீனவர்கள் தரையில் இருப்பவர்களைத் தொடர்பு கொள்வதற்குத் தேவையான அதிநவீன தொலைத் தொடர்புச் சாதனங்கள் வழங்கப்பட வேண்டும்.

கோயில் நிலங்களை மீட்டெடுக்க ஏற்கெனவே சட்டங்கள் இருந்தாலும், இன்னும் கோயில் நிலங்கள் பல தனியார்களின் ஆக்கிரமிப்பில் உள்ளன. அவற்றை மீட்க கடுமையான நடவடிக்கை எடுக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் அறுவை சிகிச்சை செய்யும் வசதியுள்ள இடங்களில் மின் பற்றாக்குறையால் மருத்துவ அறுவை சிகிச்சை செய்வதில் தடை ஏற்படுகிறது. அந்த இடங்களைக் கண்டறிந்து, ஜெனரேட்டர் வசதி செய்து கொடுக்கவேண்டும். அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருந்து மற்றும் மாத்திரைகள் பற்றாக்குறையாக இருப்பதாகத் தெரிகிறது. அதை உடனடியாக நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர்கள் நிவாரணத் தொகையைப் பெறுவதற்கு காலதாமதம் ஏற்படுகிறது. தற்பொழுது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, மாவட்ட ஆட்சித் தலைவர் வழியாக அரசுக்கு கிடைக்கப்பெற்று உரிய நிவாரணம் கிடைக்க குறைந்தபட்சம் ஆறு மாதங்கள் ஆகின்றன. இதைத் தவிர்த்து, உடனடியாக நிவாரணத் தொகை கிடைக்கும் வகையிலும், தற்பொழுது வழங்கும் தொகையை உயர்த்தி ஒரு இலட்சம் ரூபாயாக வழங்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன்.

திருமண உதவித் தொகை பெறுவதில் D.T.Ed. என்று சொல்லப்படுகின்ற ஆசிரியர் பட்டயப் படிப்பு படித்த பெண்களுக்கு திருமண உதவித் தொகை ரூபாய் 25,000/- கொடுப்பதா அல்லது ரூபாய் 50,000/- கொடுப்பதா என்ற குழப்பம் பல இடங்களில் நிலவுகிறது. தற்பொழுது +2 படிப்புக்குச் சமமாகவே இந்தப் படிப்பு கருதப்படுகிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.



2012 மார்ச் 29]

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமண உதவித் தொகை தருவதில் எந்தவிதமான குழப்பமும் இல்லை. ஏழைப் பெண்களுக்கு திருமண உதவி 10 ஆம் வகுப்புவரை படித்திருந்தால் ரூ.25,000/-, பட்டயப் படிப்பு படித்திருந்தால் ரூ.50,000/-. இதில் எந்தக் குழப்பமும் இல்லை. பட்டயப் படிப்பு படித்திருக்கக்கூடிய சர்ட்டிபிகேட்டைக் கொண்டு வந்து காட்ட வேண்டும். அப்படிக் காட்டுகிறபோது, டிப்ளமா கோர்ஸ் அல்லது பி.ஏ., என்று என்ன பட்டம் படித்திருக்கின்றார்களோ அதை எடுத்துக் கொண்டுவந்து காட்டுகின்றபோது நிச்சயமாக அந்தத் திருமண உதவித் தொகை தாராளமாகக் கிடைக்கும். (குறுக்கீடு) எந்தவிதமான குழப்பமும் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** நான் கேட்டது ஆசிரியர் பட்டயப் படிப்பு. D.T.Ed. என்று சொல்லக்கூடிய ஆசிரியர் பட்டயப் படிப்பு. அது பட்டயப் படிப்பில் வருகிறதா அல்லது பத்தாவது வகுப்பில் வருகிறதா என்கின்ற ஒரு ஐயம் மட்டுமே. அவர்களுக்கு பன்னிரண்டாம் வகுப்பு படித்தவர்களாக மட்டும். . . (குறுக்கீடு)

பிற்பகல் 2-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) திரு. பாபு முருகவேல், உட்காருங்கள்.

***மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது ஆசிரியர் பட்டயப் படிப்பு. ஏற்கெனவே சொல்லியிருக்கிறோம். பட்டயப் படிப்பு, பட்டம் இரண்டுக்கும் அந்த உதவித் தொகை வழங்கப்படும். அது ஆசிரியர் பட்டயப் படிப்பு.

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** ஆசிரியர் பட்டயப் படிப்பு படித்தவர்களுக்கு இதுவரை 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படவில்லை என்பதுதான் என்னுடைய கருத்து. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

[2012 மார்ச் 29

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொத்தாம் பொதுவாக உறுப்பினர் குற்றச்சாட்டைச் சொல்லிக்கொண்டிருக்கிறார். எந்தப் பகுதியிலே இதுபோன்ற சான்றிதழைக் காண்பித்து திருமண உதவித் தொகை வரவில்லை என்பதைக் குறிப்பிட்டுச் சொன்னால் நடவடிக்கை எடுப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** எனது தொகுதிக்குட்பட்ட ஆரணி ஒன்றியம், மேற்கு ஆரணி ஒன்றியம், இந்த இரண்டு ஒன்றியங்களிலுமே ஆசிரியர் பட்டயப் படிப்பு படித்த பெண்கள், அவர்கள் 12 ஆம் வகுப்பு படித்தவர்களாகத்தான் கருதப்பட்டு, 25 ஆயிரம் ரூபாய்தான் திருமண உதவித் தொகை கிடைக்கக்கூடிய வழிவகை இப்போது இருக்கின்றது. அவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் கொடுப்பதற்கு தகுதியானவர்கள் அல்ல என்கின்ற ஒரு நிலையை இன்று வட்டார வள மையங்கள் எடுத்துக்கொண்டிருக்கின்றன. அதைத்தான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். (குறுக்கீடு) Teacher Training - D.T.Ed. - Diploma in Teacher Education என்பது ஆசிரியர் பட்டயப் படிப்பு. இது பட்டயப் படிப்பில் வருகின்றதா என்பதுதான் என்னுடைய ஐயம். (குறுக்கீடு) வட்டார வள மையத்தில் அவர்கள் கூறுகின்ற விளக்கம் என்னவென்று சொன்னால், பட்டயப் படிப்பு மூன்று ஆண்டுகளுக்குரியது. ஆனால், ஆசிரியர் பட்டயப் படிப்பு 2 ஆண்டுகளுக்குண்டானது. எனவே, 2 ஆண்டுகள் வரக்கூடிய பட்டயப் படிப்புக்கு 50 ஆயிரம் ரூபாய் உதவித் தொகை பெறக்கூடிய தகுதி இல்லை என்று கூறுகிறார்கள். ஆனால், ஆசிரியர் பட்டயப் படிப்பு என்பது Diploma in Teacher Education என்றுதான் கூறப்படுகிறது. எனவே, அவர்களையும் பட்டயப் படிப்பு படித்தவர்களாகக் கருதி அவர்களுக்கும் அந்த 50 ஆயிரம் ரூபாய் உதவித் தொகையை நீங்கள் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் முடிவு பெற்று பயன்பாட்டிற்கு வரும்போது வேலூர் மாவட்டம், ஆற்காடு வரை இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. சுமார் 300 மீட்டர் தூரத்தில் செயல்படும் ஆரணி குடிநீர் நீரேற்று மையத்துடன் இணைத்து



2012 மார்ச் 29] [திரு. ர.ம. பாபு முருகவேல்]

ஆரணியையும் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்துடன் இணைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

சுற்றுச்சூழலைப் பாதுகாக்க பிளாஸ்டிக் பைகள் மற்றும் பிளாஸ்டிக் கப்புகள் போன்றவற்றை முதற்கட்டமாக மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் கட்டாயமாக முற்றிலும் தடை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாநில நதிகளை இணைப்பதோடு நின்றுவிடாமல், நமது உரிமையான, காவிரி, முல்லைப் பெரியாறு, பாலாறு போன்ற நதிகளின் பிரச்சினைகளை அரசியல் ஆதாயமின்றி, மக்கள் வாழ்வாதாரத்தை மனதில் கொண்டு செயல் திட்டம் வகுத்து, உடனடியாக முடிவுக்குக் கொண்டு வர வேண்டுகின்றேன்.

வேலூர் மாவட்டம், குடியாத்தம் பகுதியில் அரசினுடைய காப்புக் காடுகளிலிருந்து செம்மரக் கட்டைகள் கடத்தப்பட்டதாக செய்திகள் வருகின்றன. இதை கடும் நடவடிக்கைமூலம் கட்டுப்படுத்த வேண்டும். மலை சார்ந்த பகுதிகளில் யானைகளால் ஏற்படும் உயிரிழப்புகளைத் தடுக்க வேண்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசினுடைய காப்புக் காடுகளிலிருந்து எந்தவிதமான செம்மரக் கட்டைகளும் கடத்தப்படவில்லை. பிற மாநிலங்களிலிருந்து கடத்தப்படுவதை தமிழகத்தினுடைய வனத் துறை அதிகாரிகள் பறிமுதல் செய்து ஒப்படைத்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** குடியாத்தம் பகுதிக்கு உட்பட்ட வனச் சரக அலுவலர், திரு. சொக்கலிங்கம் அவர்களால் கடந்த 17-3-2012 ஆம் தேதியன்று 6 நபர்கள்மீது வனப் பாதுகாப்புச் சட்டத்தின்படி செம்மரக் கடத்தல் நடந்ததாக வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. அதற்கு மறுநாளே, வேலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மூலமாக 20 காவலர்கள் அந்தப்

[திரு. ர.ம. பாபு முருகவேல்] [2012 மார்ச் 29

பகுதிக்கு அனுப்பப்பட்டு, ஆய்வு செய்தபோது வெட்டிக்கொண்டிருந்தவர்கள் அங்கிருந்து ஓடியதாக மறுநாள் தகவலும் அங்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அதன் தொடர்ச்சியாக அந்த 6 பேரும் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள். டி.என்.20-இ-9000 என்கின்ற வாகனம் பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றது. அந்த வாகனமும் நீதிமன்றத்திலே ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது என்ற செய்தியை இந்த நேரத்திலே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கடும் மின் பற்றாக்குறை இருக்கின்ற நிலையை மாற்றுகின்ற வகையில் அனைத்து மாநகராட்சி, நகராட்சி . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறையில் இவ்வாறு நடைபெற்றால் உடனடியாக வனத் துறையால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பாபு முருகவேல் அவர்கள்.

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. கடும் மின் பற்றாக்குறை இருக்கின்ற நிலையை மாற்றுகின்ற வகையில் அனைத்து மாநகராட்சி, நகராட்சிப் பகுதிகளிலுள்ள அனைத்துத் தெரு விளக்குகளையும் சூரிய ஒளியில் இயங்கும் விளக்குகளாக மாற்றுவதற்கு உடனடியான முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

கடந்த நிதிநிலை அறிக்கையில் ஆடு, மாடு வழங்கும் திட்டம், மடிக் கணினி வழங்கும் திட்டம் போன்ற திட்டங்கள் அறிவிக்கப்பட்டன. அவற்றிற்கு இந்த ஆண்டு ஒதுக்கப்படுகின்ற நிதி குறித்துத்தான் இந்த நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்படி பெரும்பாலானவை கடந்த நிதிநிலை அறிக்கையின் தொடர்ச்சியாகத்தான் உள்ளனவே தவிர, புதிய திட்டங்கள் பெரிதாக ஒன்றும் இல்லை என்று என்னுடைய கருத்தைக் கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.



2012 மார்ச் 29]

*பிற்பகல் 3-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.

***திரு. மு.வீ. கருப்பையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் கடைக்கோடித் தொண்டனான என்னை, எளியவனான என்னை, சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை, இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க புனித ஜார்ஜ் கோட்டையில் இந்த மாமன்றத்தில் உள்ள என் கன்னிப் பேச்சுக்கு வழிகாட்டி, என்னைப் பேச வைத்த குப்பையையும் கோபுரம் ஆக்கும் வல்லமை படைத்த, உலகத் தமிழர்கள் போற்றி வணங்கும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன் தாயே!

மாற்றம் தந்த மக்களின் எண்ணம் ஏற்றம்பெற எண்ணற்ற நலத் திட்டங்களைத் தீட்டி, அதை ஏழை எளிய மக்கள் வாழ, 24 மணி நேரத்தில் 22 மணி நேரம் உழைக்கும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, தமிழகத்தின் ஒளி விளக்கே, கழகத்தின் காவல் தெய்வமே, எங்கள் குல விளக்கே, குல தெய்வமே, எளிய தொண்டனான என்னை கிளைக் கழகச் செயலாளராகவும், அலங்காநல்லூர் ஒன்றியக் கழகப் பிரதிநிதியாகவும், அலங்காநல்லூர் ஒன்றியக் கழகப் பொருளாளராகவும் ஒன்றிய மீனவர் அணி செயலாளராகவும் ஆக்கிய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு கோடானுகோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகமே கோயில், மாண்புமிகு இதய தெய்வம் அம்மாவே தெய்வம் என அன்று முதல் இன்றுவரை கழகத்தில் சிந்தாமல், சிதறாமல் இருந்து, எந்த நிலையிலும் அம்மா அவர்களின் உண்மைத் தொண்டனான என்னை அடையாளம் கண்டு, நான் கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாதவண்ணம் சோழவந்தான் தொகுதியில் என்னை வேட்பாளராக அறிமுகப்படுத்தி, கடும் வெயிலையும் பொருட்படுத்தாமல், என் வெற்றிக்காக பிரச்சாரம் செய்த இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை நன்றியைக் கூறி, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆட்சிபுரியும் இந்த நாளில் நானும் இருப்பதை எண்ணி இந்தப் பிறவிப் பயனை அடைந்தேன் தாயே!

[திரு. மு.வீ. கருப்பையா] [2012 மார்ச் 29

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1972 ஆம் ஆண்டு தீயசக்தி கருணாநிதியிடம் கணக்குக் கேட்டார் என்பதற்காக பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை கட்சியைவிட்டு நீக்கினார் தீயசக்தி கருணாநிதி அவர்கள். நீக்கிய நாள் நமக்கெல்லாம் ஒரு பொன்னாள். ஏன் என்றால் தீயசக்தியிடமிருந்து வெளியேறியதால்தானே இந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் ஒரு புனித இயக்கத்தை உருவாக்க முடிந்தது. இதனால்தான் மதுரை அன்னை மீனாட்சி வாழும் மண்ணிற்கு ஒரு பெருமை உண்டு.

அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பிக்கப்பட்டவுடன் முதல் கூட்டம் அன்னை மீனாட்சியின் புதல்வன் தமிழ்க் கடவுள், எம்பெருமான் முருகன் சன்னதியான திருப்பரங்குன்றத்தில் நடத்தினார்கள். அதனால்தான் மதுரையில் அன்னை மீனாட்சியின் மண்ணிற்கு ஒரு பெருமை உண்டு, வரலாறு உண்டு. அந்தக் காலகட்டத்தில் 1973 ஆம் ஆண்டு மதுரை, திண்டுக்கல் பாராளுமன்றத் தொகுதியில் முதன்முதலாக இடைத் தேர்தலில் போட்டியிட்டு ஒரு மாபெரும் வெற்றியைப் பெற்றார்கள், அதற்கும் அன்னை மீனாட்சியின் மண்ணிற்குப் பெருமை உண்டு.

1972-ல் கட்சி ஆரம்பித்தபோதுதான் தலைமையேற்று, அதன்பிறகு 1977-ல் ஆட்சியை பிடிக்க இடைப்பட்ட காலம் 5 ஆண்டுகள் ஆனது. தமிழ்ச் சங்கம் கண்ட மூதூர் மதுரையில் அன்னை மீனாட்சியின் மண்ணில் உலகத் தமிழர்கள் அனைவரையும் ஒன்றுகூட்டி 1982 ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் அவர்கள் மாநாடு கண்டார்கள். அந்த மாநாட்டில்தான் ஆதி சக்தியின் அங்கம், அன்னை மீனாட்சியின் மறு அவதாரம் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை அறிமுகமாக்கிய இடம் மதுரை, (மேசையைத் தட்டும் ஒலி) அன்னை மீனாட்சியின் மண் என்பதிலும் பெருமையுண்டு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்லாட்சி நடத்திய சத்துணவு தந்த சரித்திர நாயகன் 1987 ஆம் ஆண்டு மன்னை விட்டு மறைந்தார்கள். சின்ன புத்தி கொண்ட சிலரால் கழகம் இரண்டுபட்டது. இரண்டுபட்டபோது 1989 ஆம் ஆண்டு மதுரை மாவட்டம், போடி தொகுதியில் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மகத்தான வெற்றி பெற்றார்கள். அதற்கும், அன்னை மீனாட்சிக்கும் ஒரு பங்கு உண்டு. அந்தக்



2012 மார்ச் 29] [திரு. மு.வீ. கருப்பையா]

காலகட்டத்தில் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் ஆனார்கள். கூட்டு சதியால் தீயசக்தி கருணாநிதி ஆட்சிக்கு வந்தார். இரண்டுபட்ட கட்சிகள் காலத்தால் இணைந்ததே கிடையாது. அப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கழகத் தொண்டர்கள் அனைவரையும் ஒன்றுகூட்டி, பற்றுகள் அற்ற பட்டமரமாய் நாம் பவனிவந்த நாளில், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கருணையால், ‘எங்கோ உருவாகி, எங்கோ பிரிந்திடும் கிளை நதிகள், கிழிசல்கள் அல்ல நாம், புரட்சித் தலைவரின் ரத்தத்தின் ரத்தமான உடன்பிறப்புகள் அல்லவா நாம்’ என்று மீண்டும் கழகத்தை ஒன்றுபடுத்தி நாடும், ஏடும் போற்றும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒன்றுபடுத்தினார்கள். அதன்பின் ஒன்றுபட்ட கழகம் மதுரை கிழக்கு, மருங்காபுரி இடைத் தேர்தலில் தீயசக்தியின் ஆட்சியில் மக்கள் அளித்த மகத்தான தீர்ப்பு தான் இரண்டு தொகுதியிலும் பெற்ற வெற்றியாகும். இரண்டு தொகுதிகள் வெற்றிக்கும், மதுரை அன்னை மீனாட்சியின் மண்ணிற்கும் பெருமை உண்டு.

பிற்பகல் 3-05

அதன்பின் 1991-ல் நடந்த சட்டமன்றப் பொதுத் தேர்தலில் மாண்புமிகு இதய தெய்வம் கழகக் காவல் தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மதுரை மாவட்டம், ஆண்டிப்பட்டி தொகுதியில் போட்டியிட்டார்கள். அந்தத் தேர்தலில் வரலாறு காணாத வெற்றியைக் கண்டார்கள்.

அண்ணாவின் கனவு, புரட்சித் தலைவரின் எண்ணம், ஈடேறும் வகையில், ஏழை எளிய மக்கள் போற்றுகின்ற வகையில் மாண்புமிகு இதய தெய்வம் கழகக் காவல் தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நல்லாட்சி அமைத்தார்கள். அதற்கும் மதுரை அன்னை மீனாட்சி மண்ணிற்கு பெருமை உண்டு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989-ல் தலைமையேற்று, 1991-ல் முதலமைச்சர் ஆனார்கள். இடைப்பட்ட காலம் இரண்டே ஆண்டுகள்தான் ஆனது.

[திரு. மு.வீ. கருப்பையா] [2012 மார்ச் 29

1972-ல் புரட்சித் தலைவர் கட்சியை ஆரம்பித்து, கட்சிக்குத் தலைமை பொறுப்பையேற்று 5 ஆண்டுகள் ஆன பின்புதான் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராக ஆக முடிந்தது. ஆனால், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் அரசியல் வாரிசான இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தின் முதல்வராக ஆனதோ இரண்டே ஆண்டுகளில்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஒரு பழமொழி உண்டு. தாய் எட்டு அடி பாய்ந்தால் பிள்ளை 16 அடி பாயும் என்ற பழமொழி உண்டு. இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவரின் புகழுக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் புகழ் மகுடம் சூட்டினார் என்றால் அன்பால், அறிவால், சொல்லால், செயலால், ஏழை எளியோரின் இதயத்தில் குடிபுகுந்து, அவர்களின் நல்லாதரவில் நாடு, ஏடு, படித்தவர்கள், அறிஞர்கள், பெரியோர்கள் தாய்மார்களென அனைவரிடத்திலும் பெருமை சேர்த்தார்கள். புரட்சித் தலைவர் அவர்கள் எட்டு அடி பாய்ந்தார்கள். கழகக் காவல் தெய்வம் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 16 அடி பாய்ந்தார்கள். இது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் வரலாறு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதே சமயத்தில் தீயசக்தி கருணாநிதி குடும்பத்திற்கும் ஒரு வரலாறு உண்டு. சர்க்காரியா கமிஷன் ஊழல் வழக்குத் தீர்ப்புக்காக ஆட்சியை இழந்த தீயசக்தி கருணாநிதி, அன்னை இந்திரா காந்தி அவர்கள் மதுரை வந்தபோது, கொலைவெறி தாக்குதல் நடத்திய இடம் மதுரை. அதனால் கருணாநிதி அவர்கள் எட்டு அடி பாய்ந்தார்கள்.

காலங்கள் உருண்டோடின, தீயசக்தியின் மகன் அழகிரி மதுரை அன்னை மீனாட்சியின் கோட்டையில் பாதம் பதித்தான். கருணாநிதியின் மகன் என்ற தகுதியைத் தவிர வேறு எந்தத் தகுதியும் இல்லாமல், மதுரை வீதிகளில் அடக்குமுறை வழிகளில் ரவுடித்தனம் செய்யும் அனைவருக்கும் அண்ணன்-அ, கட்டப் பஞ்சாயத்து பண்ணும் அனைவருக்கும் அண்ணன்-அ, அநியாயம் பண்ணும் அனைவருக்கும் அண்ணன்-அ, அட்டூழியம் புரியும் அனைவருக்கும் அண்ணன்-அ, திருட்டுத் தொழில்புரியும் அனைவருக்கும் அண்ணன்-அ, கொள்ளையடிக்கும்



2012 மார்ச் 29] [திரு. மு.வீ. கருப்பையா]

அனைவருக்கும் அண்ணன்-அ, கொலைகார கும்பல் அனைவருக்கும் அண்ணன்-அ, அப்படிப்பட்ட மகன் அன்னை மீனாட்சியின் பட்டணத்தில் பண்ணிய ரவுடித்தனத்திற்கு அளவே இல்லை. நடைபாதைக் கடை முதல் பெரிய கடை வரை அழகிரி 'போட்டோ' போட வேண்டும் என மிரட்டல். அதனால்தான் நியாயம் கேட்ட மதுரை பெண் லீலாவதி படுகொலை செய்யப்பட்டார். யார் பெரியவன் என்ற மோதலில் தி.மு.க. மந்திரியாக இருந்த தா. கிருஷ்ணன் அவர்கள் படுகொலை செய்யப்பட்டார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொங்கு மண்டலத்தில் ஒடுங்கி இருந்த, அனைவரையும் ஒரு குடையின்கீழ் கொண்டு வந்து, திரும்பிய திசை எல்லாம் மக்கள் வெள்ளமென திருச்சியை திரும்பிப் பார்க்க வைத்து, மக்கள் ஏக்கத்தைப் போக்க, துன்பத்தைத் துடைக்க, ஏழை எளிய மக்கள் வாழ்வு வளம்பெற, அன்னை மீனாட்சியின் பட்டணத்தில் கொடியவன், தீயவன், கொள்ளைக் கூட்டத் தலைவன், கொலைகாரன் அழகிரியை அடக்க ஆர்ப்பாட்டம் என்னும் அறிவிப்பு, அன்னை மீனாட்சியின் சபதம், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அன்னை மீனாட்சியின் மறு அவதாரம், அன்னை மீனாட்சி வாழும் மதுரை அமைதியான மதுரையாக, ஆன்மீக மதுரையாக, அனைவரும் அன்போடு வந்து செல்லக்கூடிய ஆன்மீக பூமியாக விளங்கும் மதுரை மக்களுக்கு அடிப்படை வசதிகள் அனைத்தையும், சுற்றுப்புறச்சூழல், சுகாதாரத்துடன் மக்கள் வாழவேண்டும் என்பதற்காகவும், தி.மு.க. அரசால் வஞ்சிக்கப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட, கொடுமைப்படுத்தப்பட்ட, கொள்ளையடிக்கப்பட்ட மதுரைக்கு புத்துயிர் கொடுக்கும் விதமாக, அனைத்தும் தழைத்தோங்க, கள்ளழகர் கண்ட மதுரைக்கு, அன்னை மீனாட்சியின் மண்ணிற்குப் பெருமை சேர்க்கும் விதமாக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சிறப்புத் திட்டமாக ரூபாய் 250 கோடி நிதியை வாரி வழங்கி, மதுரைக்குப் பெருமை சேர்த்த எங்கள் அருள்மிகு மீனாட்சி தாயே! (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளின் நிலை அறிந்து, விவசாயிகளின் வாழ்வாதாரம் அறிந்து, அவர்களின் நிலையை உயர்த்த ஆக்கமும், ஊக்கமும் கொடுக்கும் விதமாக

*2011-2012 ஆம் நிதியாண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் வேளாண்மைத் துறைக்காக 3,804.96 கோடி ரூபாய் வழங்கி, விவசாயிகளின் நிலையை உயர்த்திய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை விவசாயிகளெல்லாம் பாராட்டுகிறார்கள், தாயே! ஏழை மக்களின் பசிப் பிணியைப் போக்கும் விதமாக அவர்கள் தாய் உள்ளத்தோடு தரம் மிக்க உணவு வழங்கும் விதமாக, உணவுப் பொது விநியோகத் திட்டத்தின் மானியமாக ரூபாய் 4,900 கோடி ரூபாய் வாரி வழங்கிய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை ஏழை, எளிய மக்களெல்லாம் வணங்குகிறார்கள், தாயே!*

*சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்தில், எண்ணற்ற முதியோர்கள், விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், மாற்றுத் திறனாளிகள் நலன் கருதி, 'நான் இருக்கிறேன் தாயாக என' (மணியடிக்கப்பெற்றது) ரூபாய் 3,820 கோடி வாரி வழங்கி அனைவரின் வாழ்க்கையிலும் நீங்கா இடம்பெற்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வாழ்த்துகிறார்கள், தாயே! (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஒட்டுமொத்த மின்சாரப் பற்றாக்குறையைப் போக்கும் விதமாக, தொலைநோக்குச் சிந்தனையுடன் வருங்காலத்தில் ஒளிமயமான தமிழகத்தை உருவாக்க மின்சாரத்திற்காக ரூபாய் 3,069 கோடி வாரி வழங்கிய தாய் உள்ளத்தைப் பார்த்து வையகம் போற்றுகின்றது, தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) தாய்மார்களின் நிலை அறிந்து, அவர்களின் கஷ்டத்தைப் போக்கும் விதமாக அவர்களுக்காகவே உருவாக்கி, விலையில்லா மிக்ஸி, கிரைண்டர், மின் விசிறி வழங்க, தாய் உள்ளத்தோடு ரூபாய் 2,000 கோடி வழங்கிய ஆதிசக்தி அம்மாவை தமிழகத்தில் ஒட்டுமொத்த தாய்மார்கள் போற்றுகிறார்கள், தாயே! எதிர்காலத்தில் தமிழகத்தை முன்னோடி மாநிலமாக ஆக்கக்கூடிய வல்லமை மாணவ, மாணவிகளிடம் உண்டு என்பதால், தமிழகத்தில் உள்ள உயர்ந்த வசதிகள் அத்தனையும் நான் உங்களுக்குத் தருகின்றேன் என்று மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மடிக் கணினி வழங்கியதன்மூலம் மாணவச் சமுதாயத்தினர் அன்னை தெரசாவை தங்கள் உருவில் காண்கிறார்கள், தாயே!*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்போன்று,*





*நகர்ப்புற மக்களுக்கு இணையாக, கிராமப்புறத்தில் உள்ள எளியோர்களுக்கும் உதவ வேண்டுமென்று, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சிந்தனையில் உதித்ததுதான் சுற்றுச்சூழல் சுகாதாரத்துடன்கூடிய பசுமை வீடுகள் வழங்கும் திட்டம். இதற்கு ரூபாய் 1,200 கோடி வழங்கிய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைக் கடைக்கோடியில் வாழும் ஏழை, எளிய தொண்டர்களும் தங்களைத் தெய்வமாகப் பார்க்கிறார்கள், தாயே!*

கொடுத்ததையெல்லாம் எடுத்துக்கொண்டதைப் போன்ற இயற்கைச் சீற்றத்தால் கடும் பாதிப்புக்கு உள்ளான கடலூர், விழுப்புரம் மாவட்டங்களில், 'தானே' புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, 'இயற்கையே கைவிட்டாலும், உங்களுக்கு நான் இருக்கிறேன்' என்று தாய் உள்ளத்தோடு ஒரு இலட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்க ஓராயிரம் கோடி ரூபாய் வழங்கிய ஒப்பற்றத் தலைவியே, தங்களை இயற்கையே வணங்குகிறது, கருணைத் தாயே!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள். (குறுக்கீடு) பதினைந்து நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள்.

**திரு. மு.வீ. கருப்பையா:** கடைக்கோடியில் பிறந்த என்னையும் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க, புனித ஜார்ஜ் கோட்டையில் பேச வைத்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், சோழவந்தான் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, எனது தொகுதி சம்பந்தப்பட்ட கோரிக்கைகளை தொகுதி மக்கள் சார்பாக அளிக்கிறேன்.

தொகுதிப் பிரச்சினைகள். மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் பணிந்து எனது தொகுதிப் பிரச்சினைகளைச் சமர்ப்பிக்கிறேன்.

மதுரை மாவட்டம், சோழவந்தான் தனித் தொகுதிக்கு உட்பட்ட வாடிப்பட்டி, அலங்காநல்லூர் மற்றும் மதுரை மேற்கு ஒன்றியத்தில் இணைக்கப்பட்டுள்ள துறை வாரியான பணிகளை செய்து கொடுக்குமாறு மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து, வணங்கி கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. மு.வீ. கருப்பையா] [2012 மார்ச் 29

வாடிப்பட்டி ஒன்றியத்தில் சோழவந்தான் இரயில்வே மேம்பாலம் கட்டப்பட வேண்டும் என்பது 40 ஆண்டுக்காலமாக பொது மக்களின் நீண்டகாலக் கோரிக்கையாக உள்ளது. அதை அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். சோழவந்தான் வடகரை கண்மாயைத் தூர் வாரும்படிக் கேட்டுக்கொள்கிறேன். சோழவந்தான்- மதுரை ரோட்டிலிருந்து கச்சராயிருப்பு வரை புதிய தரைப் பாலம் அமைத்தல், மண்ணாடிமங்கலத்தில் இருந்து இரும்பாடி வரை புதிய தரைப் பாலம் அமைத்தல், குருவித் துறையில் இருந்து முத்துலிங்கபுரம் வரை புதிய தரைப் பாலம் அமைத்தல், சோழவந்தான் பகுதியில் நெல் சேமிப்புக் கிடங்கு மற்றும் தேங்காய் கொள்முதல் நிலையம் அமைத்தல் ஆகிய பணிகளை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

சோழவந்தான் சுற்றுப் பகுதியில் சுமார் 3 ஹெக்டேர் பரப்பளவில் வெற்றிலை பயிரிடப்பட்டுள்ளது. அதில் வேர் பூச்சி மருந்து தெளித்து விவசாயத்தைக் காப்பாற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சோழவந்தான் பகுதியில் அரசு கலைக் கல்லூரி மற்றும் தொழில் பயிற்சிக் கல்லூரி அமைப்பதோடு, பாண்டியராஜபுரம் மில்லை திறக்கும்படியும் கேட்டுக்கொள்கிறேன். கோர்ட் மற்றும் ஆர்.டி.ஓ. அலுவலகத்திற்கு புதிய கட்டடம் அமைக்கவும், சோழவந்தான், வாடிப்பட்டி பிணவறையில் குளிர்சாதனப் பெட்டி அமைக்கவும், குட்டிலாடம்பட்டியைச் சுற்றுலா மையமாக ஆக்கும்படியும் கேட்டுக்கொள்கிறேன்.

சித்தாலங்குடியில் கால்நடை மருத்துவ மையம் அமைக்கவும், டி.வி. நல்லூர் ரோடை சீரமைக்கவும், சோழவந்தான் அரசு மருத்துவமனையில் நிரந்தரமாக ஆம்புலன்ஸ் வசதி செய்து தருமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

வாடிப்பட்டி நீதிமன்றத்தில் நிறைய வழக்குகள் நிலுவையில் உள்ளதால், நீதிமன்றத்தை தரம் உயர்த்துதல் போன்ற பணிகளை நிறைவேற்றித் தருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அலங்காநல்லூர் ஒன்றியம், அலங்காநல்லூரில் போக்குவரத்துப் பணிமனை மற்றும் தீயணைப்பு நிலையம் அமைக்கவும், அலங்காநல்லூரில் மாம்பழம் பதப்படுத்தும் நிலையம் மற்றும்



2012 மார்ச் 29] [திரு. மு.வீ. கருப்பையா]

நெல் சேமிப்புக் கிடங்கு அமைக்கவும், அலங்காநல்லூர் கேட் கடை பாலம், வலசை பாலம் மற்றும் மஞ்சமலை ஓடையில் மறவப்பட்டி பாலம் அமைக்கவும், சாத்தையாறு அணையைத் தூர் வாரி அதைச் சுற்றுலா தலமாக மாற்றவும், உலகப் புகழ் பெற்ற அலங்காநல்லூர் மற்றும் பாலமேடு ஜல்லிக்கட்டு திடலில் நிரந்தரமாக பார்வையாளர் மேடை அமைக்கவும் கேட்டுக்கொள்கிறேன்.

அலங்காநல்லூர் அரசு சுகாதார நிலையத்தில் போதிய வசதியும், போதிய பணியாளர்களும் இல்லாததால் பெண்கள் மகப்பேறு காலத்தில் மிகவும் சிரமப்பட்டு வருகிறார்கள். எனவே, உடனடியாக மருத்துவமனையின் தரத்தை உயர்த்தி மேம்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அலங்காநல்லூர் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்தக் கேட்டுக்கொள்கிறேன்.

குறவன்குளம், ஏ.டி.காலனி பகுதியில் சாத்தையாற்றின் குறுக்கே பாலம் மற்றும் முல்லைப் பெரியாறின் குறுக்கே பாலம் அமைக்கவும் கோருகிறேன்.

தேசிய கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் இருந்து கரும்புக் கழிவின்மூலம் மொலாசஸ் தயாரிக்கவும், வலசை அரசுப் பள்ளியைத் தரம் உயர்த்தவும், அலங்காநல்லூர், வாடிப்பட்டி, சோழவந்தான் ஆகிய இடங்களில் காவலர் குடியிருப்புகள் அமைக்கவும் கோருகிறேன்.

அலங்காநல்லூரில் அறநிலையத் துறையின் ஆளுகைக்கு உட்பட்ட ஸ்ரீ முனியாண்டி சுவாமி கோயிலில் அன்னதாகக் கூடம் மற்றும் சுற்றுச் சுவர் அமைக்கவும், அய்யங்கோட்டையில் துணை மின் நிலையம் அமைக்கவும் கேட்டுக்கொள்கிறேன்.

அலங்காநல்லூரில் பத்திரப் பதிவு அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. அதற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தருமாறு அரசைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை மேற்கு ஒன்றியம், சமயநல்லூர் அரசுப் பள்ளியில் ஆண்-பெண் தரம் பிரித்து அமைத்தல், சமயநல்லூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல் ஆகிய பணிகளைச் செய்து தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

[2012 மார்ச் 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைய பொது விவாதத்தில் இறுதியாகப் பேசுபவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

***திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** இறுதியாகப் பேசினால் நிறைய நேரம் தருவார்கள் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அதனால்தான் இன்றைய பொது விவாதம் என்று சொன்னேன்.

***திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பட்ஜெட் விவாதத்தில் பேசுவதற்குக் கிடைத்த வாய்ப்பிற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்கிறேன். ஆளுகின்ற அரசு மக்களைக் கவர்வதற்காக நல்ல திட்டங்களைப் போட்டிருக்கிறது என்றாலும், நல்ல திட்டங்களை அறிவித்ததால் மகிழ்ச்சியடைகிறேன். காங்கிரஸ் கட்சி வரவேற்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எந்தெந்த நல்ல திட்டங்களை அரசு மக்களுக்குக் கொடுத்திருக்கிறதோ அவற்றை வரவேற்கின்றோம். எப்போதும் காங்கிரஸ் கட்சி அதை ஆதரிக்கும் என்பதை நான் பதிவு செய்துகொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மின் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு அரசு எடுத்துக்கொண்ட செயல்கள் வரவேற்கக்கூடியது. மத்திய அரசின் திட்டமான கூடங்குளம் அணுமின் நிலையப் பணி துவக்குவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்துக்கொண்ட technique மிகவும் அற்புதமாக வரவேற்கக்கூடியது. (மேசையைத் தட்டும் ஒலி) மக்களின் அச்சத்தைப் போக்குவதற்கு Expert Committee-யை அனுப்பி, போராட்டக்காரர்களை விரட்டிவிட்டு, அந்தப் பணியை துவக்குவதற்கு எடுத்துக்கொண்ட யுக்தியை மீண்டும் நான் வரவேற்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3-15

கூடங்குளத்தில் மின் உற்பத்தி கிடைக்கும்வரை இடைப்பட்ட காலம், இரண்டு மாதங்கள் ஆகிவிடும் என்று சொல்கிறார்கள். கம்பெனிகளுக்கு, பள்ளிக் கூடங்களுக்கு, தனியார் பள்ளிக் கூடங்களுக்கு, தேவைப்பட்டவர்களுக்கு இடைப்பட்ட காலத்திலே ஜெனரேட்டர் வாங்குவதற்கு இந்த அரசு மானியம் கொடுத்தால் அது வரவேற்கத்தக்கது என்பதை நான் மீண்டும் பதிவு



2012 மார்ச் 29] [திரு. ஜே.ஜி. பிரின்ஸ்]

செய்துகொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு) இல்லை, கொடுக்கிறார்கள். பள்ளிக் கூடங்களுக்குக் கொடுக்கிறார்கள். மக்களுக்கு. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தேர்வு நேரத்திலே மாணவர்கள் சிறப்பாகத் தேர்வு எழுத வேண்டும் என்பதற்காக 78 கோடி ரூபாய்க்கு ஜெனரேட்டர்கள் வழங்கி பள்ளி மாணவர்களுக்குத் தேர்வு எழுதுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பத்திரிகையைப் படிக்கவில்லை என்று நினைக்கின்றேன். தொழிற்சாலைகளுக்கு, ஜெனரேட்டருக்கு மானியம் தர வேண்டுமென்று சொன்னார்கள். மானியம் மட்டும் கொடுக்கவில்லை, அந்த மானியத்தை முன் தேதியிட்டே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களை நான் வேண்டிக்கொள்வது, நான் பத்திரிகையைப் படித்திருக்கிறேன். நான் சொல்வது, வேண்டிக்கொள்வது, கேட்கிற அனைவருக்கும், இன்று யாரெல்லாம் பாதிக்கப்படுகிறார்களோ அவர்களுக்கெல்லாம் எத்தனையோ கோடிக்கணக்கான ரூபாய்க்கு திட்டங்களைக் கொடுக்கிறீர்களே, ஏன் அதைக் கொடுக்கக்கூடாது

[திரு. ஜே.ஜி. பிரின்ஸ்] [2012 மார்ச் 29

என்பதைப் பதிவு செய்ய விரும்புகிறேன். மக்கள் கேட்கிறார்கள், கொடுக்க வேண்டும். அதற்காகத்தான் அரசு இருக்கிறது.

வேலைவாய்ப்பை உருவாக்குவது இந்த அரசினுடைய தலையாய கடமை. வேலையில்லாத் திண்டாட்டம் இன்று நிலவிக் கொண்டிருக்கக்கூடிய ஒன்று. படித்த மாணவர்கள் இருக்கிறார்கள். படித்தும் உத்தியோகம் இல்லையென்பதால், வேதனையால் பெற்றோர்கள் இன்று அவதிப்படுகிற சூழ்நிலையை இந்த மாமன்றத்திலே பதிவு செய்ய விரும்புகிறேன். எத்தனையோ கம்பெனிகள் இருக்கின்றன. இருந்தும் ஆண்டுக்கு இலட்சக்கணக்கான மாணவர்கள் படித்து வேலைக்காக அவதிப்படுகிறார்கள். ஆனால், அவர்களுக்கு வேலைவாய்ப்பைக் கொடுப்பதற்கு கம்பெனிகள் இல்லை. அதை உருவாக்குவதற்கு அரசு முன்வர வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் 45 பொறியியல் கல்லூரிகள் இருக்கின்றன. பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் ஆண்டொன்றுக்கு வெளிவரும்பொழுது அவர்களுக்கு வேலை செய்வதற்கு, பணி செய்வதற்கு வேலைவாய்ப்பு இல்லாமல் அல்லல்படுகிற சூழ்நிலையை மாற்றுவதற்கு ஏற்கெனவே **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சப்ஜெக்ட்டுக்குப் போங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு தொழிற்சாலை தரக்கூடாதா? எத்தனை ஆண்டுகள், எத்தனை முறை கேட்டுக்கொண்டே இருக்கிறோம். ஒரு யூனிவர்சிட்டி தரலாம், ஒரு டெக்னோ பார்க் தரலாம், எத்தனையோ திட்டங்களை கன்னியாகுமரி மாவட்டத்திற்குத் தந்திருக்கலாம். தரவில்லை என்ற ஆதங்கத்தை வெளிப்படையாகப் பதிவு செய்ய விரும்புகிறேன். மீண்டும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களிடம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நான் கேட்பது, எங்கள் மாவட்டத்திற்கு சற்று கருணை காட்டுங்கள், நல்ல திட்டங்களைத் தாருங்கள்; அதை ஒதுக்கிவிடாதீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தச் சொற்றொடர் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நீங்கள் தொடர்ந்து பேசுங்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2012 மார்ச் 29]

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்ட மக்களுடைய தேவை, அங்கு கம்பெனிகள் வேண்டும்; rubber factory அமைக்க வேண்டும்; இல்லையென்றால், ஒரு டெக்னோ பார்க் தரவேண்டும்; குளச்சலிலே துறைமுகப் பணிகளைத் தொடங்கியிருக்க வேண்டும். நான் நம்பினேன், சென்ற ஆண்டு பட்ஜெட்டிலே குளச்சல் துறைமுகம் தரப்படும் என்று சொன்னபோது, குளச்சலிலே துறைமுகம் வந்துவிடும் என்று மகிழ்ச்சி அடைந்தேன். இந்த ஆண்டு பட்ஜெட்டிலேகூட துறைமுகம் தரவில்லையென்ற வேதனையை நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக. . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே அவையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குளச்சல் துறைமுகம் அமைப்பதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். நம்முடைய இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்கள் அதற்கு முழு விளக்கம் தந்திருக்கின்றார்கள். ஆகவே, மத்திய அரசிடம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தேவையான நிதியைப் பெற்றுத் தந்தால், அங்கே துறைமுகம் அமைக்கப்படும் என்று அம்மா அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதே கேள்வியை இந்தச் சட்டமன்றத்திலே பதிவு செய்தார்கள். குளச்சலில் ரூ.27.10 கோடி செலவில் மீன் பிடித் துறைமுகம் அமைக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. (குறுக்கீடு) மத்திய அரசு துறைமுகமா?

பிற்பகல் 3-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

[2012 *மார்ச்* 29

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கு நான் நன்றி சொல்வேன். ஆனால், நான் கேட்டது வர்த்தகத் துறைமுகம். அது ஆழமான கடல் பகுதி, இந்தியாவிலேயே இயற்கையாக ஒரு துறைமுகம் அமைக்க ஏதுவான பகுதி என்பதால் அங்கு துறைமுகம் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே அவையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குளச்சலில் வணிகத் துறைமுகம் அமைக்க வேண்டுமென்று ஏற்கெனவே கோரிக்கை வைத்தார்கள். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மத்திய அமைச்சர், திரு. ஜி.கே. வாசன் அவர்கள் இந்தத் துறையினுடைய அமைச்சராக இருக்கின்றார். (குறுக்கீடு) ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மத்திய அமைச்சரிடத்திலே எடுத்துச்சொல்லி, தேவையான நிதியைப் பெற்றுத் தந்தால், குளச்சலில் துறைமுகம் அமைப்பதற்கு மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசு தயாராக இருக்கிறது என்பதை இந்த அவையின் மூலமாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் பேசுகிறேன். ஏனென்றால், எங்களுடைய தலைவர் திரு. ஜி.கே. வாசன் அவர்கள்தான் மத்திய கப்பல் துறையின் அமைச்சர். அவரிடம் ஏற்கெனவே சொன்னபோது, நாங்கள் இதற்காக முயற்சி செய்துகொண்டிருக்கிறோம் என்றார். மத்திய அரசு எதைச் செய்தாலும், மாநில அரசு ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் ஒன்றும் நடக்காது என்பதையும் நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள். உறுப்பினர் அவர்கள் தயவுசெய்து உட்காருங்கள்.*



2012 *மார்ச்* 29]

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் கோரிக்கையை வைத்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் இதே அவையிலே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தேவையான நிதியை அவர்கள் பெற்றுத் தந்தால் குளச்சலிலே துறைமுகம் அமைப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி சொல்கிறேன். மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கு ஒரு வேண்டுகோள் வைக்க விரும்புகிறேன். நான் நிதியை வாங்கிவிட்டால்கூட, நில ஆர்ஜிதம் செய்வது என்பது தமிழக அரசின் முக்கிய பொறுப்பு என்பதை நான் மீண்டும் வலியுறுத்த விழைகிறேன். (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மீண்டும் வலியுறுத்துகிறாராம், விட்டுவிடுங்கள்.*

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தொகுதி மேம்பாட்டு நிதி 1¾ கோடி ரூபாயிலிருந்து 2 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டது. ஆனால், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு 5 கோடி ரூபாய் உள்ளது. அடிப்படை வசதிகளை மக்களிடம் சென்று. . .(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*

***திரு. அ. சவுந்தரராசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலில் கட்டும் துறைமுகத்திற்கு எங்கே போய் நிலம் ஆர்ஜிதம் பண்ணுவது என்று எனக்குத் தெரியவில்லை. ஏற்கெனவே, நம்முடைய கடல் பகுதி முழுவதும் சிறிய, பெரிய துறைமுகம் வரவேண்டும் என்பதற்காக மத்திய அரசாங்கம் எடுக்கிற எல்லா நடவடிக்கைகளுக்கும் உதவி செய்வோம் என்று இங்கே அறிவிக்கப்பட்டிருக்கிறது. இப்போது அவர்கள் அந்த ஏற்பாட்டைச் செய்தால் நிச்சயமாக அதைச் செய்வதற்கு*

[திரு. அ. சவுந்தரராசன்] [2012 மார்ச் 29

பிரச்சினையே இருக்காது. கடலும் அவர்களுடையதுதான்; கப்பல் துறையும் அவர்களுடையதுதான்; எல்லாமே அவர்களுடையதுதான். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மத்திய அமைச்சர் திரு. ஜி.கே. வாசன் அவர்களிடம் பேசவேண்டும். (குறுக்கீடு) வனமும், சுற்றுச்சூழலும் அவர்களுடையதுதான். நம்முடைய ஊட்டி பகுதியில் ஏற்பாடு செய்தால் நம்முடைய மின்சாரத் துறை அமைச்சருக்கு உதவியாக இருக்கும். குந்தா மின் திட்டத்திலே மின்சாரத்தை எடுக்கப் பயன்படும். அங்கேயும் வனம்தான் குறுக்கே வருகிறது. ஆகவே, அவர்கள் சற்று உதவி செய்ய வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திட்டம் வர வேண்டும் என்று சொன்னால், அதற்கான அனுமதி எல்லாமே மத்திய அரசிடமிருந்துதான் வர வேண்டியுள்ளது. The ball is in your court. திரு. ஜேஜி. பிரின்ஸ், பேசுங்கள்.

**திரு. ஜேஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சொன்னேன், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தொகுதி மேம்பாட்டு நிதி ஐந்து கோடி ரூபாய் கொடுக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 1¾ கோடி ரூபாயிலிருந்து இரண்டு கோடி ரூபாயாக உயர்த்தியதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேநேரத்திலே, இந்த இரண்டு கோடி ரூபாயை மூன்று கோடி ரூபாயாகத் தரக்கூடாதா? ஏனென்றால், அடிப்படையாக பொதுமக்களை சட்டமன்ற உறுப்பினர்கள்தான் சந்திக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோருக்கும் சேர்த்துத்தான் கேட்கிறேன், கொடுத்தால் எல்லோருக்கும் நல்லதுதான். அடிப்படை வசதிகளை சரியாக செய்வதற்கு, மக்களைச் சந்தித்து பணிகளைச் செய்வதற்கு மூன்று கோடி ரூபாயாக உயர்த்தினால் பெருமை, போற்றுதல் எல்லாம் தற்போதைய அரசுக்குத்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மத்திய அரசு கட்டாயக் கல்வி, எல்லோருக்கும் கல்வி என்கிறது. அதற்கேற்ப தமிழக அரசும் பள்ளி மாணவர்களுக்கு பல்வேறு இலவச திட்டங்களை அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது. ஆனால், அனைத்து மாணவ, மாணவியர்களும் பயன்படும்வகையில் கொடுக்கக்கூடிய நன்மை பயக்கும் திட்டங்களை தனியார் பள்ளிகளில் சேர்ந்து படிக்கும்



2012 மார்ச் 29] [திரு. ஜேஜி. பிரின்ஸ்]

பிள்ளைகளுக்கும் கொடுத்தால் மிகவும் நன்றாக இருக்கும். மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கு நான் வேண்டுகோளாக வைப்பது தனியார் பள்ளிகளில் படிக்கிற பிள்ளைகளும் நமது தமிழகத்தைச் சேர்ந்த பிள்ளைகள்தான். அவர்களுக்கும் இலவச திட்டங்களை ஏன் கொடுக்கக்கூடாது? கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை நான் வைக்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்

**மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, கிட்டத்தட்ட 55,000 பள்ளிகள் இருக்கின்றன. ஐந்தரை இலட்சம் ஆசிரியர்கள் பணியாற்றுகிறார்கள். ஒரு கோடியே 33 ஆயிரம் மாணவர்கள் படிக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் தமிழகத்தின் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கிராமப் பகுதியில் இருக்கின்ற ஏழையெளிய மாணவர்கள் பயன் பெறுகின்ற வகையில், இன்றைக்கு இத்தனைத் திட்டங்களையெல்லாம் வழங்கியிருக்கிறார்கள். அரசுப் பள்ளிகள், அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளுக்கு மட்டும் இது பொருந்தும். இதற்கே இத்தனை கோடி ரூபாய் ஒதுக்க வேண்டியிருக்கிறது. அவர் தனியார் பள்ளிகளுக்கும் கேட்கிறார். இதற்கு நடைமுறையில் சாத்தியக்கூறு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 3-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜேஜி. பிரின்ஸ்:** தனியார் பள்ளிக்கூடத்தில் படிக்கின்ற பிள்ளைகளுக்குக் கிடைத்தால் மிகவும் நன்றாக இருக்கும். நான் மீண்டும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய வேண்டுகோளை வைக்கிறேன்.

அடுத்தபடியாக, நெடுஞ்சாலைத் துறை சம்பந்தமாக தூத்துக்குடி, கன்னியாகுமரி கடற்கரைச் சாலைப் பணிகள் ஆரம்பிக்கப்படுமென்று இந்த அறிக்கையில் வந்திருப்பது வரவேற்கக்கூடியது. என்னுடைய வேண்டுகோள் ஒன்று.

[திரு. ஜே.ஜி. பிரின்ஸ்] [2012 மார்ச் 29

கன்னியாகுமரியிலிருந்து கடற்கரைச் சாலையை நீட்டித்து, கேரள எல்லை வரை கொண்டு சென்றால் மிகவும் நல்லதாக இருக்கும், மக்களுக்கும் நன்மை பயக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ் அவர்கள் பேசும்போது, அரசு, அரசு சார்ந்த பள்ளிகளுக்கு வழங்குகின்ற உதவிகளை தனியார் பள்ளிகளுக்கும் தர வேண்டுமென்று சொன்னார். அவர் சார்ந்திருக்கின்ற, காங்கிரஸ் ஆண்டு கொண்டிருக்கின்ற மத்திய அரசில் 'சர்வ சிக்ஷா அபியான்' என்ற ஒரு திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்திலும் அரசு, அரசு சார்ந்த பள்ளிகளுக்கு மட்டும்தான் நிதியுதவி அளிக்கப்படுகிறது என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். முதலில் அவர்கள் மத்திய அரசு திட்டத்தை தனியார் பள்ளிகளுக்கு விரிவுபடுத்துமாறு கோர முன்வருவாரா என்பதை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கும் விருப்பம்தான். அதை நடைமுறைப்படுத்த முடியுமா என்று முயற்சி செய்கிறேன். இந்த அரசாவது அந்தத் திட்டத்தை முன்மாதிரியாக செய்தால், இந்தியாவிலேயே ஒரு முதன்மை மாநிலம், இந்த மாநிலம் இதைச் சிறப்பாக செய்துள்ளது என்ற பெருமை நமக்குக் கிடைக்கும். தமிழகத்திற்கும் கிடைக்கும். அதற்காகத்தான் அதைச் சொல்கிறேன்.

கேபிள் டி.வி.-யை அரசுடைமையாக்கியது பாராட்டுக்குரிய விஷயம். கேபிள் டி.வி. கட்டணத்தைச் சீரான முறையில் வசூலிக்க கேபிள் டி.வி. ஆணையத்திற்கு உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குளச்சல் மீன்பிடித் துறைமுகத் திட்டம் தொடங்கி மூன்றாண்டுகள் ஆகிவிட்டன. பணிகள் ஆமை வேகத்தில்தான் நடைபெறுகின்றன. ஆனால், தனியார் மீன்பிடித் துறைமுகம். . .



2012 மார்ச் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பிரின்ஸ், Goods Train மாதிரி போகாதீர்கள். Super Fast Express மாதிரி போங்கள். (குறுக்கீடு) உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** சீக்கிரமாக நானே முடித்துவிடுகிறேன். குளச்சல் மீன்பிடித் துறைமுகப் பணிகள் ஆமை வேகத்தில் நடைபெறுகின்றன. அதனைத் துரிதப்படுத்த ஆவன செய்ய வேண்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற திராவிட முன்னேற்றக் கழக மைனாரிட்டி ஆட்சியிலே இந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டு எந்த அளவிற்கு ஆமை வேகத்தில் பணிகள் நடைபெற்றன என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். திட்டம் போடப்பட்டதனுடைய alignment சரியில்லை. Alignment சரியில்லாத காரணத்தால் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த பின்னாலே, திரும்ப ஆய்வு செய்வதற்காக ரூ.34.06 இலட்சத்தை ஒதுக்கியிருக்கிறார்கள். இந்த ஆய்வு அறிக்கை வந்த பின்னாலே, உடனடியாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) திரு. பிரின்ஸ், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சிறிய திருத்தம். 'சர்வ சிக்ஷா அபியான்' திட்டத்தைப் பற்றி இங்கே நான் சொன்னேன். நம்முடைய மாநில திட்டங்களெல்லாம் அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகளில் இருக்கின்றன. 'சர்வ சிக்ஷா அபியான்', அனைவருக்கும் கல்வி வழங்கும் திட்டத்தை அரசுப் பள்ளிகளில் மட்டும்தான் விரிவுபடுத்தியிருக்கிறார்கள். அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2012 மார்ச் 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தாராள எண்ணத்தை நான் சொன்னேன். குறிப்பாகச் சொல்கிறேன். எப்படியென்றால், அரசு பள்ளிக்கூடத்தில் படிக்கக்கூடிய பிள்ளைகள் சைக்கிளில் போகிறார்கள். மற்ற தனியார் பள்ளிகளில் படிக்கக்கூடிய பிள்ளைகளுக்கு சைக்கிள் இல்லை. இப்படி பாகுபாடு இருக்கிறதே, இதை நீக்க வேண்டுமென்பதற்காகக் கேட்டேன்.

குளச்சல் மீன் பிடித் துறைமுகத்தைப் பொறுத்தவரை, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தப் பணிகளைத் துரிதப்படுத்த வேண்டுமென்பதற்காக கேட்டேன். அந்தப் பணிகள் சிறப்பாகச் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏனென்றால், எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தமட்டிலே, குளச்சல் பகுதியிலே உள்ள மீனவ சகோதரர்களில் அதிகமானோர் ஆழ்கடலுக்குச் சென்று மீன் பிடிக்கக்கூடிய திறமையானவர்கள். எனவே, அந்த harbour அங்கே சீக்கிரம் வருகின்றபோது, அதன்மூலமாக நமக்கு நன்மைகள் அதிகமாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 3-30*

அடுத்து, ஒரு முக்கியமான பிரச்சினை குறித்து இந்த மாண்புமிகு அவையிலே சொல்ல விரும்புகிறேன். சென்ற மாதம் 18 ஆம் தேதி கரைக்கு வரவேண்டிய 7 மீனவர்கள், அவர்கள் சென்ற படகோடு சென்று விட்டார்கள்; எங்கு சென்றார்கள் என்பது தெரியவில்லை. இது சம்பந்தமாக உரிய நடவடிக்கை எடுத்து, அவர்களைக் கண்டுபிடித்திட மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே நான் கேட்டுக்கொண்டபோது, பல்வேறு தேடுதல் வேட்டைகளைச் செய்தார்கள். ஆனால், இன்றுவரையில் அவர்களைக் கண்டுபிடிக்க முடியாத ஒரு அவல நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, தேடுதலைத் துரிதப்படுத்த வேண்டும். காணாமல் போன அந்த மீனவர்களைக் கண்டுபிடிப்பதற்கு நவீன முறையிலே உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். அதுபோல... (குறுக்கீடு)



2012 மார்ச் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுசம்பந்தமான தகவலை அரசுக்குத் தெரியப்படுத்தியவுடன், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, அனைத்துவிதமான நடவடிக்கைகளையும் எடுத்தது என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

குளச்சல் பகுதி என்பது ஆழ்கடல் மீன்பிடிப்பு உள்ள பகுதி. இந்து மகா கடலும், அரபிக் கடலும், வங்காள விரிகுடாவும் சேர்ந்திருக்கிற பகுதியில் ஆழ்கடலில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள், இதுவரை எங்கு போனார்கள் என்று தெரியவில்லை. ஆகவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, அண்டை நாட்டோடு, பக்கத்திலே இருக்கிற நாடுகளோடு தொடர்பு கொண்டு பேசுகிறபோது, காணாமல் போன மீனவர்கள் குறித்து இதுவரை எந்தத் தகவலும் பெறப்படவில்லை.

ஆக, தேடுதல் முயற்சி என்பதைப் பொறுத்தவரை, எந்த அரசும் செய்யாத சாதனையாக, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு மட்டும்தான், மீனவர்களுக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்து, அனைத்துப் பிரச்சினைகளிலும் உடனடியாக நடவடிக்கை எடுத்து வருகிறது என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகவே தெரியும். ஆக, இது சம்பந்தமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு விரைந்து, தொடர்ந்து நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (30-3-2012) வெள்ளிக்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 3-31 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 15. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*9. 2010-2011 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின் பதினேழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)*

*10. 2010-2011 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தின் ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)*

*11. 2010-2011 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் அறுபத்திரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)*

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*—ஏதுமில்லை—*